
தொல்காப்பியம்
பொருளதிகாரம்
இளம்பூரணம்

[illegible]

[illegible]

ஸன்ஸ்

Printed at
the 'Caxton Press'
Madras, E



அருமைபெறற் செல்வமாகத் தமிழ்மக்களுக்கு இதுகாறும் கிடைத்துள்ள தமிழ் நூல்களிற் காலத்தாலும் செய்தியாலும் தலைசிறந்து விளங்குவது தொல்காப்பியம் ஒன்றேயாகும். எம்மொழியின் இயல்பும் அம்மொழியின் இலக்கணத்தினையே விளக்கி நிற்பதாகும். தமிழ்மொழியியல் ஒன்றும் அம்மொழியின் திறத்தினை விளக்கி [illegible] அம்மொழியாளர் [illegible] ஒழுக்கச் செய்தி-களையும் [illegible] விளக்கும் சிறப்பு [illegible] என்பது அறிஞர் அனைவரும் அறிந்ததொன்றாம்.

இத்தகைய [illegible] கண்டார் இளம்பூரணர், [illegible] பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினி-யர், கல்லாடர் முதலியோர் [illegible] உரை வகுத்-தனர். [illegible] வெளி [illegible] இ [illegible] அரிதினை வெளியிட்ட அறிஞர் [illegible] சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கட்கும், ஆறுமுக நாவலர் அவர்கட்கும் தமிழுலகம் என்றும் மறவா நன்றி பாராட்டும் கடப்பாடுடையதாகும்.

இளம்பூரணத்து எழுத்ததிகாரம் ஒன்றே சோடசாவதானம் சுப்பராயச் செட்டியார் அவர்கள் வெளியிட்டனர். சொல்லும் பொருளும் இதுகாறும் வெளிவந்தில என ஆசிரியர் திருமயிலைச் சண்முகம்பிள்ளை யவர்கள் கட்டளையைத் தலைமேற்கொண்டு அவற்றை வெளியிட முயன்றனன். இம்முயற்சி முற்றுமாறு ஏடு தேடியகாலத்து, என் நண்பர் ஆ. வரதவிநாயகம் பிள்ளையவர்கள்

பதிப்புரை

தம்மிடம் இருந்த ஏடு ஒன்றனையும், அதைப் பெயர்த்து எழுதிய தமது கையெழுத்துப் பிரதியினையும் அன்புடன் தந்தனர். இவ்வேடு கனகசுந்தரம்பிள்ளையவர்கட்கு உரியதாம். இவற்றைக் கொண்டு, என் ஆசிரியர் அளித்த ஏட்டுடன் ஒப்பு நோக்கிச் செப்பம் செய்து வருகையில், அஃது இனிது முடியுமாறு, என் நண்பரும் ஒருசாலை மாணவரும் ஆகிய சே. சிவஞானம் பிள்ளையவர்கள் தாம் அரிதிற்றேடிய நல்ல ஏடு ஒன்றை அனுப்பினர். இது திருநெல்வேலிச் சொர்ணம் பிள்ளையவர்கள் தந்த ஏடு எனத் தெரிகின்றது.

மேற்கண்ட ஏடுகளை ஒப்பு நோக்கி முதற்கண் பொருளதிகாரத்தை அச்சிடத் தொடங்கினேன். ஏடு எழுதுவோர் மயக்கத்தாலும், என் சிற்றறிவின் [illegible]யாலும் இதன்கண் பிழைகள் பல நேர்ந்திருக்கக் கூடும். பலவிடத்திற் பலபடச் சிதைந்து கிடக்கும் இவற்றை ஒருவாறு அச்சியற்றி வெளியிடுவது என்றன் நோக்கமாதலின், என் நண்பர் கனகசுந்தரம் பிள்ளையவர்கள் துணையைக் கொண்டு ஒருவாறு அகத்திணையியல், புறத்திணையியல் இரண்டையும் முதற் பகுதியாகக் முடித்து வெளியிட்டேன். இந்நன்முயற்சியில் எனக்கு அன்புடன் துணை புரிந்த அறிஞர் அனைவர்க்கும் என் உளமார உவப்ப வாழ்த்துக் கூறுகின்றேன்.

இப் பதிப்பினைச் சென்னைத் தமிழகக் கழகத்தினர் மேற்கொண்டு, இதனை அச்சகத்தின் வெளியீடாகக் கொண்ட பெருந்தகைமையின் பொருட்டு அக்கழகத்தினர்க்கும், யான் விரும்பியவாறே இதனைச் செவ்வனம் பதிப்பித்துத் தந்த சென்னைக் குமாரசாமிநாயுடு குமாரர்களுக்கும் என் [illegible] நன்றி பாராட்டுகின்றேன்.

இம் முயற்சிக்கண் என்னைப் புகுத்தித், தோன்றாத் துணையாக நின்று அருள் புரியும் தண்கைப் பெருமானை என் மன மொழி மெய்களான் வாழ்த்தி வணங்குகின்றேன்.

'காவேரியகம்'
சென்னை, கி

கா. நமச்சிவாயன்.

சூத்திர முதற் குறிப்பு

அகத்திணையியல், புறத்திணையியல்

சூத்திர முதற் குறிப்பு


அகத்திணையியல்
புறத்திணையியல்

தொல்காப்பியம்

பொருளதிகாரம்

முதலாவது

அகத்திணையியல்

க. கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்
முற்படக் கிளந்த வெழுதிணை யென்ப.

என்பது சூத்திரம்.

இவ்வதிகாரம் என்ன பெயர்த்தோவெனின், பொருளதிகாரம் என்னும் பெயர்த்து. பொருள் உணர்த்தினமையாற் பெற்ற பெயர். நிறுத்த முறையானே எழுத்தும் சொல்லும் உணர்த்தி, இனிப் பொருள் உணர்த்தவேண்டுதலின், இது பிற்கூறப்பட்டது.

பொருள் என்பது யாதோவெனின், மேற்சொல்லப்பட்ட சொல்லினான் உணரப்பட்டது. அது, முதல் கரு உரிப்பொருள் என மூவகைப்படும்:

'முதல்கரு வுரிப்பொரு ளென்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை' (அகத் - ௩)

என்றாராகலின

முதற்பொருளாவது நிலமும் காலமும் என இரு வகைப்படும்.

'முதலெனப் படுவது நிலம்பொழு திரண்டின்
இயல்பென மொழிப வியல்புணர்ந் தோரே' (அகத் - ௪)

என்றாராகலின்

'நிலம்' எனவே நிலத்திற்குக் காரணமாகிய நீரும், நீர்க்குக் காரணமாகிய தீயும், தீக்குக் காரணமாகிய காற்றும், காற்றிற்குக் காரணமாகிய ஆகாயமும் பெறுதும்.

காலமாவது மாத்திரை முதலாக, நாழிகை யாமம் பொழுது நாள் பக்கம் திங்கள் இருது அயனம் ஆண்டு யுகம் எனப் பலவகைப்படும்.

கருப்பொருளாவது இடத்தினும் காலத்தினும் தோற்றும் பொருள் அது தேவர் மக்கள் விலங்கு முதலாயினவும், உணவு செயல் முதலாயினவும், பறை யாழ் முதலாயினவும், இன்னவாய பிறவும் ஆகிய பல வகைப்படும்.

'தெய்வ முணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின பகுதியொடு தொகைஇய
அவ்வகை பிறவுங் கருவென மொழிப' (அகத் - ௧௮)

என்றாராகலின

உரிப்பொருளாவது மக்கட்கு உரிய பொருள் அஃது அகம் புறம் என இருவகைப்படும். அகமாவது, புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் எனவும், கைக்கிளை பெருந்திணை எனவும் எழுவகைப்படும்.

'புணர்தல் பிரிதல் இருத்த லிரங்கல்
ஊட லிவற்றின் நிமித்த மென்றிவை
தேருங் காலைத் திணைக்குரிய பொருளே' (அகத் - கச.)

எனவும்,

'காமஞ் சாலா இளமை யோள்வயின்
ஏமஞ் சாலா இடும்பை யெய்தி
நன்மையுந் தீமையு மென்றிரு திறத்தாற்
றன்னொடு மவளொடு மருக்கிய புணர்த்துச்
சொல்லெதிர் பெறாஅன் சொல்லி யின்புறல்
புல்லித் தோன்றுங் கைக்கிளைக் குறிப்பே' (அகத் - ரு0.)

எனவும்,

'ஏறிய மடற்றிற மிளமை தீர்திறந்
தேறுத லொழிந்த காமத்து மிகுதிறம்
மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே' (அகத் - ருக.)

எனவும் ஓதினாராகலின்

அஃதேல், கைக்கிளை பெருந்திணை என்பவற்றை உரிப்பொருளென ஓதியது யாதினாலெனின், எடுத்துக் கொண்டக்கணே, 'கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்' என ஓதி, அவற்றுள் நடுவண் ஐந்திணைக்குரியன இவை யென்பான் 'புணர்தல்' முதலாக வகுக்கப்படுதலின், முன் வகுக்கப்படாத கைக்கிளையும் பெருந்திணையும் உரிப் பொருளாம் என்றுணர்க.

புறமாவது நிரைகோடற் பகுதியும், பகைவயிற் சேறலும், எயில் வளைத்தலும், இருபெரு வேந்தரும் ஒரு களத்துப் பொருதலும், வென்றி வகையும், நிலையாமை வகையும், புகழ்ச்சி வகையும் என எழுவகைப்படும். அஃதேல், புறப்பொருளை உரிப்பொருளென ஓதிற்றிலராலெனின்,

'வெட்சி தானே குறிஞ்சியது புறனே' (புறத் - ருஅ.)

எனவும், பிறவும் இவ்வாறு மாட்டேறுபெற ஓதலின் அவையும் உரிப்பொருளாம் என்க.

அகம் புறம் என்பன காரணப்பெயர். அகப்பொருளாவது போகநுகர்ச்சியாகலின் அதனான் ஆய பயன் தானே அறிதலின் அகம் என்றார். புறப்பொருளாவது மறஞ்செய்தலும், அறஞ்செய்தலும் ஆகலான், அவற்றின் பயன் பிறர்க்குப் புலனாதலின் புறம் என்றார்.

அஃதற்றாக, அறம் பொருள் இன்பம் வீடு என உலகத்தோருஞ் சமயத்தோருங் கூறுகின்ற பொருள் யாதனுள் அடங்கும் எனின், அவையும் உரிப்பொருளி னுள் அடங்கும். என்னை? வாகைத்திணையுள்,

'அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்
ஐவகை மரபின் அரசர் பக்கமும்
இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும் (புறத் - கசு)

என இல்லறத்திற்கு உரியனவும்,

'காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியுஞ்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே (கற்பு - ருக)

என நான்கு வருணத்தார் இயல்பும்,

'நாலிரு வழக்கின் தாபதப் பக்கமும்' (புறத் - கசு)

எனவும்,

'காமம் நீத்த பாலி னானும்' (புறத் - உக)

எனவும், புறமாகிய வீடுபேற்றிற்கு உரிய வானப்பிரத்த சந்நியாசிகளியல்பு கூறுதலின் அறமும் வீடுபேறும் அடங்கின.

வெட்சி முதலாகத் தும்பை யீறாகக் கூறப்பட்ட பொருண்மையும், வாகையிற் கூறப்பட்ட ஒருசாரனவும், காஞ்சிப்படலத்து நிலையாமையும், பாடாண் பகுதியிற் கூறப்பட்ட பொருண்மையும் ஆகிய இவை யெல்லாம்

பொருளின் பகுதியாதலின் பொருள் கூறினாராம், அகத்திணையியலானும், களவியல் கற்பியலானும் இன்பப் பகுதி கூறினாராம் எனக.

அற்றேல், பிற நூலாசிரியர் விரித்துக் கூறினார் போல அறமும் பொருளும் விரித்துக் கூறாது தொகுத்தோதினா ரென்னின், "இலக்கண நூல் பொருளாராய்கின்றது அறிவிலாதாரை அறிவுறுத்தற்கு வேண்டியன்றே; யாதானும் ஒரு நூல் விரிக்கக்கருதிய பொருளைத் தானும் விரித்தோதுமாயின் ஓதுகின்றதனாற் பயனின்மையானே, முதனூலாசிரியர் விரித்துக் கூறின பொருளைத் தொகுத்துக் கூறலும் தொகுத்துக் கூறின பொருளை விரித்துக் கூறலும் நூல் செய்வார் செய்யும் பாடமென வுணர்க. அற்றேல், இந்நூலகத்து விரித்துக் கூறிய பொருள் யாவை யெனின், காமப் பகுதியும் வீரப் பகுதியுமாம் எனக. இன்பங் காரணமாகப் பொருளீட்டு மாகலானும், பொருளானே அறஞ்செய்யு மாகலானும், இம்மூன்று பொருளும் ஏற்றபெற்றி ஓதினாரென வுணர்க.

அஃதற்றாக, இது பொருளதிகாரமாயின் உலகத்துப் பொருளெல்லாம் உணர்த்தல் வேண்டுமெனின், அவை, முதல் கரு உரிப்பொருள் என்னுந் தொகைநிலைவகையான் அடங்கும்; அவ்வாறு வகுக்கப்பட்ட பொருள் உறுப்பினானும் தொழிலினானும் பண்பினானும் பாகுபடுத்தி நோக்க வரம்பிலவாய் விரியும்; இந் நூலகத்தினுள் இவ்வாசிரியர் உலகத்துப் பொருளெல்லாவற்றையும் முதல் கரு உரிப்பொருள் என ஓதினாரென வுணர்க.

அஃதற்றாக, இவ் வதிகாரத்துள் உரைக்கின்ற பொருளை யாங்ஙனம் உணர்த்தினரோவெனின், முற்பட இன்பப் பகுதியாகிய கைக்கிளை முதலாகப் பெருந்திணை யீறாக அகப்பொருளிலக்கணம் உணர்த்தி, அதன்பின் புறப்பொருட் பகுதியாகிய வெட்சி முதலாகப் பாடாண்

டிணை யிருக்கப் புறப்பொருளிலக்கணம் உணர்த்தி, அதன் பின் அகப்பொருட் பகுதியாகிய களவியல் கற்பியல் என இரண்டுவகைக் கைகோள் உணர்த்தி, அதன்பின் அகம் புறம் என இரண்டனையும் பற்றி வரும் பொருளியல்பு உணர்த்தி, அதன்பின் அவ்விருபொருட்கண்ணும் குறிப் புப்பற்றி நிகழும் மெய்ப்பாடு உணர்த்தி, அதன்பின் வடிவு தொழில் பண்பு பயனென்பனபற்றி உவமிக்கப்படும் உவமவியல் உணர்த்தி, அதன்பின் எல்லாப் பொருட்கும் இடமாகிய செய்யுளியல் உணர்த்தி, அதன்பின் வழக்கிலக் கணமாகிய மரபியல் உணர்த்தினார் என்று உணர்க. இவ் வகையினானே அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் என ஓத்து ஒன்பதாயின.

இவ்வதிகாரத்துள் * இம்முதலோத்து அகப்பொருளிலக்கணம் நுதலிற்றாக, இதன் தலைச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், அகப்பொருள் எழுதிணையென வரையறுத்து உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய முற்படக் கிளந்த எழுதிணை என்ப — கைக்கிளை என்று சொல்லப்படும் பொருள் முதலாகப் பெருந்திணை என்று சொல்லப்படும் பொருள் ஈறாக ஏழு பொருள் முற்படக் கூறப்பட்டன என்று சொல்வர் என்றவாறு.

'முதலா' என்பது முதலாக என்னும் பொருள்பட நின்றது, விகாரம் எனினும் அமையும். இறுவாயாக என்பதன்கண் ஆக என்பது எஞ்சி நின்றது. எழுதிணையும் முற்படக் கிளந்த என்றபாலது மொழிமாறி நின்றது. 'கிளந்த' என்பது கிளக்கப்பட்டன என்னும் பொருள்பட வந்த முற்றுச்சொல். முற்படக்கிளந்த எழுதிணை கைக்கிளை முதலாகப் பெருந்திணை யிறுதியாகிய வெனினும்

* 'இவ் வதிகாரத்து முதற்கணோத்து' எனவும் பிரதிபேதம்.

இழுக்காகாது 'முற்படக்கிளந்த' என்றமையான், அவை ஏழும் அகப்பொருளென்று கூறினோமாம். அகம், புறம் எனப் பொருளை வரையறுத்தல் இவர் கருத்தாகலின் அன்னதாதல்,

'அகத்திணை மருங்கி னரிறப வுணர்ந்தோர்
புறத்திணை யிலக்கணந் திறப்படக் கிளப்பின்' (புறத் - ௧)

என்பதனாற் கொள்க.

'முற்படக் கிளந்த வெழுதிணை' எனவே பிற்படக் கிளக்கப்படுவன எழுதிணை உள என்பதூஉம் பெறுதும். அவையாவன, வெட்சி முதலாகப் பாடாண்டிணை யீறாகக் கிடந்த எழுதிணையுமாம். இவ்வகையினை இவ்வதிகாரத்திற் கூறப்பட்ட பொருள் பதினான்கு என்பதூஉம், அவையும்,

வெட்சி தானே குறிஞ்சியது புறனே (புறத் - ௧)

எனவும்,

'வஞ்சி தானே முல்லையது புறனே' (புறத் - ௬)

எனவும், இவ்வாறு கூறுதலின், ஏழாக யடங்கும் என்பதூஉம் கொள்க.

அஃதேல், மெய்ப்பாட்டியலானும், உவமவியலானும், செய்யுளியலானும், மரபியலானும், கூறப்பட்ட பொருள் யாதனுள் அடங்குமெனின், அவை கருப்பொருளும் அப்பொருளாற் செய்யப்பட்டனவும், அப்பொருளின் குண முதலியனவும், அப்பொருளின் குறிப்பு நிகழ்ச்சியுமாகலின், அவையும் கருப்பொருளின்பால நடுவணைந்திணையுள் அடங்கும் எனக் சிறுபான்மை, கைக்கிளை பெருந்திணையினும் வரும் அவ் வெழுதிணையுமாவன கைக்கிளை, முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல், பெருந்திணை என்பன.

கைக்கிளை என்ற பொருண்மை யாதோவெனின், கை என்பது சிறுமைபற்றிவரும், அது தத்தங் குறிப்பிற் பொருள்செய்வதோர் இடைச்சொல். கிளை என்பது உறவு, பெருமையில்லாத தன்மைக்கண் கிளைமை என்றவாறு. கைக்குடை கையேடு கைவாள் கையொலியல் கைவாய்க்கால் என்பன பெருமையில்லாதவற்றை வழங்குபவாகலின். நடுவணைந்திணைக்கண் நிலமும், காலமும், கருப்பொருளும் அடுத்துப், புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் எனச் சொல்லப்பட்ட அவ்வுரிப்பொருள், ஒத்த அன்பும், ஒத்தகுலனும், ஒத்தவடிவும், ஒத்தகுணனும், ஒத்தசெல்வமும் ஒத்த இளமையும் உள்வழி நிகழுமாதலின் அது பெருங்கிளைமை யாயிற்று. முல்லை முதலாகிய ஐந்தும் முன்னர்க் கூறப்படும்.

பெருந்திணையாவது நடுவணைந்திணையாகிய ஒத்த காமத்தின் மிக்கும் குறைந்தும் வருதலானும், எண்வகை மணத்தினும் பிரமம் பிராசாபத்தியம் ஆரிடம் தெய்வம் என்பன பெருந்திணையின்பாற் படுதலானும், இந்நான்கு மணமும் மேன்மக்கள்மாட்டு நிகழ்தலானும், இவை உலகினுட் பெருவழக்கெனப் பயின்று வருதலானும், பெருந்திணை எனக் கூறப்பட்டது.

அஃதேல், நடுவணைந்திணையாகிய ஒத்த கூட்டம் பெருவழக்கிற் றன்றோவெனின், அஃது, அன்பும் குலனும் முதலாயின ஒத்துவரல் உலகினுள் அரிதாகலின், அருகியல்லது வாராதெனக் இந்நூலகத்து ஒருவனும் ஒருத்தியும் நுகரும் காமத்திற்குக் குலனும், குணனும், செல்வமும், ஒழுக்கமும், இளமையும், அன்பும், ஒழுங்கும் உள்வழி இன்பம் உளதாமெனவும், கைக்கிளை ஒருதலை வேட்கையெனவும், பெருந்திணை ஒவ்வாக் கூட்டமாய் இன்பம் பயத்தல் அரிதெனவும் கூறுதலான், இந்நூலுடையார் காமத்துப் பயனின்மை உய்த்துணரவைத்தவாறு அறிந்து கொள்க. (க)

உ. அவற்றுள்,
நடுவ ணைந்திணை நடுவண தொழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே.

இது, மேற்சொல்லப்பட்ட எழுதிணையுள் நிலம் பெறுவன வரையறுத்து உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — மேற் சொல்லப்பட்ட எழுதிணையுள் கைக்கிளை பெருந்திணைக்கு நடுவணதாகி நின்ற ஐந்திணைக்கண் நடு எனப்பட்ட பாலை ஒழிய, ஒழிகின்ற திரை சூழ்ந்த உலகம் பகுக்கப்பட்ட இயல்பு என்றவாறு.

இதனாற் சொல்லியது எழுவகைத் திணையினும் நிலம் பெறுவன நான்கு என்றவாறாயிற்று.

நடுவணது பாலையென்று எற்றாற் பெறுதும் எனின் வருகின்ற சூத்திரங்களுள் முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என நிலம் பகுத்தோதினமையின், நடுவணது பாலை எனக் கொள்ளப்படும். நடுவு நிலைத்திணை எனினும் பாலை எனினும் ஒக்கும். பாலை என்னுங் குறியீடு எற்றாற் பெறுதும் எனின்,

'வாகை தானே பாலையது புறனே' (புறத் - க௫)

என்பதனாற் பெறுதும்.

இச் சூத்திரத்துள் 'ஒழிய' என்னும் வினையெச்சம் எவ்வாறு முடிந்ததெனின், அது 'பாத்திய' என்னும் பெயரெச்சத்தொடு கூடி முடிந்தது. அப் பெயரெச்சம் 'பண்பு' என்னும் பெயர்கொண்டு ஐந்திணை என்னும் எழுவாய்க்குப் பயனிலையாகி நின்றதென உரைப்ப. இவ்வாறு உரைப்பவே 'ஐந்திணை பண்பு' என வருங்காலத்துப் பயன்பட நில்லாமையின், அஃது உரையன்று என்பார், 'ஒழிய' என்பதனை எச்சப்படுத்தாது முற்றுப்படக் கூறி, 'படு திரை வையம் பாத்திய பண்பு நடுவண தொழிய' எனப் பொருளுரைப்ப. அஃதேல் வினையெச்ச வாய்பாட்டால் வரும் முற்று உளவோ வெனின்,

'வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய' (எச்ச - ௬௧)

என்று முற்றுவாய்பாட்டால் வினையெச்சம் வருதலின், வினையெச்ச வாய்பாட்டால் முற்று வரும் என்பதூஉம் அச் சூத்திரத்துள் அமைத்துக் கொள்ளப்படும் என்ப. இவ்வுரை யிரண்டினும் ஏற்பது அறிந்துகொள்க.

'நடுவணைந்திணை' என்பன யாவை யெனின், முல்லை குறிஞ்சி பாலை மருதம் நெய்தல் என்பனவாம். எற்றுக்கு? இந் நூலகத்து அகமும் புறமும் ஆகிய உரிப் பொருள் கூறுகின்றாராகலின், புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் என அமையுமே யெனின், புறப் பொருட்கண் நிரைகோடலை 'வெட்சி' எனக் குறியிட்டு ஆளுமாகலின், ஈண்டு இப் பொருளையும் 'முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல்' என ஆளும் என்க. இதனாற் பயன் என்னையெனின், உரிப்பொருளே திணையென உணர்த்துவாராயின் முதற்பொருளும், கருப்பொருளும் திணை யாதல் தோன்றாதாம், அவையெல்லாம் அடங்குதற் பொருட்டு முல்லை குறிஞ்சி பாலை மருதம் நெய்தல் என்றார் என்பது அவையாமாறு வருகின்ற சூத்திரங்களான் விளங்கும். (௨)

௩. முதல்கரு வுரிப்பொரு ளென்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை.

இதுமேற் சொல்லப்பட்ட 'நடுவணைந்திணை' ஆமாறும், ஒருவகையான உலகத்துப் பொருளெல்லாம் மூவகை யாகி அடங்கும் என்பதூஉம் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — சான்றோர் செய்யுளகத்துப் பயின்ற பொருளை ஆராயுமிடத்து முதற்பொருள் எனவும் கருப்பொருள் எனவும் உரிப்பொருள் எனவும் சொல்லப் பட்ட மூன்று பொருண்மையுமே, அவை சொல்லுங் காலத்து முறையாற் சிறந்தன என்றவாறு.

இச் சூத்திரத்துள் பாடலுட் பயின்ற பொருள் மூன்றென ஓதி, அவற்றுள் 'உரிப்பொருள்' என ஒன்றைப் பின்னெடுத்து ஓதினமையின், புறப்பொருளும் உரிய பொருளாகி யடங்கும் என்றவாறு கண்டுகொள்க. முறைமையாற் சிறத்தலாவது யாதானுமோர் செய்யுட்கண் முதற்பொருளும், கருப்பொருளும், உரிப்பொருளும் வரின், முதற் பொருளாற் திணையாகும் என்பதூஉம், முதற் பொருளொழிய ஏனையிரண்டுமேவரின் கருப்பொருளாற் திணையாகும் என்பதூஉம், * உரிப்பொருள் தானே வரின் அதனால் திணையாகும் என்பதூஉம் ஆம். அவை யாமாறு முன்னர்க் காணப்படும். அஃதேல் ஒரு பொருட்கு ஒரே காரணங் கூறாது மூன்று காரணங் கூறியது என்னை யெனின், உயர்ந்தோர் என்றவழிக் குலத்தான் உயர்ந்தோரையும் காட்டும், கல்வியான் உயர்ந்தோரையும் காட்டும்; செல்வத்தான் உயர்ந்தோரையும் காட்டும், அதுபோலக் கொள்க (௩)

௪. முதலெனப் படுவது நிலம்பொழு திரண்டி
னியல்பென மொழிப வியல்புணர்ந் தோரே.

இது, மேற்சொல்லப்பட்ட மூன்றுவகைப் பொருளினும் முதற்பொருளாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — முதல் என்று சொல்லப்படுவது நிலமும் காலமும் ஆகிய அவ்விரண்டினது இயற்கை யென்று சொல்லுப உலகியல்பு உணர்ந்தோர் என்றவாறு.

இயற்கை என்பதனால் †செய்து கோடல் பெருமை அறிந்து கொள்க. நிலம் என்பதனால் பொருள் தோற்று தற்கு இடமாகிய ஐம்பெரும் பூதமுங் கொள்க (௪)

* 'உரிப்பொருள் தானே தனிப்பொருளாற் றிணையாகும்' எனவும் பிரதிபேதம்.
† 'செய்துகோடற் பெருமை' எனவும் பிரதிபேதம்.

ரு. மாயோன் மேய காடுறை யுலகமுஞ்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமண லுலகமும்
முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே.

இது, நிறுத்த முறையானே நிலத்தால் திணையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — மாயவன் மேவிய காடு பொருந்திய உலகமும், முருகவேள் மேவிய மைவரை உலகமும், இந்திரன் மேவிய தீம்புனல் உலகமும், வருணன் மேவிய பெருமணல் உலகமும், முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச் சொல்லிய முறையானே சொல்லவும்படும் என்றவாறு.

நிரனிறை உம்மை எதிர்மறையாகலின் இம்முறையன்றிச் சொல்லவும்படும் என்று கொள்க. அஃதாவது, அவற்றுள் யாதானும் ஒன்றை முன்னும் பின்னுமாக வைத்துக் கூறுதல். அது, சான்றோர் செய்யுட் கோவையினும் பிறநூலகத்தும் கண்டுகொள்க. காடு, நாடு, மலை, கடல் என்பதே பெருவழக்காம். இச் சூத்திரத்துள், 'காடுறை நிலம்' என்னாது 'காடுறை யுலகம்' என்றதனை ஐவகைப் பூதத்தானும் அமைந்த இடம் என்பது உய்த்துணர வைத்தவாறு கண்டுகொள்க. முல்லை குறிஞ்சி என்பன இடுகுறியோ காரணக்குறியோ எனின், ஏகதேச காரணம்பற்றி முதலாசிரியர் இட்டதோர் குறி என்றே கொள்ளப்படும். என்னை காரணமெனின்,

'நெல்லொடு
நாழி கொண்ட நறுவீ முல்லை
யரும்பவி ழலரி தூஉய்' (முல்லைப். அ - க0)

என்றமையால் காடுறை உலகிற்கு முல்லைப்பூச் சிறந்ததாக லானும்,

'கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே' (குறுந் - ௩)

என்றவழி மைவரை உலகிற்குக் குறிஞ்சிப்பூச் சிறந்ததாக வாறும்,

'ஆர் வருந்திய சிறுசினை மருதின்
றாழ்சினை யுறங்குந் தண்டுறை யூரன்' (அகநா - ௨௮௫)

என்றவழித் தீம்புனல் உலகிற்கு மருது சிறந்ததாக வாறும்,

'பாசடை நிவந்த கணைக்கா னெய்தல்
இனமீ னிருங்கழி யோத மல்குதொறுங்
கயமூழ்கு மகளிர் கண்ணின் மானும்' (குறுந் - ௯)

என்றவழிப் பெருமணல் உலகிற்கு நெய்தல் சிறந்ததாக வாறும், இந்நிலங்களை இவ்வாறு குறியிட்டார் என்று கொள்ளப்படும் என்க

பாலை யென்பதற்கு நிலம் இன்றேனும் வேனிற் காலம் பற்றி வருதலின் அக்காலத்துத் தளிரும் சினையும் வாடுதலின்றி நிற்பதாம் பாலை என்பதோர் மரமுண்டாகலின் அச்சிறப்பு நோக்கிப் பாலையென்று குறியிட்டார் கைக்கிளை, பெருந்திணை என்பனவற்றிற்கு நிலமுங் காலமும் வகுத்தோதாமையின் இவ்வாறன்றிப் பிறிதோர் காரணம்பற்றிக் குறியிட்டார் என்க (௫)

௬. காரு மாலையு முல்லை.

இனிக் காலத்தால் திணையாமாறு உணர்த்துவான் எடுத்துக் கொண்டார் இஃது அவற்றுள் முல்லைத் திணைக்குக் காலம் வரையறுத்து உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — கார்காலமும் மாலைப்பொழுதும் முல்லைத்திணைக்குக் காலமாம் என்றவாறு

காராவது மழைபெய்யுங் காலம், அஃது ஆவணித் திங்களும், புரட்டாசித் திங்களுமாம் மாலையாவது இராப் பொழுதின் முற்கூறு. (௬)

௭. குறிஞ்சி.

கூதிர் யாம மென்மனா புலவர்.

இது, குறிஞசிககுக காலமாமாறு உணாததுதல நுதலிறறு

இதன் பொருள — குறிஞசிததிணைககுக காலமாவது கூதிாகாலமும யாமபபொழுதும என்பா புலவா எனற வாறு

கூதிராவது ஐபபசித திஙகளும, காாததிகைத திங் களுமாம யாமமாவது இராபபொழுதின நடுககூறு (௭)

௮. பனியெதிர் பருவமு முரித்தென மொழிப.

இஃது, எயதாதது எயதுவிததல நுதலிறறு.

இதன் பொருள — குறிஞசிததிணைககு முனபனிக காலமும உரிததெனறு சொலலுவா எனறவாறு

இதனைக கூதிாகாலததொடு ஒருஙகு கூறுமையின் அததிணைச் சிறபபிறறனறு எனக கொளக. குறிஞசி எனறது அதிகாரததான வநதது முனபனிக காலமாவது மாாககழித திஙகளும, தைத திஙகளுமாம 'பருவமும' எனற உமமை இறநதது தழீஇய எசச உமமை (௮)

௯. வைகறை விடியன் மருதம்.

இது, மருததிணைககுக காலம உணாததுதல நுதலிறறு.

இதன் பொருள — வைகறையும விடியலும மருதத் திறகுக காலமாம எனறவாறு

வைகறை யாவது இராப பொழுதின பிறகூறு விடியலாவது பகற பொழுதின் முறகூறு பருவம் வரைநதோதாமையின அறுவகைப பருவமும் கொளளப படும் இது நெயதறகும ஒக்கும (௯)

கo. எற்பாடு,
நெய்த லாதன் மெய்பெறத் தோன்றும்.

இது, நெய்தற் றிணைக்குக் காலம் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — எற்படு பொழுது நெய்தற் றிணைக்குப் பொருண்மை பெறத் தோன்றும் என்றவாறு.

எற்பாடாவது பகற்பொழுதின் பிற்கூறு. (கo)

கக. நடுவு நிலைத் திணையே நண்பகல் வேனிலொடு
முடிவு நிலை மருங்கின் முன்னிய நெறித்தே.

இது, பாலைக்குக் காலமும் இடனும் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — நடுவுநிலைத் திணையாகிய பாலையாவது நண்பகற்பொழுது வேனிற் காலத்தொடு புணர்ந்து நின்றவழிக் கருதிய நெறியையுடைத்து என்றவாறு.

என்றது இளவேனில் முதுவேனில் என்னும் இருவகைப் பருவத்தின்கண்ணும் வரும் நண்பகற்பொழுது காலமாம் என்பதூஉம், ஆண்டு இயங்கும் நெறி நிலமாம் என்பதூஉம் உணர்த்தியவாறு. இளவேனிலாவது சித்திரைத் திங்களும் வைகாசித் திங்களும். முதுவேனிலாவது ஆனித் திங்களும் ஆடித் திங்களும். நண்பகலாவது பகற்பொழுதின் நடுக்கூறு. (கக)

கஉ. பின்பனி தானு முரித்தென மொழிப.

இஃது எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

இதன் பொருள் — பின்பனிக்காலமும் உரித்தென்று கூறுப பாலைக்கு என்றவாறு.

இது வேறோதினமையின் வேனில போலச சிறப பிற்றன்று எனககொளக. பினபனியாவது மாசித திஙக ளும பஙகுனித திஙகளுமாம.

அஃதறறாக, இவவறுவகைப பருவமும அறுவகைப பொழுதும இவவைநதிணைக குரியவாறு எனனையெனின, சிறபபு நோககி எனக. எனனை சிறநதவாறு எனின, முலலையாகிய நிலனும, வேனிறகாலத்து வெபபமுழநத மரனும, புதலும, கொடியும கவினழிநது கிடநதன காரபபுயலகள முழஙகக கவினபெறுமாகலின அபபருவம சிறநததாம. மாலைபபொழுது அநநிலததிற கினறியமை யாத முலலை மலருஙகாலமாதலானும, அநநிலததுக கருப பொருளாகிய ஆனிரை வருஙகாலமாதலானும, ஆணடுத தனியிருபபாரககு அவை கணடுழி வருததம மிகுதலின, அதுவும சிறநததாயிற்று. குறிஞசிககுப பெருமபானமை யும களவிற புணாசசி பொருளாதலின, அபபுணாசசிககுத தனியிடம வேணடுமனறே; அது கூதிரகாலததுப பகலும இரவும நுண்துளி சிதறி இயஙகுவாரிலராகலின், ஆணடுத தனிபபடல எளிதாகலின, அதறகு அது சிறநதது. நடு நாள யாமமும அவவாறாகலின அதுவும சிறநதது. இனி மருததததிறகு நினை பழனஞசாரநத இடமாகலான், ஆண் டுறைவார மேனமககளாகலின, அவா பரததையிற பிரிவுழி அமமனையகதது உறைநதமை பிறரறியாமல மறைததல வேண்டி வைகறைககண தம மனையகத்துப பெயருமவழி ஆணடு மனைவி ஊடலுறறுச * சாரகிலளாம ஆதலால, அவை அநநிலததிறகுச சிறநதன. நெயதறகுப பெரும பான்மையும இரககம பொருளாகலின், தனிமையுறறு இரஙகுவாரககுப பகறபொழுதினும இராபபொழுது மிகு மாதலான் அபபொழுது † வருததறகேதுவாகிய எறபாடு கண்டார இனி வருவது மாலை என்று வருததமுறுதலின்

* 'சாரகிலலாளாம' எனவும பிரதிபேதம.

† 'வருததறகேதுவாகிய எறபாடு' எனவும பிரதிபேதம.

அதற்கு அது சிறந்தது பாலை. பொருளாவது பிரிவு; அப்பிரிவினைத் தலைமகற்கு வருத்தமுறும் என்று தலைமகள் கவலுங்காதல், நிழலும் நீரும் இல்லாதவழி ஏகினார் எனவும் கவலுமாதலின், அதற்கு அது சிறந்தது எனக. (கஉ)

கங. இருவகைப் பிரிவு நிலைபெறத் தோன்றலு
முரிய தாகு மென்மனார் புலவர்.

இது, பாலைக்கு உரிய பொருளாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — இருவகைப் பிரிவான தலைமகளைப் பிரிதலும், தலைமகளை உடன்கொண்டு தமரவரைப் பிரிதலும், அவை நிலைபெறத் தோன்றலும் பாலைக்கு உரிய பொருளாகும் என்பர் புலவர் என்றவாறு.

உம்மை எச்சவும்மை யாகலான் நிலைபெறத் தோன்றாது பிரிதற் குறிப்பு நிகழ்ந்துழியும் பாலைக்குரிய பொருளாம் என்று கொள்க. அதிகாரப்பட்டு வருகின்றது பாலை யாகலின் இருவகைப் பொருளும் பாலைக்கு உரிய பொருளாயின. (கங)

யச. திணைமயக் குறுதலுங் கடிநிலை யிலவே
நிலனொருங்கு மயங்குத லிலவென மொழிப
புலனன் குணர்ந்த புலமை யோரே.

இது, மேல் அதிகரிக்கப்பட்ட நிலத்திணையும், காலத்திணையும் ஆகிய திணை மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — ஒரு திணைக்குரிய முதற்பொருள் மற்றோர் திணைக்குரிய முதற்பொருளொடு சேர்கிற்றல் கடியப்படாது, ஆண்டு நிலம் சேர்கிற்றல் இல்லை யென்று சொல்லுவர் புலனன்குணர்ந்த புலமையோர் என்றவாறு.

எனவே காலம் மயங்கும் என்றவாறாயிற்று. அதற்குச் செய்யுள்

'தொல்லூழி தடுமாறித் தொகல்வேண்டும் பருவத்தான்
பல்வயி னுயிரெல்லாம் படைத்தான்கட் பெயர்ப்பான்போ
லெல்லுறு தெறுகதிர் மடங்கித்தன் கதிர்மாய
நல்லற நெறிநிறீஇ யுலகாண்ட வரசன்பி
னல்லது மலிந்து திருத்தறநெறி நிறுக்கல்லா
மெல்லியான் பருவம்போன் மயங்கிரு டலைவர
வெல்லைக்கு வரம்பாய விடும்பைகூர் மருண்மாலை,
பாய்திரை பாடோவாப் பரப்புநீர்ப் பனிக்கட
றூவறத் துறந்தனன் றுறைவனென் றவன்றிற
நோய்தெற வுழப்பார்க ணிமிழ்தியோ வெம்போலக்
காதல்செய் தகன்றாரை யுடையையோ நீ,
மன்றிரும் பெண்ணை மடல்சே ரன்றி
னன்றறை கொன்றன ரவரெனக் கலங்கிய
வென்றுய ரறிந்தனை நரறியோ வெம்போல
வின்றுணைப் பிரிந்தாரை யுடையையோ நீ,
பனியிருள் சூழ்தரப் பைதலஞ் சிறுகுழ
லினிவரி னுயருமற் பழியெனக் கலங்கிய
தனியவ ரிடும்பைகண் டினைதியோ வெம்போல
வினியசெய் தகன்றாரை யுடையையோ நீ
எனவாங்கு,
அழிந்தய லறிந்த வெவ்வ மேற்பட்ட
பெரும்பே துறுதல் களைமதி பெரும
வருந்திய செல்லற்றீர் திறனறி யொருவன்
மருந்தறை கோடலிற் கொடிதே யாழநின்
னருந்தியோர் நெஞ்ச மழிந்துக விடினே'

(கலித். நெய் - கஉ)

எனவரும். (கச)

க௫. உரிப்பொரு ளல்லன மயங்கவும் பெறுமே

இஃது, எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

இதன்பொருள் — உரிப்பொருள் அல்லாத கருப்பொருளும், முதற்பொருளும் மற்றொரு திணையொடு சேர நிற்கவும் பெறும் என்றவாறு.

உம்மை எதிர்மறை யாகலான் மயங்காமை பெரும்பான்மை என்க. எனவே 'உய்த்துக்கொண்டுணர்தல்' என்னுந் தந்திர உத்தியான் எடுத்தோதிய காலமாகிய முதற்பொருளும் பூவும் புள்ளும் ஆகிய கருப்பொருளும் மயங்கியும் மயங்காமையும் வரும். எனவே உரிப்பொருள் மயங்கி வாராது என்றவாறு. அல்லன மயங்கி வருதல் கலி முதலாகிய சான்றோர் நூலகத்துக் கண்டுகொள்க.

உதாரணம்,

'ஒண்செங் கழுநீர்க் கண்போ லாயிதழ்
ஊசி போகிய சூழ்செய் மாலையன்
பக்கஞ் சேர்த்திய செச்சைக் கண்ணியன்
குயமண் டாகஞ் செஞ்சாந்து நீவி' (அகநா - ௪௮)

என்றவழி, மருதத்திற்குக் கருப்பொருளாகிய கழுநீரும், குறிஞ்சிக்குரிய வெட்சிப்பூவும் அணிந்தோன் என்றமையாற் கருப்பொருள் மயக்கமாயிற்று. பிறவுமன்ன. (க௫)

க௬. புணர்தல் பிரித லிருத்த லிரங்க
லூட லவற்றி னிமித்த மென்றிவை
தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே.

இஃது, உரிப்பொருள் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள் — புணர்தலும், பிரிதலும், இருத்தலும், இரங்கலும், ஊடலும், அவற்றின் நிமித்தமும் என்று

சொல்லப்பட்ட இவை ஆராயுங் காலத்து ஐந்திணைக்கும் உரிப்பொருளாம் என்றவாறு.

பிரிவு பாலைக்குரித்தாமாறு மேற்சொல்லப்பட்டது. ஏனைய, 'மொழிந்த பொருளோ டொன்ற வைத்தல்' என்னுந் தந்திரவுத்தியாற் புணர்தல் என்பது குறிஞ்சிக்கும், இருத்தல் என்பது முல்லைக்கும், இரங்கல் என்பது நெய்தற்கும், ஊடல் என்பது மருதத்திற்கும் பெரும்பான்மை உரித்தாகவும், சிறுபான்மை எல்லாப் பொருளும் எல்லாத் திணைக்கும் உரித்தாகவும் கொள்ளப்படும். இருத்தலாவது தலைமகன் வருந்துணையும் ஆற்றியிருத்தல். இரங்கலாவது ஆற்றாமை. (கச)

கரு. கொண்டுதலைக் கழிதலும் பிரிந்தவ ணிரங்கலு
முண்டென மொழிப வோரிடத் தான.

இதுவும் ஒருசார் உரிப்பொருளாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — கொண்டுதலைக் கழிதலும் உண்டு, பிரிந்தவண் இரங்கலும் உண்டு, ஓரிடத்துக்கண் என்றவாறு.

'உண்டு' என்பது இரண்டிடத்துங் கூட்டுக. அன்றியும் 'உண்டு' என்பதனை இலேசென்பதனாற் பெருக்கி விரவு வினையாக்கிப் பொருட்படக் கொண்டமையானும் 'ஓரிடத்து' என்றமையான் மேற்சொல்லப்பட்ட ஐவகை உரிப்பொருளும்போல எல்லாத் திணைக்கும் பொதுவாகி வருதலின்றி, 'கொண்டு தலைக்கழிதல்' பாலைக் கண்ணும், 'பிரிந்தவ ணிரங்கல்' பெருந்திணைக் கண்ணும் வரும் எனவுங் கொள்க. கொண்டு தலைக்கழிதலாவது உடன்கொண்டு பெயர்தல். அது நிலம் பெயர்தலின் புணர்தலின் அடங்காமையானும், உடன்கொண்டு பெயர்தலின் பிரிதலின் அடங்காமையானும் வேறோதப்பட்டது. பிரிந்தவ ணிரங்கலாவது ஒருவரை யொருவர் பிரிந்தவிடத்து இரங்கல். அது நெட்

டாறு சென்றவழி இரங்குதலின்மையானும், ஒருவழித் தணந்தவழி அழுங்குதலின்றி வேட்கை மிகுதியால் இரங்குதலானும் வேறு கூறப்பட்டது. அஃது ஏறிய மடற்றிறமும், தேறாக் கொள்கைக் காமத்து மிகுதிறமும் முதலாயின பொருள் இதனொடு படுத்துணர்க்கப் படும். (கஎ)

கஅ. கலந்த பொழுதுங் காட்சியு மன்ன.

இதுவும் அது.

இதன்பொருள் — 'கலந்தபொழுது' என்பது தலைமகனைத் தலைப்பெய்தவழி மனநிகழ்ச்சி யுள்ளதாகிய காலம் — அக்காட்சிய பின்னாகக் குறிப்பறிதலும் நிகழும் நிகழ்ச்சி; 'காட்சி'யாவது தலைவியை எதிர்ப்படுதல் — குறிப்பறிந்ததின்னாட் புணர்ந்ததலையும் நிகழும் நிகழ்ச்சி.

'முன்னிலை யாக்கல்' முதலாயின புணர்தல் நிமித்தமன்றே. இவை அந்நிகரனவன்றிப் பொதுப்பட நிற்றலின் வேறோதப்பட்டன.

'அன்ன' என்பது இவையும் ஓரிடத்து நிகழும் உரிப்பொருள் என்றவாறு. ஓரிடமாவது மக்கட்கு அஃதேல், இவையும் புணர்தல் நிமித்தமாயினால் வந்த குற்றம் என்னையெனின், ஒருவன் ஒருத்தியை எதிர்ப்பட்டுழிப் புணர்ச்சி வேட்கை தோற்றலும் தோற்றாமையும் உண்மையின், காட்சி பொதுப்படக் கூறுது. ஐயம் முதலாகக் குறிப்பறிதல் ஈறாக நிகழும் மனநிகழ்ச்சி தலைமகள் மாட்டுக் காமக்குறிப்பு இல்வழிக் காமக்குறிப்பு உணராது கூறுதலின் அதுவும் புணர்தல் நிமித்தம் அன்றாயிற்று என்க. ()

கக. முதலெனப் படுவ தாயிரு வகைத்தே.

இஃது, ஐயம் அறுத்தல் நுதலிற்று.

இதன்பொருள் — மேல் எடுத்து ஓதப்பட்டவற்றில் முதல் என்று சொல்லப்படுவது நிலமும் காலமும் ஆகிய அவ்விருவகையும் என்றவாறு.

எனவே ஏனையவெல்லாம் உரிப்பொருள் என்றவாறும் இதனாற் பெற்றது என்னையெனின், முதல் கரு உரிப்பொருள் என அதிகரித்து வைத்தார் இனிக் கருப்பொருள் கூறுகின்றார் உரிப்பொருள் யாண்டுக் கூறினார் என ஐயம் நிகழுமதை விடுத்தல் என்க. (௧௯)

௨௦. தெய்வ முணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
வவ்வகை பிறவுங் கருவென மொழிப.

இது, கருப்பொருளாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள் — தெய்வம் முதலாகச் சொல்லப்பட்டனவும் அத்தன்மைய பிறவும் கருப்பொருள் என்று மொழிப என்றவாறு.

அவையாவன முதற்பொருட்கட் டோன்றும் பொருள்

'மாயோன் மேய காடுறை யுலகம்' (அகத் - ௫)

என்றதனை முல்லைக்குத் தெய்வம் — கண்ணன்,

'காடுறை யுலகம்' (அகத் - ௫)

என்றதனானும்,

'காரு மாலையு முல்லை' (அகத் - ௬)

என்றதனானும், காட்டினும் கார்காலத்தினும் மாலைப் பொழுதினும் நிகழ்பவை கொள்க,

'எந்நில மருங்கிற் பூவும் புள்ளு
மந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்' (அகத் - ௨௧)

என்றதனானும், நிலமும் காலமும் பற்றி வருவன கருப்பொருள் என்பது உணர்க. உணவு - வரகும், முதிரையும்; மா - மானும், முயலும், மரம் - கொன்றையும்,

குருந்தும், புதலும், புள் - கானங்கோழி; பறை - ஏறு கோட்பறை, செய்தி - நிரைமேய்த்தல், 'யாழின் பகுதி' என்பது பண், அது - சாதாரி 'பிறவும்' என்றதனால், பூ - முல்லையும், பிடவும், தளவும் நீர் - கான்யாறு; பிறவும் இந்நிகரன கொள்க.

குறிஞ்சிக்குத் தெய்வம் — முருகவேள், மைவரை யுலகமும், கூதிர்காலமும், யாமமும் கூறினமையின், அந்நிலத்தினும் காலத்தினும் கருப்பொருளை கொள்க. உணவு - தினையும், வெதிர்நெல்லும், ஐவனமும், மா - யானையும், புலியும், பன்றியும், கரடியும், மரம் - வேங்கையும், கோங்கும், புள் - மயிலும், கிளியும், பறை - வெறியாட்டுப்பறையும், தொண்டகப்பறையும், செய்தி - தேனழித்தல், பண் - குறிஞ்சி, 'பிறவும்' என்றதனால், பூ - வேங்கைப்பூவும், குறிஞ்சிப்பூவும், காந்தட்பூவும், நீர் - சுனைநீரும், அருவிநீரும் பிறவும் அன்ன

பாலைக்கு நிலம் ஒதுக்காது வேனிற்காலமும், நண்பகலும் ஓதினமையானும்,

> 'முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து
> நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப்
> பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்'
>
> (சிலப் காடுகாண் - ௬௪ - ௬௭)

என்ப பிற சான்றோர் செய்யுளகத்து வருதலானும், இந்நிலங்களில் வேனிற்காலத்து நிகழ்வன கருப்பொருளாகக் கொள்ளப்படும். தெய்வம் - கொற்றவை, உணவு - ஆறலைத்தலால் வரும்பொருள், மா - வலியழிந்த யானையும், வலியழிந்த புலியும், வலியழிந்த செந்நாயும், மரம் - பாலை, இருப்பை, கள்ளி, சூரை, புள் - எருவையும், பருந்தும், பறை - ஆறலைப்பறையும், சூறைகொண்ட பறையும், செய்தி - ஆறலைத்தல், பண் - பாலை, 'பிறவும்' என்றதனால், பூ - மராம்பூ, நீர் - அறுநீர்க் கூவலும், அறுநீர்ச்சுனையும் பிறவும் இந்நிகரன கொள்க.

மருதத்திற்குத் தெய்வம் — இந்திரன்

'தீம்புன லுலகம்' (அகத் - ௫)

எனவும்,

'வைகறை விடியல்' (அகத் - ௬)

எனவும், ஓதினமையால் அவ்விடத்தினும் காலத்தினும் நிகழ்பவை கொள்க. உணவு - நெல். மா - எருமையும், நீர்நாயும். மரம் - மருதும், காஞ்சியும். புள் - அன்னமும், அன்றிலும். பறை - நெல்லரிபறை. செய்தி - உழவு. பண் - மருதம். 'பிறவும்' என்றதனால், பூ - தாமரையும், கழுநீரும். நீர் - யாற்று நீரும், பொய்கை நீரும். பிறவும் அன்ன.

நெய்தற்குத் தெய்வம் — வருணன்

'மணலுலகம்' (அகத் - ௫)

என்றதனானும்,

'எற்பாடு' (அகத் - ௧௦)

என்றதனானும், ஆண்டு நிகழ்பவை கொள்க. உணவு, உப்புவிலையும், மீன்விலையும். மா - கராமும், சுறவும். மரம் - புன்னையும், கைதையும். புள் - கடற்காக்கை. பறை - நாவாய்ப்பறை. செய்தி - மீன் படுத்தலும், உப்பு விளைத்தலும். பண் - செவ்வழி. 'பிறவும்' என்றதனால், பூ - நெய்தல். நீர் - கேணிநீரும், கடல் நீரும். பிறவும் அன்ன. (௨௦)

௨௧. எந்நில மருங்கிற் பூவும் புள்ளு
மந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்
வந்த நிலத்தின் பயத்த வாகும்.

இது, மேலதற்கோர் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — யாதானுமோர நிலததிறகு உரிய வாகிய பூவும புளளும அந்நிலததோடும பொழுதோடும் வந்திலவாயினும வந்த நிலததின பயததவாகும என்ற வாறு

'வந்ததுகொண்டு வாராதது முடிததல்' எனபதனால சிறுபான்மை ஏனையவும வந்த வழிக கண்டுகொளக இவவாறு வருவன திணைமயககமாம (உக)

உஉ. பெயரும் வினையுமென் றாயிரு வகைய
திணைதொறு மரீஇய திணைநிலைப் பெயரே *

இது கருபபொருளின பாகுபாடாகிய மககட்டிறம உணர்த்துதல் நுதலிறறு.

இதன் பொருள — குலபபெயரும தொழிறபெயரும என இருவகைபபடும, அததிணைதொறும மருவிபபோந்த திணைநிலைபபெயர எனறவாறு

'திணைநிலைபபெயர' எனறதனை அபபெயருடையார பிறநிலததிலர எனறு கொளளபபடும அதனானே எலலா நிலததிறகும உரியராகிய மேனமககளை யொழிதது, நிலம பறறி வாழும கீழமககளையே குறிதது ஓதினார என்று கொளக. பெயர எனறதனாற பெறறது எனனை? மககள எனல அமையாதோ எனின, மககளாயவர புளளும மாவுமபோல வேறு பகுககபபடா ஒருநீர்மையராதலின அவரை வேறு படுககுங்கால திணைநிலைபபெயரா னலலது வேறுபடுததல அருமையின 'பெயர' எனறார எனக (உஉ)

உ௩. ஆயர் வேட்டுவ ராடூஉத் திணைப்பெய
ராவயின் வரூஉங் கிழவரு முளரே.

இது, நிறுததமுறையானே முலலைககு உரிய மககட பெயர உணாததுதல் நுதலிறறு

* 'திணைநிலைப பெயரே' எனவும பாடமபேதம.

இதன் பொருள் — ஆண்மக்களைப் பற்றி வரும் திணை நிலைப்பெயர் ஆயர் எனவும் வேட்டுவர் எனவும் வரும் அவ்விடத்து வரும் கிழவரும் உளர் என்றவாறு.

ஆயர் என்பார் நிரை மேய்ப்பார். வேட்டுவர் என்பார் வேட்டைத்தொழில் செய்வார். வேட்டு - ஒரு தொழில், அஃது எயினர் என்னும் குலப்பெயருடையார் மேல் தொழிற்பெயராகி வந்தது. 'வந்தது கொண்டு வாராதது முடித்தல்' என்பதனான் 'ஆய்ச்சியர்' எனவுங் கொள்க. அவ்விருதிறத்தாருங் காடுபற்றி வாழ்தலின் அந்நிலத்தின் மக்களாயினார். 'ஆவயின் வரூஉங் கிழவர்' இருவகையர், அந்நிலத்தை ஆட்சிபெற்றோரும் அந்நிலத்துளோரும் என. குறும்பொறை நாடன் என்றாற் போல்வன ஆட்சிபற்றி வரும் பொதுவன, ஆயன் என்பன குலம்பற்றி வரும். (உங)

உச. ஏனோர் மருங்கினு மெண்ணுங் காலை
யாஅ வகைய திணைநிலைப் பெயரே.

இது, குறிஞ்சி முதலாய திணைக்கண் வரும் திணைநிலைப்பெயர் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — ஏனை நிலத்துள்ள மக்கண்மாட்டு ஆராயுங்காலத்து அவ்விடத்து அவ்வவகைய திணைநிலைப் பெயர் என்றவாறு.

என்றது, திணைதொறும் குலப்பெயரும் தொழிற்பெயரும் கிழவராம் பெயரும் வரும் என்றவாறாம். 'ஆன்' என்பது அவ்விடம்; 'அ' என்னும் சுட்டு நீண்டு இசைத்தது. குறிஞ்சிக்கு மக்கட்பெயர் குறவன், குறத்தி என்பன, தலைமக்கட்பெயர் மலைநாடன், வெற்பன் என்பன. பாலைக்கு மக்கட்பெயர் எயினர் எயிற்றியர் என்பன, தலைமக்கட்பெயர் மீளி, விடலை என்பன. மருதத்திற்கு மக்கட்பெயர் உழவர், உழத்தியர் என்பன, தலைமக்கட்

பெயர் ஊரன், மகிழ்நன் என்பன. நெய்தற்கு மக்கட் பெயர் நுளையர், நுளைச்சியர் என்பன; தலைமக்கட்பெயர் சேர்ப்பன், துறைவன், கொண்கன் என்பன. பிறவுமன்ன.

'கைக்கிளை முதலா' (அகத் - க)

என்னும் சூத்திரம் முதல் ஆக இத்துணையும் கூறப்பட்டது, நடுவண் ஐந்திணையாவது நிலத்தானும் காலத்தானும் கருப்பொருளானும் உரிப்பொருளானும் நிலமக்களானும் தலைமக்களானும் வரும் எனவும், அவை இலக்கண நெறியானும் வழக்கு நெறியானும் வரும் எனவும், கைக்கிளை பெருந்திணை உரிப்பொருளான் வரும் எனவும் ஓதியவாறு.

உதாரணம் முல்லைத்திணைக்குச் செய்யுள் —

'முல்லை வைந்நுனி தோன்ற வில்லமொடு
பைங்காற் கொன்றை மென்பிணி யவிழ
விரும்புதிரித் தன்ன மாயிரு மருப்பிற்
பரலவ லடைய விரலை தெறிப்ப
மலர்ந்த ஞாலம் புலம்புபுறங் கொடுப்பக்
கருவி வானங் கதழுறை சிதறிக்
கார்செய் தன்றே கவின்பெறு கானங்
குரங்குளைப் பொலிந்த கொய்சுவற் புரவி
நரம்பார்ப் பன்ன வாங்குவள் பரியப்
பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
தாதுண் பறவை பேதுற லஞ்சி
மணிநா வார்த்த மாண்வினைத் தேரி
னுதுக்காண் டோன்றுங் குறும்பொறை நாடன்
கறங்கிசை விழவி னுறந்தைக் குணாது
நெடும்பெருங் குன்றத்து மன்ற காந்தட்
போதவி ழலரி நாறு
மாயதொடி யரிவைநின் மாணலம் படர்ந்தே.' (அகம் - ச)

எனவரும்.

இதனுள், முல்லைக்கு உரித்தாகிய நிலமும், காலமும், கருப்பொருளும், இருத்தலாகிய உரிப்பொருளும் வந்த வாறு கண்டுகொள்க.

‘இல்லொடு மிடைந்த கொல்லை முல்லைப்
பல்லான் கோவலர் பையு ளாம்பல்
புலம்புகொண் மாலை கேட்டொறுங்
கலங்குங்கொ லளியணங் காத லோளே’

என்பதூஉம் அது.

‘திருநுதல் விளங்கு மாசில் கற்பி
னரிமதர் மழைக்கண் மாஅ யோளொடு
பினனுடைக் கேண்மை யெவனோ முல்லை
யிரும்பல் கூந்த னாற்று
முருந்தேர் வெண்பல் லொளியும் பெறவே’

இது முதற்பொருள் வாராது கருப்பொருளானும் உரிப்பொருளானும் முல்லையாயிற்று.

‘கரந்தை விரைஇய தண்ணறுங் கண்ணி
யிளைய ரோவ வியாங்குபரி கடைஇப்
பகைமுனை வலிக்குந் தேரொடு
வினைமுடித் தனனாங் காத லோரே’

இது முதலும் கருவும் இன்றி உரிப்பொருளான் முல்லையாயிற்று.

‘கதிர்கை யாக வாங்கி ஞாயிறு
பைதறத் தெறுதலிற் பயங்கண் மாறி
வீடுவாய்ப் பட்ட வியன்கண் மாநிலங்
காடுகவி னெதிரக் கனமழை பொழிதலிற்
பொறிவரி யினவண் டார்ப்பப் பலவுட
னறுவீ முல்லையொடு தோன்றி தோன்ற
வெறியென் றனரே வீகமழ் கானம்
மெவன்கொல் மற்றவன் நிலையென மயங்கி
யிரும்பனி யுறைக்குங் கண்ணொ டினைபாங்
கின்னு வுறைவித் தொன்னலம் பெறூஉ

மீதுற்ற காலங் கண்டிசிற் பகைவர்
மதின்முகடு கதவம் முருக்கிய மருப்பிற்
கந்துகா லொசிக்கு மேயானை
வெஞ்சின வேந்தன் வினைவிடப் பெறினே'

(அகம் - ௧௬௫)

இது பிரிதற் பகுதியாகிய பாசறைப் புலம்பல் எனினும் நிலம்பற்றி முல்லையாயிற்று.

'மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வெளவலின்'

(கலி முல்லை - ௪)

என்னும் முல்லைக்கலி புணர்தற் பொருண்மைத்தாயினும், முல்லைக்கு உரிய கருப்பொருளான வருதலின் முல்லை யாயிற்று. பிறவும் அன்ன.

குறிஞ்சித்திணைக்குச் செய்யுள் —

'விடிந்த ஞாலங் கவின்பெறத் தலைஇ
யிடிந்த வாய வெவ்வங் கூர
நிலமலி தண்டுளி தவிராது புலந்தாய
நீர்மலி கடாஅஞ் செருக்கிக் கான்மலைந்து
கணைபெயல் பொழிந்த நள்ளென் யாமத்து
மண்புரை* மாசுணம் விலங்கிய நெறிய
மலைஇ மணந்த மயங்கரி லாரற்
றிலைபொலிந் திலங்கு வைவே லேந்தி
இரும்பிடி புணர்ந்த செம்மல் பலவுடன்
பெருங்கயிற்றுத் தொழுதியொ டெண்குநிறை யொரீஇய,
நிரம்பா நெடுவரைத் தத்திக் குரம்பமைந்
தீண்டுபெயி லெறும்பி னிழிதரு மருவிக்
குண்டுநீர் மறுசுழி நீந்தி யொண்டொடி
யலமரன் மழைக்க ணலவோள் பண்புநயந்து
சுரன்முத லாரிடை நீந்தித் தந்தை
வளமனை யொருசிறை நின்றனே மாகத்
தலைமனைப் படலைத் தண்கமழ் நறுந்தா

* 'யாமத்துப் பண்புரை' எனவும் பிரதிபேதம்.

ஆ ருவண் டிமிரிசை யுணாநதனள சீறடி
யரிச்சிலம் படிகருச சேககையி னியலிச
செறிதினை நலலி லெறிகத வுயவிய
காவலா மடிபத நோககி யோவியா
பொறிசெய பாவையி னறிவுதளா பொலகி
யளகக ரனன வாரிரி டுகிய
விளக்குறிமிா பனைய 'நினனிப பாமபு
படவரைச சீகரு முருமேறே டிணைபபெய
லினனலங கஙகுலும வருபவோ வென்றுதன
மெலவிரல செயபப நொடியின ணலயாழ
வடியுறு நரமபிற் றீவிய நிழற்றித
திருகுபு முயஙகி யோளே வெனவேற
களிறுகெழு தூஉ கழ்பெருடி மலைய
மஞ்ஞறுநீ ரடுககங கவைஇய காநதண
மணஙகமழ முளளூா மீமிசை
யணஙகுகடி கொண்ட மலரினுங கமழநதே'

எனவரும இது முதலும, கருவும, புணாதலாகிய உரிப பொருளும் வநத குறிஞசிப பாட்டு

'நறைபரநத சாநத மறவெறிநது நாளா
லுறைபெதிாநது விததியவூ ழேனற — பிறைபெதிாநத
தாமரைபோல வாணமுகததுத தாழகுழலீா காணீரோ
வேமரை போநதன வீணடு' (திணைமாலை - க)

இது முதறபொருளினறிக கருபபொருளும உரிப பொருளும வநதமையால குறிஞசிததிணையாயிறறு

'முதுககுறைந தனளே முதுககுறைந தனளே
மலைய னொள்வேற கணணி
முலையும வாரா முதுககுறைந தனளே'

(யாப - விருத எ௰ உரை மேற்கோள)

இஃது உரிபபொருள ஒனறும வநத குறிஞசிபபாட்டு.

'பருவ மென்றினை பாலும பெயதன
கருவிரற கிள்ளை கடியவும போகா
பசுமூ தந்திக கடைவன வாடப்

பாசிப் பககப் பனிநீா பைஞ்சுனை
விரியிதழக குவளை போல விலலிட
டெரிசுடா விசுமபி னேறெழுநது முழஙகக
குனறுபனி கொளளுஞ சார
லினறுகொ ரேழி யவாசெனற நாடடே'

இஃது இருததற பொருணமைககண வநததேனும முதற்பொருளானும, கருபபொருளானும குறிஞசியாயிற்று

'வாடாத சானரோ வரவெதிா கொணடிராயக
கோடாது நீாகொடுப்பி னலலது — கோடா
வெழிலு முலையு மிரணடிறகு முநநீாப
பொழிலும விலையாமோ போநது' (திணைமாலை - கஙு)

இது கற்பிறபுணாவு, பொருளாற் குறிஞசியாயிற்று

'படாஅ தோழியெம கணணே கொடுவரி
கொன்முரண யானை கனவு
நனமலை நாட னசைஇ ஞேனே'

இஃது இரஙகற பொருணமைததேனும முதறபொருளானும கருபபொருளானும குறிஞசியாயிறறு பிறவும அனன

பாலைத்திணைக்குச செயயுள —

'அறியாய வாழி தோழி யிருளற
விசுமபுடன விளஙகும விரைசெலற றிகிரிக
கடுஙகதி ரெறிதத விடுவாய நிறைய
நெடுஙகான முருஙகைக வெணபூத தாஅய
நீரற வறநத நிரமபா நீளிடை
வளளெயிறறுச செநநாய வருநதுபசிப பிணவொடு
களளியங காடட கடததிடை யுழிஞசி
லுள்ளுன வாடிய சுரிமுகககு நொளளை
பொரியரை புதைதத புலமபுகொ ளியவின
விழுததொடை மறவா விலலிடை வீழநதோ
ரெழுததுடை நடுக லினனிழல் வதிய
மருஞசுரக கவலை நீநதி யெனறு

யில்லோர்க் கில்லென் றியைவது கரத்தல்
வல்லோர் நெஞ்சம் வலிப்ப நம்மினும்
பொருளே காதலர் காத
லருளே காதல ரென்றி நீயே.' (அகம் - டிங)

எனவரும் இதனுள் பாலைக்குரிய முதற்பொருளும், கருப்பொருளும், பிரிவும் வந்தவாறு கண்டுகொள்க

வளங்கெழு திருநகர்ப் பந்துசிறி தெறியினு
மிளந்துணை யாயமொடு கழங்குட னாடினு
முயங்கினை றனையென் மெய்யென றசைஇ
மயங்குவியர் பொறித்த நுதல டண்ணென
முயங்கினள் வதியும் மன்னே யினியே
தொடிமாண் சுற்றமு மெம்மு முள்ளார்
னொடுமொழித் தந்தை யருங்கடி நீவி
நொதும லாள னெஞ்சறப் பெற்றவென்
சிறுமுதுக் குறைவி சிலம்பார் சீறடி
வல்லகொல் செல்லத் தாமே கல்லென
வூரெழுந் தன்ன வுருகெழு செலவி
னீரி லத்தத் தாரிடை மடுத்த
கொடுங்கோ லுமணர் பகடுதெழி தெள்விளி
நெடும்பெருங் குன்றத் திமிழ்கொள வியம்புங்
கடுங்கதிர் திருகிய வேய்பயில் பிறங்கற்
பெருங்களி றுரிஞ்சிய மண்ணரை யாஅத்
தருஞ்சுரக் கவலை யதர்படு மருங்கி
னீளரை யிலவத் தூழ்கழி பன்மலர்
விழவுத்தலைக் கொண்ட பழவிறன் மூதூர்
நெய்யுமிழ் சுடரிற் கால்பொரச் சில்கி
வைகுறு மீனிற் றோன்று
மைபடு மாமலை விலங்கிய சுரனே (அகம் - கஎ)

இஃது உடன்போக்கின்கண் வந்தது.

'நாளு நாளு மாள்வினை யழுங்க
வில்லிருந்து மகிழ்வோர்க் கில்லையாற் புகழென
வொண்பொருட் ககல்வாங்கு காதலர்
கண்பனி துடையினித் தோழி நீயே' (சிற்றட்டக - பாலை)

இது பிரிவு. பொருளாற் பாலையாயிற்று.

'உயர்கரைக் கானியாற் றவிரற லகன்றுறை
வேனிற் பாதிரி விரிமலர் குவைஇத்
தொடலை தைஇய மடவரல் மகளே
கண்ணினுங் கதவநின் முலையே
முலையினுங் கதவநின் றடமென் றோளே' (ஐங்குறு-௩௬௧)

இது புணர்தற்பொரு ளாயினும் கருப்பொருளாற் பாலையாயிற்று.

'செந்துவ ராடை' (ஐங்குறு - ௩௬௩)

என்னும் பாட்டினுள்,

'கொலைவி லெயினர் தங்கை'

எனப் புணர்தற் பொருண்மை வந்ததாயினும் பாலைக்கு உரிய மக்கட்பெயர் கூறுதலிற் பாலையாயிற்று. பிறவும்

மருதத்திணைக்குச் செய்யுள் —

'சேற்றுநிலை முனைஇய செங்கட் காரா
னூர்மடி கங்குலி னோண்டளை பரீஇக்
கூர்முள் வேலி கோட்டி னீக்கி
நீர்முதிர் பழனத்து மீனுட னிரிய
வந்தூம்பு வள்ளை மயக்கித் தாமரை
வண்டூது பனிமல ராரு மூர
யாரை யோநிற் புலக்கேம் வாருற்
றுறையிறந் தொளிருந் தாழிருங் கூந்தற்
பிறரு மொருத்தியை யெம்மனைத் தந்து
வதுவை யயர்ந்தனை யென்ப வஃதியாங்
கூறேம் வாழிய வெந்தை செறுநர்
களிறுடை யருஞ்சமந் ததைய நூறு
மொளிறுவாட் டானைக் கொற்கைச் செழியன்
பிண்ட நெல்லி னள்ளூ ரன்னவெ
மொண்டொடி நெகிழினு நெகிழ்க
சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரோ' (அகம் - ௪௬)

எனவரும். இதனுள் மருதத்திற்குரியவாய் ஓதிய நிலனும், பொழுதும், கருப் பொருளும், ஊடற் பொருண்மையும் வந்தன.

'தாமரை, வண்டூது பனிமல ராரு மூர'

என்றமையான் வைகறை வந்தமை யறிக, இறைவன தன்மையும் அறிக

' பூங்கொடி மருங்கி னெனவகை கேணமை
முனனும பினனு மாகி
யினனும பாண னெமவயி னேனே '

இஃது உரிப்பொருளால் மருதமாயிற்று

' ஓரை யாய மறிய ஆ-
னலகினன றந்த ரறமபூ தணடமை
மாறுபடி னெஞ்சே தோழி யீறுசிறந்து
நெடுமொழி விளங்கு தொல்குடி
வடுகாம படுத வஞ்சுது மெனவே '

இது புணர்தற் பொருண்மையேனும திணைநிலைப பெயரால மருதமாயிற்று பிறவும் அனன

நெய்தல் திணைக்குச் செய்யுள் —

' கானன மலாநத கழிப்பூக கூமப
நீணிறப் பெருங்கடல பாடெழுந தொலிப்ப
மீனார குருகின மெனபறைப தொழுதி
குவையிரும புனனைக குடமபை சேர
வசைவண டாரகு மலகுறு காலைத்
தாழை தளாந்த தூங்கி மாலை
யழிதக வந்த கொணடலொடு கழிபடா
காமர் நெஞ்சங கையறு பிணையத்
துயரஞ் செயதுநம மருளா ராயினு
மறாஅ லியரோ வவருடைக கேணமை
யளியின மையி னவணுறைவு முனைஇ
வாரற்க தில்ல தோழி கழனி
வெணணெல வரிஞா பினறைத ததுமபுந
தணணுமை வெரீஇய தடந்தா ளுழை
செறிமடை வயிரிற பிளிற்றிப் பெணணை

யகமட்டச் சேக்குந் துறைவ
னின்றுயின் மார்பிற் சென்றவென் னெஞ்சே'
(அகம் - ௪0)

எனவரும். இது முதலும், கருவும், இரங்கற் பொருண்மையும் வந்த நெய்தற் பாட்டு.

'அங்கண் மதிய மரவின்வாய்ப் பட்டெனப்
பூசல் வாயாப் புலம்புமனைக் கலங்கி
யேதின் மாக்களு நோவர் தோழி
யென்று நோவா ரில்லைத்
தெண்கடற் சேர்ப்ப னுண்டவென் னலக்கே'
(யாப். விருத். உக உரை மேற்.)

இது திணைநிலைப் பெயரானும் இரங்கற் பொருண்மையானும் நெய்தலாயிற்று.

'நடுகுலும் பகலுங் கலந்துக் கொன்றி
வன்புறை சொல்லி நீத்தோர்
னன்புறு செய்தி யுடையரோ மற்றே'

இஃது இரங்கற் பொருண்மையான் நெய்தலாயிற்று.

'சுறவப்பிற ழிருங்கழி நீந்தி நைகலு
* மிரவுக்குறிக் கொண்கனும் வந்தனன்
விரவுமணிக் கொடும்பூண் விளங்கிழை யோயே'
(சிற்றட்டகம் - நெய்தல்)

இது புணர்தற் பொருளாயினும் நிலத்தான் நெய்தலாயிற்று.

'கோட்டக மலர்ந்த கொழுங்கொடி யடம்பி
னற்றுறை யணிநீர்ச் சேர்ப்பவிப்
பொற்றொடி யரிவையைப் போற்றினை யளிமே'

இது பாலைக்கு உரித்தாகிய பிரிவு நிமித்தமாயினும் நிலத்தான் நெய்தலாயிற்று. பிறவும் அன்ன. (உ௪)

* 'மிரவுக்குறிக் கையெனக்கண் வந்தனன்' எனவும் பிரதிபேதம்.

உரு. அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினுங்
கடிவரை யிலபுறத் தென்மனார் புலவர்.

இது நடுவணைந்திணைக்கு உரிய தலைமக்களைக் கூறி, அதன் புறத்தவாகிய கைக்கிளை பெருந்திணைக்கு உரிய மக்களை உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — அடித்தொழில்* செய்வார் பக்கத்தினும் வினைசெய்வார் பக்கத்தினும் மேற்சொல்லப்பட்ட புணர்தல் முதலான பொருள்கள் கூறல் கடிந்து நீக்கும் நிலைமை யில்லை, ஐந்திணைப் புறத்தவாகிய கைக்கிளை பெருந்திணைக்கண் என்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

'புணர்தல் முதலான பொருள்' என்பது அதிகாரத்தான் வந்தது. 'வினைசெய்வார்' என்பதனால் அடியார் அல்லாதார் என்பது கொள்க. அவர் அகத்திணைக்கு உரியர் அல்லரோ எனின், அகத்திணையாவது அறத்தின் வழாமையும், பொருளின் வழாமையும், இன்பத்தின் வழாமையும் இயலல்வேண்டும்; வேண்டுமவை யெல்லாம் பிறர்க்குக் குற்றேவல் செய்வார்க்குச் செல்லுதல் அரிதாகலானும், அவர் நாணுக்குறைபாடு உடையர் ஆகலானும், குறிப்பறியாது வேட்கைவழியே சாரக் கருதுவர் ஆகலானும், இன்பம் இனிது நடத்துவார் பிறரேவல் செய்யாதார் என்பதனானும், பிறவாற்றானும் அவர் புறப்பொருட்கு உரியர் ஆயினர் எனக் கொள்க. எனவே, இவ்வெழுவகைத் திணையும் அகம், புறம் என இருவகையாயின.

உதாரணம்

'என்னோற் றனைகொல்லோ
நீரு ணிழற்போ னுடங்கிய மென்சாய
லீங்குருச் சுருங்கி,
யியலுவாய் நின்னொ டுசாவுவெ னின்றீத்தை,

* 'அடிமைத்தொழில்' எனவும் பிரதிபேதம்.

அனனையோ,
காணடகை யிலலாக குறணுழிப போழதிறு
றுணடலைக கினற பறழமகனே நீயெமமை
வேணடுவ லெனறு விலககினை நினபோலவாா
தீணடப பெறுபவோ மறறு,
மாணட,
எறிநத படைபோன முடஙகி மடஙகி
நெறிதது விட டனன நிறையோ லெனனைப
பொறுககலலா நோயசெயதாய பொறீஇ நிறுககலலே
னீஙகலகி னுணடென னுயிர,
குறிபபுககாண,
வலலுப பலகை யெடுதது நிறுததனன
கலலாக குறள கடுமபகல வநதெமமை
யிலலதது வாவென மெயகொளீஇ யெலலாநின
பெணடி ருளாமனறே கூறு,
நலலாயகேள,
உககதது மேலு நடுவுயாநது வாளவாய
கொககுரித தனன கொடுமடாய நினனையான
புககலம புலலினெனு ருனறும புறமபுலலி
னககுளததுப புலலு மாறறே னருளீமோ
பககததுப புலலல சிறிது,
போசிததை,
மககண முரியேசீ மாறினித தொகக
மாககோடடனு சோநதெழுநத பூநகொடி போல
நிரபபமில யாககை தழீஇயினை ெமமைப
புரபபேமென பாரும பல ாற பரததையன
பககததுப புலலீயா யெனனுமாற றொருகக
கழுநதினுந துவவாக குறுவடடா நினனி
னிழிநததோ கூனின பிறபபுக கழிநதாஙகே
யாமவீழது மெனறுதன பினசெலவு முறறீயாக
கூனி குழையுங குழைவுகாண,
யாமை,
யெடுதது நிறுததறருற் றேளிரண்டும வீசி
யாம்வேண்டே மெனறு விலககவு மெம்வீழுங
காமா நடக்கு நடைகாண் கவர்கணை ச

சாமனார் தம்முன் செலவுகாண்,
ஓஒகாண், நம்மு ணகுதற் றொடீஇயர் நம்முள்
முசாவுவந் கோனடி தொட்டேன்,
ஆங்காக,
சாயலின் மார்ப அடங்கினேன் என
பேயும் பேயுந் துள்ள லுறுமெனக்
கோயிலுட் கண்டார் நகாஅமை வேண்டுவல்
தண்டாத் தகடுருவ வேறாகக் காவின்கீழ்ப்
போதர் அகடாரப் புல்லி முயங்குவேம்
துகளறு காட்சி யவையத்தா ரோலை
முகங்கொப் பியாத்துவிட் டாங்கு' (கலி மரு - உக)

என வரும்.

இதனுள் ஒருவரை யொருவர் இழித்துக் கூறினமை யான் அடியார் என்பதூஉம், மிக்க காமத்தின் வேறுபாடு வருதலாற் பெருந்திணைப்பாற்படும் என்பதூஉம் கண்டு கொள்க. இதுதானே கைக்கிளைக்கும் உதாரணமாம். வினைவலபாங்கு வருவன வந்தவழிக் காண்க. (உரு)

உசு. ஏவன் மரபி னேனோரு முரிய
ராகிய நிலைமை யவரு மன்னர்.

இதுவும் கைக்கிளை பெருந்திணைக்கு உரிய தலைமக்களை உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — மேற்சொல்லப்பட்ட அடியோரும், வினைவலரும், ஏவுதல் மரபையுடைய ஏனையோரும் கைக்கிளை பெருந்திணைக்கு உரியர், அவரும் உரியராகிய நிலைமை, அத்தன்மைய ராதலான் என்றவாறு.

அவரும் ஆகிய நிலைமை என மொழி மாற்றுக. கைக்கிளை பெருந்திணை என்றல் அதிகாரத்தான் வந்தது. இதனாற் சொல்லியது தலைமக்களும் கைக்கிளை பெருந்திணைக்கு உரியராவர் என்பதாம். உரியராயினவாறு அறம் பொருள் இன்பங்கள் வழுவா மகளிரைக் காதலித்தலான் என்றவாறாயிற்று.

உதாரணம

‘என யிஃதொடர்ச ஞணிலன றன்னொடு
மேவேமென பாவை யு மேவினன் கைபபறறு
மேவினு மேவாக கடைய மஃம தலலா
யறிதி யானஃ தறிகலலேன புடமைற
மெலலிணா செலலாக கொடியனறெப னனையான
புலலினி தாகலிற புலலிமன னலலா
தமககினி தெனறு வலிதிற பிறாககினறு
செயவது நனறாமோ மறறு,
சுடாதொடீ,
போறறுப களைநின முதுககுறைமை போறறிககேள
வேடடாாக கினிதாயி னலலது நீாககினிதென
றுணபவோ நீருண பவா,
செயவ தறிகலலேன யாதுசெய வேனகொலோ
ஐவா யரவி னிடைபபடடு நைவாரா
மையில மதியின விளஙகு முகததாரை
வெளவிக கொளளு மறனெனக கணடனறு
அறனு மதுகணடற றாயிற றிறனினறிக
கூறுஞசொற கேளா னலிதரும பணடுநாம
வேறலல மெனபதொன றுணடா லவனொடு
மாறுணடோ நெஞசே நமககு’ (கலி குறி - ௨௬)

எனவரும இதனுள,

‘வெளவிக கொளளு மறனெனக கணடனறு’

எனவும,

‘நீாககினிதென, றுணபவோ நீருண பவா’

எனவும தலைமகன் கூறுதலானும, தலைமகள * முனிநது உரைததலானும, ஊடி யுணாவாள போலத தலைமகள் உடன்பட்டமையானும், இஃது உயாநதோாமாட்டு வநத கைககிளை பெருநதிணை வநதவழிக கணடு கொளக (௨௯)

* ‘முனனிழிதது உரைததலானும' எனவும பிரதிபேதம,

உ௭. ஓதல் பகையே தூதிவை பிரிவே.

இது, மேல் கைக்கிளை முதலாக எழுதிணையும் உணர்த்தினார். அவற்றுள் நிலம் பகுக்கப்பட்ட முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்னும் நான்கு திணையும் களவு கற்பு என்னும் இருவகைக் கைகோளினும் நிகழ்தலின் அவற்றை யொழித்து, நிலம் பகுக்கப்படாத கைக்கிளை பெருந்திணையும் பாலையும் இவ்வோத்தினுள் உணர்த்தப் படுகின்றன வாதலின், அவற்றுள் பாலைக்கு உரித்தாகிய பிரிவு உணர்த்துவான், பிரிவுக்கு நிமித்தம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — ஓதலும் பகையும் தூதும் என்று சொல்லப்பட்ட இத்தன்மைய பிரிவிற்கு நிமித்தமாம் என்றவாறு.

'இவை' என்பது இத்தன்மைய என்னும் பொருள்பட நின்றது. நிமித்தம் என்பது உய்த்துணர்ந்து கொள்ளக் கிடந்தது.

ஓதற்குப் பிரிதலாவது — தமது நாட்டகத்து வழங்காது பிற நாட்டகத்து வழங்கும் நூல் உளவன்றே, அவற்றினைக் கற்றல் வேண்டிப் பிரிதல்.

பகைவயிற் பிரிதலாவது — மாற்று வேந்தரொடு போர் கருதிப் பிரிதல்.

தூதிற்குப் பிரிதலாவது — இரு பெரு வேந்தரைச் சந்து செய்தற்பொருட்டுப் பிரிதல். (உ௭)

உ௮. அவற்றுள்
ஓதலுந் தூது முயர்ந்தோர் மேன.

இது மேற் கூறப்பட்டவற்றுள் ஓதற்கும் தூது போதற்கும் உரிய தலைமக்களை உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — மேற்கூறப்பட்டவற்றுள் ஓதல் காரணமாகப் பிரியும் பிரிவும், தூதாகிய பிரியும் பிரிவும்,

நால்வகை வருணத்தினும் உயாநத அநதணர்க்கும் அர சாக்கும உரிய என்றவாறு

இவா ஒழுககததானும, குணததானும, செல்வததா னும ஏனையபினும உயாபுடையா ஆதலான் 'உயாநதோா' என்றா உதாரணம

'வயலைக கொடியின வாடிய மருஙகு
லுயவ ஊாதிப பயலைப பாாபபா
னெலலி வநது நிலலாது புககுச
சொலலிய சொலலோ சிலவே யதறகே
யேணியுஞ சீபபு மாறறி
மாணவினை யானையு மணிகளைந தனனே' (புறம - ந௨0௬)

எனவரும

இதனுள பாாபபான தூதாகியவாறு கண்டுகொளக. அரசா தாம தூதாகியவாறு வாசுதேவனுல் உணாக (௨அ)

௨௯. தானே சேறலுந் தன்னொடு சிவணி
யேனோா சேறலும் வேந்தன் மேற்றே.

இது பகைவயிற் பிரிதறகுரிய தலைமககளை உணாதது தல நுதலிறறு

இதன பொருள் — பகைவா காரணமாகி அரசன் தானே சேறலும, அவனொடு கூடி ஒழிநதோா சேறலும் வேநதனகணணது எனறவாறு

பகை யெனறது மேனினற அதிகாரததான் உய்த துணாநது கொளளக கிடநதது 'தானே' எனனும ஏகா ரம பிரிநிலை, படையையொழிய எனறவாறும எனவே போரைக குறிததுப பிரிதலும அரசாககு உரிததெனறு கொளக இதனுள அரசன் தலைமகனுயுழிப *'பகைதணி வினைப' பிரிவு எனவும, அவனொடு சிவணி ஏனோா தலைவ ராயுழி *'வேநதறகு உறறுழிப' பிரிவு எனவும இதனை இருவகையாகக கொளக (௨௯)

[1] இறை. களவி - ௩௫.

௨௰. மேவிய சிறப்பி னேனோர் படிமைய
முல்லை முதலாச் சொல்லிய முறையாற்
பிழைத்தது பிழையா தாகல் வேண்டியு
மிழைத்த வொண்பொருண் முடியவும் பிரிவே

இது மேற்சொல்லப்பட்ட மூவகை நிமித்தமு மன்றி வருவன உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய என்பது — நால்வகை நிலத்தினும் மேவிய சிறப்புடைய மக்களையல்லாத தேவர் படிமையவாகிய பொருள்கள் என்றவாறு. முல்லை முதலாச் சொல்லிய என்பது — முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனச் சொல்லிய நிலத்தின் மக்கள் என்றவாறு. முறையாற் பிழைத்தது பிழையாதாகல் வேண்டியும் பிரிவே என்பது — மேற்சொல்லப்பட்ட முறைமையிற் றப்பியவழித் தப்பாது அறம் நிறுத்தற் பொருட்டும் பிரிவுளதாம் என்றவாறு. இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே என்பது — செய்யப்பட்ட பொருள் முடிய வேண்டியும் பிரிவு உளதாம் என்றவாறு.

எனவே, தேவர் காரணமாகவும், அறங் காரணமாகவும், முறைமை கோடிய மக்களை முறைமை செய்வித்தல் காரணமாகவும், பொருள் ஆக்குதல் காரணமாகவும் பிரிவு உளதாம் என்றவாறு.

'காவல்', 'பொருட் பிரிவு' என்ப * பிறநூலகத்து ஓதப்பட்ட இருவகைப் பிரிவும் ஈண்டு ஓதப்பட்டனவென்று கொள்க. 'மேவிய' என்பது,

'மாயோன் மேய காடுறை யுலகமுஞ்
சேயோன் மேய மைவரை யுலகமும்' (அகத்தி - ௫)

என்பதனால் நால்வகை நிலத்தினும் மேவிய எனப் பொருளாயிற்று. 'சிறப்பினேனோர்' என்றதனால் சிறப்புடையார்

* இறை. களவி - ௩௫.

மக்களுந் தேவருமாகலின், மக்கள் அல்லாதாரே தேவர் என்று பொருளாயிற்று 'படிமை' என்பது ப்ரதிமா என்னும் வடமொழித் திரிபு அது தேவர்க் கொப்புமையாக நிலத்தின்கட் செய்தமைத்த தேவர்மேல் வந்தது அவருடைய பொருளாவன பூசையும் விழாவும் முதலாயின

'முல்லை முதலாச் சொல்லிய' என்பது

'பிறந்த வழிக் கூறல்' (வேற்று மயங் - ௩௩)

என்னும் ஆகுபெயரான் அந்நிலத்தின் மக்களை நோக்கிற்று 'பிரிவு' என்பதனைப் 'பிழைத்தது பிழையாதாகல் வேண்டியும்' பிரிவுள் தாம் 'இழைத்த ஒண்பொருண் முடியவும்' பிரிவுள் தாம் என இரண்டிடத்துங் கூட்டுக. ஆம் என்பது எஞ்சி நின்றது

தேவர் காரணமாகப் பிரியும் பிரிவுக்குச் செய்யுள் —

'அரம்போழ் அவ்வளைத் தோணிலை நெகிழ
நிரம்பா வாழ்க்கை தேடல் வேண்டி
யிரங்கா முன்னை வரும்புமுதிரீங்கை
யாலி யன்ன வால்வீ தாஅய்
வைவா லோதி மையண லேய்ப்பத்
தாதுறு குவளைப் போதுபிணி யவிழப்
படாஅப் பைங்கட் பாவடிக் கயவாய்க்
கடாஅ மாறிய யானை போலப்
பெய்துவறி தாகிய பொங்குசெலற் கொண்மூ
மைதீர் விசும்பின் மாதிரந் திரிதரப்
பனிபடு நின்ற பானாட் கங்குற்
றமியோர் மதுகை தூக்காய் தண்ணென
முனிய வலைத்தி முரணில் காலைக்
கைதொழு மரபிற் கடவுள் சான்ற
செய்வினை மருங்கிற் சென்றோர் வல்வரின்
விரியுளைப் பொலிந்த பரியுடை நன்மான்
வெருவரு தானையொடு வேண்டுபுலத் திறுத்த
பெருவளக் கரிகால் முன்னிலைச் செல்லார்
சூடா வாகைப் பறந்தலை யாடுபெற

வொன்பது கொடையும நன்பக லொழிதத
பீடின் மன்னா போல
வோடுவை மனனுல வாடைநீ யெமககே' (அகம - கஉச)

எனவரும்

சேரன் செங்குட்டுவனா கண்ணகியைக கடவுண மங்கலஞ செயதறகுப பிரிநத பிரிவு சிலப்பதிகாரத்திற கண்டுகொளக இததுணையும பிரிவு அறுவகைபபடும என்றவாறாயிறறு அஃதேதல பரததையிற பிரிவு எனபதோ எனின, அது நிலம பெயாநது உறையாமையானும, இவைபோற சிறககாமையானும, அறமுறைமை செயதலும பொருள காரணமாகப பிரிதலும இனறிப பிரிதலினானும, கற்பியலுட் கூறபபடும என்க ஈண்டுஞ சிறுபானமை கூறுப (௩௦)

௩௧. மேலோர் முறைமை நாலவர்க்கு முரித்தே.

இது நிறுதத முறையானே அறங காரணமாகப பிரிதறகுரிய தலைமககளை உணாததுதல நுதலிறறு

இதன் பொருள் — மேலோராகிய தேவரது முறைமையை நிறுததறகுப பிரியும பிரிவு நானகு வருணததாாககும உரிதது என்றவாறு (௩௧)

௩௨. மன்னர் பாங்கிற் பின்னோ ராகுப.

இது காவறபகுதியாகிய முறை செயவிததறகு உரிய மககளை உணாததுதல நுதலிறறு.

இதன் பொருள — மன்னாபாஙகு — மனனாககுரிய பககம, அஃதாவது காவல, அது நெறியின ஒழுகாதாரை நெறியின் ஒழுகப பணணுதல பினனோா ஆகுப — அவவாறு முறை செயதறகு அரசன தான சேறல வேண்டாமையின், அதறகுரியராய் அவனது ஏவல்வழி வரும் வணிகரும் வேளாளரும் உரியராகுப என்றவாறு.()

௩௩. உயர்ந்தோர்க் குரிய வோத்தி னான.

இது வணிகாககு உரியதோா பிரிவு உணாததுதல நுதலிற்று

இதன் பொருள் — மேல அதிகரிக்கபபடட பின்னோ ராகிய இருவகை யோரிலுமா யாநதோராகிய வணிகாககு ஓதுதல நிமிததமாகப பிரிதலுமா உரிதது எனறவாறு

ஓததுப பலவாதலின 'உரிய' எனறா ாணடு ஓதது எனபது வேதம, அது நாலவகை வருணததினும மூவாககு உரிததெனபது இததுணையெனக கூறப பபடடது (௩௩)

௩௪. வேந்துவினை யியற்கை வேந்த னொரீஇய வேனோர் மருங்கினு மெயதிட னுடைத்தே

இது வணிகாககும வேளாளாககும உரியதோா பிரிவு உணாததுதல நுதலிற்று

இதன் பொருள — வேநதனது வினை இயறகையாகிய தூது வேநதனை யொழிநத வணிகாககும வேளாளாககும ஆகுமிடன் உடைதது எனறவாறு

வேநதனது வினை — வேநதறகு உரிய வினை என்க 'இடன் உடைதது' என்றதனை அவா தூதாங் காலைம அமைசசராகிய வழியே நிகழும எனறு கொளக (௩௪)

௩௫. பொருள்வயிற் பிரிதலு மவர்வயி னுரித்தே.

இதுவும் அது

இதன் பொருள் — பொருள்வயிற பிரிவும் மேற் சொலலபபட்ட வணிகா வேளாளரிடத்தில உரியதாகும் என்றவாறு. (௩௫)

௨௬. உயர்ந்தோர் பொருள்வயி னொழுக்கத் தான

இஃது அந்தணர் பொருட் பொருட்டுப் பிரியுந் திறன் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — உயர்ந்தோராகிய அந்தணர் பொருள்வயிற் பிரியுங் காலத்து ஒழுக்கத்தானே பிரிப என்றவாறு.

இதனாற் சொல்லியது வணிகர்க்கும் வேளாளர்க்கும் வாணிகம் முதலாயின பொருணிமித்தமாகிய வாறுபோல அந்தணர்க்கும் இவை பொருணிமித்தம் ஆகா என்பதூஉம் அவர்க்கு இயற்கை யொழுக்கமாகிய ஆசாரமும், செயற்கை யொழுக்கமாகிய கல்வியுமே பொருட்குக் காரணமாம் என்பதூஉம் கண்டவாறு. (௨௬)

௨௭. முந்நீர் வழக்க மகடூஉவோ டில்லை.

இதுவும் பொருள்வயிற் பிரிவதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — ஈண்டு அதிகரிக்கப்பட்ட பிரிவு காலிற் பிரிவுங் கலத்திற் பிரிவும் என இருவகைப்படும், அவற்றுள் கலத்திற் பிரிவு தலைமகளுடனில்லை என்றவாறு.

எனவே காலிற் பிரிவு தலைமகளை உடன் கொண்டு பிரியவும் பெறும் என்றவாறும்.

கலத்திற் பிரிவு தலைமகளை யொழியப் பிரிந்தமைக்குச் செய்யுள் —

'உலகுகிளர்ந் தன்ன வுருகெழு வங்கம்
புலவுத்திரைப் பெருங்கட னீரிடைப் போழ
இரவு மெல்லையு மசைவின் றாகி
விரைசெல லியற்கை வங்கூ ளாட்டக்
கோடுயர் திணிமண லகன்றுறை நீங்கான்
மாட வொள்ளெரி மருங்கறிந் தொய்ய
வாள்வினை புரிந்த காதலர் நாள்பல

கழியா மையி னழிபட ரகல
வருவா மன்றென் றேருழி தணப்பினைப்
பொருபுனல் வையையி னொழு பாங்கட்
கருவிளை முரணிய தண்புதற் பகன்றைப்
பெருவள மலர வல்லி தீண்டிய
பலவுக்காய்ப் புறத்த பசும்பழப் பாகல்
கூதளை மூதிலைக் கொடிநிறை தூங்க
வறணின் றலைக்கு மாறு யாடைக்
கடிமனை மாடத்துக் கங்குல் வீசுந்
திருந்திழை நெகிழ்ந்து பெருங்கவின் சாஅய்
நிரைவளை யூருந் தோளென
வுரையொடு செல்லு மன்பினைப் பெறினே' (அகம்-உருசு)

எனவரும். காவிற்பிரிவு உதாரணம் வந்துழிக் காண்க. ()

௩௮. எத்திணை மருங்கினு மகடூஉ மடன்மேற் பொற்புடை நெறிமை யின்மை யான.

இஃது, இத்துணையும் பாலைக்குரித்தாகிய பிரிவிலக்கணம் கூறினார் இனிக் கைக்கிளை பெருந்திணைக் குரிய இயல்பு உணர்த்துதல் நுதலிற்று

இதன் பொருள் — எல்லாக் குலத்தினிடத்தினும் பெண்பால் மடலேறுதல் இல்லை, பொலிவுபெறு நெறிமை இல்லாமையான் என்றவாறு

'மடன்மேல்' என்பது மடலேறுதல் என்னும் பொருள் குறித்தது 'இல்லை' என்பது மேலைச் சூத்திரத்தினின்றும் தந்துரைக்கப்பட்டது 'பொற்புடை நெறிமை' என்பது பெண்பாற்கு இன்றியமையாத நாணம் முதலாயின. மகடூஉ மடலேறுதல் இல்லை எனவே ஆடூஉ மடலேறுதல் உண்டு என்பதுபெற்றாம் இது புணராவிரக்கமாகிய கைக்கிளைக்கும், * 'தேறுதலொழிந்த காமத்து மிகுதிறன்' ஆகிய பெருந்திணைக்கும் உரித்தாகியவாறு கண்டு கொள்க (௩௮)

* அகத்திணை - ருக.

௩௯. தன்னு மவனு மவளுஞ் சுட்டி
மன்னு நிமித்த மொழிப்பொரு டெய்வம்
நன்மை தீமை யச்சஞ் சார்தலென்
றன்ன பிறவு மவற்றொடு தொகைஇ
முன்னிய கால மூன்றொடு விளக்கித்
தோழி தேஎத்துங் கண்டோர் பாங்கினும்
போகிய திறத்து நற்றாய் புலம்பலு
மாகிய கிளவியு மவ்வழி யுரிய.

இது மேற் கூறப்பட்ட இருவகைப் பிரிவினும் தம்மைப் பிரிதலாகிய உடன்போக்கில் நிகழ்ந்த நற்றாய்மாட்டு உளதாய கிளவி உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — தன்னும் அவனும் அவளும் சுட்டி என்பது — தன்னையும் தலைமகனையும் தலைமகளையும் குறித்து என்றவாறு, மன்னு நிமித்தம் ஆவது — ஆட்சி பெற்ற நிமித்தம், அது பல்லி முதலாயினவாம், மொழிப் பொருள் ஆவது — பிறர் தம்முட் கூறும் மொழிப் பொருளை நிமித்தமாகக் கோடல், அதனை நற்சொல் என்ப, தெய்வம் என்பது — உலகினுள் வாழும் இயக்கர் முதலாயினார் ஆவேசித்துக் கூறுஞ் சொல். நன்மை தீமை அச்சம் என்பது — தனக்கும் அவர்க்கும் உளதாகிய நன்மையும், தீமையும், அச்சமும் என்றவாறு, சார்தல் என்பது — அவர் தன்னை வந்து சார்தல், என்று என்பது — இடைச் சொல், அன்ன பிறவும் என்பது — அத்தன்மைய பிறவும் என்றவாறு, அவற்றொடு தொகைஇ என்பது — மேற் சொல்லப்பட்ட நிமித்தம் முதலாயினவற்றொடு கூட்டி என்றவாறு, அவ்வழி ஆகிய கிளவியும் உரிய என்பது — அவ்விடத்தாகுங் கூற்றும் உரிய என்றவாறு.

எனவே, தலைமகள் உடன்போகியவழி நற்றாய், தன்னையும் அவனையும் அவளையுஞ் சுட்டி, நிலைபெற்ற நிமித்தம்

மொழிப் பொருள். செய்யும் என்பனவற்றொடு தனக்கும் அவர்க்கும் உளவாகிய நன்மை, தீமை, அச்சம் சார்தல் என்பனவும் அத்தன்மைய பிறவும் கூட்டிக், குறித்த காலம் மூன்றும் ஒருங்கு தோற்றுவித்துத், தோழி மாட்டும் கண்டோர் மாட்டும் புலம்புதலும், அவ்வழி நிகழும் கூற்றும் உரிய என்றவாறு.

'போகிய திறத்து நற்றாய்' என்றதனை முன்னே கூட்டிக் 'அவற்றொடும்' என்பதனைத் தெய்வம் என்பதனொடு கூட்டிக் முன்னிய காலம் மூன்றுடன் விளக்குதலாவது முன்பு இத்தன்மையளாயினாள், இப்பொழுது இத்தன்மையளாகாநின்றாள், மேல் இன்னளாகுவாள் என மூன்று காலமும் ஒருங்கு தோற்றுவித்துப் புலம்புதல். அவ்வழியாகிய கிளவியும் என மொழிமாற்றுக. அவற்றிற்குச் சில உதாரணங்கள்.

'தோழியர் சூழத் துறைமுன்றி லாடுங்கால்
வீழ்பவள் போலத் தளருங்கால் — தாழாது
கல்லதர் [illegible] பின்போதல்
வல்லவோ மா[illegible]' (ஐந்தி ஐம் - ௩௭)

இது தலைமகள் உடன்போயவழி நற்றாய் கவன்று உரைத்தது.

'மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை
யன்புடை மரபினின் கிளையோ டாரப்
பச்சூன் பெய்த பைந்நிண வல்சி
பொலம்புனை கலத்திற் றருகுவென் மாதோ
வெஞ்சின விறல்வேற் காளையோ
டஞ்சி லோதியை வரக்கரைந் தீமே' (ஐங்குறு - ௩௯௧)

இது நற்றாய் உடன்போய தலைமகள் பொருட்டாகக் காகத்திற்குப் பராயக்கடன் உரைத்தது.

'வேறாக நின்னை வினவுவேன் றெய்வத்தார்
கூறாயோ கூறுங் குணத்தினேய் — வேறாக
வென்மனைக் கேறக் கொணருமோ வெல்வளையைத்
தன்மனைக்கே யுய்க்குமோ தான்' (திணைமாலை - ௯0)

இது நற்றாய் தலைமகளின் உடன்போக்குத் தெளியப் படிமத்தானை வினாயது. பிறவும் அன்ன. 'சான்றவர் புலம்பலும்' என்ற உம்மையால் செவிலி புலம்பலும் கொள்ளப்படும். உதாரணம்:

'பெயர்த்தனென் முயங்க யான்வியர்த் தனெனென் றனள்
இனியறிந் தேனது துனியா குதலே
கழறொடி யாஅய் மழைதவழ் பொதியில்
வேங்கையுங் காந்தளு நாறி
யாம்பல் மலரினுந் தான்றண் ணியளே' (குறுந் - அச)

இது உடன்போகிய செவிலி கவன்று உரைத்தது.

'என்னு முள்ளினள் கொல்லோ தன்னை
நெஞ்சுண தேற்றிய வஞ்சினக் காளையொ
டழுங்கல் மூதூ ரலரெழச்
செழும்பல் குன்ற மிறந்தவென் மகளே' (ஐங்குறு - ௩எ௨)

இது தலைமகள் கொடுமை நினைந்து கூறியது.

'ஈன்றுபுறந் தந்த வெம்மு முள்ளாள்
வான்றோ யிஞ்சி நன்னகர் புலம்பத்
தனிமணி யிரட்டுந் தாளுடைக் கடிகை
நுழைநுதி நெடுவேற் குறும்படை மழவர்
முனையாத் தந்து முரம்பின் வீழ்த்த
வில்லே ராழ்க்கை விழுத்தொடை மறவர்
வல்லாண் பதுக்கைக் கடவுட் பேண்மார்
நடுகற் பீலி சூட்டித் துடிப்படுத்துத்
தோப்பிக் கள்ளொடு துரூஉப்பலி கொடுக்கும்
போக்கருங் கவலைய புலவுநா றருஞ்சுரந்
துணிந்துபிற ளாயின ளாயினு மணிந்தணிந்
தார்வ நெஞ்சமோ டாய்நல னளைஇத் தன்
மார்புதுணை யாகத் துயிற்றுக தில்ல
துஞ்சா முழவிற் கோவற் கோமான்
னெடுந்தேர்க் காரி கொடுங்கான் முன்றுறைப்
பெண்ணையம் பேரியாற்று நுண்ணறல் கடுக்கு
நெறியிருங் கதுப்பினென் பேதைக்
கறியாத் தேஎத் தாற்றிய துணையே' (அகம் - ௩௫)

இது செவிலி தெய்வம் பராஅயது. பிறவும் அன்ன.

௪௦ ஏமப் பேரூர்ச் சேரியுஞ் சுரத்துந்
தாமே செல்லுந் தாயரு முளரே.

இது தலைமகள் உடன்போகியவழிச் செவிலிக்கு உரியதோர் திறன் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — ஏமம் பொருந்திய பெரிய ஊரகத்துச் சேரியின்கண்ணும், ஊரினின்றும் நீங்கிய சுரத்தின்கண்ணும், தாமே செல்லுந் தாயரும் உளர் என்றவாறு.

'தாமே செல்லுந் தாயர்' என்பதனாற் செவிலி என்பது பெற்றாம். 'தாயரும்' என்ற உம்மையாற் கைத்தாயர் பலர் என்று கொள்ளப்படும். அவ்வழிச் சேரியோரை வினாதலும், சுரத்திற் கண்டோரை வினாதலும் உளவாம். சேரியிற் பிரிதலும் பாலை ஆகுமோ எனின், அது வருகின்ற சூத்திரத்தினால் விளங்கும். சேரியோரை வினாதற்குச் செய்யுள் —

'இதுவென் பாவைக் கினியநன் பாவை
யிதுவென் பைங்கிளி யெடுத்த பைங்கிளி
யிதுவென் பூவைக் கினியசொற் பூவையென்
றலமரு நோக்கி னலம்வரு சுடர்நுதல்
காண்டொறுங் காண்டொறுங் கலங்கி
நீங்கின ளோவென் பூங்க ணோளே' (ஐங்குறு - ௩எரு)

எனவரும்.

'எறித்தரு கதிர்தாங்கி யேந்திய குடைநீழ
லுறித்தாழ்ந்த கரகமு முரைசான்ற முக்கோலு
நெறிப்படச் சுவலசைஇ வேறோரா நெஞ்சத்துக்
குறிப்பேவற் செயன்மாலைக் கொளைநடை யந்தணீர்
வெவ்விடைச் செலன்மாலை யொழுக்கத்தீ ரிவ்விடை
யென்மக ளொருத்தியும் பிறள்மக னொருவனுந்
தம்முளே புணர்ந்த தாமறி புணர்ச்சிய
ரன்னா ரிருவரைக் காணீரோ பெரும' (கலி பாலை - அ)

இது சுரத்திடை வினாயது.

'செய்வினைப் பொலிந்த செறிகழ னோன்றாண்
மையணற் காளையொடு பைய வியலிப்

பாலை யன்னவென் னயதொடி மடந்தை
சென்றன ளென்றி ஐய
வொன்றின வோவவ ளஞ்சிலம் படியே' (ஐங்குறு-நூ-அகூ)

என வருவதும் அது

'காலே பரிதப் பினவே கண்ணே
நோக்கி நோக்கி வாளிழந் தனவே
அகலிரு விசும்பின் மீனினும்
பலரே மன்றவிவ் வுலகத்துப் பிறரே (குறு - ௪௪)

என வருவது பரத்தையிற் பிரிவாயது பற்றிப் பின்னர்க்
கூறியது (௪௦)

௪௧. அயலோ ராயினு மகற்சி மேற்றே.

இதுவும் பாலைக்குரியதோர் இயல்பு உணர்த்துதல்
நுதலிற்று.

இதன் பொருள் — சேரியினும் ஊரினும் பிரித
லன்றித் தமது மனையயற்கட் பிரிந்தாராயினும் பிரிவின்
கண்ணதே என்றவாறு

என்றது ஒருநகரத்து மனையயற்கண்ணாயினும் பரத்தையிற்
பிரிவும் பாலையாம் என்பது உடம்படுத்தவாறாகக் கொள்
ளப்படும் (௪௧)

௪௨. தலைவரு விழும நிலையெடுத் துரைப்பினும்
போக்கற் கண்ணும் விடுத்தற் கண்ணும்
நீக்கலின் வந்த தம்முறு விழுமமும்
வாய்மையும் பொய்ம்மையுங் கண்டோர் சுட்டித்
தாய்நிலை நோக்கித் தலைப்பெயர்த்துக் கொளினும்
நோய்மிகப் பெருகித் தன்னெஞ்சு கலுழ்ந்தோளை
யழிந்தது களையென மொழிந்தது கூறி
வன்புறை நெருங்கி வந்ததன் றிறத்தோ
டென்றிவை யெல்லா மியல்புற நாடி
னொன்றித் தோன்றுந் தோழி மேன.

இது பிரிவின்கண் தோழிக்குக் கூற்று நிகழும் இடன் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — கல்லாற விழுமத்தினை யெடுத்துரைத்தல் முதலாகச் சொல்லப்பட்டன தோழிமாட்டுப் பொருந்தித் தோன்றும் என்றவாறு.

கல்லாறும் விழுமத்தினை எடுத்துரைத்தலாவது — பிரிவு வரும் கேடு நல்லமையை எடுத்துக் கூறுதல் என்றவாறு.

உதாரணம்

பாஅல் அஞ்செவிப் பணைத்தாள் மாநிரை
மாஅல் யானையொடு மறவர் மயங்கித்
தூறதர்ப் பட்ட வாறியவு அருஞ்சுரம்
இறந்துநீ செய்யும் பொருளினும் யாநுமக்குச்
சிறந்தன மாதல் அறிந்தனை யாயின்
நீளிரு முந்நீர் வளிகலன் வௌவலின்
ஒளிவினைக் கழிந்தோர் போல அல்லலுற்றுக்
கேள்பெருந் தகையோ டெவன்பல மொழிகுவம்
நாளுங் கோண்மீன் நகைத்தலுக் கனைகேட்டு
கலவெனக் கவினைப்பெற்ற விழுமாற்றுப் படுத்துயிற்
புலவென்ற களம்போலப் புலப்புக்கொண் டமைவாமனா,
ஆளியவர் கலக்குற அலைபெற்ற நாடுபோற்
பாழ்பட்ட முகத்தொடு பைதல்கொண் டமைவாரோ,
ஊரார் வைகலுட் டம்மைப் பொய்யாமைகய
ஞாயிற்று மலர்போல நகுபயிர்ன ரோர்,
எனவாங்கு
பொய்யகலக்கல் புரிந்தனை புரட்ட லனைக்கவிட
டெக்காலோ நெடுந்தகாய் நீசெலவு
நக்காள்கொண் டிறக்குவ ளரும்பெற லுயிரே.
(கலி பாலை - ச)

எனவரும். இதனுள் 'யாம் நுமக்குச் சிறந்தனமாதலறிந்தனிராயின்' என்றமையானும், 'பொய்யகலக்கல் புரிந்தனை' என்றமையானும் வரைவுதன் முன்பெண்று கொள்ளப்படும் இவள் இறந்துபடும் என்றமையால் உடன்கொண்டு போவது குறிப்பு.

போக்கற் கண்ணும் என்பது — உடன்கொண்டு பெயர் என்று கூறுதற் கண்ணும் என்றவாறு

உதாரணம்

'மரையா மரல்கவர மாரி வறப்ப
வரையோர் கருங்க டாரிடைச் செல்வோர்
சுரையம்பு மூழ்கச் சுருங்கிய புரையோர்
முன்னீர் வறப்பப் புலர்வாடு நாவிற்கு
தண்ணீர் பெறாஅத் தடுமாற் றருந்துயரங்
கண்ணீர் நனைக்குங் கடுமைய காடென்றா
லென்னீ ரறியாதீர் போல விவைகூற
லின்னீர வல்ல நெடுந்தகாய் எம்மையு
மன்பறச் சூழாதே யாற்றிடை நும்மொடு
துன்பந் துணையாக நாடி னதுவல்ல
தின்பமு முண்டோ வெமக்கு' (கலி - பாலை - ரு)

எனவரும்

விடுத்தற் கண்ணும் என்பது — தலைமகள் உடன்போக்கு ஒருப்பட்டமை தலைமகற்குக் கூறி அவனை விடுத்தற்கண்ணும் என்றவாறு

உதாரணம்

'உன்னங் கொள்கையோ டுளங்கரந் துறையு
மன்னை சொல்லு முய்க்க மென்னதூஉ
மீரஞ் சேரா வியல்பிற் பொய்ம்மொழிச்
சேரியம் பெண்டிர் கௌவையு மொழிக
நாடுகண் ணகற்றிய வுதியஞ் சேரற்
பாடிச் சென்ற பரிசிலர் போல
வுவவினி வாழி தோழி யவரே
பொம்ம லோதி நம்மோ டொராங்குச்
செலவயர்ந் தனரா லின்றே
மலைதொறு மால்கழை பிசைந்த கால்வாய்
கூரெரி மீன்கொள் பரதவர் கொடுந்திமி
னளிசுடர் வான்றோய் புணரிமிசைக் கண்டாங்கு
மேவரத் தோன்றும் யாவுயர் நனந்தலை
யுயவல் யானை வெரிநுச்சென் றன்ன

கவலூர் பிழிதரும புல்சாய் சிறுநெறி
காடு மீக்கூறுந கோடேந்து ஒருத்த
லாறுகடி கொள்ளு மருஞ்சுரம பணைத்தோ
ளுறைந்த கூந்தற கொம்மை வரிமுலை
நிரையித ழுண்கண் மகளிர்க
கரிய வாலென வழுங்கின செலவே (அகம - ௯௪)

எனவரும் இஃது உடன்போக்கு நயப்பித்தது.

'வேலும் விளங்கின வினைஞரு மியன்றனா
தாருந் ததையின தழையுந் தொடுத்தன
நிலநீ ரற்ற வெம்மை நீங்கப்
பெயனீர் தலைஇய வுலவை யிலைநீத்துக்
குறுமுறி யீன்றன மரனே நறுமலர்
வேய்ந்தன போலத் தோன்றிப் பலவுடன
தேம்படப் பொதுளின பொழிலே கானமு
நனிநன் றாகிய பனிநீங்கு வழிநாட
பாலெனப் பரத்தரு நிலவின மாலை
போதுவந் தன்று தூதே நீயுங்
கலங்கா மனத்தை யாகி யென்சொ
னயந்தனை கேண்மோ நெஞ்ச மாக்குவை
செற்றி யுளரினும அயிலை வாடினும
நொசிமி மெனசினை வணர்குரல சாயினு
நின்னினு மடவ ளன்னீ நயந்த
வுன்னை யல்ல நுங்கின்னை யா
புலிமருள் செமமல் நோக்கி
வலிமா வினனுந தோயகனின முலலேயே' (அகம - ௨௬௯)

இது விடுத்தகவழிக் கூறியது.

நீக்கலின் வந்த தமமுறு விழுமமும என்பது — தமரை நீக்குதலால தமக்குறற நோயின் கண்ணும என்ற வாறு.

உதாரணம

'விளம்பழுங் கமழும் கமஞ்சூற் குழிசிப்
பாசந் தின்ற தேய்கான மத்த
நெய்தெரி யியக்கம் வெளின்முதன முழங்கும

வைகுபுலர் விடியல் மெய்கரந்து தன்கா
லரியமை சிலம்பு கழீஇப் பன்மாண்
வரிப்புனை பந்தொடு வைஇய செல்வோ
ளிவைகாண் டோறு நோவர் மாதோ
வளியரோ வளியரென் னாயத் தோரென
நும்மொடு வரவுதா னயரவுந்
தன்வரைத் தன்றியுங் கலுழ்ந்தன கண்ணே (நற்றி. கஉ)

எனவரும். இஃது உடன்போக்குத் தவிர்த்தற்பொருட்டுக் கூறியது. இன்னும் 'நீங்கலின் வருந்தமுறும் விழுமம்' என்றதனால் தலைமகட்குக் கனவுங் கொள்க.

உதாரணம்

'நாளு நாளு மாள்வினை யழுங்க
வில்லிருந்து மகிழ்வோர்க் கில்லையாற் புகழென
வொண்பொருட் காதலர் காதலர்
ரண்பனி துவையின் மொழி நீயே (சிற்றட்டகம்-பாலை)

எனவரும்.

வாய்மையும் பொய்ம்மையும் கண்டோர்ச் சுட்டித் தாயநிலை நோக்கித் தலைப்பெயர்த்துக் கொளினும் என்பது — மெய்ம்மையும் பொய்ம்மையும் காணப்பட்ட அவனைச் சுட்டித் தாயநிலை நோக்கி மீட்டுக் கொள்ளுதற்கண்ணும் என்றவாறு.

உதாரணம்

'பானமருண் மருப்பி னூல்புரை பாவடி
யீர்ந்தூங் கமழ்கடாஅத் திண்பிடி யொருத்த
லாறுகடி கொள்ளும் வேறுபுலம் படர்ந்து
பொருள்வயிற் பிரிதல் வேண்டு மென்னு
மருளில சொல்லு நீசொல் லினையே
நன்னா நறுநுதல் நயந்தனை நீவி
நின்னிற் பிரியலே னஞ்சலோம் பென்னு
நன்னா மொழியு நீமொழிந் தனையே
அவற்றுள்,
யாவோ வாயின மாஅன மகனே

கிழவ ரினனோ ரெனனாது பொருடான
பழவினை மருஙகிற பெயாபுபெயா புறையு
மனன பொருளவயிற பிரிவோய நினனின
றிமைபபுவரை வாழாள மடவோள
வாழாமைக கவின கொணட கோளினை மறநதே'
(கலி பாலை-௨0)

எனவரும இது தலைமகனைச சுட்டிக கூறியது. தாய
நிலை நோககித தலைபபெயாததுக கொணடதறகுச செய
யுள வநதவழிக கணடுகொளக.

நோய மிகப பெருகித தன நெஞசு கலுழநதோளை
அழிநதது களையென மொழிநதது கூறி வன்புறை
நெருஙகி வநதகன் திறததோடு என்றிவை எலலாம இயலபு
உற நாடின ஒன்றித தோன்றும தோழிமேன என்றது —
தலைமகன பிரிதலால வநதுற்ற நோய மிகவும பெருகித
தன் நெஞசு கலஙகியோளை அழிநதது * களைதல வேணடு
மெனத தலைமகன செயதன மாற்றதனைக கூறி வன்புறை
யின்பொருட்டு நெருஙகி வநதகன † திறததோடு இத
தனமையவெலலாம இயலபு உற ஆராயின தலைமகளொடு
பொருநதித தோன்றுந தோழி மேலன என்றவாறு

'ஒன்றித தோன்றுந தோழி' என்றதனால தோழி
மாட பலருளளும இனறியமையாதாள என்று கொளக

'தோழி தானே செவிலி மகளே' (களவி - ௩௫)

என்றதனானும அவள செவிலிமகள என்று கொளளப
படும

மொழிநதது கூறி வன்புறை நெருஙகுதலாவது —
தலைமகன மொழிநதது கூறி வறபுறுததலாம

'அரிதாய அறனெயதி அருளியோரக களிததலும
பெரிதாய பகைவென்று பேணாரைத தெறுதலும
புரிவமா காதலிற புணாசசியுந தருமெனப

* 'காததல' எனவும பிரதிபேதம.
† 'திறததுககொணடு' எனவும பிரதிபேதம.

பிரிவெண்ணிப் பொருள்வயிற் சென்றநங் காதலர்
வருவார்கொல் வயங்கிழாஅய் வலிப்பல்யான் கேளினி,

என்று,

அடிதாங்கு மளவின்றி யழலன்ன வெம்மையால்
கடியவே கனங்குழாஅய் காடென்றா ரக்காட்டுள்
துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவு முரைத்தனரே,

எனவும்,

இன்பத்தி னிகந்தொரீஇ யிலைதீர்ந்த வுலவையால்
துன்புறூஉந் தகையவே காடென்றா ரக்காட்டுள்
அன்புகொண் மடப்பெடை யசைஇய வருத்தத்தை
மென்சிறக ராலாற்றும் புறவெனவு முரைத்தனரே,

எனவும்,

கன்மிசை வேய்வாடக் கனைகதிர் தெறுதலால்
துன்னரூஉந் தகையவே காடென்றா ரக்காட்டுள்
இன்னிழ லின்மையான் வருந்திய மடப்பிணைக்குத்
தன்னிழலைக் கொடுத்தளிக்குங் கலையெனவு முரைத்தனரே

எனவும் அவன் மொழிந்தது கூறி,

எனவாங்கு,
இனைநல முடைய கானஞ் சென்றோர்
புனைநலம் வாட்டுந ரல்லர் மனைவயிற்
பல்லியும் பாங்கொத் திசைத்தன
நல்லெழி லுண்கணு மாடுமா லிடனே' (கலி. பாலை - ௧௧)

என வற்புறுத்தியவாறு கண்டுகொள்க.

'என்றிவையெல்லா மியல்புற நாடின்' என்பதனால் 'பருவம் வந்தது', 'பருவம் அன்று' என வருவன கொள்க.

'வல்வருவர் காணாய் வயங்கி முருகக்கெல்லாஞ்
செல்வச் சிறாஅர்க்குப்பொற் கொல்லர்போ — னல்ல
பவளக் கொழுந்தின்மேற் பொற்றூவி பாஅய்த்
திகழக்கான் றிட்டன தோன்றி' (திணைமாலை - ௬௬)

இது பருவம் வந்தது என்றது.

'மடவ மன்ற தடவுநிலைக் கொன்றை
கல்பிறங் கத்தஞ் சென்றோர் கூறிய
பருவம் வாரா அளவை நெரிதரக்
கொம்புசேர் கொடியிண ரூழ்த்த
வம்ப மாரியைக் காரென மதித்தே' (குறுந் - சுசு)

இது பருவம் அன்று என்றது.

இன்னும் 'என்றிவை யெல்லாம்' என்றதனாற் பிரியுங் காலத்துத் தலைமகட்கு உணர்த்துகின்றேன் எனத் தலைமகற்கு உரைத்தலும், தலைமகட்கு அவர் பிரியார் எனக் கூறுதலுங் கொள்க.

'முளவுமா வல்சி யெயினர் தங்கை
யிளமா வெயிற்றிக்கு நின்னிலை யறியச்
சொல்லினே னிரக்கு மளவை
வென்வேல் விடலை விரையா தீமே' (ஐங்குறு - ஙசுச)

இது விலக்கிற்று.

'விளங்குபூ ணாய செல்வோ வல்லை முறைபட
டசைந்த பிடியை யெழிற்களிறு
கற்றடைச் சேற்றிடைச் சின்னீரைக் கையாற்கொண்
டுச்சி யொழுக்குஞ் சுரம்'

இது தலைமகட்குக் கூறியது. (சஉ)

சங. பொழுது மாறு முட்குவரத் தோன்றி
வழுவி னாகிய குற்றங் காட்டலும்
ஊரது சார்புஞ் செல்லுந் தேயமும்
ஆர்வ நெஞ்சமொடு செப்பிய வழியினும்
புணர்ந்தோர் பாங்கிற் *புணர்ந்த நெஞ்சமொ
டழிந்தெதிர் கூறி விடுப்பினு மாங்கத்
தாய்நிலை கண்டு தடுப்பினும் விடுப்பினுஞ்
சேய்நிலைக் ககன்றோர் செலவினும் வரவினும்
கண்டோர் மொழிதல் கண்ட தென்ப.

* 'புணர்ந்தறி நெஞ்சமொடு' எனவும் பிரதிபேதம்.

இது கண்டோர் கூற்று நிகழும் இடன் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — பொழுதும் ஆறும் உட்குவரத் தோன்றி வழுவின் ஆகிய குற்றம் காட்டலும் ஊரது சார்பும் செல்லும் தேயமும் ஆர்வ நெஞ்சமொடு செப்பிய வழியினும் என்பது — காலமும் நெறியும் அச்சம் வருமாறு தோன்றி * வழுவுதலின் ஆகிய குற்றம் காட்டலும் ஊரது அணிமையும் செல்லும் தேயத்தின் சேய்மையும் ஆர்வ நெஞ்சமொடு செப்பிய பக்கத்தினும் என்றவாறு.

உதாரணம்

'எம்மூ ரல்ல தூரணித் தில்லை
வெம்முரண் செல்வன் கதிருமுழ்த் தன்னன்
சேர்ந்தனை சென்மோ பூந்தார் மார்ப
விளையள் மெல்லியள் மடந்தை
யரிய சேய பெருங்கா னியாறே'

எனவரும்.

புணர்ந்தோர் பாங்கின் புணர்ந்த நெஞ்சமொடு அழிந்து எதிர்கூறி விடுப்பினும் என்பது — புணர்ந்து செல்கின்றோர் பக்கத்து விரும்பின நெஞ்சத்தொடு மனன் அழிந்து எதிர்மொழி கூறி விடுத்தற்கண்ணும் என்றவாறு.

உதாரணம்

'அழுந்துபட வீழ்ந்த பெருந்தண் குன்றத்
தொலிவல் லீந்தி னுலவை யங்காட்
டாறுசென் மாக்கள் சென்னி யெறிந்த
செம்மறுத் தலைய நெய்த்தோர் வாய
வல்லியம் பெருந்தலைக் குருளை மாலை
மானோக்கு மிண்டிவ ரீங்கைய சுரனே
வையெயிற் றையள் மடந்தை முன்னுற்
றெல்லிடை நீங்கு மிளையோ னுள்ளம்

* 'வழுவு முதலாகிய' எனவும் பிரதிபேதம்.

காலொடு பட்ட மாரி
மால்வரை மிளிர்க்கு முருமினுங் கொடிதே' (நற்றி - ௨)

எனவரும்.

ஆங்கு அத் தாய் நிலைகண்டு தடுப்பினும் விடுப்பினும் என்பது — ஆண்டுப் பின்சென்ற அச் செவிலித்தாயது நிலைமையைக் கண்டு போகாமல் தடுத்தற்கண்ணும் போக விடுத்தற்கண்ணும் என்றவாறு.

உதாரணம்

'அறம்புரி யருமறை நவின்ற நாவிற்
றிறம்புரி கொள்கை யந்தணிர் தொழுவலென்
றொண்டொடி வினவும் பேதையம் பெண்டே
* கண்டனெம் மம்ம சுரத்திடை யவளை
யின்றுணை யினிதுபா ராட்டக்
குன்றுயர் பிறங்கன் மலையிறந் தோளே'
(ஐங்குறு - ௩௮௭)

எனவரும். இது செவிலி வினாயவழிக் கூறியது.

'பெயர்ந்து போகுதி பெருமூ தாட்டி
சிலம்புகெழு சீறடி சிவப்ப
விலங்குவேற் காளையொ டிறந்தனள் சுரனே'

இது தடுத்தற்கண் வந்தது.

'நெருப்பவிர் கனலி யுருப்புச்சினந் தணியக்
கருங்கால் யாத்து வரிநிழ லிருஇச்
சிறுவரை யிறப்பிற் காண்குவை செறிதொடிப்
பொன்னேர் மேனி மடந்தையொடு
வென்வேல் விடலை முன்னிய சுரனே' (ஐங்குறு-௩௮௮)

இது விடுத்தற்கண் வந்தது.

சேய்நிலைக்கு அகன்றோர் செலவினும் வரவினும் என்பது — சேய்மைக்கண் அகன்றோர் செல்லுதற்கண்ணும் வரவின்கண்ணும் என்றவாறு.

---

* 'கண்டே மோமையஞ் சுரத்' எனவும் பாடம்

உதாரணம்

'வில்லோன் காலன கழலே தொடியோள்
மெல்லடி மேலவுஞ் சிலம்பே நல்லோர்
யார்கொல் லளியர் தாமே யாரியர்
கயிறாடு பறையிற் கால்பொரக் கலங்கி
வாகை வெண்ணெற் றொலிக்கும்
வேய்பயி லழுவ முன்னி யோரே' (குறு - எ)

எனவரும்

கண்டோர் மொழிதல் கண்டது என்ப என்பது —
இவ்விவ் விடங்களிற் கண்டோர் சொல்லுதல் வழக்கிற்
காணப்பட்ட தென்ப என்றவாறு (சங)

சச. ஒன்றாத் தமரினும் பருவத்துஞ் சுரத்து
மொன்றிய மொழியொடு வலிப்பினும் விடுப்பினு
மிடைச்சுர மருங்கி னவடம ரெய்திக்
கடைக்கொண்டு பெயர்தலிற் கலங்கஞ ரெய்திக்
கற்பொடு புணர்ந்த கௌவை யுளப்பட
வப்பாற் பட்ட வொருதிறத் தானு
நாளது சின்மையு மிளமைய தருமையுந்
தாளாண் பக்கமுந் தகுதிய தமைதியு
மின்மைய திளிவு முடைமைய துயர்ச்சியு
மன்பின தகலமு மகற்சிய தருமையு
மொன்றாப் பொருள்வயி னூக்கிய பாலினும்
வாயினுங் கையினும் வகுத்த பக்கமோ
டூதியங் கருதிய வொருதிறத் தானும்
புகழு மானமு மெடுத்துவற் புறுத்தலுந்
தூதிடை யிட்ட வகையி னானு
மாகித் தோன்றும் பாங்கோர் பாங்கினு
மூன்றன் பகுதியு மண்டிலத் தருமையுந்

தோன்றல் சான்ற மாற்றோர் மேன்மையும்
பாசறைப் புலம்பலு முடிந்த காலத்துப்
பாகனொடு விரும்பிய வினைத்திற வகையினுங்
காவற் பாங்கி னாங்கோர் பக்கமும்
பரத்தையி னகற்சியின் பிரிந்தோட் குறுகி
யிரத்தலுந் தெளித்தலு மெனவிரு வகையோ
டுரைத்திற நாட்டங் கிழவோன் மேன.

இது பிரிவின்கண் தலைமகற்குக் கூற்று நிகழுமிடன் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — ஒன்றாத் தமரினும் பருவத்தும் சுரத்தும் ஒன்றிய மொழியொடு வலிப்பினும் விடுப்பினும் என்பது — வரைவு உடன்படாத் தமர்கண்ணும் பருவத்தின் கண்ணும் சுரத்தின்கண்ணும் பொருந்திய சொல்லொடு தலைமகளை உடன்கொண்டு போகத் துணியினும் விடுத்துப் போகினும் 'உரைத்திற நாட்டங் கிழவோன் மேன' என்றவாறு.

உரைத்திற நாட்டம் உளவாம் கிழவோற்கு என்றலை ஏனைய பகுதிக்கும் ஒட்டுக. வலித்தற்குச் செய்யுள் —

'ஆறுசெல் வருத்தத்துச் சீறடி சிவப்பவுஞ்
சினைநீங்கு தளிரின் வண்ணம் வாடவுந்
தானவர் றுணிந்த வியவ்ஞிலு நீவருடன்
வேய்பயி லழுவ முவக்கும்
பேதை நெஞ்சம் பெருந்தக வுடைத்தே'

எனவும்,

'வேட்டச் செந்நாய் கிளைத்தூண் மிச்சில்
குளவி மொய்த்த வழுகற் சின்னீர்
வளையுடைக் கைய ளெம்மொ டுணீஇய
வருகதில் லம்ம தானே
யளியளோ வளியளென் னெஞ்சமர்ந் தோளே'
(குறுந் - ௫௬)

எனவும் வரும்.

அவவழி, இடைசசுரததிற கூறியதறகுச செய்யுள —

‘அழிவில முயலு மாரவ மாககள
வழிபடு தெயவங கடகண டாஅங
கலமரல வருநதந தீர யாழநின
நலமென பணைததோ ளெயதின மாகலிற
பொரிப்பூம புனகி னெழிறறகை யொணமுறி
சுணஙகணி வனமுலை யணஙகுகொளத திமிரி
நிழலகாண டோறு நெடிய வைகி
மணலகாண டோறும வணட றைஇ
வருநதா தேகுமதி வாலெயிற றோயே
மாநனை கொழுதி மகிழகுயி லாலு
நறுநதண பொழில கானங
குறும்பல லூர யாஞ செலலு மாறே’ (நறறி - கூ)

எனவரும. இனி விடுததறகுச செய்யுள —

‘இருமபுலிக கிரிநத கருஙகட செநநாகு*
நாடடயிர கடைகு ன கேட்டொறும வெருஉ
மாதிலைப பளசி யலக நமமொடு
மானுண கணணியும வருமெனின
வாரா ராயமோ பெருஙக லாறே’

எனவரும. இது உடனகொணடு பெயாதல வேணடும என்ற தோழிககுக காடடது கடுமை கூறி விடுததது.

‘கிளிபுரை கிளவியாய எமமொடு நீவரின
தளிபொழி தளிரனன வெழினமேனி தகைவாட
முளியரில பொதிய முழுஙகழ லிடைபோழநத
வளியுறி னவவெழில வாடுவை யலலவோ’
(கலி. பாலை - கஉ)

என்றது தலைவிககுக காடடது கடுமைகூறி விடுததது.

இடைசசுரம மருஙகின அவள தமர எய்திக கடைக கொணடு பெயாதலில கலஙகு அஞர எயதிக கறபொடு புணாநத கெளவை உளபபட அபபாறபடட ஒருதிறத தானும எனபது — தலைமகள செலகின்ற இடைச் சுரத

* ‘செநநாய’ எனவும பாடம.

திடைத் தலைமகளைத் தமர் எய்தி மீட்டுக்கொண்டு பெயர்தல் மரபாதலின், அங்ஙனம் பெயர்வர் எனக் கலங்கி வருந்த முற்றுக் கற்பொடு புணர்ந்த அவர் உளப்பட அப்பகுதிப்பட்ட உடன்போக்கின்கண்ணும் அவற்குக் கூற்று நிகழும் என்றவாறு.

அவ்வழி வருவர் எனக் கூறலும், வந்தவழிக் கூறலும் உளவாம்.

'வினையமை பாவையி னியலி நுந்தை
மனைவரை யிறந்து வந்தனை யாயிற்
றலைநாட் கெதிரிய தண்பெய லெழிலி
யணிமிகு கானத் தகன்புறம் பரந்த
கடுஞ்செம் மூதாய் கண்டுங் கொண்டு
நீவிளை யாடுக சிறிதே யானே
மழகளி றுரிஞ்சிய பராஅரை வேங்கை
மணலிடு மருங்கி னிரும்புறம் பொருந்தி
யமர்வரி னஞ்சேன் பெயர்க்குவெ
னுமர்வரின் மறைகுவென் மாஅ யோளே'

(நற்றி - ௩௬௨.)

இது வருவர் என ஐயுற்றுக் கூறியது.

'கற்பொடு புணர்ந்த கௌவை'க்குச் செய்யுள் வந்த வழிக் கண்டுகொள்க.

நாளது சின்மையும், இளமையது அருமையும், தாளாண் பக்கமும், தகுதியது அமைதியும், இன்மையது இளிவும், உடைமையது உயர்ச்சியும், அன்பினது அகலமும், அகற்சியது அருமையும் ஒன்றாப் பொருள்வயின் ஊக்கிய பாலினும் என்பது — நாளது சின்மை முதலாகச் சொல்லப்பட்ட எட்டனையும் பொருந்தாத, பொருட்கண் ஊக்கிய பக்கத்தினும் அவற்குக் கூற்று நிகழும் என்றவாறு.

'ஒன்றா' என்னும் பெயரெச்சம் 'பால்' என்னும் பெயர்கொண்டு முடிந்தது. அது 'பொருள்வயினூக்கிய பால்' என அடையடுத்து நின்றது.

நாளது சின்மையை ஒன்றுமை யாவது — யாக்கை நிலையாது என உணரும் உணர்ச்சியைப் பொருந்தாமை,

இளமையது அருமையை ஒன்றுமை யாவது — பெறுதற்கரிய இளமை நிலையாது என உணரும் உணர்ச்சியைப் பொருந்தாமை

தாளாண் பக்கத்தை ஒன்றுமை யாவது — முயற்சியான் வரும் வருத்தத்தை உணரும் உணர்ச்சியைப் பொருந்தாமை

தகுதியது அமைதியை ஒன்றுமை யாவது — பொருண்மேல் காதல் உணர்ந்தோர்க்குத் தகாது என உணரும் உணர்ச்சியைப் பொருந்தாமை,

இன்மையது இளிவை ஒன்றுமை யாவது — இன்மையான் வரும் இளிவரவினைப் பொருந்தாமை.

உடைமையது உயர்ச்சியை ஒன்றுமை யாவது — பொருள் உடையார்க்கு அமைவு வேண்டுமன்றே அவ்வமைவினைப் பொருந்தாமை, அஃதாவது மேன்மேலும் ஆசை செலுத்துதல்

அன்பினது அகலத்தை ஒன்றுமை யாவது — சிறந்தார்மாட்டுச் செல்லும் அன்பினைப் பொருந்தாமை

அகற்சியது அருமை ஒன்றுமை யாவது — பிரிதல் அருமையைப் பொருந்தாமை

பொருள் தேடுவார் இத்தன்மையராதல் வேண்டும் என ஒருவாற்றான் அகற்சிக்கண் அறியவாறு

வாயினும் கையினும் வகுத்த பக்கமொடு ஊதியங் கருதிய ஒருதிறத்தானும் என்பது — வாயான் வகுத்த பக்கமோடும் கையான் வகுத்த பக்கமோடும் பயன் கருதிய ஒருகூற்றானும் அவற்குக் கூற்று நிகழும் என்றவாறு

வாயான் வகுத்த பக்கமாதல், ஓதுதல் கையான் வகுத்த பக்கமாதல், படைக்கலம் பயிறலும், சிறபுங

கற்றலும் ஊதியங் கருதிய வொருதிறத்தானும் என்பது — மேற் சொல்லப்பட்ட பொருள்வயிற் பிரிதலன்றி அறத்திறங் காரணமாகப் பிரியும் பிரிவு; இது, மறுமைக்கண் பயன் தருதலின் 'ஊதியம்' ஆயிற்று.

> 'அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
> மறத்தலி னூங்கில்லை கேடு' (குறள் அறன்வலி - உ)

என்பதனானும் அறிக.

புகழும் மானமும் எடுத்து வற்புறுத்தலும் என்பது — பிரிந்தக்கால் வரும் புகழும் பிரியாமையான் வரும் குற்றமும் குறித்துத் தலைமகளை யான் வருந்துணையும் ஆற்றியிருத்தல் வேண்டும் எனக் கூறுதற்கண்ணும் அவற்குக் கூற்று நிகழும் என்றவாறு.

'பொருள்வயி னூக்கிய பாலினும்', 'ஊதியங் கருதிய வொருதிறத்தானும்' என்பவற்றுக்கும் எனக் கூட்டுக.

உதாரணம்

> 'அறனு மகையு மன்பு மிகிளையும
> புகழு மன்புந் தருதலிற் புறம்பெயர்ந்து
> வருவது துணிந்தமை பெரிதே
> விரிபுய மேகாமை விளங்கிழை பொருமே'

எனவரும்.

தூது இடையிட்ட வகையினானும் என்பது — இருபெரு வேந்தர் இகலிய வழிச் சந்துசெய்தற்குத் தூதாகிச் செல்லும் வகையின்கண்ணும் அவற்குக் கூற்று நிகழும் என்றவாறு.

ஆகித்தோன்றும் பாங்கோர் பாங்கினும் என்பது — தனக்குப் பாங்காகித் தோன்றுவார் பக்கத்துப் பிரியும் வழியும் அவற்குக் கூற்று நிகழும் என்றவாறு.

அதுவும் வேந்தற்கு உற்றுழிப் பிரியும் பிரிவு.

மூன்றன் பகுதி யாவன — நால்வகை வலியினும், தன் வலியும் துணை வலியும் வினை வலியும் எனப்படும். அவை பகைவா மாட்டு உள்ளன

மண்டிலத்து அருமையாவது — பகைவர் மண்டிலம் கொண்ட அருமை என்றவாறு

தோன்றல் சான்ற என்பது — இவை மிகுதல் சான்ற என்றவாறு

மாற்றோர் மேன்மை யாவது — மாற்றோரது உயர்ச்சி யானும் என்றவாறு

ஆன உருபு எஞ்சிநின்றது. மூன்றன் பகுதியானும் மண்டிலத்தருமையானும் தோன்றல் சான்ற மாற்றோர் எனக் கூட்டுக

பாசறைப் புலம்பல் என்பது — பாசறைக்கண் தலைமகன் தனிமை யுரைத்தல் என்றவாறு

ஆதிக்கண் விட்ட வகைப் பொருளும், வேந்தற்கு உற்றுழி யினும், மாற்றோர் மேன்மையினும் பிரிந்த தலைமகன் பாசறைக்கட் புலம்பல் எனக் கூட்டுக. ஆதலால் ஆதி னும், வேந்தற்கு உற்றுழியினும், பகைத் தணி வினையினும் அவற்குப் பாசறைக்கட் புலம்பல் உளதாகும் எனக்

உதாரணம்

'வேளாப் பார்ப்பான் வாளரந் துமித்த
வளைகளைந் தொழிந்த கொழுந்தி னன்ன
தளைபிணி யவிழாச் சுரிமுகப் பகன்றை
சிதரலந் துகிலின் ஆயவின மலரும்
தைஇ நின்ற தண்பெயற் கடைநாள்
வயங்குகதிர் கரந்த வாடை வைகறை
விசும்புரி வதுபோல வியலிடத் தொழுகி
மங்குன் மாமழை தென்புலம் படரும்
பனியிருங் கங்குலுந் தமியள் நீந்தித்
தம்மூ ரோளே நன்னுதல் யாமே

கடிமதிற் கதவம் பாய்தலிற் றொடிபிளந்து
நுதிமுக மழுங்கிய மண்ணைவெண் கோட்டுச்
சிறுகண் யானை நெடுநா டொண்மணி
கழிபிணிக் கறைத்தோற் பொழிகணை யுதைப்புத்
தழங்குகுரன் முரசமொடு மயங்கும் யாமத்துக்
கழித்துறைச் செறியா வாளுடை யெறுழ்த்தோ
ளிரவுத் துயின் மடிந்த தானை
யுரவுச்சின வேந்தன் பாசறை யேமே' (அகம் - உச)

எனவரும் இது வேந்தற்கு உற்றுழிப் பிரிந்த தலைமகன் கூற்று.

'வைகு புலர் விடியல் (அகம் - ௪௧)

என்பது பகைவயிற் பிரியும் தலைமகன் கூற்று. பிறவும் அன்ன இவ்வாறு வருவன குறித்தபருவம் பிழைத்துழி என்று கொள்க.

முடிந்த காலத்துப் பாகனொடு விரும்பிய வினைத்திற வகையினும் என்பது — வினைமுடிந்த காலத்துப் பாகனொடு விரும்பப்பட்ட வினைத்திறத்தின் வகையின்கண்ணும் அவற்குக் கூற்று நிகழும் என்றவாறு.

அக்கூற்றுப் பாசறைக்கட் கூறலும், மீண்டு இடைச்சுரத்துக் கூறலும் என இருவகைப்படும். இன்னும் 'வகை' என்றதனை நெஞ்சிற்குக் கூறுவனவுங் கொள்க.

உதாரணம்

'வந்துவினை முடித்தனம் வேந்தனும் பகைவரும்
தந்திறை கொடுத்துத் தமரா யினரே
முரண்செறிந் திருந்த தானை யிரண்டும்
ஒன்றென அறைந்தன பறையே நின்றோ
முன்னியங் கூதிய பின்னிலை யியாஅ
ஆக்க பாக பொருவினை கழிய
நன்ன னேற்றை நறும்பூ ணத்தி
துன்னருங் கடுந்திறற் கங்கன் கட்டி
பொன்னணி வல்விற் புன்றுறை யென்றாங்கு

கன்றுவார் குழீஇய அளப்பருங் கட்டூர்
பருந்துபட்ட பண்ணிய பழையன் பட்டெனக்
கண்டது நோனா னாகித் திண்டேர்க்
கணைய னகப்படக் கழுமலந் தந்த
பிணையலங் கண்ணிப் பெரும்பூட் சென்னி
அழும்பி லன்ன அறாஅ யாணர்
பழம்பல் நெல்லின் பல்குடிப் பரவைப்
பொங்கடி படிகயம் மண்டிய பசுமிளைத்
தண்குட வாயி லன்னோள்
பண்புடை யாகத் தின்றுயில் பெறவே' (அகம் - ௪௪.)

எனவும்,

'கேள்கே டூன்றவுங் கிளைஞ ராரவும்
கேளல் கேளிர் கெழீஇயினர் ஒழுகவும்
ஆள்வினைக் கெதிரிய வூக்கமொடு புகல்சிறந்
தாரங் கண்ணி யடுபோர்ச் செழிய
புறங்கெழு ... யுறாமை யன்ன
பெறலருங் கலங்க லெய்திய நாளுந்
செயலருஞ் செய்வினை முற்றின மாயின்
அரண்பல கடந்த முரண்கொடு தானை
வாடா வேம்பின் வழுதி கூடல்
நாளங் காடி நாறு நறுநுதல்
நீளிருங் கூந்தல் மாஅ யோளொடு
வரைகுயின் றன்ன வான்றோய் நெடுநகர்
நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை
நிவந்த பள்ளி நெடுஞ்சுடர் விளக்கத்து
நலங்கே ழாகம் பூணுறப் பொறிப்ப
முயங்குகஞ் சென்மோ நெஞ்சே வரிநுதல்
வயந்திகழ் பிழிதரும் வாய்புகு கடாஅத்து
மீளி முன்பொடு நிலனெறி யாகக் குறுகி
யாட்கோட் பிழைத்த வஞ்சுவரு தடக்கைக்
கடும்பகட் டியானை நெடுந்தேர்க் கோதை
திருமா வியனகர்க் கருவூர் முன்றுறைத்
தெண்ணீ ருயர்கரைக் குவைஇய
தண்ணான் பொருநை மணலினும் பலவே' (அகம் - ௯௩)

எனவும் வருவன நெஞ்சிற்குக் கூறியன

'கொல்வினைப் பொலிந்த கூர்ப்பகுறும் பெஃகின்
வில்லோர் தூணி வீங்கப் பெய்த
அப்புநுனை யேய்ப்ப வரும்பிய விருப்பைச்
செப்பட ரன்ன செங்குழை யகந்தோ
றிழுதி னன்ன தீம்புழற் றுய்வா
யுழுதுகாண் டுளைய வாகி யார்கழல்
பாலி வானிற் காலொடு பாறித்
துப்பி னன்ன செங்கோட் டியவி
னெய்த்தோ ரீ[illegible] ணத்திறற் பரிக்கு
மதத்த நண்ணிய மறக்குடிச் சீறூர்க்
கொடுநுண் ணோதி மகளி ரோச்சிய
தொடிமா ணுலக்கைத் தூண்டுறு பாணி
நெடுவால் [illegible] குடிஞையோ டிரட்டுங்
குன்றுபின் னொழியப் போகி யுரந்துரந்து
ஞாயிறு படினு மூர்சேய்த் தெனாது
துனைபரி துரக்குந் துஞ்சாச் செலவி
னெம்மினும் விரைந்துவல் லெய்திப் பன்மா
ணோங்குயர் நல்லி லொருசிறை நிலைஇய
பாங்கர்ப் பல்லி படுதொறும் பரவிக்
கன்றுபுகு மாலை நின்றோ ளெய்திக்
கைகவியாச் சென்று கண்புதையாக் குறுகிப்
பிடிக்கை யன்ன பின்னகந் தீண்டித்
தொடிக்கை தைவரத் தோய்ந்தன்று கொல்லோ
நாணொடு மிடைந்த கற்பின் வாணுத
லந்தீங் கிளவிக் குறுமகள்
மென்றோள் பெறநசைஇச் சென்றவென் னெஞ்சே'

(அகம் - ௯.)

இஃது இடைச்சுரத்துச் செலவியந்து.

காவல் பாங்கின் ஆங்கு ஓர் பக்கமும் என்பது — காவற் பக்கத்தின்கண் ஒரு கூற்றினும் என்றவாறு.

'ஆங்கு' என்பது இடங்குறித்து நின்றது,

'நின்னாங்கு வருஉ மென னெஞ்சினை' (கலி. பாலை ௨௨.)

என்றாற்போலக் கொள்க.

இது வாரியுள் யானை காணவும், நாடு காணவும், புனலாடவும், கடவுளரை வழிபடவும் பிரியும் பிரிவு. ஒருபக்கம் நாட்டெல்லையிலிருந்து பகைவரைக் காக்க வேண்டிப் பிரிவது பகையிற் பிரிவின் அடங்குதலின் இத்தன்மைக்கட் பிரியும் பிரிவு என்று வேறு ஓதப்பட்டது.

பரத்தையின் அகற்சியின் என்பது — பரத்தையிற் பிரியும் பிரிவின்கண்ணும் என்றவாறு.

உம்மை எஞ்சி நின்றது.

பிரிந்தோர் குறுகி இரத்தலும் தெளித்தலும் என இருவகையோடு என்பது — பிரியப்பட்ட தலைமகளைக் குறுகி இரத்தலும் தெளித்தலும் ஆகிய இரண்டுவகையோடே கூட என்றவாறு.

'காவற் பாங்கின் ஆங்கோர் பாங்கினும்' 'பரத்தையின் அகற்சியினும்' பிரியப்படார் எனக் கூட்டுக. அஃதேல் பரத்தையின் அகற்சி ஊடலாகாதோ எனின், ஊடலின் மிக்க நிலையே ஈண்டுக் கூறுகின்றது எனக்கொள்க.

கடவுட்பாட்டுப் பிரிந்துவந்த தலைமகனைத் தலைமகள் புணர்ச்சி மறுத்தற்குச் செய்யுள் —

மருதக் கலியுள் கடவுட் பாட்டினுள்,

'வண்டூது சாந்தம் வடுக்கொள நீவிய
தண்டாத் தீஞ் சாயற் பரத்தை வியன்மார்ப
பண்டின்னை யல்லைமன் னீங்கெல்லி யாங்குய்த்துக்
கண்டதெவன்மற் றுரை,'
நன்றும்,
'தடைஇய மென்றோளாய் கேட்டீவா யாயின்
உடனுறை வாழ்க்கைக் குதவி யுறையுங்
கடவுளர் கட்டங்கினேன்,'
சோலை,
மலர்வேய்ந்த மானப் பிணையன்னார் பலர்நீ
கடவுண்மை கொண்டொழுகு வார் (கலி மரு - உஅ)

எனவும்,

'சிறுவரைத் தங்கின் வெகுள்வர் செறுத்தக்காய்
தேறினென் சென்றீநீ செல்லா விடுவாயே
னற்றாரகலத்துக் கொருசார் மேவிய
நெட்டிருங் கூந்தற் கடவுள ரெல்லார்க்கு
முட்டுப்பா டாகலு முண்டு' (கலி மரு - ௨௮)

எனவும் புணர்ச்சிக்கு உடன்படாது கூறுதலானும்,

குறும்பூழ்ப் பாட்டினுள்,

'விடலைநீ நீத்தலி னோயெரி தேயக்கு
நடலைப்பட் டெல்லாநின் பூழ்' (கலி மரு - ௩௦.)

என்றவழி மருதநிலத்தின் தலைமகனை விடலை என்றமை யானும். இதனுள்,

'பொய்யெல்லா மேற்றித் தவறு தலைப்பெய்து
கையொடு கண்டாய் பிழைத்தே னருளினி'
(கலி மரு - ௩௦)

என இரந்தமையானுங் கண்டு கொள்க.

'ஒரூஉக,
கொடியிய னல்லார் குரனாற்றத் துற்ற
முடியுதிர் பூந்தாது மொய்ம்பின வாகத்
தொடிஇய வெமக்குநீ யாரை பெரியார்க்
கடியரோ வாற்றா தவர்,
கடியர்தமக் கியார்சொல்லத் தக்கார் மாற்று,
வினைகெட்டு,
வாயல்லா வெண்மை யுரையாது கூறுநின்
மாய மருள்வா ரகத்து,
ஆயிழாய்,
நின்கண் பெறினல்லா லின்னுயிர் வாழ்கல்லா
வென்கண் ணெவனோ தவறு.
இஃதொத்தன,
புள்ளிக் களவன் புனல்சேர் பொதுக்கம்போல்
வள்ளுகிர் போழ்ந்தனவும் வாளெயிற் றுற்றனவு
மொள்ளிதழ் சேர்ந்தநின் கண்ணியு நல்லார்
சிரறுபு சீறச் சேர்ந்தநின் மார்புந்
தவறுதல் சாலுமோ கூறு,
அதுதக்கது,

வேற்றுமை யென்கண்ணோ வோராதி தீதின்மை
தேற்றக்கண் டியாய் தெளிக்கு
இனித், தேற்றேம் யாம்,
தேர்மயங்கி வந்த தெரிகோதை யந்நல்லார்
தார்மயங்கி வந்த தவறஞ்சிப் போர்மயங்கி
நீயுறும் பொய்ச்சூ ளணங்காகின் மற்றினி
யார்மேல் விளியுமோ கூறு' (கலி மரு - ௨௮)

இதனுள் இரத்தலும் தெளித்தலும் வந்தவாறு கண்டு கொள்க.

கலித்தொகையுள் கடவுட் பாட்டினுள் உரிப்பொரு ண்மை பற்றி வரும் பாட்டு மருதத்திணைத் தலைமகன் பெயர் கூறுதல் பிறபெயர்ப்பட்ட கோத்தன்மையானும் உள்ளுறைப் பொருண்மையின் வேறுபாடுண்மை அறிக.

உரைத்திற நாட்டம் கிழவோன் மேன என்பது — இவ்விவ் விடங்கள் பற்றி உரையாடுங் குறிப்பு தலைமகன் மேலன என்றவாறு. (௪௪)

௪௫. எஞ்சி யோர்க்கு மெஞ்சுத லிலவே.

இது, பிரிவின்கண் கூறுதலுரியார் பலருள்ளும் நற்றாயும் செவிலியும் கண்டோரும் தோழியும் தலைமகனும் கூறுங் கூற்றுக் கூறினார், இனி அவரை யொழிந்த தலைமகட்கும் பாங்கற்கும் பார்ப்பார்க்கும் பாணர்க்கும் கூத்தர்க்கும் உழையோர்க்கும் கூற்று நிகழுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — முன்னர்க் கூறாது எஞ்சினோர்க்கும் கூற்று ஒழிதல் இல்லை என்றவாறு.

பாங்கர் முதலாயினோரை இச்சூத்திரத்தாற் கூறினார். தலைமகள் கூற்றுத் தனித்துக் கூறல்வேண்டும், இவரொடு ஒருநிகரன்மையின் எனின், ஒக்கும். தலைமகள் கூற்று உணர்த்திய சூத்திரம் காலப் பழமையாற் பெயர்ந்தது

எழுதுவார் விழ எழுதினாற்போலும் எனக் எனினும், ஆசிரியன் இச் சூத்திரத்தானும் அப்பொருள் கொள்ள வைத்தமையின் தலைமகள் கூற்றாய பிரிதலுற்ற தலைமகன் குறிப்புக்கண்டு அவள் கூறுதலும், பிரிவுணர்ந்து தலைமகள் கூறுதலும், பிரிவுணர்த்திய தோழிக்குக் கூறுதலும், உடன் போவல் எனக் கூறுதலும், இடைச்சுரத்து ஆயத்தார்க்குச் சொல்லிவிட்டனவும், தமர் வந்துற்றவழிக் கூறுதலும், மீளலுற்ற தலைமகள் ஆயத்தார்க்குக் கூறிவிட்டனவும், பிரிவாற்றாது கூறுதலும், பிரிந்தார் என்றவழிக் கூறுதலும், ஆற்றுவல் என்பது படக் கூறுதலும், தெய்வம் பராவலும், பருவங்கண்டு கூறுதலும், வன்புறை எதிரழிந்து கூறுதலும் இவை போல்வனவும் எல்லாம் கூறப்படும்

உதாரணம்

‘ஒரூஉ நடுக்குறக் கேட்டுங் கடுத்தநர்
மருஉப் பாங்கிக் பண்பார்க்கு மென்னுஞ்சொ
வின்றீங் கிளவியாய் வாய்மன்ற நின்கேள்
புதுவது பன்னாளும் பாராட்ட யானும்
இதுவொன் றுடைத்தென வெண்ணி யதுதேர்
மாசிலவன் சேக்கை மணந்த புணர்ச்சியுட்
பாயல்கொண் டென்றோள் கனவுவா ராய்கோற்
றொடிநிரை முன்கையாள் கையாறு கொள்ளாள்
கடிமனை காத்தோம்ப வல்லுவள் கொல்லோ
விடுமருப் பியானை யிலங்குதேர்க் கோடு
நெடுமலை வெஞ்சுரம் போகி நடுநின்று
செய்பொருண் முற்று மளவென்றா ராயிழாய்,
தாமிடை கொண்டது வாயிற் றமமின்றி
யாமுயிர் வாழு மதுகை யிலமாயிற்
றொய்யி றுறந்தா ரவரெனத் தம்வயின்
னொய்யார் நுவலும் பழிநிற்பத் தம்மொடு
போயின்று கொல்லென் னுயிர்’ (கலி பாலை - உங.)

எனவரும்

இது பிரிதலுற்ற தலைமகன் குறிப்புக் கண்டு தலைமகள் கூறியது

'செவ்விய தீவிய சொல்லி யவற்றொடு
பைய முயங்கிய வஞ்ஞான் றவையெல்லாம்
பொய்யாதல் யானியாங் கறிகோமற் றைய
வகனகர் கொள்ளா வலர்தலைத் தந்து
பகன்முனி வெஞ்சுர முள்ள லறிந்தேன்
மகனல்லை மன்ற வினி.
செல்லினிச் சென்றுநீ செய்யும் வினைமுற்றி
யன்பற மாறியா முள்ளத் துறந்தவள்
பண்பு மறிதிரோ வென்று வருவாரை
யென்றிறம் யாதும் வினவல் வினவிற்
பகலின் விளங்குநின் செம்மல் சிதையத்
தவலருஞ் செய்வினை முற்றாம லாண்டோ
ரவலம் படுதலு முண்டு' (கலி பாலை - கஅ.)

இது பிரிவுணர்ந்த தலைமகள் தலைமகனுடன் கூறியது.

இனி, பிரிவுணர்த்திய தோழிக்குக் கூறியதற்குச் செய்யுள் —

'அருளு மன்பு நீக்கித் துணைதுறந்து
பொருள்வயிற் பிரிவோ ருரவோ ராயி
னுரவோ ருரவோ ராக
மடவ மாக மடந்தை நாமே' (குறுந் - உ0.)

எனவரும்.

செல்லாமை யுண்டே லெனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை' (திருக்குறள் பிரிவாற் - க.)

என்பதும் அது.

உடன்போக்கு ஒருப்பட்டதற்குச் செய்யுள் —

'சிலரும் பலருங் கடைக்க ணோக்கி
மூக்கி னுச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி
மறுகிற் பெண்டி ரம்ப றூற்றச்
சிறுகோல் வலந்தன ளன்னை யலைப்ப
வலந்தனென் வாழி தோழி கானற்
புதுமலர் தீண்டிய பூநாறு குரூஉச்சுவற்

கடுமா பூண்ட நெடுந்தேர் கடைஇ
நடுநாள் வரூஉம் இயல்தேர்க் கொண்கனொடு
செலவயர்ந் திசினால் யானே
அலர்சுமந் தொழிகவிவ் வழுங்க லூரே.' (நற்றி - கசகூ.)

எனவரும்.

'சேட்புலம் முன்னிய அசைநடை யந்தணிர்
நும்மொன் றிரந்தனென் மொழிவ லெம்மூர்
யாய்நயந் தெடுத்த ஆய்நலங் கவின
ஆரிடை யிறந்தன ளென்மி
னேரிறை முன்கையென் னாயத் தோர்க்கே'
(ஐங்குறு - ஙஅச.)

இஃது இடைச்சுரத்துச் செல்கின்றாள், தன்பதி செல்வாரைக் கண்டு கூறியது.

தமர் வந்துற்றவழிக் கூறியதற்குச் செய்யுள் —

'அறஞ்சா லியரோ வறஞ்சா லியரோ
வறனுண் டாயினு மறஞ்சா லியரோ
வாள்வனப் புற்ற வருவிக்
கோள்வ லென்னையை மறைத்த குன்றே'
(ஐங்குறு - ஙகஉ.)

எனவரும்.

மீண்டு வந்தவள் ஆயத்தார்க்குக் கூறிவிட்டதற்குச் செய்யுள் —

'கவிழ்மயி ரெருத்திற் செந்நா யேற்றை
குருளைப் பன்றி கொள்ளாது கழியுஞ்
சுரநனி வாரா நின்றன ளென்பது
முன்னுற விரைந்தநீ ருரைமி
னின்னகை முறுவலென் னாயத் தோர்க்கே'
(ஐங்குறு - ஙகஎ.)

எனவரும்.

பிரிவாற்றாமைக்குச் செய்யுள் —

'அரிதரோ தேற்ற மறிவுடையார் கண்ணும்
பிரிவோ ரிடத்துண்மை யான.' (திருக்குற்.பிரிவாற்-ரு.)

எனவரும்.

'அஞசுவல வாழி தோழி செனறவா
நெஞசுணத தெளிதத நமவயினை
வஞசஞ செயதல வலலினை யாறே'

எனவும,

'அருமபெறற காதலர கலர மாசதிர
பெருமபுத லீஙகை யிளநதளிர நடுஙக
வலஙகுகதிர வாடையும வநதனறு
கலஙகஞ செயவந தோழிநா முறறே.

எனவும வருவன பிரிநதார யாறறவழிக கூறியன

ஆறறுவல எனபதுபடக கூறியதறகுச செயயுள —

'தோளுந தொடிநெகிழந தனவே நுதலும
நெயயுகு பளளி யாகக திலலை
யானே தவலர கொளளேன றானே
தஞசவரு கான மெனறாற
கஞசவ ரேறி நெஞசத தானே

எனவரும

தெயவம பராஅயதறகுச செயயுள —

'புனையிழா யீஙகுநாம புலமபுறப பொருளவெஃகி
முனைவெனனோ காதலர முனனிய வாறறிடைச
சினைவாடச சிறககுநின சினநதணிநது தீகெனக
கனைகதிரக கனலியைக காமுற லியையுமோ'
(கலி பாலை - கக.)

எனவரும.

பருவஙகணடு கூறியதறகுச செயயுள —

'எனனொடு புலநதனா கொலலோ காதலா
மினனொடு முயககுமும வானம
நினனொடு வருது மெனதெளிந தோரே'

எனவரும

வன்புறை யெதிரழிந்து கூறியதற்குச் செய்யுள் —

'வெறுக்கைக்குச் சென்றார் விளங்கிழாய் தோன்றார்
பொறுக்கவென் றாற்பொறுக்க லாமோ — வொறுப்ப
பொன்னூ ஞறுபவளம் போன்ற புணர்முருக்கம் [போர்த்
மென்னூ ஞறுமோய் பெரிது' (திணைமாலை - ௩௭)

எனவரும்.

தூதுவிடக் கூறியதற்குச் செய்யுள் —

'காணமதி பாணநீ யுரைத்தற் குரியை
துறைகெழு கொண்கனைப் பிரிந்தென
விறைகே ழெல்வளை நீங்கிய நிலையே' (ஐங்குறு - ௧௪௦.)

எனவரும்.

ஆயத்தார் கூறியதற்குச் செய்யுள் —

'மாரிதா மயங்கிய மலைமுதற் சிறுநெறி
ரானவரு மென்ப ரட்டமென் றோழி
யஞ்சின ளஞ்சின ளொதுங்கிய
பஞ்சின் மெல்லடிப் பாலவடுக் கொளவே'

எனவரும்.

பாணர் கூறியதற்குச் செய்யுள் —

'எனக்கியாம் பாணரு மல்லே மெமக்கு
நீயுங் குருசிலை யல்லை மாதோ
நின்வெங் காதலி தன்மனைப் புலம்பி
யீரிதழ் புண்கண் ணுறைப்ப
பூசல் கேட்டு மருளா தோயே' (ஐங்குறு - ௪௮௦.)

எனவரும்.

பார்ப்பார் கூறியதற்குச் செய்யுள் —

'துறந்ததற் கொண்டு துயரடச் சாஅ
யறம்புலந்து பழிக்கு மளைக ணாட்டி

யெவ்வ நெஞ்சிற் கேம மாக
வந்தன் ளோநின் மகளே
வெந்திறல் வெள்வேல் விடலைமுந் துறவே'
(ஐங்குறு - ௩௯௩.)

எனவரும் (௪௫)

௪௬. நிகழ்ந்தது நினைத்தற் கேதுவு மாகும்.

இதுவும் பாலைக்கு உரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — முன்பு நிகழ்ந்தது பின்பு விசாரித்தற்கு ஏதுவு மாகும் என்றவாறு.

உம்மை எதிர்மறை.

உதாரணம்

'வேர்பிணி வெதிரத்துக் கால்பொரு நரலிசை
கந்துபிணி யானை யயாவுயிர்த் தன்ன
வென்றூழ் நீடிய வேய்பயி லழுவத்துக்
குன்றூர் மதியம் நோக்கி நின்றுநினைந்
துள்ளினெ னல்லனோ யானே முள்ளெயிற்றுத்
திலகந் தைஇய தேங்கமழ் திருநுதல்
லெமதும் முண்டோர் மதிநாட் டிங்க
ளுரறுகுரல் வெவ்வளி யெடுப்ப நிழற்பல
வுலவை யாகிய மரத்த
கல்பிறங்கு மாமலை யும்பரஃ தெனவே' (நற்றி - ௬௨)

எனவரும் (௪௬)

௪௭. நிகழ்ந்தது கூறி நிலையலுந் திணையே.

இதுவும் அது.

இதன் பொருள் — முன்பு நிகழ்ந்ததனைக் கூறிப் போகாதொழிதலும் பாலைத்திணையாம் என்றவாறு.

உதாரணம :

'எனபருந துயவும வானபொரு நெடுஞ்சினைப
பொரியரை வேம்பின புள்ளி நீழற
கட்டளை யனன வட்டரங கிழைததுக
கல்லாச சிறுஅர நெல்லிவட் டாடும
வில்லேர் குழவர வெம்முனைச சீறூரச
சுரன்முதல வநத வுரனமாய மாலை
யுள்ளினென னல்லனே யானே யுள்ளிய
வினைமுடித தனன வினியோண
மனைமாண சுடரொடு படர்பொழு தெனவே.' (நற்றி - ௩)

எனவரும (சஎ)

சஅ. மரபுநிலை திரியா மாட்சிய வாகி விரவும் பொருளும் விரவு மென்ப

இதுவும் அது

இதன் பொருள் — மரபுநிலை திரியாத மாட்சிமை யுடையவாகி விரவும பொருளும விரவும என்ப என்ற வாறு

அஃதாவது, பாலைககோதிய பாசறைப புலம்பறகண்ணும, தேரபபாகறகுக கூறுதறகண்ணும முல்லைக்குரிய முதறபொருளும கருப்பொருளும விரவுதலாம பிறவும இந்நிகரன மரபுநிலை திரியாமை யாவது, பாசறைககண் வினைமுடிததவழிக காரகாலம வநததாயின ஆண்டுக கூறும கூறறு, அஃது அக காலததைபபறறி வருதலின் மரபுநிலை திரியாதாயிறறு

உதாரணம

'வேந்துவினை முடிதத' (அகம - ௧0௪.)

என்னும அகபபாட்டினுள் கண்டுகொள்க

இன்னும, 'மாட்சியவாகி விரவும் பொருளும விரவும' என்றதனால், பாசறைக்கண் தூதுகண்டு கூறுதலும தலைமகளை இடைச்சுரத்து நினைத்துக கூறுதலும் கொள்க,

உதாரணம்:

'நீடின மென்று கொடுமை தூற்றி
வாடிய நுதல ளாகிப் பிறிதுநினைந்
தியாமெங் காதலி நோய்மிகச் சாஅய்ச்
சொல்லிய துரைமதி நீயே
முல்லை நல்யாழ்ப் பாணமற் றெமக்கே' (ஐங்குறு-சஎஅ)

எனவரும்.

இது தூது கண்டு கூறியது.

'பனிமலர் நெடுங்கண் பசலை பாயத்
துனிமலி துயரமொ டரும்படர் உழப்போள்
கையறு நெஞ்சிற் குயவுத் துணையாகச்
சிறுவரைத் தங்குவை யாயிற்
காண்குவை மன்ற பாணவெந் தேரே' (ஐங்குறு-சஎஎ)

இது தூது விடும் தலைமகன் கூறியது.

'நெடுங்கழை முளிய வேனில் நீடிக்
கடுங்கதிர் ஞாயிறு கல்பகத் தெறுதலின்
வெய்ய வாயின முன்னே யினியே
யொண்ணுத லரிவையை யுள்ளுதொறும்
தண்ணிய வாயின சுரத்திடை யாறே.' (ஐங்குறு-ஙஉஉ)

இஃது இடைச்சுரத்துக் கூறியது (சஅ)

**சகூ. உள்ளுறை யுவம மேனை யுவமமெனத்
தள்ளா தாகுந் திணையுணர் வகையே.**

இஃது உவம வகையான் ஐந்திணைக்கும் உரியதோர் இயல்பு உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — உள்ளுறைக்கண் வரும் உவமமும் ஒழிந்த உவமமும் என இருவகையானும் திணை உணரும் வகை தப்பாதாகும் என்றவாறு.

உதாரணம் . முன்னர்க் காட்டுதும் (சகூ)

௫௦. உள்ளுறை தெய்வ மொழிந்ததை நிலமெனக்
கொள்ளு மென்ப குறியறிந் தோரே.

இஃது உள்ளுறையாமாறு உணர்த்துதலை நுதலிற்று.

இதன் பொருள் — உள்ளுறையாவது கருப்பொருட் டெய்வம் ஒழிந்த பொருள் இடமாகக்கொண்டு வரும் என்று சொல்லுவர் அறிந்தோர் என்றவாறு.

குறி - இலக்கணம் (௫௦)

௫௧. உள்ளுறுத் திதனோ டொத்துப்பொருண் முடிகென
வுள்ளுறுத் துரைப்பதை யுள்ளுறை யுவமம்.

இஃது உள்ளுறை உவமம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — உள்ளுறுத்தப்பட்ட கருப்பொருள் உள்ளுறுத்துக் கருதிய பொருள் இதனோடு ஒத்து முடிக என உள்ளுறுத்துக் கூறுமது உள்ளுறை உவமம் என்றவாறு.

எனவே உவமையாற் கொள்ளும் வினை, பயன், மெய், உரு அன்றிப் பொருள் உவமையாற் கொள்ளப் படுவது எனக.

உதாரணம்

'வெறிகொ ளினச்சுரும்பு மேய்ந்ததோர் காவிக்
குறைபடுதேன் வேட்டுங் குறுகும் — நிறைமதுச்சோர்ந்
துண்டாடுந் தன்முகத்தே செவ்வி யுடையதோர்
வண்டா மரைபிரிந்த வண்டு'
(தண்டி பொருளணி - ௫௨ ஒட்டணி - மேற்கோள்)

எனவரும்.

இது வண்டோரனையர் மாந்தர் எனக் கூறுதலான் உவமிக்கப்படும் பொருள் புலப்படாமையின் உள்ளுறை யுவமமாயிற்று. இதனுட் காவியும் தாமரையும் கூறுதலான் மருதத் திணையாயிற்று. (௫௧)

௫௨. ஏனை யுவமந் தானுணர் வகைத்தே.

இஃது ஏனை உவமம் ஆமாறு உணர்த்துதல் நுத லிற்று.

இதன் பொருள் — உள்ளுறை யொழிந்த உவமம் தான் உணரும் வகையான வரும் என்றவாறு

தான உணரும் வகையாவது, வண்ணத்தானுதல் வடிவானுதல் பயனுனுதல தொழிலானுதல உவமிக்கப படும பொருளோடு எடுத்துக கூறுதல

அஃது ஆமாறு உவமவியலுட் கூறப்படும

இதனுல திணை உணருமாறு

'வளமலா ததைந்த வண்டுபடு நறும்பொழின
முளைநிரை முறுவ லொருத்தியொடு நெருநற
குறிநீ செய்தனை யென்ப வலரே
குரவ நீள்சினை யுறையும்
பருவ மாககுயிற கௌவையிற் பெரிதே'
(ஐங்குறு - நஙகூ.)

இஃது ஊடற பொருண்மைத்தேனும வேனிற் காலத்து நிகழும குயிற் குரலை உவமித்தலிற பாலைத திணை யாயிற்று. குரவம — குராமரம.

'உரைத்திசிற றோழியது புரைத்தோ வன்றே
துருக்கங் கமழு மென்றோ
டுறப்ப வென்றி யிறீஇயரென் னுயிரே'
(சிற்றட்டகம் - குறிஞ்சி.)

இது துருக்கம என உவமை கூறுதலாற குறிஞ்சி யாயிற்று. (௫௨)

௫௩. காமஞ் சாலா விளமை யோள்வயி
னேமஞ் சாலா விடும்பை யெய்தி
நன்மையந் தீமைய மென்றிரு திறக்காற்

றன்னொடு மவளொடுந் தருக்கிய புணர்த்துச்
சொல்லெதிர் பெறுஅன் சொல்லி யின்புறல்
புல்லித் தோன்றுங் கைக்கிளைக் குறிப்பே.

மேல நடுவணைநதிணைகரு உரிய பொருண்மை யெல லாம் கூறினா.

இது கைக்கிளையாமாறு உணாததுதல நுதலிற்று

இதன் பொருள் — காமம அமையாத இளையாள மாட்டு ஏமம அமையாத இடும்பை எய்திய புகழ்தலும பழித்தலும ஆகிய இருதிறததால தனககும அவட்கும ஒததன புணாத்துச சொலலெதிா பெறுஅய்த தானே சொலலி இன்புறுதல் பொருநதித தோன்றும கைககிளைக் குறிபபு என்றவாறு

பொருநதித தோன்றும எனறதனால அகததொடு பொருந்துதல கொளக எனவே, 'காமஞசாலா' என்றத னால் தலைமைக்குக குறறம வாராதாயிறறு என்க 'புல் லித்தோன்றும்' என்றதனால புலலாமற றோன்றுங கைக் கிளையும கொளளபபடும அஃதாவது, காமஞ சான்ற தலைமகண்மாட்டு நிகழும மனநிகழசசி, அது களவிய லுட் கூறபபடுகின்றது

காமஞசாலா இளமையோளவயின கூறியதறகுச செயயுள —

'ஊாககா ணிவந்த பொதுமபரு ணீககாற்
கொழுநிழன ஞாழன முதிரிணா கொணடு
கழும முடிததுக கணகூடு கூழை
சுவனமிசைத தாதொடு தாழ வகன்மதி
தீஙகதிா விடடது போல முகனமாந
தீஙகே வருவா ளிவளயாாகொ லாஙகேயோா
வல்லவன றைஇய பாவைகொ ன்லலா [னல்
ருறுபபெலலாங கொண்டியறறி யாளகொல் வெறுப்பி
வேண்டுருவங கொண்டதோா கூற்றங்கொ லாண்டார்
கடிதிவளைக காவார் விடுதல கொடியியற்

பலகலைச் சில்பூங் கலிங்கத்த ளீங்கிதோர்
நல்கூர்ந்தார் செல்வ மகள்,
இவளைச், சொல்லாடிக் காண்பென் றகைத்து,
நல்லாயே கேள்,
ஆய்தூவி யனமென வணிமயிற் பெடையெனத்
தூதுணம் புறவெனத் துதைந்தநின் னெழினலம்
மாதர்கொண் மானோக்கின் மடநல்லாய் நிற்கண்டார்ப்
பேதுறூஉ மென்பதை யறிதியோ வறியாயோ,
நுணங்கமைத் திரளென நுண்ணிழை யணையென
முழங்குநீர்ப் புணையென வமைந்தநின் றடமென்றோள்
வணங்கிறை வாலெயிற் றந்நல்லாய் நிற்கண்டார்க்
கணங்காகு மென்பதை யறிதியோ வறியாயோ,
முதிர்கோங்கின் முகையென முகடுசெய் குரும்பையெனப்
பெயறுளி முகிழெனப் பெருத்தநின் னிளமுலை
மயிர்வார்ந்த வரிமுன்கை மடநல்லாய் நிற்கண்டா
ருயிர்வாங்கு மென்பதை யுணர்தியோ வுணராயோ,
எனவாங்கு,
பேதுற்றாய் போலப் பிறரெவ்வ நீயறியாய்
யாதொன்றும் வாய்வாளா திறந்தீவாய் கேளினி
நீயுந் தவறிலை நின்னைப் புறங்கடைப்
போதர விட்ட நுமருந் தவறிலர்
நிறையழி கொல்யானை நீர்க்குவிட் டாங்குப்
பறையறைந் தல்லது செல்லற்க வென்னா
விறையே தவறுடை யான்' (கலி. குறிஞ். ௨௦)

எனவரும். (௫௩)

௫௪ ஏறிய மடற்றிற மிளமை தீர்திறந்
தேறுத லொழிந்த காமத்து மிகுதிற
மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே

இது பெருந்திணையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — ஏறிய மடற்றிறமும், இளமை தீர்திறமும், தேறுத லொழிந்த காமத்து மிகுதிறமும்,

மிக்க காமத்து மாறாகிய * திறனொடு கூட்டிச் சொல்லப்பட்ட நான்கு திறமும் பெருந்திணைக் குறிப்பு ஆம் என்றவாறு.

கைக்கிளை புணராது நிகழும் என்றமையால், இது புணர்ந்தபின் நிகழும் என்று கொள்க. ஏறிய மடற்றிறம் தலைமகற்கே உரித்து. அது வருமாறு:

'எழின்மருப் பெழில்வேழ மிகுதரு கடாத்தாற்
றொழின்மாறித் தலைவைத்த தோட்டிகை நிமிர்ந்தாங்
கறிவுநம் மறிவாய்ந்த வடக்கமு நாணொடு
வறிதாகப் பிறரென்னை நகுபவு நகுபுடன்
மின்னவிர் நுடங்கிணர் கனவும்போன் மெய்காட்டி
யென்னெஞ்ச மென்னொடு நில்லாமை நனிவௌவித்
தன்னலங் கரந்தாளைத் தலைப்படுமா றெவன்கொலோ
மணிப்பீலி சூட்டிய நூலொடு மற்றை
யணிப்பூளை யாவிரை யெருக்கொடு பிணித்தியாத்து
மல்லலூர் மறுகின்க ணிவட்பாடு மிஃதொத்த
னெல்லீருங் கேட்டீ மினென்று,
படரும் பனையீன்ற மாவுஞ் சுடரிழை
நல்கியா ணல்கி யவை,
பொறையென வரைத்தன்றிப் பூநுத லீத்த
நிறையழி காமநோய் நீந்தி யறையுற்ற
வுப்பியல் பாவை யுறையுற் றதுபோல
வுக்கு விடுமென் னுயிர்,
பூளை பொலமல ராவிரை வேயென்ற
தோளா ளெமக்கீத்த பூ,
உரிதென வரைத்தன்றி யொள்ளிழை தந்த
பரிசழி பைதலே யுழ்கி யெரிபரந்த
நெய்யுண மெழுகி னிலையாது பையத்
தேயு மளித்தென் னுயிர்,
இளையாரு மேதி லவரு முளையயா
னுற்ற துசாவுந் துணை,
என்றியான் பாடக் கேட்டு

* 'மாறாகிய காமமும் எனச் சொல்லப்பட்ட' எனவும் பாடம்.

வன்புறு கிளவியா னருளிவந் தளித்தலிற்
றுனபத்திற றுணையாய மடலி னிவட்பெற
வினபத்து ளிடம்படலென றிரங்கின ளன்புற்
றடங்கருந் தோற்றத் தருந்தவ முயன்றோரத்
முடம்பொழித் துயருல கினிதுபெற் றாங்கே.'
(கலி நெய் - உக.)

எனவரும்.

இளமைதீர்திறம் என்பது, இளமை நீங்கிய திறத்தின் கண் நிகழ்வது. அது மூவகைப்படும், தலைமகன் முதிய னாகித் தலைமகள் இளையளாதலும், தலைமகள் முதியளாகித் தலைமகன் இளையனாதலும், இவ்விருவரும் இளமைப் பருவம் நீங்கியவழி அறத்தின்மேல் மனம் நிகழ்த்தலன்றிக் காமத்தின்மேல் மனநிகழ்த்தலும் என.

உதாரணம்

'உளைத்தவா கூறு முரையெல்லா நிற்க
முளைத்த முறுவலார்க் கெல்லாம் — விளைத்த
பழங்க ளனைத்தாயப் படுகளி செய்யு
முழங்கு புனலூரன் மூப்பு.'
(வெண்பா. இருபாற்பெரு - கஅ.)

எனவரும்

இதனுள் தலைமகன் இளமை தீர்திறம் வந்தவாறு காண்க

'அரும்பிறங்கு முண்டோ வலரது நாற்றம்
பெருந்தோள் விறலி பிணங்கல — சுரும்போ
டிரும் புனலூரற் காரமிர்த மன்றோ
முதிரு முலையார் முயக்கு.'
(வெண்பா. இருபாற்பெரு - கூ.)

இதனுள் தலைமகள் இளமை தீர்திறம் வந்தவாறு காண்க.

ஆண்டலைக் கீன்ற பறழ்மகனே நீயெம்மை
வேண்டுவ லென்று விலக்கினை நின்போலவாம்
தீண்டப் பெறுபவோ மற்று.' (கலி. மரு - உக)

எனவும்,

'உக்கத்து மேலு நடுவுயர்ந்து வாள்வாய்
கொக்குரித் தன்ன கொடுமடாய் நின்னையான்
புக்கக் கலம் புல்லினென்று குன்றும் புறம்புல்லி
னக்குளுத்துப் புல்லலு மாற்றே னருளீமோ
பக்கத்துப் புல்லச் சிறிது'   (கலி மரு - உக)

எனவும்,

முறையே தலைமகன் தலைமகள் ஆவார் இருவர் இளமை தீர்திறம் வந்தவாறு காண்க.

தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம் ஆவது, தெளிவு ஒழிந்த காமத்தின்கண்ணே மிகும் திறன், இது பெரும்பான்மையும் தலைமகட்கே உரித்து.

உதாரணம்

'புரிவுண்ட புணர்ச்சியுட் புல்லாரா மாத்திரை
யருகுவித் தொருவரை யகற்றலிற் றெரிவார்கட்
செயநின்ற பண்ணினுட் செவிசுவை கொள்ளாது
நயநின்ற பொருள்கெடப் புரியறு நரம்பினும்
பயனின்று மன்றம்ம காம மிவண்மன்னு
மொண்ணுத லாயத்தா ரோராங்குத் திளைப்பினு
முண்ணுனை தோன்றாமை முறுவல்கொண் டடக்கித்தன்
கண்ணினு முகத்தினு நகுபவள் பெண்ணன்றி
யாவருந் தண்குரல் கேட்ப நிறைவெண்பன்
மீயுயர் தோன்ற நகாஅ நக்காங்கே
பூவுயிர்த் தன்ன புகழ்சா லெழிலுண்க
ணாயிதழ் மல்க வழும்,
ஓஓ! அழிதகப் பாராதே யல்லல் குறுகினங்
காணாங் கனங்குழை பண்பு,
என்று,
எல்லீரு மென்செய்தீ ரென்னை நகுதிரோ
நல்ல நகாஅலிர் மன்கொலோ யானுற்ற
வல்ல லுறீஇயான் மாய மலர்மார்பு
புலவிப் புணர்ப் பெறின்,
எல்லாநீ,

உறற செயலேளுமற றெனறிரோ லெறசிதை
செயதா னிவனென வுறற திதுவென
வெயத வுரைககு முனகத துணடாயிற
பைதல வாகிப் பசககுவ மனனேவென
னெயதன மலரனன கண,
கோடுவாய கூடாப பிறையைப பிறிதொனறு
நாடுவேன கணடனென சிறறிலுட கணடாஙகே
யாடையான மூஉ யகபபடுபபேன சூடிய
காணனை நிரிதருந கொலலோ மணிமிடறறு
மாணமலாக கொனறை யவன,
தெள்ளியே மெனறுரைததுத தேரா தொருநிலையே
வளளியை யாமகன றொளைச வலியுறீஇ
யுளளி வருகுவர கொலலோ வளைாதியா
னௌளி யிருககுவென மறகொலோ நளளிருண
மாநதா கடிகொணட கஙகுற கனவிற்ற
றேனறின ளகத தொடுததேனமன * யானறனைஇப
பையெனக காணகு விழிபபயான பறறிய
கையுளே மாயநதான கரநது,
கதிரபகா ஞாயிறே கலசோதி யாயி
னவவை நினைததுத நிறுததெனகை நீடடித
தருகுவை யாயிற றவிருமென னெஞசத
துயிரதிரியா மாட்டிய தீ,
மையில சுடரோ மலைசசாதி யாயிற
பௌவநீாத தோனறிப பகலசெயயு மாததிரை
கைவிளக காகக கதிரசில தாராயென
றெயயில சிதைததானைத தேரகு,
சிதைததானைச செயவ தெவனகொலோ வெமமை
நயநது நலஞசிதைதத தான,
மனறப பணைமேன மலைமாந தளிரேநீ
தொனறிவ வுலகததுக கேடடு மறிதியோ
மெனறோண ளெகிழததான றகையலலால யானகாணே
னனறுதீ தெனறு பிற,
நோயெரி யாகச சுடினுஞ சுழறறியென
னுயிர முளளே கரபபன கரநதாஙகே

* 'யானறனை' எனவும பாடம.

நோயுறு வெந்நீர் தெளிப்பிற் றலைக்கொண்டு
வேவ தளித்திவ் வுலகு,
மெலியப் பொறுத்தேன் களைந்தீமின் சான்றீர்
நலிதருங் காமமுங் கௌவையு மென்றிவ்
வலிதி னுயிர்காவாத் தூங்கியாங் கென்னை
நலியும் விழுமம் இரண்டு,
எனப்பாடி,
இனைந்துநொந் தழுதன ணினைந்துநீ டுயிர்த்தன
ளெல்லையு மிரவுங் கழிந்தனென் றெண்ணி யெல்லிரா
நல்கிய கேள்வ னிவன்மன்ற மெல்ல
மணியுட் பரந்த நீர்போலத் துணிபாங்
கலஞ்சிதை யில்லத்துக் காழ்கொண்டு தேற்றக்
கலங்கிய நீர்போற் றெளிந்து நலம்பெற்றா
ணல்லெழின் மார்பனைச் சார்ந்து' (கலி நெய் ௨௫)

எனவரும்.

மிக்க காமத்து மிடலாவது, ஐந்திணைக்கண் நிகழும் காமத்தின் மாறுபட்டு வருவது, அதற்குரிய கிளவியாவன வறப்புறுத்தாந் துணைபின்றிச் செலவழுங்குதலும், ஆற்றருமை கூறுதலும், மதிரழிந்து கூறுதலும், இடையூறு கிளத்தலும், அஞ்சிக் கூறுதலும், மனைவி விடுத்தலிற் பிறள்வயின் சேரலும், இன்னோரன்ன ஆண்பாற் கிளவியும், முன்னுறச் செப்பலும், பின்னிலை முயறலும், *கணவனுள்வழி இரவுத்தலைச் சேறலும், பருவமயங்கலும், இன்னோரன்ன பெண்பாற் கிளவியும், குறிப்பிசையும், குறுங்கலியும், இன்னோரன்ன பிறவும் ஆகி ஒத்த அன்பின் மாறுபட்டு வருவன அவை யெல்லாங் கொள்ளப்படும்.

உதாரணம்

'நடுங்கி நறுநுதலா ளன்னலம்பீர் பூப்ப
வொடுங்கி யுயங்க லொழியக் — கடுங்கணை
வில்லேர் ருழவா விடரோங்கு மாமலைச்
செல்லேல் மொழிக செலவு' (வெண்பா இருபாற்பெரு-க)

எனவரும். இது செலவழுங்கல்

* 'கணவனுள்ளி இரவுத்தலைச் சேறல்' எனவும் பிரதிபேதம்.

'பணையா யறைமுழங்கும் பாயருவி நாடன்
பிணையார் மார்பம் பிணையத் — துணையாயக்
கழிகாம முய்ப்பக் கனையிருட்கட் செல்கேன்
வழிகாண மின்னுக வான்' (வெண்பா பெருந்தி - சு.)

இஃது இரவுத்தலைச் சேறல்

'பெரும்பணை மென்றோள் பிரிந்தார்கொல் முள்ளி
வரும்பருவ மன்றுகொ லாங்கொல் — சுரும்பிற்கும்
பூமலி கொன்றை புறவெலாம் பொன்மலரு
மாமயிலு மாலு மலை (வெண்பா இருபாற்பெருந்திணை-சு)

இது பருவமயங்கல்

'கரிய பெருந்தடங்கண் வெள்ளளைக்கை யாளை
மரியா கழிகேண்மை மைந்த — தெரியின்
விரிந்தார் கொழியினும் விடலாகாத் தன்மைத்
தெளிந்தார்கண் தீராத் தீது'
(வெண்பா இருபாற்பெருந்திணை - எ)

இது குற்றிசை பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க

மெய்ப்பாட்டியலுள் —

'இன்பத்தை வெறுத்தல் (மெய்ப்பாட் - உஉ)

முதலாக நிகழ்பவை பொருளாக வரு கிளவியும் இதன் பகுதியாகக் கொள்க (ருச)

ருரு. முன்னைய நான்கு முன்னதற் கென்ப.

இது கைக்கிளைக்கு உரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று

இதன் பொருள் — முன்னைய நான்கும் — மேற்சொல்லப்பட்ட நான்கினும் முந்துற்ற நிலைமை நான்கும் என்றவாறு

அவையாவன ஏறிய மடற்றிறம், இளமை தீராத் திறம், தேறுதலொழிந்த காமத்து மிகாத்திறம், மிக்க காமத்தின் மாறுகாத் திறம் என்பன.

முன்னதற்கு என்ப என்றது — இவை முற்கூறப்பட்ட கைக்கிளைக்காம் என்ப என்றவாறு.

ஏறுமடற்றிறம் — வெளிப்பட இரத்தலாம்.

இளமை தீராத்திறம் — நலம் பாராட்டலாம்.

தேறுதலொழிந்த காமத்து மிகாத்திறம் — புணரா விரக்கமாம்.

மிக்க காமத்தின் மாறுகாத்திறம் — நயப்புற்று இரங்கலாம்.

இவை ஒருவாற்றான் உணர்த்தியவாறு.

'கைக்கிளை * செந்திறம் பெருந்திணை † நொந்திற
மந்திற [illegible] பக்கத்திணை பயங்கா
நத்திணை யானே யாத்தனர் புலவர்'

என்றதனானே கைக்கிளை இன்பம் பயப்பதாகும் என்பதும், பெருந்திணை துன்பம் பயப்பவரும் என்பதும் அறிந்துகொள்க. (௫௫)

௫௬. நாடக வழக்கினு முலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கங்
கலியே பரிபாட் டாயிரு பாவினு
முரிய தாகு மென்மனார் புலவர்.

இஃது அகத்திணைக்கு இன்றியமையாத செய்யுள் வரையறுத்து உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — நாடக வழக்காவது — சுவைபட வருவனவெல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக

* 'சேர்திறம்'
† 'நோதிறம்' எனவும் பாடம்.

கூறுதல்; அஃதாவது செல்வத்தானும், குலத்தானும், ஒழுக்கத்தானும், அன்பினானும் ஒத்தார் இருவராய்த் தமரின் நீங்கித் தனியிடத்து எதிர்ப்பட்டார் எனவும், அவ்வழிக் கொடுப்போரும் அடுப்போரும் இன்றி வேட்கை மிகுதியாற் புணர்ந்தார் எனவும், பின்னும் அவர்கள் களவொழுக்கம் நடத்தி இலக்கணவகையான் வரைந்தெய்தினார் எனவும், பிறவும் இந்நிகரனவாகிச் சுவைபட வருவனவெல்லாம் ஒருங்கு வந்தனவாகக் கூறுதல்.

உலகியல் வழக்காவது — உலகத்தார் ஒழுகலாற்றோடு ஒத்து வருவது.

* பாடல் சான்ற புலனெறி வழக்கம் என்றது — மேற் கூறிய இருவகை வழக்கானும் பாடுதல் சான்ற 'கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்'க் கூறப்பட்ட அகப்பொருள் என்றவாறு.

கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும் உரியது ஆகும் என்மனார் புலவர் என்றது — கலியும் பரிபாடலும் என்னும் இரண்டு பாவினும் உரிமையுடைத்தாம் என்று உரைப்பர் புலவர் என்றவாறு. எனவே, இன்றியமையாது என்றவாறு. ஒழிந்த பாக்கள் இத்திணை, அகப்பொருட்கு உரியவாய் வருதலன்றிப் புறப்பொருட்கும் உரியவாய் வருதலின் ஒத்தாராயினார். புறப்பொருள் உலகியலொனன்றி வாராமையின் அது நாடக வழக்கு அன்றாயிற்று.

௫௭. மக்க ணுதலிய வகனைந் திணையுஞ்
சுட்டி யொருவர்ப் பெயர்கொளப் பெறாஅ

இது நடுவணைந்திணைக்கு உரியதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — மக்கள் நுதலிய அகன் ஐந்திணை **யாவது** — அகத்திணையுள் கைக்கிளை பெருந்திணை ஒழிந்த

* 'இவை இருவகையானும் பாடல்சான்ற' எனவும் பாடம்.

ஐந்திற்கும் உரியவாகிய நிலமும் காலமும் கருப்பொருளும் அன்றி மக்களைப்பற்றி வரும் புணர்தலும், பிரிதலும், இருத்தலும், இரங்கலும், ஊடலும் என்று சொல்லப்பட்ட பொருண்மை என்றவாறு.

சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறார் என்பது — அவ்வைந்திணைக்கண்ணும் தலைமக்களுக்குப் புலனெறி வழக்கு செய்யவேண்டின், நாடன் ஊரன் சேர்ப்பன் என்னும் பொதுப் பெயரானன்றி ஒருவர்க்கு உரித்தாகி வரும் பெயர் கொள்ளப் பெறார் என்றவாறு. (ருஎ)

ருஅ. புறத்திணை மருங்கிற் பொருந்தி னல்ல தகத்திணை மருங்கி னளவுத லிலவே.

இஃது எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

இதன் பொருள் — ஒருவன் பெயர் புறத்திணை மருங்கிற் பொருந்தினல்லது அகத்திணை மருங்கின் வருதல் இல்லை என்றவாறு.

இதனாற் சொல்லியது ஒருவற்கு உரித்தாகி வரும் பெயர் அகத்திணை பற்றிவரும் கைக்கிளை, பெருந்திணையினும் வரப்பெறாது என்பதூஉம், புறத்திணையுள் வரும் என்பதூஉம், ஆண்டும் பாடாண்பாட்டின் காமம் பொருளாக வரின் அவ்வழி வரூஉம் என்பதும் கூறியவாறு. இதனானே அகப்பொருள் ஒருவரைச் சாராது பொதுப்பட வரும் என்பது கொள்க. (ருஅ)

முதலாவது **அகத்திணையியல் உரை** முற்றிற்று.



இரண்டாவது

புறத்திணையியல்

---

௫௯. அகத்திணை மருங்கி னரிறப வுணர்ந்தோர
புறத்திணை யிலக்கணந் திறபபடக கிளப்பின்
வெட்சி தானே குறிஞ்சியது புறனே
யுட்குவரத் தோன்று மீரேழ் துறைததே.

என்பது சூததிரம

இவவோததது என்ன பெயாததோவெனின், புறத திணையியல எனனும பெயாதது புறபபொருள உணாத துதலாற பெறற பெயா

அஃது யாஙஙனம உணாததினுரோவெனின, மேல அகததிணையாகிய எழுதிணையுஞ சாறறி, அவறறின புறதது நிகழவன எழுதிணை உணாததினா எனறு கொளக அவை, மலையாகிய குறிஞசிததிணைப புறம நிரைகோடல நிரை மீடடல எனனும வேறுபாடு குறிதது வெட்சி எனவும கரநதை எனவும இரணடு குறிபெறுதலும, காடுறை யுலகாகிய முலலைப புறம மணணாசை வேடகை யால எடுததுச செலவுபுரிநத வேநதனமேல அடல குறித துச செலவு புரிதலான அவவிரு பெரு வேநதரும ஒரு வினையாகிய செலவு புரிதலின அது வஞசி என ஒரு குறி பெறுதலும, புனலுலகாகிய மருததுப புறம எயில அழிததலும எயில காததலும என்னும வேறுபாடு குறிதது உழிஞை எனவும நொசசி எனவும இரண்டு குறி

பெறுதலும், மண்ணுலகாகிய நெய்தற்புறம் இருபெரு வேந்தரும் பொருதலாகிய ஒரு தொழிலே புரிதலால் தும்பை என ஒரு குறி பெறுதலும், நடுநிலைத்திணையாகிய பாலைப்புறம் வேந்தரே யாயினும் ஏனையோரா யினும் தமது மிகுதியாகிய வெற்றியைக் குறித்தலால் அது வாகை என ஒரு குறி பெறுதலும், பெருந்திணைப்புறமாகிய காஞ்சி நிலையாமையாகிய நோன்றிறப் பொருளே குறித்து வருதலின் காஞ்சி என ஒரு குறி பெறுதலும், கைக்கிளைப் புறமாகிய பாடாண்பகுதி செந்திற மாகிய ஒரு பொருளே குறித்து வருதலாற் பாடாண்டிணை என ஒரு குறி பெறுதலும் உணர்த்தியவாறு கண்டு கொள்க.

மேலை ஓத்தினுள்,

'புறத்திணை மருங்கிற் பொருந்தின்' (அகத்தி - ருஅ)

என்றமையான், உலகியலோடு ஒத்துவருங் காமம் பொருளாகப் பாடாண் பாட்டின்கண் இன்பம் இயற்பெயர் சார்த்தி வரப்பெறும் என்று கொள்க.

'அன்ற சிறப்பி னறம்பொரு ளின்பமென
மூன்றுவகை நுதலிய துலக மவற்று
ளறனு மின்பமு மகலா தாகிய
புறனெனப் படுவது பொருள்குறித் தன்றே'

எனும் பன்னிருபடலச் செய்யுளுள் புறப்பொருள், 'அறனும் இன்பமும் அகலா தாகி' எனக் கூறினார் அவ்வாறு கூறி வாளைத் திணைக்கண், 'கட்டினீத்தபால்' முத லாகக் 'காமநீத்தபால்' ஈறாக அறமே கூறுதலின் அச் சாரபாகக் கூறியது மயங்கக் கூறலாம்.

'ஆங்ஙன் முறைப்பி னவற்றது வகையாற்
பாங்குறக் கிளந்தன ரெனப வவைதாம்
வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி

யுட்குவரு சிறப்பி னுழிஞை நொச்சி
முரணமர்க்கு சிறப்பிற் றும்பையுள் ளிட்ட
மறனுடை மரபின வேழே யேனை
யமர்கொள் மரபின் வாகையுஞ் சிறந்த
பாடாண் பாட்டொடு பொதுவிய லென்ப'

(பன்னிருபடலம்)

எனவும்,

'கைக்கிளை யேனைப் பெருந்திணை யென்றாங்
கத்திணை யிரண்டு மகத்திணைப் புறனே' (பன்னிருபடலம்)

எனவும் புறப்பொருள் பன்னிரண்டு எனத் தொகுத்துக் கூறில், அகமும் பன்னிரண்டாகி மாறுபடாது வருதல் வேண்டும், அகத்திணை ஏழாகிய புறத்திணை பன்னிரண்டாகில்,

'மொழிந்த பொருளொ டொன்றவைத்தல்.'
(மரபியல் - ககo)

என்னுந் தந்திரவுத்திக்கும் பொருந்தாதாகி,

'மிகைபடக் கூறல்' (மரபியல் - கoஅ)
'தன்னோ டொருபொருள் கருதிக் கூறல்' (மரபியல்-கoஅ)

எனனுங் குற்றமும் பயக்கும் எனக. அன்றியும் பெருந் திணைப் புறமாகிய காஞ்சி நிலையாமையாதலானும், பொது வியல் என்பது,

'பல்லமர் செய்து படையுட் படையிய
நல்லாண் மக்க ளெல்லாரும் பெறுதலிற்
றிறப்பட மொழிந்த [illegible]
முதற்பட வெண்ணிய பெருந்திணைக்கு முரித்தே'
(பன்னிருபடலம்)

எனத் தாமே கூறுதலானும் காஞ்சியின் புறத்திற்கு முதலாகிய வெட்சியில் எடுத்தோதாததனையுங் கூற்றமையானும், கைக்கிளையும் பெருந்திணையும் புறமே என்றாராயின் அகத் திணை எழ் என்னாது ஐந்து என்றே வேண்டுமாதலானும், பிரமம் முதலாகச் சொல்லப்பட்ட மணம் எட்டனுள்ளும்

யாமேழார் கூட்டமாகிய மணத்தைத் தொழிந்து ஏனைய ஏழும் புறப்பொருளாதல் வேண்டுமாதலானும், முன்னை வன நாலிற்கும் கலி முதலாகிய சான்றோர் செய்யுட்கும் உயர்ந்தோர் வழக்கிற்கும் பொருந்தாது எனக.

அஃதற்றாக, இத்தலைச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின் வெட்சித்திணைக்கு இடமும் துறையும் வரை யறுத்து உணர்த்துதல் நுதலிற்று.

இதனுள் திணையும் துறையும் என்றமையால் புறப் பொருள் என்று கொள்க.

இதன் பொருள் — அகத்திணை மருங்கின் அரில் தப உணர்ந்தோர் புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின் — அகத்திணையிடத்து மயக்கங்கெட உணர்ந்தோர் புறத்திணை இலக்கணத்தை வகைப்படக் கூறின், வெட்சி தானே குறிஞ்சியது புறனே — வெட்சி என்னுந் திணை குறிஞ்சித் திணைக்குப் புறனாம்.

அகத்திணை மருங்கின் மயக்கங்கெட உணர்தலாவது மேலோதிய இலக்கணத்தின் மயக்கங்கெட உணர்தல். வெட்சி குறிஞ்சித் திணைக்குப் புறனாயவாறென்னை, நிரைகோடல் குறிஞ்சிக்குரிய மலைசார்ந்த நிலத்தின்கண் நிகழ்தலானும், அந்நிலத்தின் மக்களாயினார் பிற நாட்டு ஆனிரையைக் களவிற்கோடல் ஒரு புடை குறிஞ்சிக்கு உரித்தாகிய களவொடு ஒத்தலானும் எனக் சூடும் பூவும் அந் நிலத்திற்குரிய பூவாதலானும் அதற்கு அது புறமாம்.

உட்கு வரத் தோன்றும் ஈரேழ் துறைத்தே — அவ் வெட்சித்துறை உட்குவரத் தோன்றும் பதினான்கு துறையை உடைத்து என்றவாறு.

துறை பதினான்கும் வருகின்ற சூத்திரத்துள் காட்டுதும். (௧)

கூ௰. வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவி
னாதந் தோம்பன் மேவற் றாகும்.

இது வெட்சித்திணை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — வேந்துவிடு முனைஞர் வேற்றுப் புலம் களவின் ஆதந்து ஓம்பல் மேவற்று ஆகும் என்றது — வேந்தனால் விடப்பட்ட முனைப்புறத்துள்ளார் வேற்று நாட்டினகண் களவினான் ஆனிரை கொண்டு பெயர்ந்து பாதுகாத்தும் மேவலையுடைத்து என்றவாறு.

ஓம்புதலாவது பிறாமற் காத்தல். புறப்பொருட் பாகுபாடாகிய பொருளினும் அறத்தினும் பொருள் ஈட்டுதற்கு உரிய நால்வகை வருணத்தாரினுஞ் சிறப்புடையார் அரசர்களாதலானும், அவர்க்கு மாற்றரசர்பால் திறை கொண்ட பொருள் மிகவும் சிறந்ததாகலானும், அப்பொருள் எய்துங்கால் அறமுறைப் போரின் வென்றுகோடல் வேண்டுதலானும், போர்க்கு முந்துற நிரைகோடல் சிறந்ததாகலானும், இப்பொருள் முற் கூறப்பட்டது.

பன்னிருபடலத்தார்

'தன்னுறு தொழிலே வேந்துறு தொழிலென்
றன்னவிரு வகைத்தே வெட்சி'

என இரண்டு கூறுபடக் கூறினார் ஆயினும், முன்வருகின்ற வஞ்சி, உழிஞை, தும்பை முதலாயின எடுத்துச் செலவு, *எயிலழித்தல், போர்செய்தல் என்பன அரசர்மேல் இயன்று வருதலின் 'வேந்துறு தொழில்' ஒழித்துத் 'தன்னுறு தொழில்' எனத் தன்னாட்டும் பிறர் நாட்டும் களவின் ஆநிரை கோடலின் இவர் அரசர்க்கு ஆணையை நீங்கினார் ஆவர். ஆதலால், அவர் அவ்வாறு கூறல் மிகைபடக் கூறலாம். அதனால் பன்னிருபடலத்துள் வெட்சிப்படலம் தொல்காப்பியர் கூறினார் என்றல் பொருந்தாது என்னை?

* 'எயில் காத்தல்' எனவும் பாடம்.

'ஒத்த சூத்திர முரைப்பிற் காண்டிகை
மெய்ப்படக் கிளந்த வகைய தாகி
யீரைங் குற்ற முன்றி நேரிதின்
முப்பத் திருவகை யுத்தியொடு புணரி
னூலென மொழிப நுணங்குமொழிப் புலவர்'
(மரபியல் - ௯௮)

எனவும்,

'சிதைவெனப் படுபவை வசையற நாடிற்
கூறியது கூறல் மாறுகொளக் கூறல்
குன்றக் கூறல் மிகைபடக் கூறல்
பொருளில் மொழிதல் மயங்கக் கூறல்
கேட்போர்க் கின்னா யாப்பிற் றாதல்
பழித்த மொழியா னிழுக்கங் கூற
றன்னா னொருபொருள் கருதிக் கூற
லென்ன வகையினு மனங்கோ ளின்மை
யன்ன பிறவு மவற்றுவிரி யெனப' (மரபியல் - ௧௦௮)

எனவும் இவ்வாறு கூறிய ஆசிரியர் தாமே மாறுகொளக் கூறல், குன்றக் கூறல், மிகைபடக் கூறல், பொருளில் மொழிதல், மயங்கக் கூறல், தன்னா னொருபொருள் கருதிக் கூறல் என்னும் குற்றம் பயப்பக் கூறினார் என வருமாகலான். (௨)

௯௧. படையியங் கரவம் பாக்கத்து விரிச்சி
புடைகெடப் போகிய செலவே புடைகெட
வொற்றி னாகிய வேயே வேய்ப்புற
முற்றி னாகிய புறத்திறை முற்றிய
வூர்கொலை யாகோள் பூசன் மாற்றே
நோயின் றுய்த்த லுவல்வழித் தோற்றந்
தந்துநிறை பாதீ டுண்டாட்டுக் கொடையென
வந்த வீரேழ் வகையிற் றாகும்.

இது வெட்சித்திணைக்கு உரிய துறையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — படையியங்கு அரவம் முதலாகக் கொடை ஈறாகச் சொல்லப்பட்ட பதின்மூன்று துறையை உடைத்து வெட்சித்திணை என்றவாறு.

வெட்சி என்பது அதிகாரத்தான் வந்தது. * 'பிள்ளை வழக்கு' † 'புலனறி சிறப்பு' முதலியன அத்திணைச் சிறப்பின் இத்திணைக்கு உரிய துறை இவையே எனல் சுட்டப் பெயர்த்தும் 'ஈரேழ் வகையிற்று' என்றார்.

படை இயங்கு அரவம் என்பது — நிரைகோடல் கருதிய படை எழும் அரவம் என்றவாறு.

உதாரணம்

'நெடிபடு கானத்து நள்ளென் றறய
ரடிபடுத் தார்த்த செல்வானை — முடிபடுத்து
வெட்சி மலைய விரவார் மணிநிரைக்
கட்சியுட் காரி கலுழும்' (வெண்பா. வெட்சி - ௩)

எனவரும்.

பாக்கத்து விரிச்சி என்பது — குறித்த பொருளின் பயன் அறிதற்குப் பாக்கத்துக்கண் நற்சொல் ஆய்தல் என்றவாறு.

உதாரணம்

'எழுவணி சீறூர் இருண்மாலை முன்றிற்
குழுவினங் கைகூப்பி நிற்ப — தொழுவிற்
குடக்கணா கொண்டுவா வென்றாள் குனிவிற்
றடக்கையாய் வென்றி தரும்' (வெண்பா. வெட்சி - ௪)

எனவரும்.

* பிள்ளைவழக்கு — 'பொய்யாது புண்மொழித் தார்க்கு
வையாது வழக்குரைத் தன்று'
(வெண்பா. வெட்சி - ௧௮)

† புலனறிசிறப்பு — 'வெம்முனை நிலை யுணர்த்தி யோர்க்குத்
தம்மினுமிகச் சிறப்பீந்தன்று'
(வெண்பா. வெட்சி - ௧௭)

புடைகெடப் போகிய செலவு என்பது — பக்கங் கெடப் போகிய செலவு என்றவாறு.

பக்கங் கெடுத்தலாவது, மாற்றரசர் பக்கத்தாராகித் தம்மோடு ஒற்றொடு நிற்பார் அறியாமற் போதல். பக்கத்திலுள்ளாரைப் பக்கம் என்றது ஆகுபெயரான்.

உதாரணம்

'கூற்றினத் தன்னார் கொதிப்பின் விடலைநீ
பாற்றினம் பின்படர முன்படர்க — மேற்றினம்
நின்ற நிலைகருதி யேகின்றார் நீள்கழைய
குன்றங் கொடுவில் லவர்' (வெண்பா. வெட்சி - ௫)

எனவரும்.

புடைகெட ஒற்றின் ஆகிய வேயே என்பது — மாற்றரசர் பக்கத்துள்ளார் அறியாதவகை ஒற்றியதனான் ஆகிய ஒற்றுச் சொல்லும் என்றவாறு.

'ஒற்று' என்பது எவ்விடத்தும் வேண்டுமாயினும், ஆதிவிளக்காக இவ்வேவாத்தின் முற்கண் வைத்தார் என்று கொள்க.

உதாரணம்

'நிலையு நிறையு நினைப்புறத்து நின்ற
சிலையுஞ் செருமுனையுள் வைகி — யிலைபுனைந்த
கள்ளவிழ் கண்ணிக் கழலவெய்யோய் சென்றறிந்து
நள்ளிருட்கண் வந்தார் நமர்' (வெண்பா. வெட்சி - ௬)

எனவரும்.

வேய்ப்புறம் முற்றின் ஆகிய புறத்து இறை என்பது — அவ்வாறு வேயக்கப்பட்ட இடத்தின் புறத்தினைச் சூழ்தலான் ஆகிய புறத்திருக்கையும் என்றவாறு.

'வேய' என்பது அவ்விடத்தின்மேல் ஆகுபெயராய் 'வேய்' என நின்றது.

உதாரணம்

'உய்ந்தொழிவா ரீங்கில்லை யூழிக்கட் டீயேபோன்
முந்தமரு ளேற்றார் முரண்முருங்கத் — தந்தமரி
னொற்றினா னுய்ந்தாய்த் துறுவலி யோரரணஞ்
சுற்றினார் போகாமற் சூழ்ந்து' (வெண்பா வெட்சி - ௭)

எனவரும்

முற்றிய ஊர்கொலை என்பது — அவ்வாறு சூழப்பட்ட ஊரை அழித்தல் என்றவாறு

உதாரணம்

'இகலே துணையா வெரிதவழச் சீறிப்
புகலே யரிதென்னார் புக்குப் — பகலே
தொலைவிலார் வீழத் தொடுகழ லார்ப்பக்
கொலைவிலார் கொண்டார் குறும்பு'
(வெண்பா வெட்சி - ௮)

எனவரும்

ஆகோள் என்பது — ஆண்டு உளதாகிய நிரையைக் கோடல் என்றவாறு

உதாரணம்

'கொடுவரி கூடிக் குழூஉக்கொண் டனைத்தா
னெடுவரை நீள்வேய ராலும் — நடுவூர்க்
கணநிரை கைக்கொண்டு கையகலார் நின்ற
நிணநிரை வேலார் நிலை' (வெண்பா வெட்சி - ௯)

எனவரும்

பூசல் மாற்று என்பது — அவ்வாறு கொண்ட நிரையை மீட்டற்கு வந்தார் பொரும் பூசல் மாற்றிப் பெயர்தல் என்றவாறு

உதாரணம்

'சூழ்ந்த நிரைபெயரச் சுற்றித் தலைக்கொண்டார்
வீழ்ந்தனர் வீழ்ந்தார் விடக்குண்ணியத் — தாழ்ந்த
குலவுக் கொடுஞ்சிலைக்கைக் கூற்றனையார் செய்த
புலவுக் கணைவழிபோயப் புள்' (வெண்பா. வெட்சி - ௧௦)

எனவரும்

நோயின்றுஉய்த்தல் என்பது — அவ்வாறு கொண்ட நிரையை வருந்தாமல் உய்த்தல் என்றவாறு.

உதாரணம்

'செருப்பிடைச் சிறுபரல் அன்னன் கணைக்கால்
அவ்வயிற் றகன்ற மார்பிற் பைங்கண்
குச்சி னிரைத்த குரூஉமயிர் மோவாய்
செவியிறந்து தாழ்தருங் கவுளன் வில்லோ
டியாரோ வென்றலையின் யானை தேரின்
னூர்பெரி திகந்தன்று மிலனே யரணெனக்
காடுகைக் கொண்டன்று மிலனே காலைப்
புல்லா ரினநிரை செலப்புற நோக்கிக்
கையிற் சுட்டிப் பையென வெண்ணிச்
சிலையின் மாற்றி யோனே யவைதாம்
மிகப்பல வாயினு மென்னா மெனைத்தும்
வெண்கோ டோன்றுக் குழிசியொடு
நாளுறை மத்தொலி கேளா தோனே' (புறம் - உ௫௭)

எனவரும்.

நுவல்வழித் தோற்றம் என்பது — தமர் * நுவன்ற வழித் தோன்றுதல் என்றவாறு.

'நறவுந் தொடுமின் விடையும் வீழ்மின்
பாசுவல் இட்ட புன்காற் பந்தர்ப்
புனறரு மிளமண னிறையப் பெய்ம்மின்
ஒன்னார் முன்னிலை முருக்கிப் பின்னின்று
நிரையொடு வரூஉ மென்னைக்
குழையோர் தன்னினும் பெருஞ்சா யலரே'
(புறம் - உ௬௨)

எனவரும்.

தந்துநிறை என்பது — கொள்ளப்பட்ட நிரையைத் தம் ஊரகத்துக் கொணர்ந்து நிறுத்தல் என்றவாறு.

* 'நுவன்றுழி' எனவும் 'கவன்றுழி' எனவும் பாடம்.

உதாரணம் :

'தண்டா விருப்பின னென்னை தலைமலைந்த
வண்டார் கமழ்கண்ணி வாழ்கென்று — கண்டார்
ளணிநிரை வாண்முகத்து லமமா வெயிற்றி
மணிநிரை மலகிய மன்று' (வெண்பா வெட்சி - கங)

எனவரும்

பாதீடு என்பது — அந்நிரையைக் கூறிடுதல் என்ற வாறு.

உதாரணம்

'ஔவாண மலைந்தார்க்கு மொற்றுயந் துரைத்தார்க்கும்
புள்வாய்ப்பச் சொன்ன புலவர்க்கும் — விள்வாரை
மாறட்ட வென்றி மறவர்தஞ் சீறூரிற்
கூறிட்டார் கொண்ட நிரை' (வெண்பா வெட்சி - கச)

எனவரும்.

உண்டாட்டு என்பது — நிரைப்பகுத்த மறவர் களிப் பினால் அயரும் விளையாட்டு என்றவாறு

உதாரணம்

'இளிகொண்ட தீஞ்சொ லிளமா வெயிற்றி
களிகொண்ட நோக்கங் கவற்றத் — தெளிகொண்ட
வெங்கண் மலிய விளிவதுகொல் வேற்றார்மேற்
செங்கண் மறவர் சினம்' (வெண்பா வெட்சி - கரு)

எனவரும்

கொடை என்பது — பகுத்த நிரையை வேண்டி இரப்பார்க்குக் கொடுத்தல் என்றவாறு

உதாரணம்

'இளமா வெயிற்றி யிவைகாணின் னையர்
தலைநாளை வேட்டத்துத் தந்த நிரைகள்
கொல்லன் றுடியன் கொளைபுணர்சீர் வல்ல
நல்லியாழ்ப் பாணர்தம் முன்றி னிறைந்தன.'

'முருநதே ரிளநகை காணுயநின் னையா
கரநதை யலறக கவாநத நிரைகள
களவிலே யாட்டிநல வேயதெரி கானவன
புளவாயப்புச சொனனகணி முனறி னிரைநதன.'

'கயமல ருணகணுய காணுயநின் னைய
ரயலூ ரலற வெறிநதநல லானிரைக
ணயனின மொழியி னரைமுது தாடி
யெயின ரெயிறறியா முனறி னிறைநதன'
(சிலப வேட்டுவவரி)

எனவரும

(௩)

௬௨. மறங்கடை கூட்டிய குடிநிலை சிறந்த
கொற்றவை நிலையு மதிணைப் புறனே.

இதுவும அது

இதன் பொருள — குடிபினது நிலைமையைக கூறலும கொறறவையது நிலைமையைக கூறலும குறிஞசித்திணைப புறனகிய வெடசிததிணையாம என்றவாறு

மறம கடைகூடடிய குடிநிலை என்பது — மறத் தொழின முடிததலை யுடைய குடியினது நிலைமையைக் கூறல் எனறவாறு

'குடிநிலை' எனறதனுன மைநதாககும மகளிாக்கும பொதுவாதல அறிக

உதாரணம

'யானை தாக்கினு மரவுமேற செலினு
நீனிற விசுமபின வலலேறு சிலைபபினுஞ்
சூனமகண மாறு மறமபூண் வாழகைக
வலிககூட் டுணவின் வாட்குடிப் பிறந்த
புலிபபோத தனன புலலணாக காளைச
செனறு யனன கருவிற சுறறமொடு
கேளா மன்னா கடிபுலம் புககு

நாளா தந்து நறவுநொடை தொலைச்சி
யில்லடு கள்ளின் றோப்பி பருகி
மல்லன் மன்றத்து மதவிடை கெண்டி
மடிவாய்த் தண்ணுமை யிழிசினன் குரம்பை'
(பெரும்பாண் ௧௩௨ - ௧௪௪)

எனவரும். இது 'மறங்கடைக் கூட்டிய குடிநிலை' மைந்தரியல் கூறியது.

'கெடுக சிந்தை கடிதிவ ளணிவே
மூதின் மகளி ராதல் தகுமே
மேனா ளுற்ற செருவிற் கிவடன்னை
யானை யெறிந்து களத்தொழிந் தனனே
நெருந லுற்ற செருவிற் கிவள் கொழுநன்
பெருநிரை விலக்கி யாண்டுப்பட் டனனே
இன்றும்
செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித் துடீஇப்
பாறுமயிர்க் குடுமி யெண்ணெய் நீவி
யொருமக னல்ல தில்லோள்
செருமுக நோக்கிச் செல்கென விடுமே' (புறம் - ௨௭௯)

இது மறங்கடைக்கூட்டிய குடிநிலை மகளிர் இயல் கூறியது.

இவற்றுள் ஆண்பாற் பற்றி வந்ததனை * இல்லாண் முல்லை' எனவும், பெண்பாற்பற்றி வந்ததனை † 'மூதின் முல்லை' எனவும் கூறுப.

கொற்றவைநிலை என்பது — கொற்றவையது நிலையைக் கூறல் என்றவாறு.

---

* இல்லாண்முல்லை — 'கழுமிய காதற் கணவனைப் பழிச்சி
யிழுமென் சீர்த்தி யினமலி புரைத்தன்று'
(வெண்பா. முல்லைப்பொதுவி - ௫)

† மூதின் முல்லை — 'அடல்வே லாடவர்க் கன்றியு மவ்வின்
மடவரன் மகளிர்க்கு மறமிகுத் தன்று.'
(வெண்பா. வாகை - ௨௧)

இதனானே குறிஞ்சித்திணைக்கு முருகவேளே யன்றிக் 'கொற்றவை'யும் தெய்வம் எனபது பெறறும

உதாரணம

'ஆளி மணிககொடிப பைஙகிளிப பாயகலைக
கூளி மலிபடைக கொறறவை — மீளி
யரணமுருஙக வாகோள் கருதி னடையா
முரணமுருஙகத் தானமுந் துறும'

(வெணபா. வெட்சி - உ0)

எனவரும.

(ச)

சுரு. வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்
வெறியாட் டயர்ந்த காந்தளு முறுபகை
வேந்திடை தெரிதல் வேண்டி யேநதுபுகழ்ப்
போந்தை வேம்பே யாரென வரூஉ
மாபெருந் தானையர் மலைந்த பூவும்
வாடா வள்ளி வயவ ரேத்திய
வோடாக் கழனிலை யுளப்பட வோடா
வுடல்வேந் தடுக்கிய வுன்ன நிலையு
மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பிற்
றுவா விழுப்புகழ்ப் பூவை நிலையு
மாரம ரோட்டலு மாபெயர்த்துத தருதலுஞ்
சீர்சால் வேந்தன் சிறப்பெடுத் துரைத்தலுந்
தலைத்தா ணெடுமொழி தன்னொடு புணாத்தலு
மனைக்குரி மரபினது கரந்தை யன்றியும்
வருதார் தாங்கல் வாள் பாய்த்துக கவிழ்தலென்
றிருவகைப் பட்ட பிள்ளை நிலையும்
வாண்மலைந் தெழுந்தோனை மகிழ்ந்துபறை தூங்க
நாடவற் கருளிய பிள்ளை யாட்டுங்
காட்சி கால்கோ ணீர்ப்படை நடுகல்
சீர்த்தகு மரபிற் பெரும்படை வாழ்த்தலென்

றிருமூன்று மரபிற் கல்லொடு புணரச்
சொல்லப் பட்ட வெழுமூன்று துறைத்தே.

இது, * வெட்சித்திணைக்கு உரிய துறை கூறினார், இனி அதற்கு மாறாகிய கரந்தைத் திணையாமாறு உணர்த்துதல் நுதலிற்று. அதுவும் ஆநிரை மீட்டல் காரணமாக அந்நிலத்தின்கண் நிகழ்வதாகலின் வெட்சியின்பாற் பட்டுக் குறிஞ்சியின் புறன் ஆயிற்று.

இதன் பொருள் — 'வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன் வெறியாட்டயர்ந்த காந்தள்' முதலாக † 'வாழ்த்து' ஈறாகக் கல்லொடு புணர்த்துக் கூறுந் துறையொடு கூட்டச் சொல்லப்பட்ட திணை இருபத்தொரு துறைத்து என்றவாறு.

வெறி அறி சிறப்பின் வெவ்வாய் வேலன் வெறியாட்டு அயர்ந்த காந்தளும் என்பது — வெறியாடுதலை அறியுஞ் சிறப்பினையுடைய வெவ்விய வாயினையுடைய வேலன் வெறியாட்டைச் செய்த காந்தளும் என்றவாறு.

காந்தள் என்பது மடலேறுதலான் அத்துணையாற்றாளாகிய பெண்பால்மாட்டு நிகழும். வெறி காந்தள் எனவும் பெயராம் இதனானே காமவேட்கையின் ஆற்றாளாகிய பெண்பாற் பக்கமாகிய வெறியும் அந்நிலத்துள்ளார் § வென்றி வேண்டியாடும் வெறியுங் கொள்ளப்படும். இவ்வெறி இந்நிலத்திற்குச் சிறந்தமை அறிக. இது வெட்சிப் பின்னர் வைத்தார், பெரும்பான்மையுங் குறிஞ்சி பற்றி நிகழுமாகலின்.

* 'வேலன் முதலாக வெட்சித்திணை' எனவும் பாடம்.

† 'தலைத்தா ணெடுமொழி தன்னொடு புணர்த்தலும் என்பது ஈறாகச் சொல்லப்பட்ட பதின்மூன்று துறையும், காட்சி முதலாக வாழ்த்து ஈறாக' எனவும் பாடம்.

‡ 'வெறியாடிய காந்தளும்' எனவும் பாடம்.

§ 'ஆரவென்றி' எனவும் பாடம். 'சூரர் வென்றி' என்று வாசித்தலும் ஒன்றும்.

உதாரணம

'வெய்ய நெடிதுயிரா வெறப னளிநினையா
வைய நனிநீங்க வாடினுண — மைய
லயனமனைப பெணடிரோ டனனைசொ லஞசி
வியன்மனையு ளாடுமே வெறி' (வெணபா பெருந்தி - கo)

எனவரும. இது காமவேட்கை தோற்றுமல தலைமகள தானே * முருகற்கென வெறியாடியது. வெனறி வேணடி யாடுதற்குச செய்யுள சிலபபதிகார வேட்டுவவரியுள கண்டு கொள்க இனி வேலன தானே யாடியதறகுச செய்யுள் வநதவழிக் கணடு கொளக

உறுபகை வேநது இடை தெரிதல வேணடி ஏநது புகழ்ப போநதை வேமபே ஆர என வருஉம மாபெரும தானையா மலைநத பூவும என்றது — மிகக பகைவேநதன் வேறுபாடு தெரிதல வேணடி உயாநத புகழையுடைய போநதை எனவும வேமபு எனவும ஆர எனவும கொணட தமிழ்நாட்டு நிலவேநதா மாபெருந தானையா சூடிய பூவும என்றவாறு

அநநில வேந்த ராவார சேர பாண்டிய சோழா

'குடையலா காநதடடன கொலலிச சுனைவாயத
தொடையவிழ தணகுவளை சூடான — புடைதிகழுந
தேரதிரப பொஙகுந திருநதுவேல வானவன
போரெதிரிற் போநதையாம பூ'
(வெணபா. பொதுவி - க)

இது சேரன பூ

'தொடையணிதோ ளாடவா தும்பை புனையக்
கொடியணிதோ கூட்டணஙகும போழதின — முடியணி
காததலசால செஙகோற் கடுமா னெடுவழுதி [யுங
யேததலசால வேமபி னிணா' (வெணபா பொதுவி - உ).

இது பாண்டியன் பூ

* 'முருகெனை — 'முருகுமெனை' எனவும பாடம.

‘கொல்களி றூாவா கொலைமலி வாணமறவர்
வெலகழல வீககுவா வேலிளையா — மலகுந
கலஙக லொலிபுனற் காவிரி நாட
னலஙக லமராழுவத தாா’ (வெணபா பொதுவி - ௩)

இது சோழன பூ

நிரைகோள கேடடவழி நெடுநில வேநதருய கதும என எழுவா ஆகலின நிரைமீடடலின கண பூப புகழப படடது

வாடா வளளி என்பது — வாடுதல இலலாத வளளி என்றவாறு

வளளி எனபது ஒரு கூததது அஃது அநநிலததின நிகழதலின் ‘வாடா வளளி’ எனறூா உதாரணம வநதுழிக காணக

வயவா ஏத்திய ஓடாக கழனிலை உளபபட என்பது — வீராாற புகழபபடட கெடாத கழனிலை கூடடி என்றவாறு

உதாரணம

‘வாளமரின முனவிலககி வானபடாவாா யாாகொலோ
கேளலாா நீககிய கிணகிணிககாற — காளை
கலஙகழல வாயிற கடுததீறறி யறறூற
பொலஙகழல கானமேற் புனைவு’
(வெணபா பொதுவி - எ)

எனவரும.

ஓடா உடல வேநது அடுக்கிய உனனநிலையும எனபது — அடி பிறக்கிடா வெகுணட வேநதரைச சாாததிய உன்ன நிலையும எனறவாறு.

உன்னம என்பது ஓாமரம அது தன் நாட்டகத்துக் கேடுவருஙகால உலறியும, வாராதகாலம குழைநதும நிற்கும.

உதாரணம்

துன்னருந் தானைத் தொடுகழலான் றுப்பெதிர்ந்து
முன்னார் வணங்கார் முரணுறுங் — மன்னரு
ர்பெட்டார் ஞாங்கி யிகலவிந்தார் நீயுமினை
க்கொட்டார் முன்னர்க் குறை (வெண்பா பொதுவி-௬)

எனவரும். பிறவும் நிமித்தமாக வருவன வெல்லாவற்றிற்கும் இதுவே துறையாகக் கொள்க.

மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பிற் றாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும் என்பது — மாயோனைப் பொருந்திய நிலைபெற்ற பெருஞ் சிறப்பினையுடைய கெடாத விழுமிய புகழைப் பொருந்திய பூவைநிலையைக் கூறுதலும் என்றவாறு.

மாயோன் — காத்தற் கடவுள். பூவை மலர்ச்சியைக் கண்டு மாயோன் நிறத்தினை ஒத்ததெனப் புகழ்தல். 'காயாம்பூ வண்ணன்' என நிறஞ்சுட்டி வழங்குதலுங் கொள்க. பூவை — காயா. நாட்டெல்லை காடாதலின் அக்காட்டிடையே செல்வோர் அப்பூவையைக் கண்டு கூறுதல் 'உன்னம்' கண்டு கூறினாற்போல இதுவுமோர் வழக்கு. இஃது உரையன்றெனக் கண்டுணரற்பாற்று.

உதாரணம்

'பூவை விரியும் புதுமலரிற் பூங்கழலோ
யாவை விழுமிய யாமுணரோம் — மேவார்
மறத்தொடு மல்லர் மறங்கடந்த காளை
நிறத்தொடு நேர்தருத லான்' (வெண்பா பாடாண் - ௪)

இஃது உரையன்று என்பார் மாயோன் முதலாகிய தேவர்களோடு உவமித்தலே பூவைநிலை என்ப.

உதாரணம்

'இந்திர னென்னி னிரண்டேகண் ணேறூர்ந்த
வந்தரத்தா னென்னிற் பிறையில்லை — யந்தரத்துக்
கோழியா னென்னின் முகமொன்றே கோதையை
யாழியா னென்றுணரற் பாற்று'

எனவரும். அங்ஙனமாயின்,

'ஒன்றின முடிதத றனனின முடிததல' (மரபி - கக0)

என்பதுபற்றி வேறு கடவுளரை நோககி உவமிததது வந பவை யெலலாம பூவை நிலையாகக கொளக எனனை ?

'ஏறறாதி யானு மிகலவெமபோர வானவனு
மாறறலு மாளவினையு மொததொனறி லொவவாரே
கூறறக கணிசசியோன கணமூன றிரணடேயா
மாறறலசால வானவன கண'

என முத்தோள்ளாயிரத்து வநதவாறு காணக பிறவும அனன

'பூவை நிலை'யும அநநிலததின தெயவமாகிய கருப பொருளாதலின அதனமேல வநதது

ஆ அமா ஓடடலும எனபது — அரிய அமரைப போககுதலும எனறவாறு அரிய அமராவது சிறநது செருமலைதல

உதாரணம

'புலிககணமுஞ சியமும போரககளிறும போலவார
வலிசசினமு மானமுந தேசு — மொலிககு
மருமுனை வெஞசுரத தானபுசற கோடிச
செருமலைநதார சீறறஞ சிறநது' (வெணபா கரந - ச)

எனவரும

ஆ பெயாததுத தருதல எனபது — நிரைமீடடல எனறவாறு

உதாரணம

'அழுஙகனீர வையகத தாருயிரைக கூறறம
விழுஙகியபின வீடுகொண டற்ற — செழுஙகுடிக
டாரார கரநதை தலைமலைநது தாஙகோட
னேராரகைக கொணட நிரை' (வெணபா கரந - க)

எனவரும.

'ஏறுடைப பெருநிரை பெயாதரப் பெயரா
திலைபுதை பெருஙகாட்டுத தலைககரந திருநத

வல்வின மறவ ரொடுக்கங் காணாய்
செல்லல் செல்லல் சிறக்க நின்னுள்ளம்
முருகுமெய்ப் பட்ட புலைத்தி போலத்
தாவுபு தெறிக்கு மான்மேற்
புடையிலங் கொள்வாட் புனைகழ லோயே' (புறம் ௨௫௯)

என வருவதும் அது.

சீர்சால் வேந்தன் சிறப்பெடுத்து உரைத்தலும் என்பது — சீர்மை பொருந்திய வேந்தனது மிகுதியை எடுத்துக் கூறலும் என்றவாறு.

உதாரணம்

'அங்கையு ணெல்லி யதனைய மாற்றலார்
கொங்கலர் தாரான் குடைநிழற்றத் — தங்கிச்
செயிர்வழங்கும் வாளமருட் சென்றடையார் வேலவா
யுயிர்வழங்கும் வாட்கை யுறும்' (வெண்பா. கரந். ௧௨)

என வரும். இஃது ஏனைய திணைக்கும் பொது.

தலைத்தாள் நெடுமொழி தன்னொடு புணர்த்தலும் என்பது — தன்மாட்டுள்ள போர்வலி முயற்சியினாலே கொடுஞ்சொற்களைத் தன்னொடு புணர்த்திக் கூறுதலும் என்றவாறு.

உதாரணம்

'ஆளமர் வெள்ளம் பெருகி னதுவிலக்கி
வாளொடு வைகுவேன் யானாக — நாளும்
கழிமகிழ் வென்றிக் கழலவெய்யோ னீயப்
பிழிமது வுண்பார் பிறர்' (வெண்பா. கரந். ௧௧)

என வரும். இது மற்றுள்ள திணைக்கும் பொது.

மனைக்குரி மரபினது கரந்தை என்றது — வென்று வா மனைக்கே யுரிய கூட்டும் மரபினையுடையதான கரந்தை என்றவாறு. எனவே அவர்க்கு அதனை அறிவுடையோர் கூட்டல் உய்த்துணர்க. உதாரணம் வந்துழிக் காண்க.

அன்றியும் என்பது அக்கரந்தை அல்லாமலும் என்றவாறு

வருதார் தாங்கல் வாள் வாய்த்துக் கவிழ்தல் என்று இருவகைப்பட்ட பிள்ளை நிலையும் என்பது — மேல் வருகின்ற கொடிப் படையைத் தாங்கலும் வாள்வாய்த்தலால் படுதலும் என இருவகைப்பட்ட பிள்ளை நிலையும் என்றவாறு.

உதாரணம்

'பிள்ளை கடுப்பப் பிணம்பிறங்க வாளெறிந்து
கொள்ளைகொள் ளாயர் தலைக்கொண்டார் — எள்ளிப்
பொருதழிந்து மீளவும் பூங்கழலான் மீளா
தொருதனியே நின்றா னுளன்' (வெண்பா கஉ௩ - எ)

எனவரும். இது வருதார் தாங்கல்.

'உரைப்பி னதுவியப்போ வொன்னார்கைக் கொண்ட
நிரைப்பின் னெடுந்தகை சென்றான் — புரைப்பின்
றுளப்பட்ட வாயெல்லா மொள்வாள் கயரக்
களப்பட்டா னேறன்றான் கரந்து' (வெண்பா கஉ௩-ரு)

இது வாள்வாய்த்துக் கவிழ்தல்.

வாள் மலைந்து எழுந்தோனை மகிழ்ந்து பறை தூங்க நாடு அவற்கு அருளிய பிள்ளையாட்டும் என்பது — வாளான் மாறுபட்டு எழுந்தவனை மகிழ்ந்து பறை ஒலிப்ப அவற்குத் துறக்கமாகிய நாட்டை அளித்த பிள்ளையாட்டும் என்றவாறு.

உதாரணம்

'மாட்டிய பிள்ளை மறவா நிறந்திறந்து
கூட்டிய வெஃகங் குடர்மாலை — சூட்டியபின்
மாறிரியச் சீறி நுடங்குவான் கைக்கொண்ட
வேறிரிய விம்முந் துடி' (வெண்பா கஉ௩ - க)

எனவரும்.

காட்சி என்பது — போர்க்களத்துப் பட்ட வீரரைக் கல் நிறுத்தற் பொருட்டுக் கற் காண்டல் என்றவாறு.

உதாரணம்

‘நிரையணங்கு மெய்யாங்கிறீஇ மீளி மறவர்
புரையணங்கப் பூமாரி சிந்திப் — பரையணங்கும்
பீளைக் கடுங்கணையால் வேருகி விண்படர்ந்த
காளைக்குக் கண்டமைத்தார் கல்’ (வெண்பா பொதுவி-அ)

எனவரும்

கல்கோள் என்பது — அவ்வாறு காணப்பட்ட கல்லைக் கைக்கோடல் என்றவாறு

உதாரணம்

‘பூவொடு நீர்தூவிப் பொங்க விரைபுகைத்து
நாவுடை நன்மணி நனியம்ப — மேவா
ரழன்மறங் காற்றி யவிந்தாற்கென் றேத்திக்
கழன்மறவர் கைக்கொண்டார் கல்’

(வெண்பா பொதுவி - கூ)

எனவரும்

நீர்ப்படை என்பது — அக் கல்லை நீர்ப்படுத்தல் என்றவாறு

உதாரணம்

‘காடு கனலக் கனலோன் சினஞ்சொரியக்
கூடிய வெம்மை குளிர்கொள்ளப் — பாடி
நயத்தக்க மண்ணி நறுவிரைகொண் டாட்டிக்
கயத்தகத் துய்த்திட்டார் கல்’ (வெண்பா பொதுவி - க0)

எனவரும்

நடுதல் என்பது — அக் கல்லை நடுதல் என்றவாறு

உதாரணம்

‘மாலை துயல மணியெறிந்து மட்டுகுத்துப்
பீலி யணிந்து பெயர்பொறித்து — வேல்மரு
ளாண்டகை நின்ற வமர்வெய்யோற் காக்கென்று
காண்டக நாட்டினார் கல்’ (வெண்பா பொதுவி - கஉ)

எனவரும்

சீர்த்தகு மரபிற் பெரும்படை என்பது — மிகவும் தக்க மரபினையுடைய பெரும்படை என்றவாறு.

அஃதாவது நாட்டிய கல்லிற்குக் கோட்டம் செய்தல். அஃது * 'இற்கொண்டு புகுதல்' என உரைத்த துறை.

உதாரணம்

'வாட்புகா வூட்டி வடிமணி நின்றியம்பக்
கோட்புலி யன்ன குரிசில்கல் — லாட்கடிந்து
விற்கொண்ட வென்றி விறன்மறவ னெல்லோரு
மிற்கொண்டு புக்கா ரியைந்து' (வெண்பா பொதுவி-கச)

என வரும்.

வாழ்த்தல் என்பது — அக் கல்லைப் பழிச்சுதல் என்றவாறு.

உதாரணம்

'அடும்புகழ் பாடி யழுதழுது நோனா
திடும்பையுள் வைகிற் றிருந்த — கடும்பொடு
கைவண் குரிசில்கற் கைதொழூஉச் செல்பாண
தெய்வமாய் நின்றான் றிசைக்கு'

என வரும். (வெண்பா பொதுவி - கரு)

இவையெல்லாம் காரணத்திற்கு உரித்தாக ஓதப்பட்டனவேனும்,

'ஒருபாற் கிளவி யேனைப்பாற் கண்ணும்
வருவகை தானே வழக்கென மொழிப' (பொருளி - உஅ)

என்றதனான் மறத்துறை ஏழற்குங் கொள்ளப்படும். ஈண்டு ஓதப்பட்ட இருபத்தொரு துறையினும் நிரைமீட்—

* இற்கொண்டு புகுதல் —

'வேத்தமருள் விளிந்தோன் கல்லென
வேத்தினா துவன்றி யிற்கொண்டு புக்கன்று'

(வெண்பா பொதுவியல் - கச)

டற பொருண்மைத்தாகிக் கரந்தை என ஓதப்பட்டன ஏழாயின கரந்தையாயினவாறு என்னை யெனின், வெறியாட்டும், வள்ளிக் கூத்தும் மலைசார்ந்த இடத்து வழங்குதலின் வந்த நிலத்திற்குரிய பொருளாகி வந்தன, பூவை நிலையும் அந் நிலத்தைச் சார்ந்து வருவதோர் தெய்வமாதலின் அந் நிலத்திற் கருப்பொருளாகி வந்தது, கற்கோணிலை ஆறும், உன்ன நிலையும், முடியுடை வேந்தர் சூடும் பூவும், கழனிலையும் ஏனையவற்றிற்கும் பொதுவாகலின் எடுத்துக்கொண்டணணே கூறுதல் இலக்கணமாதலின் ஈண்டு ஓதப்பட்டன என உணர்க.

பன்னிருபடலத்துள் கரந்தைக்கண் *'புண்ணொடு வருதல்' முதலாக வேறுபட்ட சில துறை கூறினாலெனின், புண்படுத்தல் மாற்றோர் செய்த மறத்துறை யாகலின் அஃது இவர்க்கு மாறுகொளக் கூறுதல் மயங்கக் கூறுதலாம். ஏனையவும் இவ்வாறு 'மயங்கக் கூறலும்,' 'குன்றக் கூறலும்,' 'மிகைபடக் கூறலும்' ஆயவாறு பகுத்துக் காட்டின் பெருகுமாதலின் உய்த்துணர்ந்து கண்டுகொள்க. இத்துணையும் கூறப்பட்டது வெட்சித்திணை. (௫)

௬௪. வஞ்சி தானே முல்லையது புறனே
யெஞ்சா மண்ணசை வேந்தனை வேந்த
னஞ்சுதகத் தலைச்சென் றடல்குறித் தன்றே

இது வஞ்சித்திணையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — வஞ்சியாகிய புறத்திணை முல்லையாகிய அகத்திணைக்குப் புறனாம். அஃது ஒழியாத மண்ணை நச்சுதலையுடைய வேந்தனை மற்றொரு வேந்தன் அஞ்சுதகத் தலைச்சென்று அடல் குறித்தது என்றவாறு.

* புண்ணொடு வருதல் — 'மண்ணொடு புகழ்நிறீஇப்
புண்ணொடு தானவந்தன்று'
(வெண்பா. கரந்தை - ௫)

ஒழியாத மண்ணை நச்சுதலாவது வேண்டிய அரசர்க்குக் கொடாமை.

'அகத்திணை மருங்கி னரிறப வுணர்ந்தோர்
புறத்திணை யிலக்கணந் திறப்படக் கிளப்பின்' (புறத்தி-க)

என்பதனைக் கொணர்ந்து உரைத்துக் கொள்க. இவ்வகை இனி வருகின்ற திணைக்கும் ஒக்கும். அதற்கு இது புறனாயவாறு என்னையெனின்,

'மாயோன் மேய காடுறை யுலகம்' (அகத்தி - ரு)

மும், காரும் மாலையும், முல்லைக்கு முதற்பொருளாதலின், பகைவயிற் சேறல் ஆகிய வஞ்சிக்கு நிழலும் நீரும் உள்ள காலம் வேண்டுதலானும், பருவரக் காடாகிய முல்லைசார்ந்த இடம் ஆகாமையானும், அதற்கு இது சிறந்த புறனாயது எனக் அன்னதாதல் முல்லைப்பாட்டினுள்,

'கானயாறு தழீஇய வகனெடும் புறவிற்
சேணாறு பிடவமொடு பைம்புத லெருக்கி
வேட்டுப்புழை யருப்பம் மாட்டிக் காட்ட
விடுமுட் புரிசை யேமுற வளைஇப்
படுநீர்ப் புணரியிற் பரந்த பாடி' (முல்லைப் - உச - உஅ)

என்பதனானும் உணர்க. (ச)

சூரு. இயங்குபடை யரவ மெரிபரந் தெடுத்தல்
வயங்க லெய்திய பெருமை யானுங்
கொடுத்த லெய்திய கொடைமை யானு
மடுத்தூர்ந் தட்ட கொற்றத் தானு
மாராயம் பெற்ற நெடுமொழி யானும்
பொருளின் றுய்த்த பேராண் பக்கமும்
வருவிசைப் புனலைக் கற்சிறை போல
வொருவன் றாங்கிய பெருமை யானும்
பிண்ட மேய பெருஞ்சோற்று நிலையும்

வென்றோர் விளக்கமுந் தோற்றோர் தேய்வுங்
குன்றாச் சிறப்பிற் கொற்ற வள்ளையு
மழிபடை தட்டோர் தழிஞ்சியொடு தொகைஇக்
கழிபெருஞ் சிறப்பிற் றுறைபதின் மூன்றே.

இது வஞ்சித்திணைக்கு உரிய துறையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — இயங்குபடை யரவம் முதலாகத் தழிஞ்சியொடு கூடச் சொல்லப்பட்ட பதின்மூன்றும் வஞ்சித்துறையாம் என்றவாறு.

'பெருமையானும்' என்பது முதலாக வந்த 'ஆன்' எல்லாம் இடைச்சொல்லாகி வந்தன. 'இயங்கு படையரவம்' 'எரிபரந்தெடுத்தல்' என்பவற்றுக்கண் உம்மை தொக்கு நின்றன.

இயங்கு படை அரவம் என்பது — படை யெழும் அரவமும் என்றவாறு.

உதாரணம்

'சிறப்புடை மரபிற் பொருளு மின்பமு
மறத்து வழிப்படூஉந் தோற்றம் போல
விருகுடை பின்பட வோங்கிய வொருகுடை
யுருகெழு மதியி னிவந்துசேண் விளங்க
நல்லிசை வேட்டம் வேண்டி வெல்போர்ப்
பாசறை யல்லது நீயொல் லாயே
நுதிமுக மழுங்க மண்டி யொன்னார்
கடிமதில் பாயுநின் களிறடங் கலவே
போரெனிற் புகலும் புனைகழன் மறவர்
காடிடைக் கிடந்த நாடுநனி சேஎய
செல்வே மல்லே மென்னார் கல்லென
விழவுடை யாங்கண் வேற்றுப்புலத் திறுத்துக்
குணகடல் பின்ன தாகக் குடகடல்

வெணடலைப புணரிசின மானகுளம பலைபப
வலமுறை வருகலு முணடென றலமவாநது
நெஞசநடுங கவலம பாயக
துஞசாக கணண வடபுலத தரசே' (புறம் - ௩௧)

எனவரும

எரி பரநது எடுததல எனபது — பகைவரது நாடு எரி பரநது கொளுததலும எனறவாறு

உதாரணம

'விணைமாடசிய விரைபுரவியொடு
மழையுருவின தோலபரபபி
முனைமுருஙகத தலைசசெனறவா
விளைவயல கவரபூடடி
மனைமரம விறகாகக
கடிதுறைநீரக களிறுபடீஇ
யெலலுபபட விடட சுடுதீ விளககம
செலசுடர ஞாயிறறுச செககரின தோனறப
புலமகெட இறுககும வரமபில றானைத
துணைவேணடாச செருவெனறிப
புலவுவாட புலாசாநதின
முருகறச சறறத தருமகழுக குரிசின
மயஙகுவளளை மலராமபற
பனிபபகனறைக கவிபபாகற
கருமபலலது காடறியாப
பெருநதணபணை பாழாக
வேம நனனா டொளளெரி யூடடினை
நாம நலலமா செயய
வோராஙகு மலைநதன பெருமநின களிறே' (புறம் - ௧௬)

எனவரும

வயஙகல எயதிய பெருமையானும என்பது — விளக்கம் எய்திய பெருமையும எனறவாறு

உதாரணம்:

'இருங்கண் யானையொ டருங்கலந் துறுத்துப்
பணிந்துகுறை மொழிவ தல்லது பகைவர்
வணங்கா ராதல் யாவதோ மற்றே' (பதிற்றுப்பத்து)

எனவரும்.

'உருமுடன்று சிலைத்தலின் விசும்பதிர்ந் தாங்குக்
கண்ணதிர்பு முழங்குங் கடுங்குரன் முரசங்
கால்கிளர்ந் தன்ன ஊர்திக் கான்முளை
யெரிசிகழ்ந் தன்ன சிறையருஞ் சீற்றத்து
நளியிரும் பரப்பின் மாக்கடன் முந்நீர்
நீர்த்துணை யன்ன செலவி
னிலந்திரைப் பன்ன தானையோய் நினக்கே'

என்ற மேற்பாட்டின் தொடர்பும் அது. (பதிற்றுப்பத்து)

கொடுத்தல் எய்திய கொடைமையானும் என்பது — கொடுத்தலைப் பொருந்திய கொடைமையும் என்றவாறு.

உதாரணம்

'பாணர் தாமரை மலையவும் புலவர்
பூநுதல் யானையொடு புனைதேர் பண்ணவு
மறனோ மற்றிது விறன்மாண் குடுமி
யின்னா வாகப் பிறர்மண்கொண்
டினிய செய்திநின் னார்வலர் முகத்தே' (புறம் - கஉ)

எனவரும்.

அடுத்து ஊர்ந்து அட்ட கொற்றத்தானும் என்பது — பகைவர் பலரையும் அடுத்து மேலிட்டுக் கொன்ற கொற்றமும் என்றவாறு.

உதாரணம்

'திண்பிணி முரச மிழுமென முழங்கச்
சென்றமர் கடத்தல் யாவது வந்தோர்
தார்தாங் குதலு மாற்றா வெடிபட்
டோடன் மரீஇய பீடின் மன்னர்

நோயபபால் விளிநத யாககை தழீஇக
காதன மறநதவா தீதுமருந கறமா
ரறமபுரி கொளகை நானமறை முதலவா
திறமபுரி பசுமபுற பாயபினா கிடபபி
மறநகக தாக நலலமா வீழநத
நீளகழன மறவா செலவுழிச செலகென
வாளபோழந தடககலு முயநதனா மாதோ
வரிஞசிம் ரூாககும வாயபுகு கடாஅத
தணணல யானை யடுகளத தொழிய
வருஞசமந ததைய நூறிநீ
பெருநதகை விழுபபுண படட மாறே' (புறம - கூகூ)

எனவருமு

மாராயம பெறற நெடுமொழியானும எனபது — மாராயமாகிய உவகை பெறறு நெடிய மொழியினகண ணும எனறவாறு

உதாரணம

'துடியெறியும புலைய
வெறிகோல கொளளு மிழிசின
கால மாரியி னமபு தைபபினும
வயறகெணடையின வேலபிறழினும
பொலமபுனை யோடை யணணல யானை
யிலஙகுவாண மருபபி னுதிமடுத தூனறினு
மோடல செல்லாப பீடுடை யாளா
நெடுநீரப பொயகைப பிறழிய வாளை
நெலலுடை நெடுநகாக கூடடுமுதற புரளுந
தணணடை பெறுதல யாவது படினே
மாசின மகளிா மணண நனறு
முயாநிலை யுலகததது நுகாப வதனுல
வமப வேநதன றூனை
யிமபா நினறங காணடிரோ வாவே' (புறம - உஅஎ)

எனவருமு

பொருளின்று உய்த்த பேராண் பக்கமும் என்பது— பகைவரைப் பொருளாகக் மதியாது செலுத்தின பேராண் பக்கமும் என்றவாறு

உதாரணம்

'ஆவு மானியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்மம்பு கடிவிடுதும் நும்மரண் சேர்மினென
அறத்தாறு நுவலும் பூட்கை மறத்திற்
கொல்களிற்று மீமிசைக் கொடிவிசும்பு நிழற்றும்
எங்கோ வாழிய குடுமி தங்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
முந்நீர் விழவி னெடியோ
னன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே' (புறம் - கூ)

எனவரும்,

வருவிசைப் புனலைக் கற்சிறை போல ஒருவன் தாங்கிய பெருமையானும் என்பது — விசை கொண்டு வரும் புனலைக் கற்சிறை தாங்கினாற்போல ஒருவன் தாங்கிய பெருமையும் என்றவாறு

உதாரணம்

'வீடுணர்ந் தோர்க்கும் வியப்பாமா லிங்கின்ற
வாடன் முதியோள் வயிற்றிடங் — கூடார்
பெரும்படை வெள்ள நெரிதரவும் பேரா
விரும்புலி சேர்ந்த விடம்' (வெண்பா. வஞ்சி - ககூ)

எனவரும்.

'வேந்துடைத் தானை முனைகெட நெரிதலின்
னேந்துவாள் வலத்த னொருவ னாகித்
தன்னிறந்து வாராமை விலக்கலிற் பெருங்கடற்
காழி யனையன் மாதோ வென்றும்
பாடிச் சென்றோர்க் கன்றியும் வாரிய

புரவிற் காற்றாச் சிறாஅத்
தொன்மை சுட்டிய வண்மை யோனே' (புறம் - ௩௩0)

என்பதும் அது.

பிண்டம் மேய பெருஞ்சோற்று நிலையும் என்பது — திரட்சி பொருந்திய பெருஞ்சோற்று நிலையும் என்றவாறு.

உதாரணம்

'இணர்ததை ஞாழற் கரைகெழு பெருந்துறை
மணிக்கலத் தன்ன மாயிதழ் நெய்தற்
பாசடைப் பனிக்கழி துழைஇப் புன்னை
வாலிணர்ப் படுசினைக் குருகிறை கொள்ளும்
அல்குறு கானல் ஓங்குமண லடைகரை
தாழடும்பு மலைந்த புணரிவளை ஞரல
இலங்குநீர் முத்தமொடு வார்துகி ரெடுக்குந்
தண்கடற் படப்பை மென்பா லனவும்
காந்தளங் கண்ணிக் கொலைவில் வேட்டுவர்
செங்கோட் டாமா னூனொடு காட்ட
மதனுடை வேழத்து வெண்கோடு கொண்டு
பொன்னுடை நியமத்துப் பிழிநொடை கொடுக்குங்
குன்றுதலை மணந்த புன்புல வைப்புங்
கால மன்றியுங் கரும்பறுத் தொழியா
தரிகா லவித்துப் பலபூ விழவிற்
றேம்பாய் மருதம் முதல்படக் கொன்று
வெண்டலைச் செம்புனல் பரந்துவாய் மிகுக்கும்
பலசூழ் பதப்பர் பரிய வெள்ளத்துச்
சிறைகொள் பூசலிற் புகன்ற வாயம்
முழவிமிழ் மூதூர் விழவுக்கா ணூஉப் பெயருஞ்
செழும்பல் வைப்பிற் பழனப் பாலும்
மேன லுழவர் வரகுமீ திட்ட
கான்மிகு குளவிய வன்புசே ரிருக்கை
மென்றினை நுவணை முறைமுறை பகுக்கும்
புன்புலந் தழீஇய புறவணி வைப்பும்
பல்பூஞ் செம்மற் காடுபய மாறி
யரக்கத் தன்ன நுண்மணற் கோடுகொண்

டொண்ணுத்தன மகளிர கழலொடு மறுகும
விண்ணுயார் தோட்கிய கடற்றவும பிறவும
பணிகெழு வேந்தரும வேளிரு மொன்றுமொழிந்து
கடலவும காட்டவும மரணவலியார நடுங்க
முரணமிகு கடுங்குரல விசும்படை பதிரக
கடுஞ்சினை கடாஅய முழங்கு மந்திரத்
தருந்திறன மரபிற கடவுட பேணிய
ருயர்ந்தோ னேந்திய வருமபெறல பிண்டம
கருங்கட பேயமகள கைபுடையூஉ நடுங்க
நெய்த்தோர தூஉய நிறைமகி ழிரும்பலி
யெறும்பு மூசா விறும்பூது மரபிற
கருங்கட காக்கையொடு பருந்திருந் தார
வோடாப் பூட்கை யொண்பொறிக் கழற்கால
பெருஞ்சமந் ததைந்த செருப்புகல மறவ
ருருமுநில னதிரக் குரலொடு கொளைபுணர்ந்து
பெருஞ்சோ றுகுத்தற கெறியுங்
கடுஞ்சின வேந்தநின றழங்குகுரன முரசே'
(பதிற்று - ௩0)

எனவரும

வென்றோர விளக்கமும என்பது — வென்றோர மாட்டுளதாகிய விளக்கமும என்றவாறு

உதாரணம

'அருஅ யாணர அகனகட செறுவி
னருவி யாம்ப னெய்தலொ டரிந்து
செறுவினை மகளிர மலிந்த வெக்கைப
பரூஉப்பக டுதிர்த்த மெனசெந நெல்லி
னம்பண வளவை யுறைகுவித் தாங்குக
கடுந்தே றுறுகிளை மொசிந்தன துஞ்சுஞ
செழுங்கூடு கிளைத்த இளந்துணை மகாரி
னலந்தனா பெருமநின னுடற்றி யோரே
, ஊரெரி கவர வுருத்தெழுந் துரைஇப்
போர்சுடு கமழ்புகை மாதிர மறைப்ப
மதிலவாயத், தோன்ற லீயாது தமபழி யூக்குநா
குண்டுகண் அகழிய குறுந்தாண் ஞாயி

லாரெயிற் றோட்டி வௌவினை யேறொடு
கன்றுடை யாயந் தரீஇப் புகல்சிறந்து
புலவுவில் லிளைய ரங்கை விடுப்ப
மத்துக்கயி றாடா வைகற்பொழுது நினையூஉ
வான்பயம் வாழ்நர் கழுவுடலை மடங்கப்
பதிபா ழாக வேறுபுலம் படர்ந்து
விருந்தின் வாழ்க்கையொடு பெருந்திரு வற்றென
வருஞ்சமத் தருநிலை தாங்கிய புகர்நுதற்
பெருங்களிற் றியானையோ டருங்கலந் தராஅர்
மெய்பனி கூரா வணங்கெனப் பராவலிற்
பலிகொண்டு பெயரும் பாசம் போலத்
திறைகொண்டு பெயர்தி வாழ்கநின் னூழி
யுரவரு மடவரு மறிவுதெரிந் தெண்ணி
யறிந்தனை யருளா யாயின்
யாரிவ ணெடுந்தகை வாழு மோரே’ (பதிற்று - ௭க)

எனவரும்.

தோற்றோர் தேய்வும் என்பது — தோற்றோர் தேய்வு கூறுதலும் என்றவாறு.

உதாரணம்

‘வாஅன மருப்பிற் களிற்றியானை
மாமலையிற் கணங்கொண்டவ
ரெடுத்தெறிந்த விறன்முரசங்
கார்மழையிற் கடிதுமுழங்கச்
சாந்துபுலர்ந்த வியன்மார்பிற்
றொடிசுடர்வரும் வலிமுன்கைப்
புண்ணுடை யெறுழ்த்தோட் புடையலங் கழற்காற்
பிறக்கடி யொதுங்காப் பூட்கை யொள்வா
ளொடிவி றெவ்வ ரெதிர்நின் றுரைஇ
யிடுக திறையே புரவெதிர்ந் தோற்கென
வம்புடை வலத்த ருயர்ந்தோர் பரவ
வனையை யாகன் மாறே பகைவர்
கால்கிளர்ந் தன்ன கதழ்பரிப் புரவிக்
கடும்பரி நெடுந்தேர் மீமிசை நுடங்குகொடி

புலவரை [illegible] பயம்பா
[illegible] ஈண்டிய [illegible] இசைத்
தொலையாக் கற்பநின் றெறன்முனை யானே’ (பதிற்று-௩0)

எனவரும்.

குன்றாச் சிறப்பிற் கொற்றவள்ளையும் என்பது — குறைவுதலைச் செய்யாத [illegible] சிறப்பினையுடைய கொற்றவள்ளையும் என்றவாறு.

கொற்றவள்ளை — தோற்ற கொற்றவன் கொடுக்குந் திறை. உதாரணம் வந்துழிக் காண்க.

அழிபடை தட்டோர் தழிஞ்சியொடு தொகைஇ — மாற்றாரவிடு படைக்கலன் முதலியவற்றைக் காப்பாட்டுத் தடுத்து உள்ள அழிந்தோரைப் பேணித் தழீஇக்கோடல் என்றவாறு.

உதாரணம்

வருகதில் வல்லே வருகதில் வல்லென
வேந்துவிடு விழுத்தூ தாங்காங் கிசைப்ப
நூலரி மாலை சூடிக் காலிற்
றமியன் வந்த மூதி லாளன்
அருஞ்சமந் தாங்கி முன்னின் றெறிந்த
வொருகை யிரும்பிணத் தெயிறு மிறையாகத்
திரிந்த வாய்வாள் திருத்தாத்
தனக்கிரிந் தானைப் பெயர்புறம் நகுமே (புறம் - உ௮௪)

எனவரும்.

[illegible] இத்துணையுங் கூறப்பட்டது வஞ்சி எனக்
[illegible] வருபடை வருமறிந் தெரிந் தெண்ணி
யறிந்தனை யருளா யாயினே
யாரிவ ணெடுந்தகை வாழு மோரே’ (பதிற்று - எக)
என்பதூஉம் இதனகத்து அடங்கும். இது *முது மொழி வஞ்சி’ என்ப.

* முதுமொழி வஞ்சி — ‘தொன்மரபின் வாட்குடியின்
முன்னோரது நிலைகிளந்தன்று’
(வெண்பா. வஞ்சி - கக)

தொகைநிலைக் கழிபெருஞ் சிறப்பிற் பதின்மூன்று துறைத்து வாகை — இக்கூறப்பட்ட தொகுத்து வாணின கழிபெருஞ் சிறப்பிற் பதின்மூன்று துறைத்தாம் என்றவாறு.

'கழி' என்றது 'கொள்ளோர் வினைக்கு' முதலியன மூன்றும் ஒழிந்த எல்லாம் அருகிக்கின்றாரும் பிறரால் எனக் கூறுதற்கு 'கழிபெருஞ் சிறப்பிற் பதின் மூன்று' என்கின்றார் [illegible] என்னும் 'கழிபெருஞ் சிறப் பின்' என்றமையான், பொருள் நிலையாமை வந்த குறிஞ்சி மனையுடம் [illegible] பொதுவியல் பாடாண் திணையுமைத் தலும் பெறும் கொள்க.

இவை பரந்துபட்ட ஆசிரியம்

[illegible] (புறம் - சுகூ)
[illegible] (புறம் - சுஎ)

என்னும் புறப்பாட்டுக்களின்கண் காண்க. பிறவும் அன்ன (எ)

கூகூ. உழிஞை தானே மருதத்துப் புறனே
முழுமுத லரண முற்றலுங் கோடலும்
அனைநெறி மரபிற் றாகு மென்ப.

இது உழிஞைத் திணை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — உழிஞை என்னும் புறத்திணை மருதம் என்னும் அகத்திணைக்குப் புறனாம்; அது முழு முதல் அரணம் முற்றுதலும் அழித்தலுமாய் வருந்தன்மைத் தாகிய பல நெறியை மரபாக உடைத்தாகும் என்ப புலவர் என்றவாறு.

'முழுமுதலரணம்' என்றமையால், அரணம், தலையும் இடையும் கடையும் என மூவகைப்படும். அவற்றுள் தலை

யரணை என்க [illegible], அரசன் [illegible] இக்க
[illegible] * உடைக்காக [illegible] இது [illegible]
[illegible] வினையெனின், [illegible] வேந்தெருடு
போரெய [illegible] † உடைந்த [illegible]
‡ அரணமைப்பியாக [illegible], [illegible]
அவா [illegible], அ[illegible] [illegible]க்கு
[illegible] [illegible]
[illegible] [illegible]க்கு
போகாமின், [illegible]
[illegible] ([illegible] - [illegible]) [illegible]
அடங்கும் [illegible] (௪)

௪௭. அதுவே தானு மிருநால் வகைத்தே.

இ[illegible]
[illegible]

இதன் பொருள் — [illegible]
[illegible] [illegible] [illegible]க்
கா[illegible] (௧௦)

௪௮. கொள்ளார் தேயங் குறித்த கொற்றமு
முள்ளிய துமுடிக்கும் வேந்தனது சிறப்புந்
தொல்லெயி லிவர்தலுந் தோலது பெருக்கமு
மகத்தோன் செல்வமு மன்றியு முரணிய
புறத்தோ னணங்கிய பக்கமுந் திறப்பட
வொருதான் மண்டிய குறுமையு முடன்றோ

* 'முற்றுடைத்[illegible]'
† உடைந்[illegible]
‡ 'அ[illegible]ணவல்லியாசப' என்பதும் பாடம்.
§ 'காட்டெல்லையின் அழ[illegible]பா [illegible]மிசைய
ராசாம்[illegible] யெனின'

வருபடை பேணா ராரெயி லுளப்படச்
சொல்லப் பட்ட நாலிரு வகைத்தே.

இது மேற்கூறப்பட்ட உழிஞைத்துறை எட்டு என்ற தன் பெயரும் முறைமையும் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — 'கொள்ளார் தேஎங் குறித்த கொற்றமும்' என்பது முதலாகச் சொல்லப்பட்டன உழிஞைத்துறையாம் என்றவாறு.

பதினெட்டு, * இருபத்தொன்பது என்பார் மதம் விலக்கியமை தோன்றப் பெயர்த்துந் தொகைகூறினார். கூறியது கூறல் அன்று இது தொகை.

கொள்ளார் தேஎங் குறித்த கொற்றமும் என்பது — பகைவரது தேயத்தைக் கொள்ளக் குறித்த கொற்றம் கூறுதலும் என்றவாறு.

கொள்ளார் — சிறு சொற் கொடிய பகைவர், தன்னை இறையெனக் கொள்ளாதார்.

உதாரணம்

'ஆனா வீகை யடுபோ ரண்ணனின்
யானையு மலையிற் றோன்றும் பெருமநின்
றானையுங் கடலென முழங்குங் கூர்நுனை
வேலு மின்னின் விளங்கு முலகத்
தரைசுதலை பனிக்கு மாற்றலை யாதலிற்
புரைதீர்ந் தன்றது புதுவதோ வன்றே
றண்புனற் பூச லல்லது நொந்து
களைக வாழி வளவ வென்றுநின்
முனைதரு பூசல் கனவினு மறியாது
புலிபுறங் காக்குங் குருளை போல
மெலிவில் செங்கோ னீபுறங் காப்பப்
பெருவிறல் யாணர்த் தாகி யரிநர்
கீழ்மடைக் கொண்ட வாளையு முழவர்
படைமிளிர்ந் திட்ட யாமையு மறைநர்

* 'இருபத்தொன்பது' என்பார் வெண்பாமாலை யுடையாரும். (உழிஞை. க)

கரும்பிற கொண்ட தேனும் பெருந்துறை
நீர்தரு மகளிர் குற்ற குவளையும்
வன்புலக் கேளிர்க்கு வருவிருந் தயரும்
மென்புல வைப்பி னன்னாட்டுப் பொருந
மலையி னிழிந்து மாக்கட னோக்கி
நிலவரை யிழிதரும் பல்யாறு போலப்
புலவ ரெல்லா நின்னோக் கினரே
நீயே,
மருந்தில் கணிச்சி வருந்த வட்டித்துக்
கூற்றுவெகுண் டன்ன முன்பொடு
மாற்றிரு வேந்தர் மண்ணோக் கினையே' (புறம் - ௪௨)

எனவரும்.

உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பும் என்பது — நினைத்தது முடிக்கலாகும் வேந்தனது இயற்சிறப்புக் கூறுதலும் என்றவாறு.

உதாரணம்:

'அடுநை யாயினும் விடுநை யாயினும்
நீயளந் தறிதிநின் புரைமை வார்கோற்
செறியரிச் சிலம்பிற் குறுந்தொடி மகளிர்
பொலஞ்செய் கழங்கிற் றெற்றி யாடுந்
தண்ணான் பொருநை வெண்மணல் சிதையக்
கருங்கைக் கொல்லன் அரஞ்செய் அவ்வாய்
நெடுங்கை நவியம் பாய்தலி னிலையழிந்து
வீகமழ் நெடுஞ்சினை புலம்பக் காவுதொறுங்
கடிமரந் தடியு மோசை தன்னூர்
நெடுமதில் வரைப்பிற் கடிமனை யியம்ப
வாங்கினி திருந்த வேந்தனொ டீங்குநின்
சிலைத்தார் முரசங் கறங்க
மலைத்தனை யென்பது நாணுத்தக வுடைத்தே'

(புறம் - ௩௬)

எனவரும். இன்னும் 'உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பும்' என்றதனால் * அகத்தரசற்கு அழிந்து கூறலுங் கொள்க.

உதாரணம்

'இரும்பிடித் தொழுதியொடு பெருங்கயம் படியா
நெல்லுடைக் கவளமொடு நெய்ம்மிதி பெறாஅ
திருந்தரை நோன்வெளில் வருந்த வொற்றி
நிலமிசைப் புரளுங் கைய வெய்துயிர்த்
தலமரல் யானை யுருமென முழங்கவும்
பாலில் குழவி யலறவு மகளிர்
பூவில் வறுந்தலை முடிப்பவு நீரில்
வினைபுனை நல்லில் லினைகூஉக் கேட்பவு
மின்னா தம்ம வீண்டினி திருத்த
றுன்னருந் துப்பின் வயமான் றோன்றல்
லறவை யாயி னினதெனத் திறத்தல்
மறவை யாயிற் போரொடு திறத்த
லறவையு மறவையு மல்லை யாகத்
திறவா தடைத்த திண்ணிலைக் கதவி
னீண்மதி லொருசிறை யொடுங்குத
னாணுத் தகவுடைத் திது காணுங் காலே' (புறம் - ௪௪)

எனவரும்

தொல் எயிற்கு இவர்தலும் என்பது — தொல்லெயி லின்கட் பரத்தல் கூறுதலும் என்றவாறு

உதாரணம் :

'புல்லார் புகலொடு போகக்கொழியப் பொங்கினனாய்ப்
பல்லார் மருளப் படைபரப்பி — யொல்லாா
நிறத்திறுத்த வாட்டானை நேரார் மதிலின்
புறத்திறுத்தான் பூங்கழலி னான்' (வெண்பா உழி - ௧௦)

எனவரும்.

* 'அகத்தரசனை யழிந்து கூறலும்' எனவும் பாடம்

தோலது பெருக்கமும் என்பது — தோற்படையினது பெருமை கூறுதலும் என்றவாறு.

உதாரணம்

'நின்ற புகழொழிய நில்லா வுயிரோம்பி
யின்றுநாம் வைக லிழிவாகும் — வென்றெறியும்
பாணடி னின்றோர் பணியார் பகையரணம்
வேண்டி லெறிகென்றான் வேந்து' (வெண்பா உழி-கஉ)

எனவரும்.

அகத்தோன் செல்வமும் என்பது — அகத்தோனது செல்வங் கூறுதலும் என்றவாறு.

உதாரணம்

'அளிதோ தானே பாரியது பறம்பே
நளிகொள் முரசின் மூவிரு முற்றினும்
உழவ ருழாதன நான்குபய னுடைத்தே
ஒன்றே,
சிறியிலை வெதிரின் நெல்விளை யும்மே
இரண்டே,
தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க் கும்மே
மூன்றே,
கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே
நான்கே,
அணிநிற வோரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றந் தேன்சொரி யும்மே
வான்க ணற்றவன் மலையே வானத்து
மீன்க ணற்றதன் சுனையே யாங்கு
மரந்தொறும் பிணித்த களிற்றினி ராயினும்
புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினும்
தாளிற் கொள்ளலிர் வாளிற் றாரலன்
யானறி குவனது கொள்ளு மாறே
சுகிர்புரி நரம்பிற் சீறியாழ் பண்ணி
விரையொலி கூந்தனும் விறலியர் பின்வர
ஆடினிர் பாடினிர் செலினே
நாடுங் குன்று மொருங்கீ யும்மே' (புறம் - ௧௦௯)

எனவரும்.

அன்றியும் முரணிய புறத்தோன் அணங்கிய பக்கமும் என்பது — முறைகூறியதல்லாமலும் மாறுபட்ட புறத்தரசன் வருந்திய பக்கங் கூறுதலும் என்றவாறு.

உதாரணம்

'நஞ்சுடை வாலெயிற் றைந்தலை சுமந்த
வேக வெந்திற னாகம் புக்கென
விசும்புதீப் பிறப்பத் திருகிப் பசுங்கொடிப்
பெருமலை விடரகத் துருமெறிந் தாங்குப்
புள்ளுறு புன்கண் டீர்த்த வெள்வேற்
சினங்கெழு தானைச் செம்பியன் மருக
கராஅங் கலித்த குண்டுகண் ணகழி
யிடங்கருங் குட்டத் துடனொடுங் கோடி
யாமங் கொள்பவர் சுடர்நிழற் கதூஉங்
கடுமுரண் முதலைய நெடுநீ ரிலஞ்சிச்
செம்புறழ் புரிசைச் செம்மன் மூதூர்
வம்பணி யானை வேந்தகத் துண்மையி
னல்லவென் னாது சிதைத்தல்
வல்லையா னெடுந்தகை செருவத் தானே' (புறம் - ௩௭)

எனவரும்

திறப்பட ஒருதான் மண்டிய குறுமையும் என்பது — வலிப்பட ஒருதானாகிச் சென்ற குறுமையினைக் கூறுதலும் என்றவாறு.

உதாரணம்

'கிண்கிணி களைந்தகா லொண்கழ றொட்டுக்
குடுமி களைந்த நுதல் வேம்பி னொண்டளிர்
நெடுங்கொடி யுழிஞைப் பவரொடு மிலைந்து
குறுந்தொடி கழித்தகைச் சாபம் பற்றி
நெடுந்தேர்க் கொடிஞ்சி பொலிய நின்றோன்
யார்கொல் வாழ்கவவன் கண்ணிதார் பூண்டு
தாலி களைந்தன்று மிலனே பால்விட்
டயினியு மின்றயின் றனனே வயின்வயி

னுடன்றுமேல வந்த வம்ப மள்ளரை
வியந்தன்று மிழிந்தன்று மிலனே யவரை
யழுந்தப் பற்றி யகல்விசும் பார்ப்பெழக்
கவிழ்ந்துநிலஞ் சேர வட்டதை
மகிழ்ந்தன்று மலிந்தன்று மதனினு மிலனே' (புறம்-எஎ)

எனவரும்.

உடன்றோ வரு பகை பேணார் ஆர் எயில் என்பது — * வெகுண்டோரது வருகின்ற பகையைப் பேணாராகி அமைந்த எயில் உழிஞை கூறுதலும் என்றவாறு.'

உதாரணம்

'மயிற்கணத் தன்னார் மகிழ்தேற லூட்டக்
கயிற்கழலார் கண்கனல் பூப்ப — வெயிற்கண்ணார்
வீயப்போர் செய்தாலும் வென்றி யரிதரோ
மாயப்போர் மன்னன் மதில்' (வெண்பா உழி-கக)

எனவரும்

இவை உளப்பாட்டச் சொல்லப்பட்ட நாலிருவகைத்தும் உழிஞை எனக் கூட்டி முடிக்க (௧௦)

௬௬. குடையும் வாளு நாள்கோ ளன்றி
மடையமை யேணிமிசை மயக்கமுங் கடைஇச்
சுற்றம ரொழிய வென்றுகைக் கொண்டு
முற்றிய முதிர்வு மன்றி முற்றிய
வகத்தோன் வீழ்ந்த நொச்சியு மற்றதன்
புறத்தோன் வீழ்ந்த புதுமை யானு
நீர்ச்செரு வீழ்ந்த பாசியு மதாஅன்
றூர்ச்செரு வீழ்ந்த மற்றதன் மறனு
மதின்மிசைக் கிவர்ந்த மேலோர் பக்கமு
மிகன்மதிற் குடுமிகொண்ட மண்ணு மங்கலமும்

* 'வெகுண்டு வருகின்ற பகையைப் பேணாவாரெயி லுழிஞை' எனவும் பாடம்.

வென்ற வாளின் மண்ணோ டொன்றத்
தொகைநிலை யென்னுந் துறையொடு தொகைஇ
வகைநான் மூன்றே துறையென மொழிப.

இதுவும் உழிஞைப் பகுதியே கூறுதல் நுதலிற்று.

இதன் பொருள் — குடை நாள் கோள் முதலாகச் சொல்லப்பட்ட பன்னிரண்டு துறையும் உழிஞைக்கு உரிய துறை என்றவாறு.

எனவே மேற்சொல்லப்பட்டவற்றின் விரியும் பன்னிரண்டு உண்டு என்றவாறும்.

குடையும் வாளும் நாள் கோள் என்பது — குடைநாட்கோள் வாணாட்கோள் என வருவனவும் என்றவாறு.

உதாரணம்

'நெய்யணிக செவ்வே நெடுந்தோ நிலைபுக்க
கொய்யுளைமா கொல்களிறு பண்விடுக — வையகத்து
முற்றக் கடியரண மெல்லா முரணவிந்த
கொற்றக் குடைநாட் கொள' (வெண்பா. உழி - உ)

என வரும். இது குடைநாட்கோள்.

'வாணாட் கொளலும் வழிமொழிந்து வந்தடையாப்
பேணார் பிறைதொடும் பேமதிற் — பூணா
ரணிகொள் வனமுலையா ராடரங்க மேறிப்
பிணிகொள்பே யாடும் பெயர்ந்து' (வெண்பா. உழி-ங)

என வரும். இது வாணாட்கோள்.

அன்றியும் மடை அமை ஏணி மிசை மயக்கமும் என்பது — அல்லாமலும் மதிலிட்டத்து மடுத்தல் அமைந்த ஏணி சாத்தி அதன்மேல் பொரும் போர் மயக்கமும் என்றவாறு.

உதாரணம்

'சுடுமண் ணெடுமதில் சுற்றிய பிரியார்
கடுமுர ணெஃகங் கழிய — வடுமுர
ணறிஞ ரன்றி பரவு முடிமைபும்போ
லெறிஞ ரீணி பலர்' (வெண்பா உழி. கக)

எனவரும்.

'அன்றியும்' என்றதனை எனிர் சாத்தலன்றி உடம்பு உயத்துப் பற்றிப் போய்ப் பொருதலும் கொள்ளப்படும்.

உதாரணம்

'மையணற் காளை வலனறரிய' (சிற்றடக்கம்)

என்னுஞ் சிற்றடக்கத்துக் குறிஞ்சியில் பெருமாட்டி நோக்கினை

'திசைமயி லூட்டிய வுடைபுறு நோக்கினை
ரசைஇய வள்ளல் வழிப்படக் கடைஇ'

என வருதல் காண்க.

கடைஇச் சுற்றமர் ஒழிய வென்று கைக்கொண்டு முற்றிய முதிர்வும் என்பது — வளைத்துச் சுற்றமர் ஒழிய வென்று கைக்கொண்டு முற்றிய முதிர்வும் என்றவாறு.

உதாரணம்.

'காலை முரச மதிலியம்பக் கண்கனன்று
வேலை விறல்வெய்யோ னோக்குதலு — மாலை
யடுக மடிசிலென் றம்மதிலு ளிட்டார்
தொடுகழலார் மூழை துடுப்பு' (வெண்பா உழி-உங)

எனவரும்.

அன்றி முற்றிய அகத்தோன் வீழ்ந்த நொச்சியும் என்பது — அஃது அல்லாமல் முற்றப்பட்ட அகத்திலுள்ளான் வீழ்ந்த நொச்சியும் என்றவாறு.

உதாரணம்

'நீரற வறியா நிலமுதற் கலந்த
கருங்குரு ளைச்சிக் கண்ணார் குவளைப்பூ
மெல்லிழை மகளி ரைதக லல்குற்
றொடலை யாகவுங் கண்டனம் இனியே
வெருவரு குருதியொடு மயங்கி யுருக்கரந்
தொறுவாய்ப் பட்ட தெரியல் ஊரன
செத்துப் பருந்துண் டுவப்பயாங் கண்டனம்
மறம்புகன் மைந்தன் மலைந்த மாறே' (புறம் - உஎக)

எனவரும்

மற்றதன் புறத்தோன் வீழ்ந்த புதுமையானும் என்பது — அந் நொச்சியின் புறத்ததாகிய உழிஞையினை யுடையோன் வீழ்ந்த புதுமையும் என்றவாறு

உதாரணம்

'கோடுயர் வெற்பி னிலங்கண் டிறைகருதுந்
தோடுகொள் புள்ளினந் தொகையேய்ப்பப் — கூடார்
முரணகத்துப் பாற் முழுவுந்தோ னண்ணல்
...ணகத்துப் பாய்ந்திழிந் தார்'
(வெண்பா உழி - உ௦)

எனவரும்

நீர்ச்செரு வீழ்ந்த பாசியும் என்பது — கிடங்கின் உளதாகிய போரினகத்தே வீழ்ந்த பாசியும் என்றவாறு

உதாரணம் :

'நாவாயுந் தோணியு மேல்கொண்டு நள்ளாதா
ரோவார் விலங்கி யுடலவும் — பூவா
ரகழி பரந்தொழுகு மங்குருதிச் சேற்றுப்
பகழிவாய் வீழ்ந்தார் பலர்' (வெண்பா உழி - கஎ)

எனவரும்.

அதான்று ஊர்ச்செரு வீழ்ந்த மற்றதன் மறனும் என்பது — அப்பொழிய ஊர்ச் செருவினகண் வீழ்ந்த அப்பாசி மறனும் என்றவாறு

உதாரணம்

'பாயினார் மாயும் வகையறாப் பல்காப்பு
மேயினார் செய்வ விலங்கினர் — ஆயினார்
ஒன்றி யவர் ஊர்ப்புலத் தூர்ந்தார் தாக்கி
வென்றி படர விருந்து' (வெண்பா நொச்சி - உ)

எனவரும்

மதில் மிசைக்கு இவர்ந்த மேலோர் பக்கமும் என்பது — மதில் மேற்கோட்டுப் பாய்ந்த மதிலோர் பக்கமும் என்றவாறு

உதாரணம்

'அகத்தன வார்கழல் நோன்றாள் அரணின்
புறத்தன போர்மலைந்த நோன்றா — ளிறத்தழீஇத்
தோட்குரிமை பெற்ற துணையமைந்தார் பாராட்ட
வாட்குரிசில் தானுவந்த தென' (வெண்பா நொச்சி - எ)

எனவரும்

இகல் மதில் குடுமி கொண்ட மண்ணுமங்கலமும் என்ப்து — சயமுடன் இகலி மதிலை நமரின் அட்டு டுவன புதுக்கலம் கொண்டாடி மண்ணுமங்கலமும் என்றவாறு

உதாரணம்

'எங்கண் மலர் வெயிற்குயிர் கூடிய
மங்கல நாளயர் மகிழ்தூங்க — கொங்கலர்தார்ச்
செய்கழற்பூண் மன்னன் மண்ணே செவ்வடிக்கீழ் வைகினவே
மொய்கழற்பூண் மன்னர் முடி'
(வெண்பா. உழிஞை - உஅ)

எனவரும்

வென்ற வாளின் மண்ணோடு ஒன்ற என்பது — வென்ற வாளின் மண்ணுமங்கலத்துடன் பொருந்த என்றவாறு

உதாரணம்

> 'தீர்த்தநீர் பூவொடு பெய்து திசைவிளக்கக்
> கூர்த்தவாண் மண்ணிக் கொடித்தேரான் — போர்த்துப்
> பிடியார் பணைத்துவைப்ப விம்மதிலுள் வேட்டான்
> புடையார் நிறையப் புக.' (வெண்பா உழிஞை - ௨௭)

எனவரும்.

தொகைநிலை என்பது — * அகமதில் அழித்தமையான் மற்றுள்ள † [illegible] மதில் வரைப்பில் மாறுபட்ட வேந்தர் முரண் அவிந்தபடி யடைதல் என்றவாறு.

உதாரணம்

> 'வென்றுகலந் தரீஇயர் வேண்டுபுலத் திறுத்தவர்
> வாடா யாணர் நாடுதிறை கொடுப்ப
> நல்கினை யாகுமதி யெம்மென் றருளிக்
> கல்பிறங்கு வைப்பிற் கடறை யாத்தநின்
> றொல்புகழ் மூதூர்ச் செல்குவை யாயிற்
> செம்பொறிச் சிலம்பொ டணித்தழை தூங்கு
> மெந்திரத் தகைப்பி னம்புடை வாயிற்
> கோள்வன் முதலைய குண்டுகண் ணகழி
> வானுற வோங்கிய வளைந்துசெய் புரிசை
> யொன்னாத் தெவ்வர் முனைகெட விலங்கி
> நின்னிற் றந்த மன்னெயி லல்லது
> முன்னும் பின்னுநின் முன்னோ ரோம்பிய
> வெயின்முகப் படுத்தல் யாவது வளையினும்
> பிறிதாறு சென்மதி சினங்கெழு குருசி
> லெழூஉப்புறந் தரீஇப் பொன்பிணிப் பலகைக்
> குழூஉநிலைப் புதவிற் கதவுமெய் காணிற்
> றேம்பாய் கடாத்தொடு காழ்கை நீவி
> வேங்கை வென்ற பொறிகிளர் புகர்நுத
> லேந்துகை சுருட்டித் தோட்டி நீவி

* 'அம்மதி லழித்தமையான்' எனவும் பாடம்.

† 'மற்றுள்ள மதில்கள் வரைப்பின் மாறுபட்ட' எனவும் பாடம்.

மேம்படு வெல்கொடி நுடங்கத்
தாங்க லாகா ஆங்குநின் களிறே' (பதிற்றுப். ௯௨)

எனவரும்.

என்னுந் துறையொடு தொகைஇ வஞ்சி வகை நான்மூன்றே துறை என மொழிப புலவர் என்று கூட்டி முடிக்க. (௰௧)

௭0. தும்பை தானே நெய்தலது புறனே
மைந்து பொருளாக வந்த வேந்தனைச்
சென்று தலையழிக்குஞ் சிறப்பிற் றென்ப.

இது தும்பைத் திணையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — தும்பை என்னும் புறத்திணை நெய்தல் என்னும் அகத்திணைக்குப் புறனாம்; அது வலிமை பொருளாகப் போர் கருதி வந்த அரசனைச் சென்று அவனைத் தலைமை அழிக்கும் சிறப்பினையுடைத்து என்ப என்றவாறு.

இதனானே,

'எதிரூன்றல் காஞ்சி' (பிங்க அநுபோக - ௩௭௩)

என்பாரை மறுத்தவாறு அறிக. அதற்கு இது புறனாய வாறு என்னையெனின், இருபெரு வேந்தரும் ஒருகளத்துப் பொருதலின் அதற்கு இடம் காடும் மலையும் கழனியும் ஆகாமையானும், களரும் மணலும் பரந்த வெளிநிலத்துப் பொருதல் வேண்டுதலானும், அந்நிலம் கடல் சார்ந்த வழியல்லது இன்மையானும், நெய்தற்கு ஓதிய எற்பாடு போதத் தொழிற்கு * முடிவாதலானும், நெய்தற்குப் புறனாயிற்று என்க. (௰௨)

* 'முடியாதலானும்' எனவும் பாடம்.

௭௧. கணையும் வேலுந் துணையுற மொய்த்தலிற்
சென்ற வுயிரி னின்ற யாக்கை
யிருநிலந் தீண்டா வருநிலை வகையோ
டிருபாற் பட்ட வொருசிறப் பின்றே.

இது தும்பைத் திணையின் சிறப்பியல் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — இது மேலனபோல ஒருபாற்கு மிகுதலின்றி இருவகையினார்க்கும் ஒத்த சிறப்பினபாற் பட்டதாம் ஒருவாமாட்டு மிகுதல் இல்லை சென்ற உயிரின் நின்ற யாக்கை என்றவாறு.

கணையும் வேலும் பல துணையாகக் கொண்டு பொருதலின் காரணமாக நின்ற யாக்கை என ஒட்டி உரைக்க. இருநிலந் தீண்டா அருநிலை வகையாவது — நீர் அட்டை காலைப்பட்டு உடலினின்று உயிர் பிரிக்கப் படுமாறு இருபாற் படுக்கப்படுப அற்றுத் துண்டம் இணைதல் போன்று ஆடல் ஒத்த பண்பினை யுடையது இப்பகுதி என்க. இக்கருத்து ஒட்டிச், சொற்கு ஏற்ற பொருள் பெய்து உரைக்க. மேல் வருவனவற்றிற்கும் இஃது ஒக்கும். (௭௧)

௭௨. தானை யானை குதிரை யென்ற
நோனா ருட்கு மூவகை நிலையும்
வேன்மிகு வேந்தனை மொய்த்தவழி யொருவன்
றான்மீண் டெறிந்த தார்நிலை யன்றியு
மிருவர் தலைவர் தபுதிப் பக்கமு
மொருவ னொருவனை யுடைபடை புக்குக்
கூழை தாங்கிய *வெருமையும் †படையறுத்துப்

* 'பெருமையும்' எனவும் பாடம்

† 'படை மறுத்துப்' எனவும் பாடம்

பாழி கொள்ளு மேமத் தானுங்
களிறெறிந் தெதிர்ந்தோர் பாடுங் களிற்றொடு
பட்ட வேந்தனை யட்ட வேந்தன்
வாளோ ராடு மமலையும் வாள்வாய்த்
திருபெரு வேந்தர் தாமுஞ் சுற்றமு
மொருவரு மொழியாத் தொகைநிலைக் கண்ணுஞ்
செருவகத் திறைவன் வீழ்வுறச் சினைஇய
வொருவன் மண்டிய நல்லிசை நிலையும்
பல்படை யொருவற் குடைதலின் மற்றவ
னொள்வாள் வீசிய நூழிலு முளப்படப்
புல்லித் தோன்றும் பன்னிரு துறைத்தே.

இது தும்பைத் திணைக்கு உரிய துறையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — தானைநிலை முதலாக நூழில் ஈறாகப் பன்னிரண்டு துறையினை உடைத்து தும்பைத் திணை என்றவாறு.

தானை யானை குதிரை என்ற நோனார் உட்கும் மூவகை நிலையும் என்பது — பகைவர் உட்கப்படுகின்ற தானையும் யானையும் குதிரையுமாகிய மூவகைப்பட்டவற்றின் நிலையும் என்றவாறு.

அவற்றுள் தானைநிலை

'வெண்குடை மதிய மேனிலாத் திகழ்தரக்
கண்கூ டிறுத்த கடன்மருள் பாசறைக்
குமரிப்படை தழீஇக் கூற்றுவினை யாடவர்
தமர்பிற ரறியா வமர்மயங் கழுவத்
திறையும் பெயருந் தோற்றி நுமரு
ணணமுறை தபுதீர் வம்மி னீங்கெனப்
போர்மலைந் தோரு சிறப யாவரு

மரக்கீழ் மண்ணியிற் குறுகார்
நீரொகாழ் மாலையெய் கேளவணப் பிறரே'

(புறம் - ௨௯௪)

எனவரும்.

'கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்' (திருக்குறள் படைச்செ - ௪)

என்பதும் அது.

'நறுவிரை துறந்த நரைவெண் கூந்தல்
இரங்கா முன்னை திரங்குகண் வறுமுலைச்
செம்முது பெண்டின் காதலஞ் சிறாஅன்
குடப்பால் சில்லுறை போலப்
படைக்கு ஓரெல்லான் ஆயினனே' (புறம் - ௨௭௬)

என வருவதும் இதன்பாற் படும்.

'...றுகொள் பெருவிறல் வேந்துவப்பத் தானவற்
கொற்கத் துரவின் ஞெகுமாற பிற்பிற
பல்புக செமார் தலைத்தார் பலரொடு
யானையை வாட்கையுட் பெயுமா லன்னோரா
மேன்மை யிழப்பப் பழிவருவ செய்பவோ
தானேயும் போகு முயிர்க்கு'

என்பது ஒருவன் கூற்று இதன்பாற் படும்.

யானைநிலை யாவது — யானையின்நிலை கூறுதல் என்றவாறு.

உதாரணம்

'கையது கையோ டொருதுணி கோட்டது
மொய்யிலைக் கேள மன்னர் முடித்தலை — பைய
வுயாவொடு கை நீட்டிச் செல்லுமே வெஞ்கோன்
வயவெம்போர் மாறன் களிறு'

எனவரும்.

குதிரைநிலை யாவது — குதிரையின்நிலை கூறுதல் என்றவாறு.

உதாரணம்

'நிலம்பிறக் கிடுவது போற்குளம்பு கடையூ
உள்ள மொழிக்கும் கொட்பின் மானமே
வெள்ளுநாச் செருக்கும் காளை கூர்த்த
செருவே வெம்மை செருநர்க்கு விளைப்ப
வாட்டிக் காண்பு வரும்பு செருநை
புடைசால் சிறப்பின் வேந்தன் முன்னாக
கணைபொரு முந்நீர்க் கிளையிற் போர்த்துயா
கயந்தலை மடப்பிடி புலம்ப
விடுமருப் பியானை பெறிச் செற்றிக' (புறம் - ௨0௫)

எனவரும்.

வேல் மிகு வேந்தனை மொய்த்தவழி ஒருவன் தான் மீண்டு எறிந்த தார்நிலையும் என்பது — வேலால் வென்றி மிகுவேந்தனைக் கைமேற்கு அடையறுக்க கண்டு முகம்புக்குச் சென்ற வேந்தனை மாற்றார் சூழ்ந்த விடத்து வேந்தன் பாலினைப் பிறரோ சிலவன் தன நிலைவிட்டுத் தன் வேந்தன்மாட்டு அடுத்துத் துணையாய மாற்றாரை எறிந்த சார்நிலைக் கண்ணும் ஒரு தன்னிழியும் என்றவாறு.

உதாரணம்

'நிரப்பாது கொடுக்கும் செல்வமு மிலனே
யில்லென மறுக்குஞ் சிறுமையு மிலனே
யிறையுறு விழுமந் தாங்கி யமரகத்
திரும்புசுவைக் கொண்ட விழுப்புண்ணோய் தீர்ந்து
மருந்துகொண் மரத்தின் வாள்வடு மயங்கி
வடுவின்று வடிந்த யாக்கையன் கொடையெதிர்ந்
தீர்ந்தை யோனே பாண்பசிப் பகைஞ
னின்மை தீர வேண்டி னெம்மொடு
நீயும் வம்மோ முதுவா யிரவல
யாந்தன் னிரக்குங் காலைத் தானெம்
முண்ணா மருங்குல் காட்டித் தன்னூர்க்

கருங்கைக் கொல்லனை யிரக்கும்
திருந்திலை நெடுவேல் வடித்திசி னெனவே (புறம்-கஅ0)

எனவரும். இதனுட் பாணன் அது தோன்றப் புகழ்ந்த வாறு காண்க. பிறவும் அன்ன.

இருவர் தலைவர் தபுதிப் பக்கமும் என்பது — படை நின்று பொரா நின்று தலைவர் இருவரும் தம்முட் பொருது *படுதற்கண்ணும் என்றவாறு.

தபுதல் - சாதல், அப்பக்கம் - தபுதிப்பக்கம்.

உதாரணம்

'காய்ந்து கடுங்கனற்றுக் கண்கனலக் கைகூடி
வேந்த ரிருவரும் விண்படர — வேந்து
பொருபடை மன்னர் புறங்கொடாப் போந்தி
யிருபடையு நீங்கா விகல்' (வெண்பா தும்பை - கஉ)

எனவரும்.

ஒருவன் ஒருவனை உடைப்படைப் புக்குக் கூழை தாங்கிய எருமையும் என்பது — ஒருவன், தன் கெடுபடையின்கண் புக்குப் பொருதாரைப் படைவீரனைக் கூழையொடு தாங்கிய பெருமையின்கண்ணும் என்றவாறு.

உதாரணம்

'கோட்டங் கண்ணியுங் கொடுந்திரை யாடையும்
வேட்டது சொல்லி வேந்தனைத் தொடுத்தலு
மொத்தன் றுமாதோ விவற்கே செற்றிய
திணிநிலை யலறக் கூழை போழ்ந்துதன்
வடிமா ணெஃகங் கடிமுகத் தேந்தி
யோம்புமி னோம்புமி னிவணென வோம்பாது
தொடர்கொ ளியானையிற் குடர்கா றட்பக்
கன்றமர் கறவை மான
முன்சமத் தொழிந்தநந் தோழற்கு வருமே'
(புறம் - உஎ௫)

எனவரும்.

* 'பெருமையானும்' என்னும் பாடம்.

படை அறுத்துப் பாழிகொள்ளும் ஏமத்தானும் என்பது — கருவியை * அறுத்து மல்லினைக் கொள்ளும் ஏமத்தானும் என்றவாறு.

உதாரணம்

"நீலக் கச்சைப் பூவா ராடைப்
பீலிக் கண்ணிப் பெருந்தகை மறவன்
மேல்வருங் களிற்றொடு வேறு துரந்தினியே
தன்னுந் துரக்குநன் போலு மொன்னலர்
எஃகுடை வலத்தர் மாவொடு பரத்தரக்
கையின் வாங்கித் தழீஇ
மொய்ம்பி னூக்கி மெய்க்கொண் டனனே" (புறம்-உஎச)

எனவரும்.

களிறு எறிந்து எதிர்ந்தோர் பாடும் என்பது — களிறு எறிந்து எதிர்ந்தோர் பட்ட வழியும் என்றவாறு.

உதாரணம்

"ஆசா கெந்தை யாண்டுளன் கொல்லோ
குன்றத் தன்ன களிற்றொடு பட்டோன்
வம்பலன் போலத் தோன்று முதுக்காண்
வேனல் வரியணில் வாலத் தன்ன
கான வூகின் கழனுகு முதுவீ
விரியல் வான்குழற் சுரியற் றங்க
நீரும் புல்லு மீயா துமணர்
யாருமி லொருசிறை முடத்தொடு துறந்த
† வாழா வன்பகட் டேய்ப்பத் தெவ்வர்
பேருயிர் கொள்ளு மாதோ வதுகண்டு
வெருசின யானை வேந்தனு மிக்களத்து
தெருளசலிற் சிறந்தது பிறிதொன் றிலலெனப்
பண்கொளற் கருமை நோக்கி
நெஞ்சற வீழ்ந்த புரைமை யோனே" (புறம் - ௩0எ)

எனவரும்.

* மறுத்து எனவும் பாடம்

† வாழா வான்பகடு எனவும் பாடம்

களிற்றொடு பட்ட வேந்தனை அட்ட வேந்தன் வாளோர் ஆடும் அமலையும் என்பது — களிற்றுடன் போந்து மலைந்துபட்ட இறைவனை மிக்க வேந்தன் வாட் படையாளர் நெருங்கியாடிப் பாடும் பாட்டும் என்றவாறு.

அமலை — நெருங்கல், அத்துறை ஆயபாட்டுக்கு ஏற் புடைத்தாயிற்று.

உதாரணம்

'விழவுவீற் றிருந்த வியலு ளாங்கண்
கோடியர் முழவின் முன்ன ராடல்
வல்லா னல்லன் வாழ்கவவன் கண்ணி
வலம்படு முரசந் துவைப்ப வாளுயர்த்
திலங்கும் பூணன் பொலங்கொடி யுழிஞையன்
மடம்பெரு மையி னுடன்றுமேல் வந்த
வேந்துமெய்ம் மறந்த வாழ்ச்சி
வீந்துகு போர்க்களத் தாடுங் கோவே' (பதிற்றுப் - ருசு)

எனவரும்.

வாள்வாய்த்து இருபெரு வேந்தர் தாமும் சுற்றமும் ஒருவரும் ஒழியாத் தொகைநிலைக் கண்ணும் என்பது — இருபெரு வேந்தர் தாமும் சுற்றமும் வாட்டொழிலின் முற்றி ஒருவரும் ஒழியாமல் பட்டவிடத்தும் என்றவாறு.

உதாரணம்

'வருதார் தாங்கி யமர்மிகல் யாவது
பொருதாண் டொழிந்த மைந்தர் புண்டொட்டுக்
குருதிச் செங்கைக் கூந்தல் நீவி
நிறங்கிளர் உருவிற் பேஎய்ப் பெண்டிர்
எடுத்தெறி யனந்தற் பறைச்சீர் தூங்கப்
பருந்தருந் துற்ற தானையொடு செருமுனிந்து
மறத்தின் மண்டிய வயப்போர் வேந்தர்
தாமாய்ந் தனரே குடைதுளங் கினவே
புரைசால் சிறப்பின் முரசொழிந் தனவே
பன்னூ றடுக்கிய வேறுபடு பைஞ்ஞில

மிடங்கெட வீண்டிய வியன்கட் பாசறைக்
களங்கொளற் குரியோ ரின்றித் தெறுவர
வுடன்வீழ்ந் தன்றா லமரே பெண்டிரும்
பாசடகு மிசையார் பனிநீர் மூழ்கார்
மார்பகம் பொருந்தி யாங்கமைந் தனரே
வாடாப் பூவி னிமையா நாட்டத்து
நாற்ற வுணவி னோரு மாற்ற
வரும்பெற லுலகம் நிறைய
விருந்துபெற் றனரால் பொலிகநும் புகழே.' (புறம் - சுஉ)

என வரும்.

செரு அகத்து இறைவன் வீழ்வுழிச் சினைஇய ஒருவன் மண்டிய நல் இசை நிலையும் என்பது — போர்க்களத்துத் தன் வேந்தன் வீழ்ந்துபட அதுகண்டு கறுக்கொண்டெழுந்த தலைவன் — ஒரு வீரன், நெருங்கிப் பொருது வந்த நற்புகழைப் பெறும் நிலைமையினானும் என்றவாறு.

உதாரணம்:

'வான மிறைவன் படாக்கெனப் பாழ்ப்பப்பா
மானமே நெய்யா மறம்விறகாத் — தேனிருங்
கள்ளவிழ் கண்ணிக் கழல்வெய்யோன் வாளம
ரொள்ளழலுள் வேட்டா னுயிர்.'
(வெண்பா. தும்பை - உகூ)

என வரும்.

பல்படை ஒருவற்கு உடைதலின் மற்றவன் ஒள்வாள் வீசிய நூழிலும் என்பது — பல்படை ஒருவற்குக் கெடுதலின் மற்றவன் தன் ஒள்ளிய கைவாள் வீசிய நூழிலும் என்றவாறு.

என்றது பல்லரைக் கொல்லுதல் அதனைச் சொற்றலும் என்றவாறும்.

உதாரணம்:

'ஒருவனை யொருவ னடுதலுந் தொலைதலும்
புதுவ தன்றிவ் வுலகத் தியற்கை

யினறி னூஙகோ கேளலந திரளரை
மனற வேமபின மாசசினை யொணடளிர
நெடுஙகொடி யுழிஞைப பவரொடு மிடைநது
செறியத தொடுதத தேமபாய கணணி
யொலியன மாலையொடு பொலியச சூடிப
பாடின றெணகிணை கறஙகக காணடக
நாடுகெழு திருவிற பசுமபூட செழியன
பீடுஞ செமமலு மறியார கூடிப
பொருது மெனறு தனறலை வநத
புனைகழ லெழுவர நலவல மடஙக
வொருதா னாகிப பொருதுகளத தடலே' (புறம - ௭௬)

எனவரும.

பல வுயிரை யொருவன கொனறதனை நூழில என்று ரைததல மதுரைககாஞசியுள —

'வளளை நீககி வயமீன முகநது
கொளளை சாறறிய கொடுமுடி வலையர
வேழப பழனதது நூழி லாட்டு'
(மதுரைககா - ௨௫௫ - ௨௫௭)

எனவரும பொருள நோககி யறிக

இவை உளபபடத தும்பைததிணை பன்னிரு துறைத தாய்ப புலவித தோன்றும என முடிவு கட்டுக (௰௪)

௭௫. வாகை தானே பாலையது புறனே
தாவில் கொள்கைத் தத்தங் கூற்றைப்
பாகுபட மிகுதிப் படுத்த லென்ப.

இது வாகைத திணையாமாறு உணாததுதல நுதலிறறு.

இதன் பொருள் — வாகை எனனும புறத்திணை பாலை எனனும அகததிணையது புறனாம அது கேடிலலாத கோடபாட்டினை யுடைய தததமக்குள்ள இயல்பை வேறுபட மிகுதிப படுததல் எனப எனறவாறு.

அத்தற்று இது புறனாயவாறு என்னையெனின், பாலையாவது தனக்கென ஒரு நிலனின்றி எல்லா நிலத்தினும் காலம்பற்றிப் பிறப்பது போன்று இதுவும் எல்லா நிலத்தினும் எல்லாக் குலத்தினும் காலம் பற்றி நிகழ்வதாதலினானும், ஒத்தார் இருவர் புணர்ச்சியின்றும் புகழ்ச்சி காரணமாகப் பிரியுமாறுபோலத் தன்னொடு ஒத்தாரினின்றும் நீங்கிய புகழ்ப்படுதலானும் அத்தற்று இது புறனாயிற்று. அஃதாமாறு வருகின்ற சூத்திரங்களானும் விளங்கும் ()

எச. அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமு
மைவகை மரபி னரசர் பக்கமு
மிருமூன்று மரபி னேனோர் பக்கமு
மறுவில செய்தி மூவகைக் காலமு
நெறியி னாற்றிய வறிவன் றேயமு
நாலிரு வழக்கிற் றாபதப் பக்கமும்
பாலறி மரபிற் பொருந ரண்ணு
மனைநிலை வகையொ டாங்கெழு வகையாற்
றொகைநிலை பெற்ற தென்மனார் புலவர்.

இது வாகைத்திணை பாகுபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — பார்ப்பனப் பக்கம் முதலாகப் பொருநர் பக்கம் ஈறாகச் சொல்லப்பட்டனவும் அத்தன்மைத்தாகிய நிலைவகையோடு ஆங்குக் கூட்ட ஏழ் வகையாற் றொகைநிலை பெற்றதென்ப வாகைத்திணை என்றவாறு.

எனவே தொகைநிலை பல என்பது பெறுதும்.

அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும் என்பது — ஆறு திறனாகிய அந்தணர் பக்கமும் என்றவாறு.

அறுவகைப் பட்ட பக்கம் எனக் கூட்டுக. அவை யாவன — ஓதல் - ஓதுவித்தல், வேட்டல் - வேட்பித்தல், ஈதல் - ஏற்றல் என்பன.

என்னை ? சான்றோர்,

'ஓதல வேடடல லவைபிறாச செயத
லீத லேற்றலென ருறுபுரிந தொழுகு
மறமபுரி யாநதணா' (பதிறறு - உ௪)

என ஒதினமையின்.

இவவொழுககததான் மிகுதல வாகையாம 'பாரப் பனப பககமும்' என்றதனால அப பொருளின மிகுதி கூற லும இதனபாறபடும இது மேலவருவனவறறிறகும ஒக்கும

ஓதல ஆவது — கலவி பயிறல

உதாரணம

'இம்மை பயககுமா லீயக குறைவினறு
றமமை விளககுமாற் றுமுளராக கேடினறு
லெமமை யுலகததும யாஙகாணேங கலவிபோன
மமம ரறுககு மருநது' (நாலடி - கலவி - உ)

எனவரும இது கலவியின் விழுபபங கூறிறறு

'ஆறறவுங கறறா ரறிவுடையா ரஃதுடையார
நாறறிசையுஞ் செலலாத நாடிலலை யநநாடு
வேறறுநா டாகா தமவேயா மாதலா
லாறறுணா வேணடுவ திலல' (பழமொழி - ககசு)

இது கறறோரககு உளதாகும விழுபபங கூறிறறு இஃது ஏனைய மூன்று வருணததாரககும ஒககும.

ஓதுவிததல் ஆவது — மறைநூல ஓதுவிததல, கேள் விதத தலைவனுகுதல

உதாரணம

'எணபொருள வாகச செலசசொலலித தானபிறர்வாய்
நுணபொருள் காண்ப தறிவு' (குறள் அறிவு - ௫)

எனவரும். பிறவும் அன்ன.

வேட்டல் ஆவது — வேள்வித் தலைவனை யின்றி யாகாதி இயற்றல்.

உதாரணம்

'நன்றாய்ந்த நீணிமிர்சடை
முதுமுதல்வன் வாய்போகா
தொன்றுபுரிந்த வீரிரண்டி
னாறுணர்ந்த வொருமுதுநூ
லிகல்கண்டோர் மிகல்சாய்மார்
மெய்யன்ன பொய்யுணர்ந்து
பொய்யோராது மெய்கொளீஇ
மூவேழ் துறையு முட்டின்று போகிய
வுரைசால் சிறப்பி னுரவோர் மருக
வினைக்குவேண்டி நீபூண்ட
புலப்புல்வாய்க் கலைப்பச்சை
சுவற்பூண் ஞாண்மிசைப் பொலிய
மறங்கடிந்த வருங்கற்பி
னறம்புகழ்ந்த வலைசூடிச்
சிறுநுதற் பேரகலல்குற்
சிலசொல்லிற் பலகூந்தனி
னிலைக்கொத்தநின் றுணைத்துணைவியர்
தமக்கமைந்த தொழில்கேட்பக்
காஅ டென்றா நாஅ டென்றா
வீரே ழிடமு முட்டாது
நீர்நாண நெய்வழங்கியு
மெண்ணாணப் பலவேட்டு
மண்ணாணப் புகழ்பரப்பியு
மருங்கடிப் பெருங்காலை
விருந்துற்றநின் றிருந்தேந்துநிலை
என்றும்
காண்கதில் லம்ம யாமே குடாஅது
பொன்படு நெடுவரைப் புயலேறு சிலைப்பிற்
பூவிரி புதுநீர்க் காவிரி புரக்கும்

தண்புனற படப்பை யெமமூ ராயினு
நுணடென நினறு மூராது மாடகரு
செலவ லதனை யானே செலலாது
மழையண ணுபப நீடிய நெடுவரைக
கழைவள ரிமயம போல
நிலீஇய ரததைநீ நிலமிசை யானே' (புறம் - கசுசு)

எனவரும் பிறவும் அனன.

வேட்பித்தல் ஆவது — வேளவி செயவித்தல், என்பது ஈனமறை யுணராத இராசதரொரு கூறுபாடுற்ற பொருளை ஈாம அறிந்தவனாக கொணடு இயற்றுவிக்கும் கிரியை முதலியன எனறவாறும்.

உதாரணம்

'ஈரிக்கட விருந்குட்டத்த'

என்ற புறப்பாட்டுள்

'ஆனற கேளவி யடங்கிய கொளகை
ஈானமறை முதலவா சுறற மாக
மனன ரேவல செயய மனனி
வேளவி முற்றிய வாயவாள வேந்தே' (புறம் - உசு)

எனவரும் அபபகல பாரபபார வேட்பிததவாறும் அர சன வேளவியாறும் கணடு கொளக.

ஈதல் ஆவது — இலலென இரந்தோாக்குக் கொடுத் தல்.

உதாரணம்.

'இலலெனனு மெவவ முரையாமை யீதல்
குலனுடையான கணணே யுள' (குறள் ஈகை - ௩)

எனவரும்

ஏறறல ஆவது — கொளவோன் தனது சிறபபிற் குன்றுபட கோடல்.

உதாரணம்

'இரவலர் புரவலை நீயு மல்லை
புரவலர் இரவலர்க் கில்லையு மல்லர்
இரவல ருண்மையுங் காணினி யிரவலர்க்
கீவோ ருண்மையுங் காணினி நின்னூர்க்
கடிமரம் வருந்தத் தந்தியாம் பிணித்த
நெடுநல் யானையெம் பரிசில்
கடுமான் றோன்றல் செல்வல் யானே' (புறம் - கசுஉ)

எனவரும்.

ஐவகை மரபின் அரசர் பக்கமும் என்பது — ஐவகைப்பட்ட அரசர் பக்கமும் என்றவாறு.

அவையாவன ஓதலும், வேட்டலும், ஈதலும், படைவழங்குதலும், குடியோம்புதலும் ஆம். இவற்றுள் முந்துற்ற மூன்றும் மேற்சொல்லப்பட்டன. ஏனைய இரண்டும் இனிக் கூறப்படுவன. அவற்றுள் படை வழங்குதல்

'கடுங்கண்ண கொல்களிற்றாற்
காப்புடைய வெழுமுருக்கிப்
பொன்னியற் புனைதோட்டியான்
முன்புதுரந்து சமந்தாங்கவும்
பாருடைத்த குண்டகழி
நீரழுவ நிவப்புக்குறித்து
நிமிர்பரிய மாதாங்கவும்
மாவஞ் சேர்ந்த புறத்தை தேர்மிசைச்
சாப நோனாண் வடுக்கொள வழங்கவும்
பரிசிலர்க் கருங்கல நல்கவுங் குரிசில்
வலிய வாகுநின் றாடோய் தடக்கை' (புறம் - கச)

என்றவழிக் காண்க.

குடியோம்புதல் வருமாறு

'இருமுந்நீர்க் குட்டமும்
வியன்ஞாலத் தகலமும்
வளிவழங்கு திசையும்

வறிதுநிலைஇய காயமும்
என்றாங்கு
கவையளந் தறியினு மளத்தற் கரியை
யறிவு மீரமும் பெருங்க ணோட்டமுஞ்
சோறுபடுக்குந் தீயொடு
செஞ்ஞாயிற்றுத் தெறலல்லது
பிறிதுதெற லறியாரநின் னிழல்வாழ் வோரே
திருவி லல்லது கொலைவி லறியார்
நாஞ்சி லல்லது படையு மறியார்
திறனறி வயவரொடு தெவ்வர் தேயப்
பிறர்மண் ணுண்ணுஞ் செம்மனின் னாட்டு
வயவுறு மகளிர் வேட்டுணி னல்லது
பகைவ ருண்ணா வருமண் ணினையே
யம்புதுஞ்சுங் கடியரணா
லறந்துஞ்சுஞ் செங்கோலையே
புதுப்புள் வரினும் பழம்புட் போகினும்
விதுப்புற வறியா வேமக் காப்பினை
யனையை யாகன் மாறே
மன்னுயி ரெல்லா நின்னஞ் சும்மே' (புறம் - ௨௦)

எனவரும். 'பக்கம்' என்றதனால் அரசரைப்பற்றி வருவனவற்றிற் கெல்லாம் இதுவே ஓத்தாகக் கொள்க.

இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும் என்பது — ஆறு மரபினையுடைய வணிகர், வேளாளர் பக்கமும் என்றவாறு.

வணிகர்க்கு உரிய ஆறுபக்கமாவன ஓதல் - வேட்டல் - ஈதல் - உழவு - வாணிகம் - நிரையோம்பல் என்பன.

உதாரணம்

'உழுது பயன்கொண் டொலிநிரை யோம்பிப்
பழுதிலாப் பண்டம் பகர்ந்து — முழுதுணர
வோதி யழல்வழிவேட் டோம்பாத வீகையா
னாதி வணிகர்க் கரசு' (வெண்பா. வாகை - ௧௦)

எனவரும்.

வேளாளர்க்கு உரிய ஆறு மரபாவன உழவு - உழவொழிந்த தொழில் - விருந்தோம்பல் - பகடு புறந்தரல் - வேட்டல் - வேதமொழி கல்வியோதல் என்பன.

உதாரணம்

'சுழன்றுமேர்ப் பின்ன துலக மதனா
லுழந்து முழவே தலை' (குறள் உழவு - க)

எனவரும் இஃது உழவின் சிறப்புக் கூறிற்று

'கருமஞ் செயவொருவன் கைதூவே னென்னும்
பெருமையிற் பீடுடைய தில்' (குறள் குடிசெயல் - க)

இஃது உழவொழிந்த தொழில் கூறிற்று

'இரவா ரிரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்' (குறள். உழவு - ௫)

இது விருந்தோம்பல் கூறிற்று

'பகடுபுறந் தருநர் பார மோம்பி' (புறம் - ௩௫)

இது பகடு புறந்தரல் கூறிற்று

'பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பார் விருந்தோம்பி
வேள்வி தலைப்படு வார்' (குறள். விருந்தோம் - ௮)

இது வேட்டல் கூறிற்று.

'நாற்பா லுள்ளுங்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட் படுமே' (புறம் - க௮௩)

இது வேதமொழிந்த கல்வியோதல் கூறிற்று. ஆக இவை ஆறும் வந்தவாறு காண்க

'இருமூன்று மரபி னேனோர்' என ஒருங்கு ஓதினர், குல ஒப்புமையானும் தொழில் விகற்பம மிக்கின்மையானும் வணிகரும் வேளாளரும் ஒரியற் படுவரெனக் கருதி.

இனி வேளாண்மாந்தர்க்கு வேட்டல் ஒழிந்து தென்பார் வழிபாடு ஒன்றனைக் கூட்டி ஆறென எண்ணிட்டு

'இருக்கை யெழலு மெதிர்செலவு மேனை
விடுப்ப வொழிதலோ டின்ன — குடிப்பிறந்தார்
குன்றா வொழுக்கமாகக் கொண்டார் கயவரோ
டொன்று முணர்ப்பாற் றன்று'
(நாலடி குடிப்பிறப்பு - ௪)

என்ற செய்யுளைச் சுட்டுவர். முடியுடை மன்னர் விழையக் காவிதிப்பட்டம் பெற்று அவ்வரசர்க்கு மகட் கொடைக்குரிய வேளாண் மாந்தர் தண்டத் தலைமை பெற்று உழுவித்துண்ணலே மரபாக வுடையராகலின் அன்னோர் பிறர்க்கு வழிபடு பெற்றியுடையராகார். இவ் வேளாளர் கன்னியருட் களவொழுக்கத்துப் பிறந்தார் உழுதுண் வினையுடையராகலின் அவர்க்கு உரித்து என்றலும் ஒன்று. இவற்றுள் ஏற்பது உய்த்துணர்க.

மறுவில் செய்தி மூவகைக் காலமும் நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும் என்பது — மழையும் பனியும் வெயிலும் ஆகிய குற்றமற்ற செயலையுடைய மூவகைக் காலத்தினையும் நெறியினாற் பொறித்த அறிவன் பக்கமும் என்றவாறு.

இனி இறந்தகாலம் முதலாகிய மூன்று காலத்தினையும் நெறியிற் றோற்றிய அறிவன் என்றாலோ எனின் அது முழுதுணர்ந்தோர்க்கு அல்லது புலப்படாமையின் அது பொருளன்று என்க என்னை,

'பனியும் வெயிலுங் கூதிரும் யாவும்
துனியில் கொள்கையொடு நோன்மை யெய்திய
தணிவுற் றறிந்த கணிவன் முல்லை'

எனப் பன்னிருபடலத்துள் ஓதுதலின், ஆகவே மேலதே பொருளாகக் கொள்க. அறிவன் என்றது கணிவனை.

மூவகைக் காலமும் நெறியினால் ஆற்றல் ஆவது — பகலும் இரவும் இடைவிடாமல் ஆகாயத்தைப் பார்த்து

ஆண்டு நிகழும் நிலனும், மினனும், ஊர்கோளும், தூமமும், மின்வீழ்வும், கோணிலையும், மழைநிலையும், பிறவும் பார்த்துக் கூறல் என்பதாம் அந்தணன் வேண்டுதலின் 'ஆற்றிய வறிவன' என்றார்.

உதாரணம்

'புரிவின்றி யாக்கைபோற் போற்றுவ போற்றிப்
பரிவின்றிப் பட்டாங் கறிய — திரிவின்றி
விண்ணிவ் வுலகம் விளைக்கும் விளைவெல்லாம்
கண்ணி யுரைப்பான் கணி' (வெண்பா வாகை - உ0)

என்றார் பின்னூலாரும்.

நாலிரு வழக்கிற் றாபதப் பக்கமும் என்பது — எட்டு வகைப்பட்ட வழக்கினையுடைய தாபதப் பக்கமும் என்றவாறு.

அவையாவன: நீராடல், நிலத்திடைக்கிடத்தல், தோலுடுத்தல், சடை புனைதல், எரி யோம்பல், ஊரடையாமை, கான் உணவு கோடல், தெய்வப்பூசை திதிப்பூசை கோடல் என்பன. என்னை?

'நாப்பலகான மூழ்கி நிலத்தசைஇத் தோலுடையாச்
சோர்சடை தாழச் சுடரோம்பி — யூரடையார்
கானகத்த கொண்டு கடவுள் விருந்தோம்பல்
வானகத் துய்க்கும் வழி' (வெண்பா வாகை - கச)

என்றாராகலின்.

இதனைப் பிறரும்,

'நீஇ ராட னிலக்கிடை கோட
றோஒ லுடுத்த றெல்லெரி யோம்பல்
ஊரடை யாமை யுறுசடை புனைதல்
காட்டி லுணவு கடவுட் பூசை
யேற்ற தவத்தி னியல்பென மொழிப'

என்றார்.

உதாரணம் :

'ஓவத் தன்ன விடனுடை வரைப்பிற்
பாவை யன்ன குறுந்தொடி மகளி
ரிழைநிலை நெகிழ்த்த மள்ளற் கண்டிகுங்
கழைக்க ணெடுவரை யருவி யாடிக்
கான யானை தந்த விறகிற்
கடுந்தெறற் செந்தீ வேட்டுப்
புறந்தாழ் புரிசடை புலர்த்து வோனே' (புறம்-உ௫க)

எனவும்,

'கறங்குவெள் ளருவி யேற்றலி னிறம்பெயர்ந்து
தில்லை யன்ன புல்லென் சடையோ
டள்ளிலைத் தாளி கொய்யு மோனே
யில்வழங்கு மடமயில் பிணிக்குஞ்
சொல்வலை வேட்டுவ னாயினன் முன்னே' (புறம்-உ௫உ)

எனவும் வரும். பிறவும் அன்ன.

பால் அறி மரபின் பொருநர்கண்ணும் என்பது — பாகுபாடு அறிந்த மரபினையுடைய பொருநர்மாட்டும் என்றவாறு.

அஃதாவது, வாளானும் தோளானும் பொருதலும், வென்றி கூறலும் வாகையாம் என்பதாயிற்று.

வாளான் பொருதல்

'ஏந்துவாட் டானை யிரியத் தறைகழித்துப்
போந்துவாள் நின்னும் பொருசமத்து — வேந்த
ரிருங்களி யானை யினம்பிரித் தோட்டக்
கருங்கழலான் கொண்டான் களம்'

எனவரும். (வெண்பா-வாகை உ௯)

மல் வென்றி

'இன்கடுங் கள்ளி னாமூ ராங்கண்
மைந்துடை மல்லன் மதவலி முருக்கி
யொருகான் மார்பொதுங் கின்றே யொருகால்

வருதார் தாங்கிப் பின்னொதுங் கின்றே
நல்கினு நல்கா னாயினும் வெல்போர்ப்
போரருந் தித்தன் காண்கதி லம்ம
பசித்துப் பணைமுயலும் யானை போல
இருதலை யொசிய வெற்றிக்
களம்புகு மல்லற் கடந்தடு நிலையே' (புறம்-௮0)

என வரும்.

அனை நிலை வகையொடு என்பது — வாளானும் தோளானும் பொருது வேறலன்றி அத்தன்மைத்தாகிய நிலைவகையான் வேறல் என்றவாறு.

அவையாவன சொல்லான் வேறலும், பாட்டான் வேறலும், கூத்தான் வேறலும், சூதான் வேறலும், தகர்ப்போர் பூழ்ப்போர் என்பனவற்றால் வேறலும், பிறவும் அன்ன. ஒடு - எண்ணும்மை சுட்டியது.

'விரைந்து தொழில்கேட்கு ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லாரப் பெறின்' (குறள்-சொல்வன்-௮)

இது சொல்வென்றி.

'வண்டுறையுங் கூந்தல் வடிக்கண்ணாள் பாடினாள்
வெண்டுறையுஞ் செந்துறையும் வேற்றுமையால் — பண்
கின்னரம் போலக் கிளையமைத்த தீந்தொடையா[டங்கு
முந்நரம்பு மச்சுவையு மாய்ந்து' (வெண்பா-பெருந்தி-௧௮)

இது பாடல்வென்றி.

'கைகால் புருவங்கண் பாணி நடைதூக்குக்
கொய்பூங்கொம் பன்னாள் குறிக்கொண்டு — பெய்பூப்
படுகளிவண் டார்ப்பப் பயில்வளைக்கின் றாடுந்
தொடுகழன் மன்னன் றுடி' (வெண்பா-பெருந்தி-௧௭)

இஃது ஆடல்வென்றி.

'கழகத் தியலுங் கவற்றி னிலையு
மளகத் திருநுதலா ளாய்ந்து — புழகத்து
பாய வகையாற் பணித்தம் பலவென்றா
ளாய வகையு மறிந்து' (வெண்பா-பெருந்தி-௧௬)

இது சூதுவென்றி.

'இன்கடுங்கள்ளின' (புறம்-அ0)

என்ற புறப்பாட்டுள் மலைவென்றி வருமாறு முன்னர்க் காட்டப்பட்டதாக, அதனுள் வரும்,

'களம்புகு மல்லற் கடந்தடுநிலை'

என்பதை ஏற்குமாறு கொள்க. பிறவும் அன்ன.

ஆக வாகைத்திணையானது ஆங்கு எழு வகையால் தொகைநிலை பெற்றது என்மனார் புலவர் என்று முடிக்க. இது தொகை. (கசு)

எரு. கூதிர் வேனி லென்றிரு பாசறைக்
காதலி னொன்றிக் கண்ணிய வகையினு
மேரோர் களவழி யன்றிக் களவழித்
தேரோர் தோற்றிய வென்றியுந் தேரோர்
வென்ற கோமான் முன்றேர்க் குரவையு
மொன்றிய மரபிற் பின்றேர்க் குரவையும்
பெரும்பகை தாங்கும் வேலி னானு
மரும்பகை தாங்கு மாற்ற லானும்
புல்லா வாழ்க்கை வல்லாண் பக்கமு
மொல்லார் நாணப் பெரியவர்க் கண்ணிச்
சொல்லிய வகையி னொன்றொடு புணர்த்துத்
தொல்லுயிர் வழங்கிய வவிப்பலி யானு
மொல்லா ரிடவயிற் புல்லிய பாங்கினும்
பகட்டி னானு மாவி னானுந்
துகட்டபு சிறப்பிற் சான்றோர் பக்கமுங்
கடிமனை நீத்த பாலின் கண்ணு
மெட்டுவகை நுதலிய வவையகத் தானுங்
கட்டமை யொழுக்கத்துக் கண்ணுமை யானு
மிடையில் வண்புகழ்க் கொடையி னானும்
பிழைத்தோர்த் தாங்குங் காவ லானும்

பொருளொடு புணர்ந்த பக்கத் தானு
மருளொடு புணர்ந்த வகற்சி யானுங்
காம நீத்த பாலி னுமென்
றிருபாற் பட்ட வொன்பதின் றுறைத்தே.

இது வாகைத்திணைக்கு உரிய துறையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — கூதிர பாசறை முதலாகக் காம நீததபால ஈறுகச சொலலபபட்ட பதினெட்டுத துறையும வாகைத திணைககு உரிய துறையாம் எனறவாறு.

எனவே மேறசொலலபபட்ட ஏழு வகையும திணை வகை எனறு கொளக.

கூதிர வேனில எனறு இரு பாசறைக காதலின ஒன்றிக கண்ணிய வகையினும எனபது — கூதிரக காலமும வேனிற காலமும எனறு சொலலபபட்ட இருவகைப பாசறை நிலைவகையினும எனறவாறு.

'காதலால ஒன்றிக் கருதும வகை' எனக கூட்டுக. இவை இரணடும ஒருவகை.

உதாரணம

'கவலை மறுகிற கடுஙகண மறவ
ருவலைசெய கூரை யொடுஙகத — துவலைசெய்
கூதிர நலியவு முளளான கொடிததேரான
மூதின மடவாண முயககு' (வெணபா-வாகை-கூ)

எனவரும. பிறவும அன்ன

ஏரோர களவழி அன்றிக் களவழித் தேரோர தோறறிய வெனறியும என்பது — ஏரோர களத்தின் வழிக கூறுதல அனறிக களவழியைத தேரோர தோற்று வித்த வென்றியும என்றவாறு.

என்றது களமபாடுதலும களவேள்வி பாடுதலுமாம்

உதாரணம்

'இருப்புமுகஞ் செறித்த வேந்தெழின் மருப்பிற்
கருங்கை யானை கொண்மூ வாக
நீண்மொழி மறவ ரெறிவன ருயர்த்த
வாண்மின் னாக வயங்குகடிப் பமைந்த
குருதிப் பலிய முரசுமுழக் காக
வரசராப் பனிக்கு மணங்குறு பொழுதின்
வெவ்விசைப் புரவி வீசுவளி யாக
விசைப்புறு வல்வில் வீங்குநா ணுகைத்த
கணைத்துளி பொழிந்த கண்ணகன் கிடக்கை
யீரச் செருவிற் றேரே ராக
விடியல் புக்கு நெடிய நீட்டிநின்
செருப்படை மிளிர்ந்த திருத்துறு செஞ்சாற்
பிடித்தெறி வெள்வேற் கணையமொடு வித்தி
விழுத்தலை சாய்த்த வெருவரு பைங்கூழ்ப்
பேஎய் பற்றிய பிணம்பிறங்கு பல்போராக
கானரி யோடு கழுதுகளம் படுப்பப்
பூதங் காப்பப் பொலிகளந் தழீஇப்
பாடுநர்க் கிருந்த பீடுடை யாள
தேய்வை வெண்காழ்ப் புரையும் விசிபிணி
வேய்வை காணா விருந்திற் போர்வை
யரிக்குரற் றடாரி யுருப்ப வொற்றிப்
பாடி வந்திசிற் பெரும பாடான்
றெழிலி தோயு மிமிழிசை யருவிப்
பொன்னுடை நெடுங்கோட் டிமயத் தன்ன
வோடை நுதல வொல்குத லறியாத்
துடியடிக் குழவிய பிடியிடை மிடைந்த
வேழ முகவை நல்குமதி
தாழா வீகைத் தகைவெய் யோயே' (புறம்-௩௬௯)

எனவரும். இஃது ஏரோர் களத்தினவழி கூறியது.

'ஓஒ வுவமை யுறழ்வின்றி யொத்ததே
காவிரி நாடன் கழுமலங் கொண்டநாண்
மாவுதைப்ப மாற்றார் குடையெல்லாங் கீழ்மேலா
யாவுதைத்த காளாம்பி போன்ற புனனாடன்
மேவாரை யட்ட களத்து' (களவழி-௩௬)

இது களங்கூறியது ஆசிரியப்பொய்கையார் வாக்கு.

'நளிகட லிருங் குட்டத்து
வளிபுடைத்த கலம்போலக்
களிறுசென்று களனகற்றவும்
களனகற்றிய வியலாங்கத்
தொளிறிலைய வெஃகேந்தி
யரசுபட வமருழக்கி
யுரைசெல முரசுவெளவி
முடித்தலை யடுப்பாகப்
புனற்குருதி யுலைக்கொளீஇத்
தொடித்தோட் டுடுப்பிற் றுழந்த வல்சியி
னடுகள மேட்ட வடுபோர்ச் செழிய
வான்ற கேள்வி யடங்கிய கொள்கை
நான்மறை முதல்வர் சுற்ற மாக
மன்னர் ஏவல் செய்ய மன்னிய
வேள்வி முற்றிய வாய்வாள் வேந்தே
நோற்றோர் மன்றநின் பகைவர் நின்னொடு
மாற்றா ரென்னும் பெயர்பெற்
றாற்ற ராயினு மாண்டுவாழ் வோரே' (புறம்-உசு)

இது களவேள்வி கூறியது.

தேரோர் வென்ற கோமான் முன் தேர்க்குரவையும் என்றது — தேரோரைப் பொருது வென்ற அரசன் முன் ஆடுங் குரவையும் என்றவாறு.

உதாரணம்

'களிற்றுக்கோட் டன்ன வாலெயி றழுத்தி
விழுக்கொடு விரைஇய வெண்ணிணச் சுவையினள்
குடர்த்தலை மாலை சூடி யுணத்தின
வாஅய்ப் பருவளர் செயந்தான் யானைத்து
வயங்குபன் மீனினும் வாழியர் பலவென
வுருகெழு பேய்மகள் அயரக்
குருதித்துக ளாடிய களனறி வோயே' (புறம்-௩எக)

எனவரும்.

ஒன்றிய மரபில் பின்தேர்க் குரவையும் என்றது — தேரோர் வென்ற கோமான் ஒன்றிய மரபில் ஆடும் பின் தேர்க்குரவையும் என்றவாறு.

உதாரணம் :

'வஞ்சமில் கோலானை வாழ்த்தி வயவரு
மஞ்சொல விறலியரு மாடுபவே — வெஞ்சமரிற்
குன்றோ மழகளிறுங் கூந்தற் பிடியும்போற
பின்றோக குரவை பிணைந்து' (வெண்பா-வாகை-அ)

எனவரும்.

பெரும் பகை தாங்கும் வேலினானும் என்றது — பெரிய பகையினைத் தாங்கும் வேலினைப் புகழ்ந்து மிடத்தும் என்றவாறு

உதாரணம்

'இவவே,
பீலி யணிந்து மாலை சூட்டிக்
கண்டிர ளேன்காழ் திருத்தி நெய்யணிந்து
கடியுடை வியனக ரவவே யவவே
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொற்றுறைக் குற்றில மாதோ வென்று
முண்டாயிற் பதங்கொடுத்
தில்லாயி னுடனுண்ணு
மில்லோர் ரொக்கற் றலைவ
னண்ணலெங் கோமான் வைந்நுதி வேலே'(புறம்-கூ௫)

எனவரும்.

'நிலைதிரி பெறியத் திண்பிடை கலங்கிச்
சிதைதலுய்ந் தன்றே நின்வேல் செழிய' (புறம்-உ௫)

எனபதும் அது

அரும்பகை தாங்கும் ஆற்றலானும் என்றது — பொருதற்கு அரிய பகையினைப் பொறுக்கும் ஆற்றற்கண்ணும் என்றவாறு

உதாரணம்

'களம்புக லோம்புமின் றெவ்விர் போரெதிர்ந்
தெம்முளு முளனொரு பொருநன் வைகல்
லெண்டேர் செய்யுந் தச்சன்
றிங்கள் வலித்த காலன் னோனே' (புறம்-அஎ)

எனவரும்.

'என்னைமுன் னில்லன்மின் றெவ்விர் பலரென்னை
முன்னின்று கன்னின் றவர்' (குறள்-படைச்செ-க)

என்பதும் அது.

புல்லார் வாழ்க்கை வல்லாண் பக்கமும் என்றது — பொருந்தாத வாழ்க்கையினையுடைய வல்லாண் பக்கமும் என்றவாறு.

உதாரணம்

'எருது காலுறா திளைஞர் கொன்ற
சில்விளை வரகின் புல்லென் குப்பை
தொடுத்த கடவர்க்குக் கொடுத்த மிச்சில்
பசித்த பாணர் உண்டுகடை தப்பலின்
ஒக்க லொற்கஞ் சொலியத் தன்னூர்ச்
சிறுபுல் லாளர் முகத்தவை கூறி
வரகுகடன் இரக்கும் பெருந்தகை
யரசுவரிற் றாங்கும் வல்லா ளன்னே' (புறம் - ௩௨௭)

எனவரும்.

ஒல்லார் நாணப் பெரியவர்க் கண்ணிச் சொல்லிய வகையின் ஒன்றொடு புணர்ந்து தொல்லுயிர் வழங்கிய அவிப்பலியானும் என்றது — பொருந்தார் நாணுமாறு தலைவனைக் குறித்து முன்பு சொன்ன வஞ்சின மரபின் ஒன்றொடு பொருந்தித் தொன்றுதொட்டு வருகின்ற உயிரை வழங்கிய அவிப்பலியும் என்றவாறு.

உதாரணம்

'சிறந்த திருவெண்ணச் செஞ்சோறு வாய்ப்ப
மறந்தரு வாளமரென்னும் — பிறங்கழலு
ளாருயி ரென்னு மவிவேட்டா ராங்கஃதால்
வீரியரெய் தற்பால வீடு' (வெண்பா. வாகை - ௰)

எனவரும்.

'இழைத்த திகவாமைச் சாவாரை யாரே
பிழைத்த தொறுக்கிற் பவர்' (குறள். படைச்செ. ௯)

என்பதும் அது.

ஒல்லார் இடவயிற் புல்லிய பாங்கினும் என்றது — பொருந்தார் இடத்தின்கண் பொருந்திய பக்கத்தினும் என்றவாறு.

அஃதாவது, போர் இல்வழி நாடு கைக்கொண்டு கொண்டிருத்தல் என்றவாறு.

உதாரணம்

'மாண்டனை பலவே போர்மிகு குருசினீ
மாதிரம் விளக்குஞ் சால்புஞ் செம்மையு
முத்துடை மருப்பின் மழகளிறு பிளிற
மிக்கெழு கடுந்தார் துய்த்தலைச் சென்று
துப்புத்துவர் போகப் பெருங்கிளை யுவப்ப
ஈத்தான் றானா விடனுடை வளனுந்
துளங்குகுடி திருத்திய வலம்படு வென்றியு
மெல்லா மெண்ணி னிடுகழிந் தன்று
கொன்னொன்று மருண்டனெ னடுபோர்க் கொற்றவ
நெடுமிடல் சாயக் கொடுமிட றுமிய
பெருமலை யானையொடு புலங்கெட விறுத்துத்
தடந்தா ணாரை படிந்திரை கவரு
முடந்தை நெல்லின் கழையமல் கழனிப்
பிழையா விளையு ணாடகப் படுத்து
வையா மாலையர் வசையுநர்க் கறுத்த
பகைவர் தேஎத் தாயினுஞ்
சினவா யாகுத லிறும்பூதாற் பெரிதே' (பதிற்று - ௩௨)

எனவரும். இத்துணைப் பகைவர் நாடு கைக்கொண்டிருந்த வாறு அறிக.

'பகட்டினானும் ஆவினானும் துகள்தபு சிறப்பின் சான்றோர் பக்கமும்' என்றது — பகட்டினானும் ஆவினானும் குற்றந் தீர்ந்த சிறப்பினை உடைத்தாகிய சான்றோர் பக்கமும் என்றவாறு.

பகட்டால் புரை தீர்ந்தோர் வேளாளர்; ஆவால் குற்றந் தீர்ந்தோர் வணிகர். இவ்விரு குலத்தினும்

அமைந்த சான்றோர் பக்கம் எனக என்றது * இவர் குலத்தினுள்ளார் அருளான் மிக்க சீர்மைய ராதலின் வேறு ஓதப்பட்டது.

உதாரணம்

'உண்டா லம்மவிவ் வுலக மிந்திரர்
அமிழ்த மியைவ தாயினு மினிதெனத்
தமிய ருண்டலு மிலரே முனிவிலர்
துஞ்சலு மிலர்பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மை யானே' (புறம் ௧௮௨)

என்பதும் காண்க. நோன்றாட் பிறர்க்கென முயலுநர் — வணிக வேளாளர்.

கடிமனை நீத்த பாலினகண்ணும் என்றது — கடிமனை நீத்த பக்கத்தினிடத்தும் என்றவாறு.

அஃதாவது பிறர்மனை நயவாமை. மேல், 'காமநீத்த பாலினும்' என வேறு கூறுகின்றனராதலின், இது மனையறத்தினின்றோரை நோக்க வரும்.

உதாரணம்

'பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
கறனொன்றோ ஆன்ற வொழுக்கு'

(குறள் பிறனில் - ௮)

எனவரும்.

எட்டுவகை நுதலிய அவை அகத்தானும் என்றது — எட்டுப் பாகுபாட்டைக் குறித்த அவையகத்தின்கண்ணும் என்றவாறு.

* 'இவர் குலத்தினுள்ளனவான மிக்க சீர்மையாதலின' எனவும் பாடம்.

'எட்டு வகை நுதலிய அவையகம்' என்றமையான் வினை அவையின் இவ்வவை மிகுதியுடைத்து என்றவாறு.

அவையாவன — குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், வாய்மை, தூய்மை, நடுநிலைமை, அழுக்காறாமை, அவாவின்மை என்பன. அவை எட்டினானும் அவை வருமாறு:

'குடிப்பிறப் புடுத்துப் பனுவல் சூடி
விழுப்பே ரொழுக்கம் பூண்டு நாளும்
வாய்மை வாய்மடுத்து மாந்தித் தூய்மையின்
காதலின் பத்துந் தாங்கித் தீதறு
நடுவுநிலை நெடுநகர் வைகி வைகலு
மழுக்கா றின்மை யவாஅ வின்மையென
விருபெரு நிதியமு மொருதா மீட்டுந்
தோலா நாவின் மேலோர் பேரவை
யுடன்மரீஇ யிருக்கை யொருநாட் பெறுமெனிற்
பெறுகதில் லம்ம யாமே வரன்முறைத்
தோன்றுவழித் தோன்றுவழிப் புலவுப் பொதிந்து
நின்றுழி நின்றுழி ஞாங்கர் நில்லாது
நிலையழி யாக்கை வாய்ப்பவிம்
மலர்தலை யுலகத்துக் கொட்கும் பிறப்பே'

(ஆசிரியமாலை.)

என வருதலுங் காண்க.

கட்டு அமை ஒழுக்கத்துக் கண்ணுமையானும் என்றது — கட்டுதல் அமைந்த ஒழுக்கத்தினைக் குறித்த நிலையினும் என்றவாறு.

அஃதாவது இல்லறத்தார்க்கு உரித்தாக நான்கு வருணத்தார்க்குஞ் சொல்லப்பட்ட அறம்.

அவையாவன — அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, நடுவுநிலைமை, வெஃகாமை, புறங்கூறாமை, தீவினையச்சம், அழுக்காறாமை, பொறையுடைமை என்பன; அவற்றின்கண் நிற்றல் மிகுதியாதலின் ஈண்டு வாகையாயின.

அடக்கம் உடைமை — பொறிகள் ஐம்புலன்கண் மேற் செல்லாமை அடக்கியாளுதல்.

உதாரணம்

'ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றி
னெழுமையு மேமாப் புடைத்து' (குறள் அடக்கமு-சு)

எனவரும்

ஒழுக்கம் உடைமை — தம் குலத்திற்கும் இல்லறத்திற்கும் ஒத்த ஒழுக்கம் உடையராகுதல்.

உதாரணம்

'ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க
முயிரினு மோம்பப் படும்' (குறள் ஒழுக்கமு - க)

எனவரும்

நடுவு நிலைமை — பகைவர்மாட்டும் நட்டார்மாட்டும் ஒக்க நிற்கும் நிலைமை.

உதாரணம்

'சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி' (குறள் நடுவு - அ)

எனவரும்.

வெஃகாமை — பிறர் பொருளை விரும்பாமை

உதாரணம் :

'படுபயன் வெஃகிப் பழிப்பன செய்யார்
நடுவன்மை நாணு பவர்' (குறள். வெஃகாமை - உ)

எனவரும்

புறங் கூறாமை — ஒருவரை ஒருவர் புறத்து உரையாடாமை.

உதாரணம்

'அறங்கூறா னல்ல செயினு மொருவன்
புறங்கூறா னென்ற லினிது' (குறள் புறங்கூறா - க)

எனவரும்

தீவினை அச்சம் — தீவினையைப் பிறர்க்குச் செய்தலை அஞ்சுதல்

உதாரணம்

'தீவினையா ரஞ்சார் விழுமியா ரஞ்சுவர்
தீவினை யென்னுஞ் செருக்கு' (குறள் தீவினையச் - க)

எனவரும்

அழுக்காறாமை — பிறர் ஆக்கம் முதலாயின கண்டு பொறாமையால் வரும் மனக் கோட்டத்தினைச் செய்யாமை

உதாரணம்

'ஒழுக்காறாக் கொள்க வொருவன்றன் னெஞ்சத்
தழுக்கா றிலாத வியல்பு' (குறள் அழுக்கா - க)

எனவரும்

பொறை யுடைமை — பிறர் தமக்கு மிகுதியாகச் செய்தவழி வெகுளாமை.

உதாரணம்.

'மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்
தகுதியான் வென்று விடல்' (குறள். பொறையுடை-அ)

எனவரும்

பிறவும் இந்நிகரன வெல்லாம் கொள்க

இடை இல் வண்புகழ்க் கொடையினானும் என்றது — இடைதல் இல்லாத வளவிய புகழினைத் தரும் கொடையின்கண்ணும் என்றவாறு.

அஃதாவது, கொடுத்தற்கு அரியன கொடுத்தல் இதுவும் பாகுபாடு மிகுதிப்படுதலின் வாகை ஆயிற்று.

உதாரணம் :

'மன்னா வுலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே
துன்னருஞ் சிறப்பி னுயர்ந்த செல்வர்
இன்மையி னிரப்போர்க் கீஇ யாமையின்
றொன்மை மாக்களிற் றொடர்பறி யலரே
தாடாழ் படுமணி யிரட்டும் பூனுதல்
ஆடியல் யானை பாடுநர்க் கருகாக்
கேடி னல்லிசை வயமான் றோன்றலைப்
பாடி நின்றனெ னாகக் கொன்னே
பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தலென்
நாடிழந் ததனினு நனியின் னாதென
வாடந் தனனே தலையெனக் கீயத்
தன்னிற் சிறந்தது பிறிதொன் றின்மையின்
ஆடுமலி யுவகையொடு வருவல்
ஓடாப் பூட்கைநின் கிழமையோற் கண்டே'

(புறம் - கசரு)

எனவரும்.

பிழைத்தோர்த் தாங்கும் காவலானும் என்றது — தம்மாட்டுப் பிழைத்தோரைப் பொறுக்கும் ஏமத்தானும் என்றவாறு.

உதாரணம்

'நம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்
றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தா — னும்மை
யெரிவாய் நிரயத்து வீழ்வர்கொ லென்று
பரிவதூஉஞ் சான்றோர் கடன்' (நாலடி துறவு - அ)

எனவரும்.

'அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
யிகழ்வார்ப் பொறுத்தல் றலை' (குறள். பொறையுடை-க)

என்பதும் அது.

பொருளொடு புணர்ந்த பக்கத்தானும் என்றது — மெய்ப்பொருள் உணர்வொடு சேர்ந்த பக்கமும் என்றவாறு.

உதாரணம்:

'ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு' (குறள் மெய்யுணர் - ௪)

எனவும்,

'சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்' (குறள். மெய்யுணர் - ௯)

எனவும் வரும்.

இன்னும், 'பொருளொடு புணர்ந்த பக்கம்' என்றதனான், அறம் பொருள் இன்பம் என்ற மூன்றனுள் அறனும் இன்பமும் அன்றி ஒழிந்த பொருளொடு பொருந்திய பக்கமும் என்றுரைப்பினுமாம். பொருளாவது — நாடும், பொருளும், அரணும், அமைச்சும், நட்பும், படையும்.

'படைகுடி கூழமைச்சு நட்பர ணாறு
முடையா னரசரு ளேறு' (குறள் இறைமாட் - ௧)

என்பதனாற் கொள்க. இவற்றின் மிகுதி கூறலின் வாகையாயிற்று.

நாடாவது

'தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு' (குறள் நாடு - ௧)

என்க.

பொருளாவது

'உறுபொருளு முல்கு பொருளுந்தன் னொன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்'
(குறள் பொருள்செய - ௬)

என்க.

அரணாவது

'கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி அகத்தார்
நிலைக்கெளிதாம் நீர தரண்' (குறள் அரண் - ரு)

எனக.

அமைச்சாவது

'வன்கண் குடிகாத்தல் கற்றறித லாள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு' (குறள் அமைச்சு - உ)

எனக.

நட்பாவது

'அழிவி னவைநீக்கி யாறுய்த் தழிவின்க
ணல்ல லுழப்பதா நட்பு' (குறள் நட்பு - எ)

எனக.

படையாவது

'அழிவின் றறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை' (குறள். படைமாட்சி - ச)

எனக.

இன்னும், 'பக்கம்' என்றதனால், ஒற்று, தூது, வினை செயல்வகை, குடிமை, மானம் என வருவனவெல்லாங் கொள்க.

ஒற்றாவது

'கடாஅ வுருவொடு கண்ணஞ்சா தியாண்டு
முகாஅமை வல்லதே யொற்று' (குறள் ஒற்று - ரு)

எனக.

தூதாவது

'கற்றுக்கண் ணஞ்சான் செலச்சொல்லிக் காலத்தாற்
றக்க தறிவதாந் தூது' (குறள். தூது - சு)

என்க.

வினைசெயல்வகை யாவது

'பொருள்கருவி காலம் வினையிடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்' (குறள். வினைசெயல் - ௫)

எனக.

குடிமை யாவது

'நகையீகை இன்சொல் இகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு' (குறள். குடிமை - ௩)

எனக.

மானம் ஆவது

'இன்றி யமையாச் சிறப்பின வாயினும்
குன்ற வருப விடல்' (குறள். மானம் - ௧)

என்க.

இன்னும், 'புணர்ந்த பக்கம்' என்றதனால் பிறவும் பெறுதலுங் கொள்க.

உதாரணம்

'படைப்புப்பல படைத்துப் பலரோ டுண்ணு
முடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
யிட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்து
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம்வாழு நாளே' (புறம் ௧௮௮)

எனவரும்.

அருளொடு புணர்ந்த அகற்சியானும் என்பது — அருளொடு பொருந்தின துறவின்கண்ணும் என்றவாறு.

அஃதாவது — அருளுடைமை, கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, புணர்ச்சி விழையாமை, கள்ளுண்ணாமை, துறவு என்பனவாம்.

அவற்றுள், அருளுடைமை ஒழிந்த எல்லாம் விடுதலின் 'அகற்சியானும்' என்றார்.

அருளுடைமை யாவது — யாதானும் ஓர் உயிர் இடர்ப்படுமிடத்துத் தன்னுயிர் வருந்தினாற்போல வருந்தும் ஈரமுடைமை

உதாரணம்

'அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள' (குறள் அருளுடை - க)

என வரும்

கொல்லாமை யாவது — யாதொன்றனையுங் கொலை செய்யாமை

உதாரணம்

'அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை யெல்லாந் தரும்' (குறள் கொல்லா - க)

என வரும்

பொய்யாமை யாவது — தீமை பயக்குவ தாகிய சொல்லைக் கூறாமை

உதாரணம்

'வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல்' (குறள் வாய்மை - க)

என வரும்

கள்ளாமை யாவது — பிறர்க்கு உரிய பொருளைக் களவிற் கொள்ளாமை

உதாரணம்.

'களவென்னுங் காரறி வாண்மை யளவென்னு
மாற்றல் புரிந்தார்க ணில்' (குறள் கள்ளா - எ)

எனவரும்.

புணர்ச்சி விழையாமை யாவது — பிரமசரியத்தினை விடாது காத்தல்

உதாரணம்

'மாக்கேழ் மடநல்லா யென்றரற்றுஞ் சான்றவர்
நோக்கார்கொ லொய்யவேதாம் புகலில் — யாக்கைக்கோர்
ஈச்சிறகன் னதோர் தோலறினும் வேண்டுமே
காக்கை கடிவதோர் கோல்' (நாலடி தூய்தன்மை - க)

எனவரும்

'வேண்டி னுண்டாகத் துறக்க துறந்தபின்
னீண்டியற் பால பல' (குறள் துறவு - உ)

என்பது பிரமசரியங் காப்பின் விளைவு கூறியது

கள்ளுண்ணாமை யாவது — வெறி யேற்றத்தக்க மது முதலிய உட்கொள்ளாமை

உதாரணம்

'களித்தறியே னென்பது கைவிடுக நெஞ்சத்
தொளித்ததூஉ மாங்கே மிகும்' (குறள் கள்ளுண்ணாமை - அ)

எனவரும்

துறவு ஆவது — தன்னுடைய பொருளைப் பற்றறத் துறத்தல்

உதாரணம்

'யாதனின் யாதனி னீங்கியா னோத
லதனி னதனி னிலன்' (குறள் துறவு - க)

எனவரும்

காமம் நீத்த பாலினும் என்றது — ஆசையை அற விடுத்த பக்கத்தினும் என்றவாறு

உதாரணம்.

'காமம் வெகுளி மயக்க மிவைமூன்ற
னாமங் கெடக்கெடு நோய்' (குறள் மெய்யுணர் - க0)

எனவரும்

'மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றார்க் குடம்பு மிகை' (குறள் துறவு - ரு)

என்பது அறவிடுக்கும் இயல் கூறியது

என்று இருபாற்பட்ட ஒன்பதின் துறைத்து எனச் சொல்லிய திணை எனக் கூட்டி முடிக்க (கஎ)

௭௯. காஞ்சி தானே பெருந்திணைப் புறனே
பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற் றானு
நில்லா வுலகம் புல்லிய நெறித்தே.

இது காஞ்சித்திணையாமாறு உணர்த்துதல் நுதலிற்று

இதன் பொருள் — காஞ்சி என்னும் புறத்திணை பெருந்திணை என்னும் அகத்திணைக்குப் புறனாம் அது பாங்கு ஆதல் அரிய சிறப்பினை உடைய பல்வேறு நெறியானும் நில்லாத உலகத்தைப் பொருந்திய நெறிமையை உடைத்து என்றவாறு

பாங்கருமை யாவது — ஒருவற்கு ஒரு துணையாகாமை நில்லாமை மூவகைப்படும், இளமை நில்லாமை, செல்வம் நில்லாமை, யாக்கை நில்லாமை என.

அவற்றுள், இளமை நில்லாமை

உதாரணம்

'பனிபடு சோலைப் பயன்மர மெல்லாங்
கனியுதிர்ந்து வீழ்ந்தற் றிளமை — நனிபெரிதும்
வேற்கண்ணள் என்றிவளை வெஃகன்மின் மற்றிவளுங்
கோற்கண்ண ளாகுங் குனிந்து'
(நாலடி இளமைநிலை - எ)

எனவரும்

செல்வம் நில்லாமை '

உதாரணம்

'அறுசுவை யுண்டி யமர்ந்தில்லா ளூட்ட
மறுசிகை நீக்கியுண் டாரும் — வறிஞராய்ச்

சென்றிரப்ப ரோரிடத்துக் கூழெனிற் செல்வமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று.'

(நாலடி - செல்வநிலை - க)

எனவரும் யாக்கை நிலையாமை முன்னாகக் காட்டுதும்.

அதற்கு இது புறனாயவாறு என்னையெனின், தனக்கென ஓர் நிலன் இல்லாததும்,

'எறிய மடற்றிறம் (தொல். அகத். - ருச)

முதலாகிய நான்கு குறிப்பினை யுடையதுமான பெருந்திணைபோல நிலையின்மை யென்பதற்கும் உரித்தாய நிலம் பெறாது வருதலானும், பொருந்தாக் காமத்தினை இகழ்ந்து உரைத்தல் போன்று அங்ஙனே நிலையாமையின் பொருளாகவுடைய இதனையும் இகழ்ந்து உரைத்தலானும் எனக முற்றும் அறியாதானை நுண்பொருள் காட்டும் அவை கொடுத்து முழுமகன் என்றற்போல, இன்பம் முற்றும் ஒவ்வாவியலினைப் 'பெருந்திணை' என்று பெயரால் வழங்கினார் என்றலும் ஒன்று ஆகவே, அதற்கு ஏற்பக் கூறலுமாம். (கஅ)

எஎ. மாற்றருங் கூற்றஞ் சாற்றிய பெருமையுங்
கழிந்தோ ரொழிந்தோர்க் காட்டிய முதுமையும்
பண்புற வரூஉம் பகுதி நோக்கிப்
புண்கிழித்து முடியு மறத்தி னானு
மேமச் சுற்ற மின்றிப் புண்ணோற்
பேஎ யோம்பிய பேஎய்ப் பக்கமு
மின்னனென் றிரங்கிய மன்னை யானு
மின்னது பிழைப்பி னிதுவா கியரெனத்
துன்னருஞ் சிறப்பின் வஞ்சினத் தானு
மின்னகை மனைவி பேஎய் புண்ணோற்
றுன்னுதல் கடிந்த தொடாஅக் காஞ்சியு

நீத்த கணவற் றீர்த்த வேலிற்
பேஎத்த மனைவி யாஞ்சி யானு
நிகர்த்துமேல் வந்த வேந்தனொடு முதுகுடி
மகட்பா டஞ்சிய மகட்பா லானு
முலையு முகனுஞ் சேர்த்திக் கொண்டோன்
றலையொடு முடிந்த நிலையொடு தொகைஇ
யீரைந் தாகு மென்ப பேரிசை
மாய்ந்த மகனைச் சுற்றிய சுற்ற
மாய்ந்த பூசன் மயக்கத் தானுந்
தாமே யேங்கிய தாங்கரும் பையுளுங்
கணவனொடு முடிந்த படர்ச்சி நோக்கிச்
செல்வோர் செப்பிய மூதா னந்தமும்
நனிமிகு சுரத்திடைக் கணவனை யிழந்து
தனிமகள் புலம்பிய முதுபா லையுங்
கழிந்தோர் தேத்துக் கழிபட ருறீஇ
யொழிந்தோர் புலம்பிய கையறு நிலையுங்
காதலி யிழந்த தபுதார நிலையும்
காதல னிழந்த தாபத நிலையு
நல்லோள் கணவனொடு நளியழற் புகீஇச்
சொல்லிடை யிட்ட பாலை நிலையு
மாயபெருஞ் சிறப்பிற் புதல்வற் பயந்த
தாய்தப வரூஉந் தலைப்பெய னிலையு
மலர்தலை யுலகத்து மரபுநன் கறியப்
பலர்செலச் செல்லாக் காடுவாழ்த் தொடு
நிறையருஞ் சிறப்பிற் றுறையிரண் டுடைத்தே

இது காஞ்சித்திணைக்கு உரிய துறைவகை உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — 'மாற்றருங் கூற்றஞ் சாற்றிய பெருமை' முதலாக 'முலையு முகனுஞ் சேர்த்திக் கொண்டோன் றலையொடு முடிந்த நிலையொடும்' கூடிய பத்தாகும் என்பர் ஒருசார் ஆசிரியர் 'பூசன் மயக்கம்' முதலாகக் 'காடு வாழ்த்து' ஈறாக வருவனவற்றொடு முன்னது கூட்ட இருவேறு வகைப்பட்ட துறையினை யுடைத்தாகும் ஓதிய திணை என்றவாறு.

எனவே, முன் வகுத்த பத்தும், பின் வகுத்த பத்தும், இருவகைப்பட்ட துறையுள் அடங்கும் என்றவாறும் முற்படவோதிய பத்தே காஞ்சித்துறை என்பார் மதம் விலக்கிப் பிற்பட்ட பத்தும் உரைத்தது துறைவகையான் இரண்டு என்றற்கு. எனவே, ஒருவாற்றான் முன்னா லாரைத் தழுவினா னென்றுமாம்.

மாற்று அருங் கூற்றம் சாற்றிய பெருமையும் என்றது — மாற்றுதற்கு அரிய கூற்றம் வருமெனச் சொல்லப் பட்ட பெருங் காஞ்சியும் என்றவாறு.

கூற்றம் - காலக் கடவுள்.

உதாரணம்

'இருங்கட லுடுத்தவிப் பெருங்கண் மாநில
முடையிலை நடுவண திடைபிறர்க் கின்றித்
தாமே யாண்ட வேமங் காவலர்
இடுதிரை மணலினும் பலரே சுடுபிணக்
காடுபதி யாகப் போகித் தத்தம்
நாடு பிறர்கொளச் சென்றுமா யினரே
அதனால், நீயுங் கேண்மதி யத்தை வீயா
துடம்பொடு நின்ற வுயிரு மில்லை
மடங்க லுண்மை மாயமோ வன்றே
கள்ளி வேய்ந்த முள்ளியம் புறங்காட்டு
வெள்ளில் போகிய வியலு ளாங்க
ணுப்பிலா வவிப்புழுக்கல்
கைக்கொண்டு பிறக்குநோக்கா
திழிபிறப் பினோ னீயப்பெற்று

நிலங்கல னாக விலங்குபலி பிசைய
மினனு வைகல வாரா முனனே
செயநீ முன்னிய வினைமே
முநநீர் வரைப்பக முழுதுடன் றுறநதே' (புறம்-௩௬௩)

எனவரும

கழிநதோர ஒழிநதோாககுக் காட்டிய முதுமை
யும என்றது — அறிவான மிக்கோர அல்லாதாரககுச
சொன்ன முதுகாஞசியும என்றவாறு.

உதாரணம

'பல்சான றீரே பலசான றீரே
கயனமுள் ளன்ன நரைமுதிா திரைகவுட்
பயனின் மூப்பிற பலசான றீரே
கணிச்சிக கூர்மபடைக கடுநதிற லொருவன்
பிணிககுங காலை யிரஙகுவிா மாதோ
நல்லது செய்த லாறறீ ராயினு
மலலது செயதல் லோமபுமி னதுதா
னெலலாரு முவபப தனறியு
நலலாற றுப படூஉ நெறியுமா ரதுவே' (புறம் - ௧௯௫)

எனவரும

பண்பு உற வருஉம பகுதி நோககிய புண கிழிதது
முடியும மறததினானும என்றது — இயலபுற வரும பகுதி
நோக்கிய புண் கிழிதது முடியும மறக காஞசியும என்ற
வாறு.

உதாரணம

'நகையமர் ராய நடுஙக நடுஙகான
றொகையமர் ரோட்டிய துப்பிற் — பகைவாமு
னுஙகிச சினவுத தோனொ னுதிவேலாற
பொஙகிப் பரிநதிட்டான புண்' (வெண்பா. காஞ்சி - ௧௫)

எனவரும

ஏமச் சுற்றம் இன்றிப் புண்ணோன் பேஎய் ஓம்பிய பேஎய்ப் பக்கமும் என்றது — ஓம்பும் சுற்றம் இன்மையாற் புண்ணோனைப் பேய் ஓம்பிய பேய்ப்பக்கமும் என்றவாறு.

உதாரணம்

'ஆயு மடுதிறலாற் கன்பிலா ரில்போலுந்
தோயுங் கதழ்குருதி தோள்புடைப்ப — பேயுங்
களம்புகலச் சீறிக் கதிர்வேல்வாய் வீழ்ந்தா
னுளம்புகல வோம்ப லுறும்' (வெண்பா காஞ்சி - கக)

எனவரும்.

இன்னன என்று இரங்கிய மனைவியானும் என்றது— இத்தன்மையான் என உலகத்தார் இரங்கிய மன்னைக் காஞ்சியும் என்றவாறு.

உதாரணம்

'சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே
யாம்பாடத் தானமகிழ்ந் துண்ணு மன்னே
சிறுசோற் றானு நனிபல கலத்தன் மன்னே
பெருஞ்சோற் றானு நனிபல கலத்தன் மன்னே
யென்பொடு தடிபடு வழியெல்லா மெமக்கீயு மன்னே
யம்பொடு வேனுழை வழியெல்லாந் தானிற்கு மன்னே
நரந்த நாறுந் தன்கையாற்
புலவுநாறு மென்றலை தைவரு மன்னே
யருந்தலை யிரும்பாண ரகன்மண்டைத் துளையுரீஇ
யிரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புன்கண் பாவை சோர
வஞ்சொனுண் டேர்ச்சிப் புலவர் நாவிற்
சென்றுவீழ்ந்த தன்றவ னருநிறத் தியங்கு வேலே
யாசா கெந்தை யாண்டுளன் கொல்லோ
வினிப்பா டுநரு மில்லைப் பாடுநர்க் கொன்
றீகுநரு மில்லைப்

பனித்துறைப் பகன்றை நறைக்கொண் மாமலர்
சூடாது வைகி யாங்குப் பிறர்க்கொன்
றீயாது வீயு முயிர்தவப் பலவே' (புறம் - உ௩௫)

எனவரும்.

இன்னது பிழைப்பின் இதுவாகியர் எனத் துன்னருஞ் சிறப்பின் வஞ்சினத்தானும் என்பது — இன்னவாறு ஒன்று செய்தலைப் பிழைத்தேனாயின் இன்னேன் ஆகக்கடவேன் எனக் கூறிய துன்னற்கு அரிய சிறப்பினையுடைய வஞ்சினத்தானும் என்றவாறு.

உதாரணம்

நகுதக் கனரே நாடுமீக் கூறுந
ரிளைய னிவனென வுளையக் கூறிப்
படுமணி யிரட்டும் பாவடிப் பணைத்தா
ணெடுநல் யானையுந் தேரு மாவும்
படையமை மறவரு முடையம் யாமென
றுறுதுப் பஞ்சா துடல்சினஞ் செருக்கிச்
சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
யருஞ்சமஞ் சிதையத் தாக்கி முரசமொ
டொருங்ககப் படேஎ னாயிற் பொருந்திய
வென்னிழல் வாழ்நர் சென்னிழற் காணாது
கொடியனெம் மிறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலே னாகுக
வோங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் றலைவ னாக
வுலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் னிலவரை
புரப்போர் புன்கண் கூர
விரப்போர்க் கீயா வின்மையா னுறவே' (புறம் - எஉ

எனவரும்

இன்னகை மனைவி பேஎய் புண்ணோன் துன்னுதல் கடிந்த தொடாஅக் காஞ்சியும் என்றது — இனிய நகை

யார்ந்த மனைவி பேய் புண்ணோனைக் கிட்டுதலைக் * கடிந்த தொடாக்காஞ்சியும் என்றவாறு.

உதாரணம்

'தீங்கனிப் புறவமொடு வேம்புமனைச் செரீஇ
வாங்குமருப்பு யாழொடு பல்லியங் கறங்கக்
கைபயப் பெயர்த்து மையிழு திழுகி
யையவி சிதறி யாம்ப லூதி
யிசைமணி யெறிந்து காஞ்சி பாடி
நெடுநகர் வரைப்பிற் கடிநறை புகைஇக்
காக்கம் வம்மோ காதலந் தோழி
வேந்துறு விழுமந் தாங்கிய
பூம்பொறி யுடைய நெடுந்தகை புண்ணே' (புறம்-உ௮க)

எனவரும்

நீத்த கணவன் தீர்த்தவேலிற் போத்த மனைவி ஆஞ்சியானும் என்றது — தன்னை நீத்த கணவன் விடுத்த வேலினால் மனைவி தன்னுயிரையும் பெயர்த்த ஆஞ்சியும் என்றவாறு. போத்த - விகாரம்

உதாரணம்

'கௌவைநீர் வேலிக் கடிதேகாண் கற்புடைமை
வெவ்வேல்வாய் வீழ்ந்தான் விறல்வெய்யோன்-வவ்வேலே
யம்பிற் பிறழுந் தடங்க ணவன்காதற்
கொம்பிற்கு மாயிற்றே கூற்று' (வெண்பா காஞ்சி-உ௩)

எனவரும்

நிகாத்து மேல் வந்த வேந்தனொடு முதுகுடி மகட்பாடு அஞ்சிய மகட்பாலானும் என்றது — ஒத்து மாறுபட்டுவந்த வேந்தனொடு தன் தொல்குலத்து மகட்கொடை அஞ்சிய மகட்பாற் காஞ்சியும் என்றவாறு

முதுகுடி — வேளாளர் குடியினைக் குறித்தது

* 'காத்த' எனவும் பாடம்.

உதாரணம்

'நுதிவேல் கொண்டு நுதல்வியர் துடையாக்
கடிய கூறும் வேந்தே தந்தையும்
நெடிய வல்லது பணிந்துமொழி யலனே
யிஃதிவர் படிவ மாயின் வையெயிற்
றரிமதர் மழைக்க ணம்மா வரிவை
மரம்படு சிறுதீப் போல
வணங்கா யினடான் பிறந்த வூர்க்கே' (புறம் - ௩௪௯)

எனவரும். இது பொருணிக்கல் கிழான் மகட்கொடை மறுத்தது.

முலையும் முகனும் சேர்த்திக் கொண்டோன் தலையொடு முடிந்த நிலை என்பது — தன்னைக் கொண்டோன் தலையொடு தனது முலைகளையும் முகத்தையும் சேர்த்தி இறந்த நிலையும் என்றவாறு.

உதாரணம்

'கொலையானைக் கூற்றங் கொடுத்த கொழுநன்
றலையா னுடையலாள் கண்டே — முலையான்
முயங்கினாள் வாண்முகஞ் சேர்த்தினா ளாங்கே
யுயங்கினா ளோங்கிற் றுயிர்' (வெண்பா காரு - கஉ)

எனவரும்.

கோப்பெருந்தேவி உயிர் நீப்பும் இதனுள் அடக்குக.

இந்நிலையொடு தொகைஇச் சொல்லப்பட்ட ஈரைந்து ஆகும் என்க.

பேரிசை மாய்ந்த மகனைச் சுற்றிய சுற்றம் மாய்ந்த பூசல் மயக்கத்தானும் என்பது — பெரிய இசையுடைய மாய்ந்தவனைச் சுற்றிய அவன் சுற்றத்தார் அவன் மாய்ந்தமைக்கு இரங்கி அழுத மயக்கமும் என்றவாறு.

பெயர்த்தும் 'மாய்ந்த' என்றார், தலைவன் புகழுடம்பு பெறலை அறிந்தும் மயக்கத்தான் அவன் பிரிவிற்கு இரங்கி அழுதலைக் கூட்ட.

உதாரணம்

'மீனுண் கொக்கின் தூவி யன்ன
வானரைக் கூந்தன் முதியோள் சிறுவன்
களிறெறிந்து பட்டன னென்னு முவகை
யீன்ற ஞான்றினும் பெரிதே கண்ணீர்
நோன்கழை துயல்வரும் வெதிரத்து
வான்பெயத் தூங்கிய சிதரினும் பலவே' (புறம் - உஎஎ)

எனவரும்.

தாமே ஏங்கிய தாங்கு அரும் பையுளும் என்பது — சிறைப்பட்டார் தாமே தனித்திருந்து ஏங்கிய பொறுத்தற்கரிய துன்பத்தினைக் கூறும் கூற்றும் என்றவாறு.

உதாரணம்

'குழவி யிறப்பினு மூன்றடி பிறப்பினு
மாளன் றென்று வாளிற் றப்பார்
தொடர்ப்படு ஞமலியி னிடர்ப்படுத் திரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத்
தாமிரந் துண்ணு மளவை
யீன்ம ரோவிவ் வுலகத் தானே' (புறம் - எச)

எனவரும்.

கணவனொடு முடிந்த படர்ச்சி நோக்கிச் செல்வோர் செப்பிய மூதானந்தமும் என்பது — கணவனொடு இறந்த செலவை நோக்கி ஆண்டுச் செல்வோர் செப்பிய மூதானந்தமும் என்றவாறு.

உதாரணம்

'ஓருயி ராக வுணர்க வுடன்கலந்தார்க்
கீருயி ரென்ப ரிடைதெரியார் — போரில்
விடனேந்தும் வேலோற்கும் வெள்வளையி னாட்கு
முடனே யுலந்த துயிர்' (வெண்பா. பொதுவி - கூ)

எனவரும்.

நளி மிகு சுரத்திடைக் கணவனை இழந்து தனிமகள் புலம்பிய முதுபாலையும் என்றது — வெம்மையொடு கொடுமை மிக்க சுரத்திடைக் கணவனை யிழந்து தனியளாய்த் தலைமகள் வருந்திய முதுபாலையும் என்றவாறு.

உதாரணம்

'ஐயோ வெனின்யான் புலியஞ் சுவலே
யெடுத்தனன் கொளினே யகன்மார் பெடுக்க வல்லேன்
என்போற் பெருவிதிர்ப் புறுக நின்னை
யின்னாது துற்ற வறனில் கூற்றே
நிரைவளை முன்கை பற்றி
வரைநிழற் சேர்க நடத்திசிற் சிறிதே' (புறம் - உருரு)

என வரும்.

கழிந்தோர் தேத்துக் கழிபடர் உறீஇ ஒழிந்தோர் புலம்பிய கையறு நிலையும் என்றது — செத்தோர் மாட்டுச் சார்ந்தோர் மிக்க வருத்தமுற்றுப் புலம்பிய கையறு நிலையும் என்றவாறு.

உதாரணம்

'செற்றன் றாயினுஞ் செயிர்த்தன் றாயினு
முற்றன் றாயினு முய்வின்று மாதோ
பாடுநர் போலக் கைதொழு தேத்தி
யிரந்தன் றாகல் வேண்டும் பொலந்தார்
மண்டமர் கடக்குந் தானைத்
திண்டேர் வளவற் கொண்ட கூற்றே' (புறம் - உஉசு)

என வரும்.

காதலி இழந்த தபுதார நிலையும் என்றது — காதலியை இழந்த கணவனது தபுதார நிலையும் என்றவாறு.

உதாரணம்

'யாங்குப் பெரிதாயினு நோயள வெனைத்தே
யுயிர்செகுக் கல்லா மதுகைத் தன்மையிற்
கள்ளி போகிய களரியம் பறந்தலை

வெள்ளிடைப் பொத்திய விளைவிற கீமத்
தொள்ளழற் பள்ளிப் பாயல் சேர்த்தி
ஞாங்கர் மாய்ந்தன்ன மடந்தை
யின்னும் வாழ்வ லென்னிதன் பண்பே' (புறம். உசரு)

என வரும்.

காதலன் இழந்த தாபத நிலையும் என்றது — காதலனை இழந்தவள் நிற்கும் தாபத நிலையும் என்றவாறு.

உதாரணம்

'அளிய தாமே சிறுவெள் ளாம்பல்
இளைய மாகத் தழையா யினவே
இனியே
பெருவளக் கொழுநன் மாய்ந்தெனப் பொழுதுமறுத்
தின்னா வைக லுண்ணும்
மல்லிப் படூஉம் புல்லா யினவே' (புறம் - உசஅ)

என வரும்.

நல்லோள் கணவனொடு நளி அழல் புகீஇச் சொல் இடையிட்ட மாலை நிலையும் என்றது — கணவனொடு கிழத்தி பேரழலிடைப் புகுவழி இடையிட்ட மாலைக் காலத்துக் கூறும் கூற்றும் என்றவாறு.

உதாரணம்

'பல்சான் றீரே பல்சான் றீரே
செல்கெனச் சொல்லா தொழிகென விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே
யணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் திட்ட
காழ்போ னல்விளர் நறுநெய் தீண்டா
தடகிடை மிடைந்த கைபிழி பிண்டம்
வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய் தட்ட
வேளை வெந்தை வல்சி யாகப்
பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியு
முயவற் பெண்டிரே மல்லே மாதோ
பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட் டீமம்

> நமக்கரி தாகுக தில்ல வெம்மெக்கெம்
> பெருந்தோட் கணவன் மாய்ந்தென வரும்பற
> வள்ளித ழவிழ்ந்த தாமரை
> நள்ளிரும் பொய்கையுந் தீயுமோ ரற்றே' (புறம்-உ௪௬)

எனவரும்

ஆய பெருஞ் சிறப்பிற் புதல்வன் பயந்த தாய் தப வரூஉம் தலைப்பெயல் நிலையும் என்றது — மகனைப் பெற்ற தாய் அவன் கடன் இறந்துபடினும் தலைப்பெய நிலையும் என்றவாறு

ஏனையோர் இசையினை யிழுக்கத்தகு தன்னிசை ஒன்றனே சிறந்த சேயைப் பயந்த தாய் என ஒட்டுக

உதாரணம்

> 'இடம்படு ஞாலத் தியல்போ கொடிதே
> தடம்பெருங்கட் பாலகனென் றுன்னுங் — கடன்கழிந்து
> முன்னெயிற் றுப்பேதையாள் புக்காண் முரண்வியா
> வன்னெயிற்றுக் கூற்றத்தின் வாய்'
>
> (வெண்பா சிறப்பிற் பொதுவி - ௫)

எனவரும்

மலர்தலை உலகத்து மரபு நன்கு அறியப் பலர் செலச் செல்லாக் காடு வாழ்த்து என்றது — இடமகன்ற உலகத்தின் மரபு நன்கு விளங்கப் பலரும் மாய்த் தான் மாயாத புறங்காடு வாழ்த்தலும் என்றவாறு.

உதாரணம்

> 'களரி பரந்து கள்ளி போகிப்
> பகலுங் கூஉங் கூகையொடு பிறழ்வா
> ஈம விளக்கிற் பேஎய் மகளிரோ
> டஞ்சுவந் தன்றி மஞ்சுபடு முதுகாடு

நெஞ்சமா காதல ரழுத கண்ணீ
ரெண்புபடு சுடலை வெண்ணீ றவிப்ப
வெல்லாப் புறனுந் தானகண் டுலகத்து
மன்பதைக் கெல்லாந் தானாய்த்
தன்புறங் காண்போர்க் காண்பறி யாதே' (புறம்-ருஉகூ)

எனவரும்

இவ் வாழ்த்தொடு தொகைஇ நிறையருணு சிறப்பின
துறை இரண்டு உடைத்து இத்திணை என முடிக்க (கக)

எஅ. பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே
நாடுங் காலை நாலிரண் டுடைத்தே.

இது பாடாண்டிணை ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — பாடாண் திணைப்பகுதி கைக்கிளை எனனும் அகத்திணைக்குப் புறனும், அஃது ஆராயுங் காலத்து எட்டு வகையினை உடைத்து என்றவாறு.

அவையாவன கடவுள் வாழ்த்து வகை, வாழ்த்தியல் வகை, மங்கல வகை, செவியறிவுறுத்தல், ஆற்றுப்படை வகை, பரிசிற்றுறை வகை, கைக்கிளை வகை, வசை வகை என்பன அவையாமாறு முன்னர் காட்டுதும்

அதற்கு இது புறனாயவாறு என்னையென்னின், கைக்கிளையாவது ஒருநிலைத்திறத்தும் உரித்தின்றி ஒருதலைக்காமமாகி வருமன்றே, அதுபோல இதுவும் ஒருபாற்கு உரித்தின்றி ஒருவனை யொருவன யாதானும் ஒரு பயன் கருதிய வழி மொழிந்து நிற்பது ஆகலானும், கைக்கிளையாகிய காமப் பகுதிக்கண் மெய்ப்பெயர்பற்றிக் கூறுதலானும், கைக்கிளைபோலச் செந்திறத்தாற் கூறுதலானும் எனக் கொள்க. நொந்திற மாவது கழிபேர் இரக்கம், செந்திற மாவது அஃது அல்லாதன (உ0)

எக. அமரர்கண் முடியு மறுவகை யானும்
புரைதீர் காமம் புல்லிய வகையினு
மொன்றன் பகுதி யொன்று மென்ப.

இது பாடாண் பாட்டிற்கு உரியதோர் பொருண்மை உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — அமரர்கண் முடியும் அறுவகையானும் என்றது — கொடிநிலை, கந்தழி, வள்ளி, புலவராற்றுப்படை, புகழ்தல், பரவல் எனபனவற்றினும் என்றவாறு.

புரைதீர் காமம் புல்லிய வகையினும் என்றது—குற்றந் தீர்ந்த காமத்தைப் பொருந்திய வகையினும் என்றவாறு.

அஃதாவது ஐந்திணை தழுவிய அகம்.

ஒன்றன் பகுதி ஒன்றும் என்ப என்றது — அவையிற்றின் ஒரு கூற்றின் பாகுபாடு பாடாண்டிணை ஆதற்குப் பொருந்தும் என்பர் புலவர் என்றவாறு.

என்றது, கொடிநிலை முதலிய ஆறும் கடவுட் புகழ்ச்சியன்றிப் பாட்டுடைத் தலைவனைச் சார்த்தி வருதல், காமப் பகுதியிற் பாடும் பாட்டுடைத் தலைவனைச் சார்த்தி வருதல் என்ற இவ்விருவகையானும் ஒருவனைப் புகழ்தலாற் பாடாண் பாட்டு ஆயிற்று என்க.

இன்னும், 'புரைதீர் காமம் புல்லிய வகையினும் ஒன்றன் பகுதி' என்ற அதனை, ஐவகைப் பொருளினும் ஊடற் பொருண்மை பாடாண் பகுதிக்கு ஒன்றும் என்றவாறும் இன்னும் இதனானே இயற்பெயர் சார்த்திவாராது நாடும், ஊரும் இதுவென விளங்க வரும் ஊரன், சேர்ப்பன் எனனும் பெயரினை ஒரு கூறு குறிப்புப் பற்றி வரும் பகுதியும் பாடாண் பாட்டாம் என்று கொள்க. ()

௮0. வழக்கியன் மருங்கின் வகைபட நிலைஇப்
பரவலும் புகழ்ச்சியுங் கருதிய பாங்கினு
முன்னோர் கூறிய குறிப்பினுஞ் செந்துறை
வண்ணப் பகுதி வரைவின் றாங்கே.

இது சில பொருட்கண் வரும் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — மேற்சொல்லப்பட்டன வழக்கியலும் பக்கத்து வகைபெற நிறுத்திய பரவலும் புகழ்ச்சியும் கருதிய பக்கத்தினும், முதலாசிரியர் கூறிய காமக் குறிப்பினும், செந்துறைப் பாட்டுக்கண் வரும் வண்ணப் பகுதி வரைதல் இல்லை அவ்விடத்து என்றவாறு.

குறிப்பு என்பது காமம். அஃதாமாறு வருகின்ற சூத்திரத்துள்

'காமப் பகுதி கடவுளும் வரையார்' (தொல் புறத் - உ௩)

என ஓடி எழுந்தமையான் உணர்க.

இதனாற் சொல்லியது தேவபாணியும், அகப்பொருள் பாடும் பாட்டும், இசைத் தமிழில் வரைந்து ஓதினாற் போலச் செந்துறைப் பாட்டிற்கு உரிய செய்யுள். இவை என்று உரைத்தல் இல்லை பாட்டாண் பாட்டினக்கண் வருங் காலத்து என்றவாறும் எனவே எல்லாச் செய்யுளும் ஆம் என்றவாறு.

இனி, புகழ்தல் படர்க்கைக்கண்ணும், பரவல் முன்னிலைக்கண்ணும் வருமாறு

'கண்ணகன் ஞாலம் அளந்ததூஉங் காமருசீர்த்
தண்ணறும் பூங்குருந்தஞ் சாய்த்ததூஉம் — நண்ணிய
மாயச் சகட முதைத்ததூஉ மிம்மூன்றும்
பூவைப்பூ வண்ண னடி' (திரிகடு - கடவுள் வாழ்த்து)

இது புகழ்தல்.

'வைய மகளை யடிப்படுத்தாய வையகத்தா
ருயய வுருவம வெளிபபடுத்தாய — வெயய
வடுந்திற லாழி யரவணையா யென்று
நெடுந்தகை நினனையே யாம' (வெணபா பாடாண - ௩)

எனபது பரவல

'வெறிகொ ளறையருவி வேஙகடத்துச செலலி
னெறிகொள படிவததோய நீயும — பொறிகட
கிருளீயு ஞாலத திடரெலலா நீஙக
வருளீயு மாழி யஙன' (வெணபா பாடாண - ௪௨)

இது புலவராறறுபபடை

'மாயவன மாய மதுவான மணிநிரையு
ளாயனு வெணண லவனருளான — காயக
கழலவிழக கணகனலக கைவளையார சோரச
சுழலஹுளு வைகினறு சோ' (வெணபா பாடாண - ௪௦)

இது கநதழி

'வேணடுதியா னீயும விழைவோ விழுமிதே
யீணடியம விமம வினவளையார — பூணடயஙகச
சூலமோ டாடுஞ சுடாசசடையோன காதலறகு
வேலனே டாடும வெறி' (வெணபா பாடாண - ௪௧)

இது வளளி

வளளி எனபது ணடு வெறியாடடு

கொடி நிலை வாநதவழிக காணக

இனி, அவை சாாநது வருமாறு முனனாக காடடுதும.

இனிக காமப பகுதி வருமாறு

'மலைபடு சாநத மலாபாாப யாபின
பலாபடி செலவம படியேம — புலாவிடியல
வணடினஙகூட டுணணும வயலசூழ திருநகாிற
கணடுனங காணடற கினிது' (வெணபா. பாடாண் ௪௭)

இஃது ஊடற் பொருண்மைக்கண் வந்தது. இனி, இயற்பெயர் சார்த்தியும் வரும்.

'வையைதன்,
நீர்முற்றி மதில்பொரூஉம் பகையல்லால் நேராதார்
போர்முற்றொன் றறியாத புரிசைசூழ் புனலூரன்'
(கலி மருதம் - உ)

என்பது குறிப்பிற் பாட்டுடைத் தலைமகனைக் கிளவித் தலைமகனாகக் கூறியது.

'பூந்தண்டார்ப் புலர்சாந்தின் றென்னவ னுயர்கூடற்
றேம்பாய வவிழ்நீலத் தலர்வென்ற வமருண்க
ணேந்துகோட் டெழில்யானை யொன்னாதார்க் கவன்வேலிற்
சேந்துநீ யினையையா லொத்ததோ சின்மொழி'
(கலி குறிஞ்சி - உக)

இது காமத்திணைக்கண் வந்தது. (உஉ)

அக. காமப் பகுதி கடவுளும் வரையார் ஏனோர் பாங்கினு மென்மனார் புலவர்.

இது கடவுண்மாட்டு வருவதோர் பாடாண் பக்கம் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — காமப் பகுதி கடவுண் மாட்டும் வரையார், ஏனோர் மாட்டும் வரையார் என்ப புலவர் என்றவாறு.

என்றது கடவுள்மாட்டுத் தெய்வப் பெண்டிர் நயந்த பக்கமும் பாடப் பெறும் என்றவாறு. ஏனோர்-மானிடர்.

உதாரணம் :

'நலங்கெழி னங்கையா னேமென்றுஞ் சேவடிமே
லொலங்கெழி னுச்சியா னேமென்று — மலங்கிரு
ளாட லமர்ந்தாற் கரிதா லுமையாளை
யூட லுணர்வதோ ராறு' (வெண்பா. பாடாண் - சஅ)

என வரும். இது தெய்வப் பெண்டிர் நயந்த பக்கம்.

'அரிகொண்ட கண்சிவப்ப வல்லிருந்தென் னைகம்
புரிகொண்ட நாணுடைப்பாய் புலவி — வரிவண்டு
பண்ணலங்கூட் டுண்ணும் பனிமலர்ப் பாசென
னுண்ணலங் கூட்டுண்டா னூர்'

(வெண்பா மாலை - ௪௯)

இது மானிடப் பெண்டிர் நயந்த பக்கம். (௨௫)

௮௨. குழவி மருங்கினுங் கிழவ தாகும்.

இது குழவிப் பருவத்தும் காமப் பகுதி பாடப் பெறும் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — குழவிப் பருவத்தும் காமப் பகுதி கூறப்பெறும், அவர் விளையாடு மக்களொடு பொருந்தியக்கண் என்றவாறு.

உதாரணம்

'வரிப்பந்து கொண்டொளித்தாய் வாளவேந் தன்னை மைந்தா
வரிக்கண்ணி யஞ்சி யலற — தெரிக்கத்தேற
செங்கோல னுங்கோச் சிணுக்கிற்றின் மேல்வரினும்
வெங்கோலன் நீண்ட விரி' (வெண்பா மாலை - ௫௦)

என வரும். (௨௬)

௮௩. ஊரொடு தோற்றமு முரித்தென மொழிப வழக்கொடு சிவணிய வகைமை யான.

இதுவும் அது.

இதன் பொருள் — ஊரின்கண் தோற்றமாகக் காமப் பகுதி நிகழ்தலும் உரித்து என்று சொல்லுவர் புலவர், அது நிகழுங் காலத்து வழக்கொடு பொருந்தி நடக்கும் வகைமையின்கண் என்றவாறு.

'ஊரொடு தோற்றம்' என்பது பேதை முதலாகப் பேரிளம்பெண் ஈறாக வருவது 'வழக்கு' என்பது சொல்லுதற்கு ஏற்ற நிலைமை 'வகை' என்பது அவரவர் பருவத்திற்கு ஏற்பக் கூறும் வகைச் செய்யுள்

உதாரணம் வந்த வழிக் கண்டுகொள்க

'ஒடு' எண்ணுக்கி, ஊரும் பிறப்பும் என்றலும் ஒன்று.

அ௪. மெய்ப்பெயர் மருங்கின் வைத்தன வழியே.

இதுவும் பாடாண் பாட்டிற்கு உரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று

இதன் பொருள் — மேற் சொல்லப்பட்டனவும் இனிக் கூறுவனவும் ஒருவற்குக் காரணமாகி மெய்ப் பெயராகி வரும் பொதுப்பெயரான் அன்றி இயற்பெயரின் பக்கத்தும் வரும் நெறிப்பட்ட பாடாண் டிணைக்கண் என்றவாறு (உ௬)

அ௫. கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றுங்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே.

இது சார்ந்து வருமாறு உணர்த்துதல் நுதலிற்று

இதன் பொருள் — கொடிநிலை முதலாகச் சொல்லப் பட்ட முற்பட்ட மூன்றும் பாடாண்டைத் தலைமகனைச் சார்ந்து வருங்காலத்துக் கடவுள் வாழ்த்தொடு பொருந்தி வரும் என்றவாறு

வடு நீங்கு சிறப்பின் முதலன — கொடிநிலை, கந்தழி, வள்ளி என்க.

உதாரணம்

'பூங்கண் ணெடுமுடிப் பூவைப்பூ மேனியான்
பாம்புண் பறவைக் கொடிபோல — வோங்குக
பல்யானை மன்னர் பணியப் பனிமலர்த்தார்க்
கொல்யானை மன்னன் கொடி'

(வெண்பா. பாடாண் - ௩௯)

என வரும். இது கொடிநிலை.

'அன்றெறிந் தானு மிவனே வரணவலித்
தின்றிவன் மாறு வெதிராவார் யார் — வென்று
மடையார் மணிப்பூ ணடையார்தார் மார்பிற்
சுடராழி நின்றெறியச் சோ' (வெண்பா. உழி - எ)

இது கந்தழி.

வள்ளியிற் சார்ந்து வருமாறு வந்தவழிக் கண்டு கொள்க.

'வந்தது கொண்டு வாராதது முடித்தல்'

(தொல். மாபி - ௧௧0)

என்பதனாற் புலவர் ஆற்றுப்படை முதலாகிய மூன்றுஞ் சார்ந்து வரும் எனவுங் கொள்க. முருகாற்றுப்படையுள்,

'மாடமலி மறுகிற் கூடற் குடவயி
னிருஞ்சேற் றகல்வயல் விரிந்துவா யவிழ்ந்த
முட்டாட் டாமரைத் துஞ்சி' (திருமுருகு எக - எ௩)

என்றவழி, ஒருமுருகத்தாற் பாண்டியனையும் இதனுட் சார்த்தியவாறு கண்டுகொள்க.

இனிப் பரவற்குச் சார்ந்து வருமாறு

'கெடலரு மாமுனிவர்'

என்ற கலிப்பாட்டினுள்,

'அடுதிற லொருவநிற் பரவுதும் மெங்கோன்
றொடுகழற் கொடும்பூட் பகட்டெழின் மார்பிற்
கயலொடு கலந்த சிலையுடைக் கொடிவரிப்பு

புயலுறழ் தடக்கைப் போர்வே லச்சுதன்
றொன்றுமுதிர் கடலுலக
மொன்றுபு திகிரி யுருட்டுவோ னெனவே’

(யாப் விரு அரு மேற்கோள்)

என்ற சரித்திரத்துள் விளக்கத்தனார் பாட்டுடைத் தலைமகனைச் சாத்தியவாறு கண்டு கொள்க.

பிறவும் அன்ன. (உஎ)

அசு. கொற்ற வள்ளை யோரிடத் தான.

இதுவும் பாடாண்டிணைக்கு உரியதோர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள் — கொற்றவள்ளையும் ஓர் இடத்துப் பாடாண் பாட்டாம் என்றவாறு.

என்றது, துறை கூறுதல் கருத்தாயின் வஞ்சியாம் புகழ்தல் கருத்தாயின் பாடாண்டிணையாம் என்றவாறும்.

உதாரணம்.

‘வல்லா ராயினும் வல்லுந ராயினும்
புகழ்தலுற் றோர்க்கு மாயோ னன்ன
வுரைசால் சிறப்பிற் புகழ்சால் மாற
நின்னொன்று கூறுவ துடையே னென்னெனிற்
பிறர்நாடு கொள்ளுங் காலை யவர்நாட்
டிறங்குகதிர்க் கழனிநின் னிளையருங் கவர்க
நனந்தலைப் பேரூ ரெரியு நக்க
மின்னுநிமிர்ந் தன்னநின் னொளிறிலங்கு நெடுவே
லொன்னார்ச் செகுப்பினுஞ் செகுப்ப வென்னதூஉங்
கடிமரந் தடிதல் லோம்புநின்
னெடுநல் யானைக்குக் கந்தாற் றாவே’ (புறம் - ருஎ)

எனவரும். (உஅ)

அஎ. கொடுப்போ ரேத்திக் கொடாஅர்ப் பழித்தலு
மடுத்தூர்ந் தேத்திய வியன்மொழி வாழ்த்துஞ்
சேய்வரல் வருத்தம் வீட வாயில்
காவலர்க் குரைத்த கடைநிலை யானுங்
கண்படை கண்ணிய கண்படை நிலையுங்
கபிலை கண்ணிய வேள்வி நிலையும்
வேலை நோக்கிய விளக்கு நிலையும்
வாயுறை வாழ்த்துஞ் செவியறி வுறூஉவு
மாவயின் வரூஉம் புறநிலை வாழ்த்துங்
கைக்கிளை வகையோ டுளப்படத் தொகைஇத்
தொக்க நான்கு முளவென மொழிப.

இது பாடாண்டிணைக்குத் துறையாமாறு உணர்த்து
தல் நுதலிற்று.

இதன் பொருள் — 'கொடுப்போ ரேத்திக் கொடாஅ
ர்ப் பழித்தல்' முதலாக 'வேலை நோக்கிய விளக்கு நிலை'
ஈறாகச் சொல்லப்பட்டனவும், 'வாயுறை வாழ்த்து' முதலா
கக் 'கைக்கிளை' உளப்பட நால்வகையும் பாடாண்டிணைக்
குத் துறையாம் என்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தலும்
என்றது — கொடுப்போர் ஏத்தல் எனவும் கொடாஅர்ப்
பழித்தல் எனவும் கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப்
பழித்தல் எனவும் மூவகைப்படும்.

என்றது, பெற்றோ ரீவோரைப் புகழ்தலும், ஈயா
ரைப் பழித்தலும், ஈவோரைப் புகழ்ந்து ஈயாரைப் பழித்
தலும் செய்ப என்றவாறும்.

கொடுப்போர் ஏத்தற்கு உதாரணம்:

'தடவுநிலைப் பலவின் நாஞ்சிற் பொருநன்
மடவன் மன்ற செந்நாப் புலவீர்

வளைக்கை விறலியா படப்பக கொயத
வடகின கணணுறை யாக யாருசில
வரிசி வேண்டினே மாகத தானபிற
வரிசை யறிதலிற றனனுந தாககி
யிருஙகடறு வளைஇய குனறத தனனதோா
கருஙகளிறு நலகி யோனே யனனதோா
தேறறு வீகையு முளதுகொல
போறறு ரமம பெரியோாதங கடனே' (புறம - கசO)

எனவரும.

'பாரி பாரி யெனறுபல வேததி
யொருவற புகழவா செநநாப புலவா
பாரி யொருவனு மலலன
மாரியு முணடீண டுலகுபுரப பதுவே' (புறம - கOஎ)

எனற கபிலா பாட்டும் அது

கொடாாப பழிததறகு உதாரணம

'ஒலலுவ தொலலு மெனறலும யாவாககு
மொலலா திலலெனு மறுததலு மிரணடு
மாளவினை மருஙகிற கேணமைப பாலே
யொலலா தொலலு மெனறலு மொல்லுவ
திலலெனு மறுததலு மிரணடும வலலே
யிரபபோா வாடட லனறியும புரபபோா
புகழகுறை படூஉம வாயி லததை
யனைததா கியரினி யிதுவே யெனைததுங
சேயததுக காணது கணடனம அதனு
னோயில ராகநின புதலவா யானும
வெயிலென முனியேன பனியென மடியேன
கலகுயின றனனவென னலகூா வளிமறை
நாணல திலலாக கறபின வாணுதல
மெல்லியற் குறுமக ளுள்ளிச
செல்வ லததை சிறககநின னூளே' (புறம் - ககஅ)

என்வரும்.

கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தற்கு,

உதாரணம்

'களங்கனி யன்ன கருங் கோட்டுச் சீறியாழ்ப்
பாடின் பனுவற் பாண ருய்த்தெனக்
களிறில வாகிய புல்லரை நெடுவெளிற்
கான மஞ்ஞை கணனொடு சேப்ப
ஈகை யரிய விழையணி மகளிரொடு
சாயின் றென்ப வாஅய் கோயில்
சுவைக்கினி தாகிய குய்யுடை யடிசில்
பிறர்க்கீ வின்றித் தம்வயி றருத்தி
யுரைசா லோங்குபுக ழொரீஇய
முரசுகெழு செல்வர் நகர்போ லாதே' (புறம் - கஉஎ)

எனவரும்.

இதனுள் ஏத்தப்பட்டவன் ஆய். பழிக்கப்பட்டார் செல்வர் என்க.

அடுத்து ஊர்ந்து ஏத்திய இயன்மொழி வாழ்த்தும் என்றது — வென்றியும் குணனும் அடுத்துப் பரந்தேத்திய இயன்மொழி வாழ்த்தும் என்றவாறு.

அஃது, இயன்மொழி எனவும் வாழ்த்து எனவும் இயன்மொழி வாழ்த்து எனவும் மூவகைப்படும்.

உதாரணம்

'ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலி
னீர்த்துறை படியும் பெருங்களிறு போல
வினியை பெரும வெமக்கே மற்றதன்
றுன்னருங் கடாஅம் போல
வின்னாய் பெருமநின் னொன்னா தோர்க்கே' (புறம் - கூச)

எனவரும். இஃது இயன்மொழி.

'ஆன்முலை யறுத்த வறனி லோர்க்கு
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்

வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவென
நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
வறம்பா டின்றே யாயிழை கணவ
காலை யந்தியு மாலை யந்தியும்
புறவுக் கருவன்ன புன்புல வரகின்
பாற்பெய் புன்கந் தேனொடு மயக்கிக்
குறுமுயற் கொழுஞ்சூடு கிழித்த வொக்கலொ
டிரத்தி நீடிய வகன்றலை மன்றத்துக்
கரப்பி லுள்ளமொடு வேண்டுமொழி பயிற்றி
யமலைக் கொழுஞ்சோ றார்ந்த பாணர்க்
ககலாச் செல்வ முழுவதுஞ் செய்தோ
னெங்கோன் வளவன் வாழ்க வென்றுநின்
பீடுகெழு நோன்றாள் பாடே னாயிற்
படுபறி யலனே பல்கதிர்ச் செல்வன்
யானோ தஞ்சம் பெருமவிவ் வுலகத்துச்
சான்றோர் செய்த நன்றுண் டாயி
னிமயத் தீண்டி யின்குரல் பயிற்றிக்
கொண்டன் மாமழை பொழிந்த
நுண்பஃ றுளியினும் வாழிய பலவே' (புறம் - ௩௪)

இது வாழ்த்து.

'ஆவு மானியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரு
மெம்மம்பு கடிவிடுது நும்மரண் சேர்மினென
றறத்தாறு நுவலும் பூட்கை மறத்திற்
கொல்களிற்று மீமிசைக் கொடிவிசும்பு நிழற்று
மெங்கோ வாழிய குடுமி தங்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
முந்நீர் விழவி னெடியோ
னன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே' (புறம் - ௯)

இஃது இயன்மொழி வாழ்த்து.

'பார்ப்பார்க் கல்லது பணிபறி யலையே
பணியா வுள்ளமோ டணிவரக் கெழீஇ
நட்டோர்க் கல்லது கண்ணஞ் சலையே
வணங்குசிலைப் பொருதநின் மணங்கம ழகலம்
மகளிர்க் கல்லது மலர்ப்பறி யலையே
நிலந்திறம் பெயருங் காலை யாயினுங்
கிளந்த சொன்னீ பொய்ப்பறி யலையே
சிறியிலை யுழிஞைத் தெரியல் சூடிக்
கொண்டி மிகைபடத் தண்டமிழ் செறித்துக்
குன்றுநிலை தளர்க்கு முருமிற் சீறி
யொருமுற் றிருவ ரோட்டிய வொள்வாட்
செருமிகு தானை வெல்போ ரோயே
யாடுபெற் றழிந்த மள்ளர் மாறி
நீகண் டனையே மென்றனர் நீயு
நுந்நுகங் கொண்டினும் வென்றோ யதனால்
செல்வக் கோவே சேரலர் மருக
காற்றிரை யெடுத்த முழங்குகுரல் வேலி
நனந்தலை யுலகஞ் செய்தநன் றுண்டெனி
னடையடுப் பறியா வருவி யாம்பல்
லாயிர வெள்ள வூழி
வாழி யாத வாழிய பலவே' (பதிற்றுப் - ௬௩)

என்ற பதிற்றுப்பத்தும் அது. பிறவும் அன்ன.

சேய் வரல் வருத்தம் வீட வாயில் காவலர்க்கு உரைத்த கடைநிலை யாயினும் என்பது — சேய்மைக்கண்ணின்று வருகின்ற வருத்தம் தீர வாயில் காவலர்க்கு உரைத்த வாயினிலையும் என்றவாறு.

உதாரணம்

'வாயி லோயே வாயி லோயே
வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்தித்
தாம், முன்னியது முடிக்கு முரணுடை யுள்ளத்து
வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கைப்
பரிசிலர்க் கடையா வாயி லோயே
கடுமான் றோன்றல் நெடுமா னஞ்சி

தன்னறி யலன்கொ லென்னறி யலன்கொ
லறிவும் புகழு முடையோர் மாய்ந்தென
வறுந்தலை யுலகமு மன்றே யதனாற்
காவினெங் கலனே சுருக்கினெங் கலப்பை
மரங்கொ றச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத் தற்றே
யெத்திசைச் செல்லினு மத்திசைச் சோறே'

(புறம் - உ0சு)

எனவரும்.

கண்படை கண்ணிய கண்படை நிலையும் என்றது — இறைவன் கண்படை நிலையைக் குறித்த கண்படை நிலையும் என்றவாறு.

என்றது அரசன் இனிது துயின்றது கூறல் என்றவாறு.

உதாரணம்

'மேலா ரிறையமருள் மின்னோ டினஞ்சொரியும்
வேலான் விறன்முனை வென்றடக்கிக் — கோலாற்
கொடிய வுலகிற் குறுகாமை யெங்கோன்
கடியத் துயிலேற்ற கண்' (வெண்பா - பாடாண். அ)

எனவரும்.

கபிலை கண்ணிய வேள்வி நிலையும் என்றது — கபிலை குறித்த வேள்வி நிலையும் என்றவாறு.

உதாரணம்

'பருக்காழும் செம்பொன்னும் பார்ப்பார் முகப்பக்
குருக்கட் கபிலை கொடுத்தான் — செருக்கோ
டிடிமுரசத் தானை யிகலிரிய வெங்கோன்
கடிமுரசங் காலைச் செய' (வெண்பா - பாடாண். கசு)

எனவரும்.

வேலை நோக்கிய விளக்கு நிலையும் என்றது — வேலின் வெற்றியினைக் குறித்த விளக்கு நிலையும் என்றவாறு.

நோக்குக்கால் அஃது — விளக்கு ஏதுவாக வேலின் வெற்றியைக் காட்டுதல் விளக்குநிலையாம் இடும் விளக்கு

உதாரணம்.

'வளிதுரந்தக் கண்ணும் வலந்திரியாப் பொங்கி
யொளிசிறந் தோங்கி வரலால் — அளிசிறந்து
நன்னெறியே காட்டும் நலந்தெரி கோலாற்கு
வெண்ணெறியே காட்டும் விளக்கு'

(வெண்பா பாடாண் - கஉ)

எனவரும்.

வாயுறை வாழ்த்தும் என்பது — வெஞ்சொல்லைப் பிரித்தலின்றிப் பிற்பயக்கும் என்று வேம்பும் கடுவும் போல ஓம்படைக் கிளவியாலே மெய்யுறக் கூறுதலும் என்றவாறு.

என்னை

'வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்
வேம்புங் கடுவும் போல வெஞ்சொற்
றாங்குத லின்றி வழிநனி பயக்குமென்
றோம்படைக் கிளவியின் வாயுறுத் தற்றே'

(தொல் செய்யு - ககஅ)

என்றாகலின்

உதாரணம்

'காய்நெல் லறுத்துக் கவளங் கொளினே
மாநிறை வில்லதும் பன்னாட் காகும்
நூறுசெறு வாயினுந் தமித்துப்புக் குணினே
வாய்புகு வதனினுங் கால்பெரிது கெடுக்கும்
மறிவுடை வேந்த னெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்
மெல்லியன் கிழவ னாகி வைகலும்
வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப வெடுக்கும் பிண்டம் நச்சின்
யானை புக்க புலம்போலத்
தானு முண்ணா னுலகமுங் கெடுமே' (புறம் - கஅச)

எனவரும்

செவியறிவுறூஉம் என்றது — உயர்ந்தோர்மாட்டு அவிந்து ஒழுகுதல் வேண்டும் எனச் செவியறிவுறுத்துக் கூறுதலும் என்றவாறு.

என்னை

'செவியுறை தானே
பொங்குதலின்றிப் புரையோர் நாப்பண்
அவிதல் கடனெனச் செவியுறுத் தன்றே'
(தொல் செய்யு - ௧௧௦)

என்றாராகலின்

உதாரணம்

'அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் தம்முன்னோர்
தந்தைதா யென்றிவர்க்குத் தாம்வேந்தே — முந்தை
வழிநின்று பின்னை இயைந்த வேலி
மொழிநின்று கேட்டல் முறை'
(வெண்பா பாடாண் - ௩௩)

எனவரும்

ஆவயின் வரூஉம் புறநிலை வாழ்த்தும் என்றது — மன்னன் இடத்ததாகி வரும் புறநிலைவாழ்த்தும் என்றவாறு என்றது

'வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமி னென்னும் புறநிலை வாழ்த்தே
கலிநிலை வகையும் வஞ்சியும் பெறாஅ'
(யாப் செய்யு - ௧௧௫)

என்பதனால் இனிது வாழ்மின் என்னும் பொருண்மேல் வரும்

உதாரணம்

'தென்றல் விடைபோழ்ந்து தேனார் நறுமுல்லை
முன்றில் முகைவிரியும் முத்தநீர்த் தண்கோன்றாக
குன்றமர்ந்த கொல்லேற்று ணிற்காப்ப வென்றும்
தீரா நண்பிற் றேவா
சீர்சால் செல்வமொடு பொலிமதி சிறந்தே'
(யா வி௫ - ௫௫ மேற்கோள்)

எனவரும்

கைக்கிளை வகை என்றது — ஆண்பாற் கூற்றுக் கைக்கிளையும், பெண்பாற் கூற்றுக் கைக்கிளையும் என்றவாறு.

இவையும் பாடாண் பாட்டாம்.

உதாரணம்:

'துடியடித் தோற்செவித் தூங்குகைக் கால்வாய்ப்
பிடியேயா னின்னை யிரப்பல் — கடிகமழ்தார்ச்
சேரலர் வண்ணனொடு சேரி புகுதலுமென்
சாலேகஞ் சாத்த நட' (முத்தொள் - ௪௫)

எனவும்,

'அணியாய செம்பூக்காய் வெள்ளிலையோ டேந்திப்
பணியாரோ எம்பெருமா னென்று — கணியார்வாய்க்
கோ... கேட்பதற்குக் கொண்கா பெருமானோ
தோ... ... பொருட்டு'

எனவும் வரும் பிறவும் அன்ன.

இவ் வகையோடு உறழப்பட்ட தொகை இத்தொகை நான்கும் முன்னையவும் இத்திணைக்கு உள என மொழிப எனக் கூட்டி முடிக்க. (௨௯)

அஅ. தாவி னல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்
சூத ரேத்திய துயிலெடை நிலையுங்
கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியு
மாற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்றுபய னெதிரச் சொன்ன பக்கமுஞ்
சிறந்த நாளினிற் செற்ற நீக்கிப்
பிறந்த நாள்வயிற் பெருமங் கலமுஞ்
சிறந்த சீர்த்தி மண்ணு மங்கலமும்
நடைமிகுத் தேத்திய குடைநிழன் மரபு
மாணார்ச் சுட்டிய வாண்மங் கலமு

மன்னெயி லழித்த மண்ணு மங்கலமும்
பரிசில் கடைஇய கடைக்கூட்டு நிலையும்
பெற்ற பின்னரும் பெருவளன் ஏத்தி
நடைவயிற் றோன்றிய இருவகை விடையு
மச்சமு முவகையு மெச்ச மின்றி
நாளும் புள்ளும் பிறவற்றி னிமித்தமுங்
காலங் கண்ணிய வோம்படை யுளப்பட
ஞாலத்து வரூஉம் நடக்கையது குறிப்பிற்
கால மூன்றொடு கண்ணிய வருமே.

இதுவும் அது.

இதன் பொருள் — 'துயிலெடை நிலை' முதலாகப் பரிசில 'விடை' ஈறாகச் சொல்லப்பட்டனவும், நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும் ஓம்படையும் உளப்பட உலக வழக்கின் அறியும் நடக்கையது குறிப்பின் மூன்று காலமும் பற்றிவரும் பாடாண்டிணை என்றவாறு

தாவில் நல் இசை கருதிய கிடந்தோர்க்குச் சூதர் ஏத்திய துயில் எடை நிலையும் என்றது — கிடந்தோர்க்குக் கேடு இல்லாத நல்லிசையைப் பொருந்த வேண்டிச் சூதர் ஏத்திய துயில் எடைநிலையும் என்றவாறு

உதாரணம்

'அளந்த திறையா ரகலிடத்து மன்னர்
வளந்தரும் வேலோய் வணங்க — களந்துயங்கப்
பூமலர்மேற் புள்ளொலிக்கும் பொய்கைசூழ் தாமரைத்
தூமலர்க் கண்ணோக துயில்' (வெண்பா பாடாண் - கூ)

என வரும்

கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும் ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப் பெற்ற பெருவளம்

பெறாஅர்க்கு அறிவுறீஇச் சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும் என்பது — கூத்தராயினும் பாணராயினும் பொருநராயினும் விறலியராயினும் நெறியிடைக் காட்சிக் கண்ணே எதிர்ந்தோர்க்கு மாறுபாடு தாம் பெற்ற பெருவளன் தமக்குப் பெறலாகும் என்று சொன்ன பக்கமும் என்றவாறு.

பெருவளன் பெறாஅர்க்குப் பெற்று அவரை எதிரச் சென்று பயன் அறிவுறுத்திய பக்கம் எனக் கூட்டுக. 'பக்கமும்' என்றதனான், இறைவன் நாட்டோடு ஆற்றினது அருமையும் அவன் பண்பும் கூறப்படும் என்றவாறும் அவற்றுள் கூத்தராற்றுப் படைக்கு

உதாரணம்

'திருமழை தலைஇய' (மலைபடுகடாம் - க)

என்னும் பாட்டுக் காண்க

பாணாற்றுப் படைக்கு உதாரணம்

'பாணன் சூடிய பசும்பொற் றாமரை
மாணிழை விறலி மாலையொடு விளங்கக்
கடும்பரி நெடுந்தேர் பூட்டுவிட் டசைஇ
யூரீர் போலச் சுரத்திடை யிருந்தனிர்
யாரீ ரோவென வினவ லானாக்
காரெ னொக்கற் கடும்பசி யிரவல
வென்வேல் லண்ணற் காணா வூங்கே
நின்னினும் புல்லியேம் மன்னே யினியே
யின்னே மாயினேம் மன்னே யென்றும்
முடாஅ போரா வாகுத லறிந்தும்
படாஅ மஞ்ஞைக் கீத்த வெங்கோ
கடாஅ யானைக் கலிமான் பேக
னெத்துணை யாயினு மீத்த னன்றென
மறுமைநோக் கின்றோ வன்றே
பிறர், வறுமைநோக் கின்றவன் கைவண் மையே'
(புறம் - கசக)

எனவரும்

பொருநராற்றுப் படைக்கு உதாரணம்

'சிலையுலா நிமிர்ந்த சாந்துபடு மார்பி
னொலிபுனற் கழனி வெண்குடைக் கிழவோன்
வலிதுஞ்சு தடக்கை வாய்வாட் குட்டுவன்
வள்ளிய னாதல் வையகம் புகழினு
முள்ள லோம்புமி னுயர்மொழிப் புலவீர்
யானும், இருணிலாக் கழிந்த பகல்செய் வைகறை
யொருகண் மாக்கிணை தெளிர்ப்ப வொற்றிப்
பாடிமிழ் முரசி னியறேர்த் தந்தை
வாடா வஞ்சி பாடினே னாக
வகமலி யுவகையோ டணுகல் வேண்டிக்
கொன்றுசினந் தணியாப் புலவுநாறு மருப்பின்
வெஞ்சின வேழ நல்கின னஞ்சி
யானது பெயர்த்தனெ னாகத் தானது
சிறிதென வுணர்ந்தமை நாணிப் பிறிதுமோர்
பெருங்களிறு நல்கி யோனே யதற்கொண்
டிரும்பே ரொக்கல் பெரும்புலம் புறினுந்
துன்னருந் பரிசில் தருமென
வென்றுஞ் செல்லே னவன் குன்றுகெழு நாட்டே'
(புறம் - ௩௯௪)

எனவரும்.

விறலியாற்றுப் படைக்கு உதாரணம்

'மெல்லியல் விறலிநீ நல்லிசை செவியிற்
கேட்பி னல்லது காண்பறி யலையே
காண்டல் வேண்டினை யாயின் மாண்டநின்
விரைவளர் கூந்தல் வரைவளி யுளரக்
கலவ மஞ்ஞையிற் காண்வர வியலி
மாரி யன்ன வண்மைத்
தேர்வே ளாயைக் காணிய சென்மே' (புறம் - ௧௩௩)

எனவரும்.

சிறந்த நாளினிற் செற்றம் நீக்கிப் பிறந்த நாள்வயிற் பெருமங்கலமும் என்றது — சிறந்த நாட்களின் உண்டாகிய செற்றத்தை நீக்கிப் பிறந்த நாட்கண் உளதாகிய பெருமங்கலமும் என்றவாறு

உதாரணம்:

அந்தண ராவொடு பொன்பெற்றார் நாவலர்
மந்தரம்போன் மாண்ட களிறூர்ந்தார் — எந்தை
யிலங்கிலைவேற் கிள்ளி யிரேவதிநா ளென்னோ
சிலம்பிதன் கூடிழந்த வாறு'　　(முத்தொள் - ௪௦)

எனவரும்.

சிறந்த சீர்த்தி மண்ணுமங் கலமும் என்றது — ஆண்டுதோறும் முடிபுனையும்வழி உண்டாகும் மிகப் புனித நீராட்டு மங்கலமும் என்றவாறு.

சீர்த்தி சிறந்த மங்கலம் என [illegible] உதாரணம் வந்தவழிக் காண்க.

நடைமிகுந் தேத்திய குடைநிழல் மரபும் என்றது — ஒழுக்கத்தை மிகுத்து ஏத்தப்பட்ட குடைநிழன் மரபு கூறுதலும் என்றவாறு.

'மரபு' என்றதனைச் செங்கோல் இயல் கூறலும் கொள்ளப்படும்.

உதாரணம்

திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதுங்
கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
வங்கண் ணுலகளித்த லான்'　　(சிலப் மங்கல - ௧)

எனவரும் பிறவுமன்ன.

மாணார்ச் சுட்டிய வாண்மங் கலமும் என்றது — பகைவரைக் கருதிய வாண்மங்கலமும் என்றவாறு.

உதாரணம்

'பிறர்வேல் போலா தாகி யிவ்வூர்
மறவன் வேலோ பெருந்தகை யுடைத்தே
யிரும்புறம் நீறு மாடிக் கலந்திடைக்
குரம்பைக் கூரைக் கிடக்கினுங் கிடக்கு
மங்கல மகளிரொடு மாலை சூட்டி
யின்குர லிருப்பை யாழெடுத் தியம்பத்

'தெண்ணீர்ப் படுவினுந் தெருவினுந் திரிந்து
மண்முழு தழுங்கச் செல்லினுஞ் செல்லும்
கண்ணுறின், னிருங்கடற் றன்ன வேந்தர்
பெருங்களிற்று முகத்தினுஞ் செலவா னோனே'
(புறம் - ௩௩௨)

எனவரும்.

மன்னெயில் அழித்த மண்ணுமங்கலம் என்றது— நிலைபெற்ற எயிலை அழித்து மண்ணுமங்கல நீராடுதலும் என்றவாறு.

இஃது உழிஞைப் படலத்துக் கூறப்பட்டதாயினும், மண்ணு நீராடுதலின் இதற்குந் துறையாயிற்று. இவ்வாறு செய்தலை எனப் புகழ்ச்சிக்கண் வந்தது பாடாண்டிணையாம்; இவ்வாறே மற்றத் துறைக்கும் ஒக்கும். உதாரணம் வந்தவழிக் காண்க.

பரிசில் கடைஇய கடைக்கூட்டு நிலையும் என்றது — பரிசில் கடாவுதலாகிய கடைக்கூட்டு நிலையும் என்றவாறு.

'நிலை' என்றதனான் இன்னும் பரிசில் பெறப் போகல் வேண்டும் என்னுங் குறிப்புங் கொள்க.

உதாரணம்

'ஆடெரி மறந்த கோடுயர் அடுப்பின்
னாம்பி பூப்பத் தேம்புபசி யுழவாப்
பாஅ லின்மையிற் றோலொடு திரங்கி
யில்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தொ றழூஉந்தன் மகத்துமுகம் நோக்கி
நீரொடு நிறைந்த வீரிதழ் மழைக்கண்
மனையோ ளெவ்வ நோக்கி நினைஇ
நிற்படர்ந் திசினே நற்போர்க் குமண
வென்னிலை யறிந்தனை யாயி னிந்நிலைத்
தொடுத்துங் கொள்ளா தமையலெ னடுக்கிய
பண்ணமை நரம்பின் பச்சை நல்யாழ்
மண்ணார் முழவின் வயிரிய
ரின்மை தீர்க்குங் குடிப்பிறந் தோயே' (புறம் - ௧௬௪)

எனவரும். இது பரிசில் கடாநிலை.

'[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] (புறம் - ௬௯)

இது பரிசில்பெற்றுப் போகல்வேண்டுமென்னும் குறிப்பு.

பெற்ற பின்னரும் பெருவளன் ஏத்தி நடைவயின் தோன்றிய இருவகை விடையும் என்றது—பரிசில் பெற்ற பின்னரும் அவன் கொடுத்த மிக்க வளனை ஏத்தி * வழக்கின்கண் தோன்றிய இருவகை விடையும் என்றவாறு.

அவையாவன தான் போதல் வேண்டும் எனக் கூறுதலும், அரசன் விடுப்பப் போதலும்.

வளன் ஏத்தியதற்கு உதாரணம்:

'தென்பரதவர் மிடல்சாய
வடவடுகர் வாளோட்டிய
தொடியமை கண்ணணித் திருந்துவேற் றடக்கைக்
கடுமா கடைஇய விடுபரி வடிம்பின்
[illegible]
புதுப்பிறை யன்ன [illegible] மாடத்துப்
பனிக்கயத் தன்ன [illegible]
[illegible]
[illegible] வஞ்சி பாட
[illegible]
[illegible]
தாங்காது பொழிதந் தோனே யதுகண்
டிலம்பா டுழந்தவென் னிரும்பே ரொக்கல்
விரற்செறி மரபின செவித்தொடக் குநரும்
செவித்தொடர் மரபின விரற்செறிக் குநரும்
அரைக்கமை மரபின மிடற்றியாக் குநரும்
மிடற்றமை மரபின அரைக்கியாக் குநரும்
கடுந்தேர் இராமன் உடன்புணர் சீதையை

* 'வாழ்த்தின்கண்' எனவும் பாடம்

மலிந்தகை யாக்கை வெளவிய ஞாணைத்
தீண்டிசா மதாணி சுடரட கூரம்பின
செயமுகப் பெருங்கிளை யிழைப்பொலிந் தாங்கு
கருஅ வருங்கை யின்றுபெற் றிருப்பே
யிருங்களிற் றிலைமை பெயற்றி
யருமபட... முந்த குன நிலையை (புறம் - ...)

எனவரும்

தான் பிரிந்த வேந்தனைக் கூறியதற்கு உதாரணம்

'...மூன்று முலையி னின்றிரைப
பாடு... ... கொண்ட...
... ... பருகி
... ...
... ...
... ...
... ...
துணரிய... ... பழுப்பழுத்துப்
பயம்பகா வறியா மயக்கினை முதுபாழ்ப்
பெயல்பெய் தன்ன செல்வத் தாங்க
ணீயா மன்னர் புறக்க ... ... ணறிச
சிதாஅர் வள்ளிற ... ... தடாரி
யூனுகிர் வலந்த தெண்கண் ணொற்றி
விரல்விசை ... விரக்கு ... ... பாணியி
னிலமபா ... ... புலம்பொடு
... ...
... ...
வருமலைப் ... ...
சேயை யாயினு மிவணை டாயினு
மிதற்கொண் டறிகை வாழியோ கிணைவ
சிறுநனி, யொருவழிப் பட்டகென்றனே யெந்தை
யொலிவெள் ளருவி வேங்கட நாட
னுறுவருஞ் சிறுவரு மூழ்மா றுய்க்கு
மறத்துறை யம்பியின் மான மடப்பிறை
திருங்கோ ஸீரப் பூட்கைக்
கரும்ப னூரன் காதன் மகனே' (புறம் - ...)

எனவரும்.

அரசன் விடை கொ[illegible] போ[illegible] கூறுதற்கு உதாரணம்

'தினையுண் [illegible] குறை[illegible]
பணமாண [illegible]
[illegible]
[illegible] குறி [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] (புறம் - [illegible])

என வரும்.

'இருவகை [illegible]' என்றதனை, [illegible] வழிக் கூறுதல் [illegible] கூறுதலும் ஆம்.

அப்பு[illegible] உரையாம் இவை [illegible] [illegible] [illegible] — அ[illegible] இவை [illegible] [illegible] கூறுதலுடையன வாயின.

[illegible] திணை [illegible] அப்பக்கம் [illegible] கையாவது [illegible] [illegible] [illegible] ஆங்கை முதலா யின [illegible] அப்பு முதலாயின [illegible] [illegible] குறித்தல் உதாரணம்

'[illegible] குட்ட
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
பாசிச் செல்லாத் தூசி முனைந்து
துளக்காத் திணை விளக்காக்க
கனையெரி பரப்பக் காலெதிர்பு பொங்கி

பொருநரின் விழுமா [illegible] விசும்பி [illegible]
அதுசண, புயாமும் பிறரும் பலரே [illegible]
பறையிசை யருவி [illegible] பொரு
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
மணிவரை [illegible] (புறம் - [illegible])

எனவரும். இது [illegible]

'புதுப்புள் வரினும் பழம்புட் போகினும்
விதுப்புற வறியா வேமக் காப்பினை
அனையை யாகன் மாறே
மன்னுயி ரெல்லா நின்னஞ் சும்மே' (புறம் - உ0)

என்றது [illegible]

'காலனுங் காலம் பார்க்கும்' (புறம் - ௪௧)

எனவும் புறப்பாட்டு [illegible] வந்தது

'நல்லவை செய்த லாற்றீ ராயினும்
அல்லவை செய்த லோம்புமின்' (புறம் - ௧௯௫)

என்றது [illegible] வந்தது.

[illegible] குறிப் [illegible] காலம் [illegible] — இவை [illegible] இருவகை வழக்கி [illegible] குறிப்பினை காலம் [illegible] பாடாண் [illegible] என்றவாறு.

இரண்டாவது புறத்திணையியல் உரை முற்றிற்று.

மேற்கோள்

செய்யுள் முதற் குறிப்பு

மேற்கோள்

நூல் முதற் குறிப்பு

மேற்கோள் செய்யுள் முதற் குறிப்பு

அகத்திணையியல், புறத்திணையியல



மேற்கோள் நூல் முதற் குறிப்பு

அகத்திணையியல், புறத்திணையியல்

அகம், அகநா - அகநானூறு
ஆசிரியமாலை
ஐங்குறு - ஐங்குறுநூறு
ஐந்திணை, ஐம - ஐந்திணை ஐம்பது
கலி, கலித் - கலித்தொகை
களவழி - களவழி நாற்பது
குறுந் - குறுந்தொகை நானூறு
சிலப் - சிலப்பதிகாரம்
சிற்றட - சிற்றட்டகம்
தண்டி - தண்டியலங்காரம்
திணைமாலை - திணைமாலை நூற்றைம்பது
திருக்குற - திருக்குறள்
திருமுருகு - திருமுருகாற்றுப்படை.
தொல் - தொல்காப்பியம்
நற்றி - நற்றிணை நானூறு
நாலடி - நாலடியார்
பதிற், பதிற்றுப் - பதிற்றுப்பத்து
பழமொழி - பழமொழி நானூறு
பனிரு, பனிருபட - பனிருபடலம்
பிங்க - பிங்கலந்தை
புறம் - புறநானூறு.
பெரும்பாண் - பெரும்பாணாற்றுப்படை
மதுரைக்கா - மதுரைக்காஞ்சி
மலைபடுகடாம்
முத்தொள் - முத்தொள்ளாயிரம்
முல்லை - முல்லைப்பாட்டு
யாப் - யாப்பருங்கல விருத்தி
வெண்பா - புறப்பொருள் வெண்பாமாலை



பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
3	20	[illegible]	[illegible]
11	16	காட்டும	காட்டும்
18	3	தாய	தாம்
18	15	[illegible]	[illegible]
26	2,20	கிலை	கீலை
33	4	மூலைலே	மூலையே
34	22	கழிபடா	கழிபடாக்
35	8	[illegible]	[illegible]
36	28	[illegible]	[illegible]
38	10	[illegible]	[illegible]
54	24	[illegible]	[illegible]
55	19	மாதகுவை	மாதகுவி
56	15	சிற்றடட்கம்	சிற்றடக்கம்
59	18	[illegible]	[illegible]
79	13	[illegible]	மானதா
82	28	உதா ணம முன	உதாரணம்முன்
84	21	சிற்றட்டகம	சிற்றடக்கம
86	6	[illegible]	[illegible]
93	23	செயயுளா	செயயுள்
94	5	அவாகள	அவா
102	3	உடைத்து	உடைத்து
109	27.	காலகோ	கல்கொ
109	27	நடுகல்	நடுதல
120	6	வரை	வுரை
128	17	தோற்றார்	தோற்றோர்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
141	17	கம்முடன	தமமுடன
141	22	தாாச	தாாச
145	3	யடட	யட்ட
158	1	நிலை இபகாய	லை இயாகாய
103	7,8	தலைபபெயாலை	தலைபபெயால்நிலை
210	1	வுறாவும்	வுறாஉவும்
213	14	பாடடு	பாட்டெட்



Printed at the 'Caxton Press,' Madras, E. — 1920.